உ

குமரன்றுணை.

தேவ, ரிஷி, முனி, சித்தர்கள்
திருவாய்மலர்ந்தருளிய

வைத்திய வாத யோக
ஞானசாஸ்திரத்திரட்டு

எட்டாம்பாகப் புஸ்தகம்.

மதுரை பாத்திரக்கடை வியாபாரம்
த. ராம. கணபதியாபிள்ளை அவர்களின்
எட்டுப்பிரதிகளையும் சேர்த்து

மதுரை வித்துவான்
த. குப்புசாமி நாயுடு அவர்களால்
பரிசோதிக்கப்பெற்று:

மதுரைப் புதுமண்டபம் புத்தகஷாப்
இ. ராம.
குருசாமிக்கோனார்
அவர்களாற்றமது
மதுரை வடக்குமாசிவீதி
ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் அச்சியந்திர சாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

விலை ரூபா] 1914. [1-8-0.

REGISTERED COPY RIGHT.

ஞான யோக சாஸ்திர ஆராய்ச்சி நிலையம்,

உ
முருகன் துணை.

தேவ, ரிஷி, முனி, சித்தர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

வைத்திய வாத யோக

ஞான சாஸ்திரத் திரட்டு.

"எட்டாம் பாகம்"

121 - வது:

உரோமரிஷி கலைக்கியானம் ய.

பத்தொருகை விநாயகன்றன் பாதங்காப்பு
பரமகுரு வல்லமையான் பாதங்காப்பு
சித்தருடன் மனந்தோறுஞ் சிவமேகாப்பு
சீரான மாலயனும் ருத்ரன்காப்பு
நித்தமா யுதித்தெழுந்த வட்டங்காப்பு
நிட்களமாய் நினையறியும் நினைவேகாப்பு
கத்தறிந்த பெரியோர்கள் பாதங்காப்பு
கதிர்முனையும் பிங்கலையு மிடையுங்காப்பே. (1)

காப்பான சித்தருட பாதம்போற்றிக்
கருத்தறியு மைந்தருக்குக் காணச்சொல்வேன்
வாய்ப்பான ருத்ராட்சந் துளசிமாலை
வளமான நவரத்ன மாலைதானும்
தாப்பான கமலமணிப் படிகமாலை
தனையறிந்த சித்தருக்கு யிவைகள்வேண்டாம்
ஏய்ப்பார்க ளிம்மணியை மாலையாக்கி
யிடுவார்க ளினமறியா மைந்தர்தானே. (2)

தானென்ற சிவத்துக்கு மணியைச்சொல்வேன்
தன்னுக்குள் ளஞ்சுமணி மாலையாக்கி
வானென்ற உச்சிமலை தன்னிலேற்றி
வளையத்தி லிம்மணியைப் பதனம்பண்ணு
பானென்ற முற்றத்தில் தானம்பண்ணிப்
பருவமாய் வஸ்திரங்க ளாடைபூண்டு
கோனென்ற திருநீற்றைக் குழைத்துப்பூசிக்
கும்பிடுவா யுச்சிமலை மீதிலேறே. (3)

ஏறியே மலைவாசல் தன்னில்நின்று
எழுத்தாலே அறைவாசல் திறந்துமப்பால்
கூறியே குகைக்குள்ளே செல்லும்போது
கோடிரவி யுதயம்போற் கருத்தான்தோணும்
மாறியே அட்சரத்தை மாட்டும்போது
மனோமணித்தாய் மனமகிழ்ந்து வருவாளையா
தேறியே அவள்பாதந் தன்னிலேதான்
தெண்டனிட்டால் மந்திரங்கள் சிக்குந்தானே. (4)

தானென்ற மந்திரங்கள் யோகமார்க்கம்
தாக்கியே யாடுதற்கு வகையைச்சொல்வாள்
வானென்ற அமுதங்கள் தருவாளாத்தாள்
வழியொன்று மிருபாதை தன்னைச்சொல்வாள்
கானென்ற காடெல்லாம் அலையவேண்டாம்
கண்மூக்கு மத்தியிலே கண்டுதேறு
கோனென்ற அடிமூலம் அபானன்வீடு
குணமான மேல்மூலம் பிராணன்வீடு. (5)

வீட்டுநிலை சொல்லுகிறேன் மைந்தாகேளு
வீதியிலே வுச்சிமலை மையந்தன்னில்
காட்டுக்குள் ளலையாதே வீடுதேடிக்
கண்மூக்கு மத்திக்குட் காணும்பாரு
மூட்டுவாய் வீட்டுக்குள் மெள்ளவேதான்
மூலவாய் வக்கினியை மேலேமூட்டித்
தாட்டிகமா யனற்றீயை மூலவாய்வால்
தாக்குவாய் குருவாக நிற்குந்தானே. (6)

குருவாக நிற்குமா தாரந்தோறும்
குகைக்குள்ளே அடைப்பதற்கு வகையைக்கேளு
கருவென்று சொல்வதெல்லா மூச்சேயல்லாற்
காணாது கல்லுசெம்பு வுருவைப்போலே
பொருதிமூ லம்நோக்கி யூதும்போது
பொங்குமடா அமுதத்திற் சூடுகொண்டு
வருதியே அமுதத்தை யுண்ணும்போது
வாங்குமடா நயங்கொண்டு சிரத்திற்பாரே. (7)

பாரப்பா யின்னமொரு போக்குச்சொல்வேன்
பாரப்பிலே விழுகாதே சித்தந்தன்னைச்
சீரப்பா அட்சரங்கள் ஐம்பத்தொன்று
சீர்பார்த்து அஞ்சுக்குள் ளடக்கியூது
காரப்பா அஞ்செழுத்தை மூன்றுக்குள்ளே
காட்டிவிடு மூன்றெழுத்தை யொன்றுக்குள்ளே
ஊரப்பா ஓரெழுத்தா லூதும்போது
ஒளிவீசும் உச்சிமலை மையமீதே. (8)

மையமப்பா வுன்றேகந் தொண்ணூற்றாறில்
மாமுனிவ ரடக்கிவைத்தா ருடம்புக்குள்வே
உய்யுமப்பா வுச்சியொன் றுடம்புக்குள்ளே
ஒளித்தார்கள் சித்தரெல்லாம் பாஷையாலே
தையலுட தனிவீடு மையமப்பா
தன்னையறிந்த கொங்கணவன் கடைக்காண்டத்தில்
வையகத்தில் பாடிவைத்தார் யோகமார்க்கம்
மவுனத்திற் பூசைவிதி வரிசைபாரே. (9)

பாரப்பா பத்துக்குள் பார்க்கும்போது
பராபரையாள் ரூபமப்பா அதிலேகாணும்
சீரப்பா அங்கென்று அதிலேமூட்டு
சித்தாந்தம் வேதாந்த மதிலேகாணும்
ஆரப்பா யிப்படியென் றறியப்போறார்
ஆகாசங் கபாலவரை யேறினாலும்
ஊரப்பா தோணாது வுலகத்தோர்க்கு
உத்தமனாயப் பிறப்பவனே உண்மைபாரே. (10)

உரோமரிஷி கலைக்கியானம் ம,
முற்றிற்று.

உ

கணபதி துணை.

122 - வது.

உரோமரிஷி திருவாய்மலர்ந்தருளிய

பூஜாவிதி சூ.

ஆதியென்ற வாலைமனோ மணியைப்போற்றி
 அருள்நிறைந்த பூசைவிதி யாறுஞ்சொல்வேன்
சாதியென்ற சரஸ்பதியாள் பாதங்காப்பு
 சச்சிதா னந்தமென்ற தாயேகாப்பு
சோதியென்ற சுடரொளியின் சூட்சங்காப்பு
 சொரூபமணி வேதாந்தம் அருளேகாப்பு
பாதிமதி யணிந்தருளும் பரமேகாப்பு
 பரம்சிவ ஜெகசோதி பாதங்காப்பே. (1)

காப்பான கருவூரார் போகநாதர்
 கருணையுள்ள அகத்திசர் சட்டைநாதர்
மூப்பான கொங்கணரும் பிரமசித்தர்
 முக்கியமாம் மச்சமுனி நந்திதேவர்
கோப்பான கோரக்கர் பதஞ்சலியார்
 கூர்மையுள்ள இடைக்காடர் சண்டிகேசர்
வாப்பான வாதத்திற் காதியான
 வாசமுனி கமலமுனி காப்புத்தானே. (2)

தானென்ற தத்துவத்தை யறியவேணும்
 தன்மையுள்ள பூரணத்தைச் சாரவேணும்
பானென்ற பாணமதைக் கொள்ளவேணும்
 பருவமென்ற பரமநிலை யறியவேணும்
நானென்ற ஆணுவத்தை நீக்கவேணும்
 நன்மையென்ற காரியங்கள் செய்யவேணும்
வானென்ற வாக்கியமே ரோமன்வாக்யம்
 மலரான பொருளிலேதான் வாய்க்கும்பாரே. (3)

பாரப்பா பரைபூசை செய்யத்தானும்
பாங்காகச் சொல்லுகிறேன் பரிவாய்க்கேளு
சாரப்பா சக்கரங்கள் தன்னைக்கீறி
சாங்கமாய் மூன்றெழுத்தை மாறிப்போடு
சீரப்பா கணபதியும் வடுகன்பீசம்
சீக்கிரத்தில் வாலையதை நடுவேவைத்துக்
காரப்பா நந்திவடி வேலன்பீசம்
கருணையாஞ் செயவீரர் பீசம்போடே. (4)

போடுவது முன்னறையிற் பத்தும்போடு
புகழான பின்னறைபன் னான்குபோடு
நீடுவது மூன்றறையிற் பதினெட்டாகும்
நேரான நாலறையில் மூன்றேலக்கம்
நாடுவது அஞ்சான அறையிற்றானும்
நன்மையுள்ள ஆறதனை நயந்துபோடு
கூடுவதக் கிருபத்தஞ் சறையும்நன்றாய்க்
கூர்மையுடன் மாறியிடக் கூறினேனே. (5)

கூறினே னஞ்நூற்றின் பொருளையெல்லா
குறுக்கியே ஐம்பதிலே நன்றாய்ச்சொன்னேன்
பாரிலே கிடையாது கிடைத்துதானால்
பரமகுரு நீயெனவே பகரலாகும்
நாரிலே பூச்சொரிந்த வாறுபோலே
நாயகியா ளுனதுபக்கம் நலமாய்நிற்பாள்
ஆறுகச் சொன்னதொரு சூஸ்திரந்தான்
அப்பனே ஆதியென்ற பூசைமுற்றே. (6)

முத்தான பூசைவிதி யாறுஞ்சொன்னேன்
முழுதுமிதை பார்த்தவர்கள் மவுனமாகிக்
கத்தான பெரியோர்க ளிதனைப்பார்த்துக்
கைகண்ட பொருளெனவே மனதிலெண்ணிச்
சத்தான வித்தையிது பொருளென்றெண்ணிச்
சதம்பெறவே மெய்ஞ்ஞானத் தருளைநோக்கிப்
பத்தான சூஸ்திரந்தான் முன்னேசொன்னேன்
பாங்கான பூசைவிதி யாறும்முற்றே. (7)

உரோமரிஷி பூஜாவிதி சூ,
முற்றிற்று.

திருச்சி மேட்டுச் சிந்தாமணியிலிருக்கும் நேட்டிவ் டாக்டர் தி. க. சுப்பிரமணியபிள்ளை யவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டிப்பிரதியின் படி இந்தச் சாஸ்திரம் அச்சிடலானது.

உ

கடவுள் துணை.

123 - வது:

உரோமரிஷி திருவாய்மலர்ந்தருளிய

பூஜாவிதி சக்கரம் ௰௪.

அண்டத்தைப் பார்த்தா லழியாதுன் தேகம்
பிண்டத்தி லான்மா பிலத்திடுமூ லத்தில்
அண்டம்போ லாகும் அறுகோணத் துள்ளே
குண்டலி யாகுமுக் கோணத்தி னுள்ளே. (1)

உள்ளுறுஞ் சோதி ஓங்கார பூரணி
வள்ளலான் மாவே மாயைக்க ணேசனுந்
தெள்ளிய சிந்தை திடங்கொண்டு ஊதிட
வள்ளலே வாசி வளர்கின்ற நந்தியே. (2)

நந்தி யிருக்குமேல் முக்கோணத் துள்ளே
உந்திப் பிறைக்கு ளொளியான அங்கிஷம்
சிந்திச் சதாசிவன் தேவிம னோமணி
சந்தேக மில்லை சதானந்தி நாமமே. (3)

நாமங்கி மூணநற் றிரிகோணத் துள்ளே
வாமியாம் பார்வதி மாலெட் சுமியென
தாமமா மாயன் றன்மன் மதனெனக்
காம மகாரங் கலவிக்குள் ரங்கென்றே. (4)

ரங்கென்ற மாபிறைக் குள்ளுற வாகிச்
சங்கென் றெழுதத் தலைகீழ் முனையிலே
மங்கென் றெழுந்தது முக்கோண மேலே
சிங்கென் றிடைகலை மேலேமுக் கோணமே. (5)

முக்கோணத் துள்ளே முழங்குமுக் கோணந்தான்
அக்கோணங் குண்டலி யான்மா கணேசனுந்
தக்குமோங் காரந் தானும் பராபரன்
இக்கோணங் காண்பா ரிடைகலைக் கீழே. (6)

கீழேமுக் கோணம் பிரமனிலை யந்தான்
கேளாய் வயிரவன் கெடியாக நின்றான்
வாளாய் நகாரம் வளருநாற் கோணத்துள்
ஆளவங் கேசுர னங்கா முனைக்கே. (7)

முனையான பிங்கலை முக்கோணத் துள்ளே
நினைவறு கோணத்தில் நின்றசண் முகனும்
மனையா மகேஸ்வரி வாழரெண் டாகத்
தனமாய மென்னச் சார்ந்தங் கிருந்ததே. (8)

இருந்த வகாரஞ் சங்கென் றெழுந்தது
வருந்தவன் சுப்பிர மணியன் சொரூபமாய்
இருந்த முனையி லெழுந்த வகாரம்
பெருந்தவ மப்பா பிங்கலை கீழே. (9)

கீழாந் திரிகோணங் கெடியான முக்கோணம்
ஆளா முனையி லாண்ட உகாரம்
வாளான ருத்திரன் மால்வடி வாகித்
தேளா யக்கினியிற் சிறக்கின்ற சிங்கியே. (10)

சிங்கென்று முட்டித் தெளிந்திடுங் குண்டலி
நங்குரு பூசை நாயகர் பூசை
மங்கென் றெழுந்த மவுனத்தி லட்சயஞ்
சங்கோலச் சூட்சத்திற் சாத்திய வாறே. (11)

வாறான குண்டலி வளருமுக் கோணத்துள்
பேராம் மதிவட்டம் பேசிடுஞ் சிங்கியாம்
கூரான சத்திக் கொழுந்தியாம் வல்லபை
ஆறான வீடு மவளா யிருப்பளே. (12)

இருப்பா ளிவள்தான் றீங்கா சனத்தில்
இருப்பாள் பரத்தில்நாற் பத்துமுக் கோணத்

திருப்பா ளமுத கலையிலொன் றாக
இருப்பா ளிவள்நந்திக் கன்னிகை யென்றே. (13)

கன்னிகை யென்றே கலந்தாள் புரியட்ட
மன்னிய பூரணம் வளர்ந்தது கெட்டிது
உன்னிய தீட்சை யோகத் துறவாம்
பொன்னும் பூரணம் பூண்டிடு முத்தியே. (14)

உரோமரிஷி பூஜாவிதிச் சக்கரம் ௰௪,

முற்றிற்று

ஸ்ரீவில்லிபுத்தூரைச்சேர்ந்த சுந்தரபாண்டியம் புஸ்தகஷாப் வை. சிவகுருநாத மூப்பனார் அவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின் படி இந்தச் சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவே துணை.

124 - வது:

உரோமரிஷி திருவாய்மலர்ந்தருளிய

குருநூல் ௫௰.

[*]

வாரணமா முகத்தோனும் வல்லபையுங்காப்பு
வாக்கிலிருந் தோதுகின்ற வாணிகாப்பு
பூரணமாய் நிறைந்தகுரு நாதன்காப்பு
புகழ்பெரிய சித்தருட பாதங்காப்பு
தாரணியில் குருநூல்தா னைம்பதுக்குள்
சகலசித்துங் கைவசமாய்த் தானேசிக்கும்
காரணமாய்ச் சொல்லிவிட்டேன் வழலையாதி
கருவறிந்தால் ரசவாதங் கைக்குள்ளாச்சே. (1)

ஆச்சிந்தச் சட்டைமுனி யொருநாளிற்றான்
அடியேனைத் தேடிவந்தார் கருணையாகி
வாச்சிந்தக் கயிலாச மூர்த்திதானும்
வந்தவகை யேதோவென் றுபசரித்தேன்
பேச்சிந்த வுலகமெலாஞ் சித்துண்டாக்கும்
பெருமைசெய்யும் படியாக வாழுமென்று
ஆச்சிரமந் தனைத்தேடி வந்தேனென்றார்
அப்போதா லோசனைகள் செய்திட்டேனே. (2)

செய்திட்ட சட்டைமுனி தயவினாலே
செகமனிதர்க் காயிரங்கித் தேடிவந்தேன்
மெய்த்திட்ட மானசித்த ரிவரைப்போல
விண்ணுலகு மண்ணுலகுங் கண்டதில்லை
எய்த்திட்டோ மிருபேரும் பேசிக்கொண்டு
யிருநூறைப் பாடிவைத்தார் குருநூலாகக்
கைத்திட்ட நிருவிகற்ப சமாதியோகங்
கருக்குருவுந் தீட்சைமுதற் கட்டினாரே. (3)

கட்டினார் தீட்சையிரு நூறுக்குள்ளே
 காயசித்தி வாதசுத்தி கபடில்லாமல்
சட்டைமுனி நாயனென்று லவரேநாயன்
 தயவுரெம்ப தயவுரெம்ப மனிதர்மேலே
சுட்டிகளாந் திருமூலர் கூட்டமெல்லாஞ்
 சுதாகறிப்பு நிராகறிப்பு துடுக்குமெத்த
வெட்டவெளி யாயுரைத்தா ரென்றுமூலர்
 விருதாவிற் தீட்சைவிதி கிழித்தாற்பாரே. (4)

கிழித்திட்டா ரதினாலே பயந்தார்சித்தர்
 கிருபையுள்ள நூல்களெல்லாஞ் சாபமாச்சு
முழித்திட்டார் மடபதிகள் சூஸ்திரங்கள்
 முன்பின்னுந் தெரியாமல் முருக்கிப்போட்டார்
குளித்திட்டு நானுரைத்த வாறுகாண்டங்
 கோர்வையெல்லா மைந்நூற்றிற் குறுக்கிவைத்தேன்
ஒளித்திட்டார் குகைக்குள்ளே வெளியேறாமல்
 ஊணிவிட்டேன் பிறகுமொரு நூற்சொன்னேனே. (5)

நூறுசொன்னேன் பின்புபதி னாறுசொன்னேன்
 நுண்ணிமையாய்க் குருநூலன் பதுவுஞ்சொன்னேன்
ஆர்சொன்னா ரென்றுசொல்லி மலைக்கவேண்டாம்
 அன்பதுபோ லின்னமொரு அன்பதுண்டு
கூர்சொன்னே னதில்மவுன யோகஞானங்
 குறிதெரியும் வாசிமுதல் வாதஞ்சொன்னேன்
பேர்சொன்னேன் ரோமனென்று விருதுநாட்டிப்
 பேசிவிட்ட நூலறிந்து பேணிப்பாரே. (6)

பார்ப்பவர்க்கு ஐஞ்ஞூற்றின் புலனேதென்றால்
 பாடிவிட்டே னாகாச வெடியுப்பைத்தான்
கூர்ப்புடனா காசமதிற் சிவனாருப்புக்
 கூக்குரல்வந் தால்வரட்டு மிதுதானண்டஞ்
சேர்ப்பதற்குச் சத்திபடி யுவர்தான்பிண்டஞ்
 சேர்ந்துரெண்டு மொன்றானாற் தீட்சையாச்சு
வேர்பரித்துத் திரியாதே விந்துசூட்சம்
 வெடிப்பதிந்தா லடிதூயர்ந்து விரைத்துப்போமே. (7)

விரைத்துப்போம் வெடிக்கிரெட்டைக் குண்டுபோட்டால்
வேளமென்ற மதயானை சூதஞ்சாகும்
முரைத்துப்போ முப்புமுதற் புடத்துக்கெல்லா
மோடுமே பலகோடி யண்டமெல்லாந்
திரத்துப்போ முடலிறுகி வலுத்துக்காணுஞ்
செகமுழுதும் பார்வையினாற் செம்பொன்னாகும்
துரைதப்பி னல்வருமோ வாதந்தானுஞ்
சுட்டலைந்த தோசிகளே சுவிவிதாமே. (8)

ஆமப்பா வழலைக்குத் தீட்சைமார்க்கம்
அகாரமுதல் பகாரபரி யந்தமென்பர்
ஓமப்பா சகாரமுத லுகாரமென்றும்
ஒகாரமுதற் சிகாரமென்று முறுதியாகத்
தாமப்பா நகாரமுதல் இகாரமென்றுந்
தகாரமுதல் வகாரமுறைச் சார்பிதென்றும்
வேமப்பா காரமுத லகாரமென்றும்
வீணெழுத்தைப் பத்தியல்லோ விள்ளுவாரே. (9)

விள்ளுவார் வெடியுப்பு நீரமென்றும்
வெந்திறங்கு மாதிநீர் வெண்ணீரென்றுந்
தள்ளுவார் கோசமென்றும் பீசமென்றுஞ்
சாத்தியதோர் வாமமென்றுஞ் சாரமென்றுங்
கொள்ளுவார் சுத்தசலக் கூர்மையென்றுங்
கோழிமுட்டை வெண்கருவோ டாகுமென்றும்
துள்ளுவார் மூலிகைகள் பழச்சாறென்றுஞ்
சுரோணிதமாம் விந்தென்றுஞ் சொல்லுவாரே. (10)

விந்தென்றும் அமுரிக்குட் சிப்பியென்றும்
விலங்கென்றும் வெள்ளைக்கல் சுண்ணாம்பென்றும்
ஐந்துசரக் கால்வடித்தச் செயநீரென்றும்
அறுவகைநீ ரானகுரு வண்டாமென்றும்
முந்துதலைப் பிள்ளைவடித் தாணுமென்று
மூட்டியெரித் திட்டதயி லாதியென்றுந்
தந்திரமாய்க் கடைத்துலர்த்திச் செய்வதென்றும்
சமாதியிலே வைத்தெடுத்த சரக்காமென்றே. (11)

சாக்கான புடமெரிப்புத் தானேயென்றும்
தாக்குலேயி லூதியெடு சத்தாமென்றும்
சிரக்கான ரவிமதியிற் பாடமென்றுந்
தீட்சையென்ன முப்பத்தி ரண்டாமென்றும்
அரக்கூர்மை யானபதி னறுமென்று
ஐந்தென்றும் பத்தென்று மாறைந்தென்றும்
இரைக்கான பரிதிமதிக் காலாமென்றும்
சூஸ்திரத்தி லனேகவிதஞ் சொல்லுவாரே. (12)

சொல்லுவா ரநேகவிதஞ் சித்தரெல்லாம்
தொடுகுறியைப் பலவிதமாய்த் தோணொட்டாமல்
செல்லுவார் கடினமனச் சித்தர்தாமுந்
திரட்டினர் பரிபாசை செப்பினர்கள்
வெல்லரிது கட்டிவிட்ட நூலேப்பார்த்து
வெகுகடினந் தேறுவது விதியும்வேணும்
வல்லமைகள் பேசாதே கண்டுதேறு
மனதடங்கிக் குருபதத்தில் வணங்கினில்லே. (13)

வணங்கின்ற மனந்தானே் குருவதாச்சு
மாறுட்டம் நூல்புதையல் வாய்த்துப்போச்சுக்
குணங்களதி வினையபுத்தி மானேக்கண்டால்
கூசாமல் சித்தர்வந்து கூட்டிக்கொள்வார்
சுணங்கனைப்போற் றிரிந்தலேந்து வாதம்பார்க்கும்
தோசிகளுக் கெய்தாது சுத்தநூல்கள்
இணங்கறியார் மடையர்புதுப் பானேக்குள்ளே
ஈப்புகுந்த கதையிவர்க ளிச்சைதானே: (I4)

இச்சைகொண்டு திரிவதுபோ லக்கினியினுப்பை
யெண்ணிரண்டு பதினறு முழத்தின்கீழே
வச்சிருந்த பொக்கிசமோ யீசனுச்சு
மாலுடய உப்புஅதின் மேலேயாச்சு
முச்சுடரு முக்குணமு முப்பாழாச்சு
மூவுலகு மொன்றுகி முடிந்துபோச்சுப்
பச்சிலேயைத் தொட்டவுடல் தேறிப்போச்சுப்
பதினறும் பன்னிரண்டும் பாத்துள்ளாச்சே. (15)

ஆச்சப்பா நாதவிந்து மூலாதாரம்
அடங்கிநின்ற சுழிமுனையே ஆதியாதி
கூச்சப்பா யிமைரெண்டும் விழியிலொட்டிக்
குகைவாசல் கும்பகஞ்செய் கோள்வராமல்
மூச்சப்பா ஓடாது வெளியிற்றானும்
முனைமூக்கு மத்தியினில் மூட்டிப்பாரு
போச்சப்பா ரவிமதியுஞ் சேர்தலாச்சுப்
பொற்பதுமைச் சித்திரம்போற் புனிதமாமே. (16)

புனிதமா மவுனத்தீ பிரகாசித்தாற்
போதமென்ற பூரணத்திற் புக்கலாச்சுத்
தனியிருந்த சித்தண்டம் பேரண்டங்கள்
தன்னுக்குட் டானாச்சுத் தலைவனாச்சுக்
கனியமுத மாகாச பானமாச்சுக்
கண்ணாடிப் பிரதிவிம்பங் கருணையாச்சு
இனிதாச்சுப் பிரமநிலைச் சார்பிதாச்சு
இப்படியே நாமுமிருந் திட்டோம்பாரே. (17)

இருந்திட்டோம் நிருவிகற்ப சமாதிமார்க்கம்
இத்தனையோ யெத்தனையென் றறியமாட்டேன்
விருந்திட்டே னாயடியே னாச்சிரமத்தில்
வெகுகோடி சித்தருக்கும் பிரமாவுக்கும்
மருந்திட்டேன் கமலமுனிக் காறுகாண்டம்
வழிவிட்டேன் பதினாலா மண்டத்துள்ளே
தெரிந்திட்டேன் ரோமவிருச் சத்தின்கீழே
சிவாயநமா வென்றெக்யஞ் செய்திட்டேனே. (18)

செய்வதென்ன மனக்குரங்கு வழிப்பாடானால்
திரிகால முங்கடந்து சேரலாகும்
பொய்யிதுவென் றெண்ணாதே உலகமெல்லாம்
பிழைக்கறிய மாட்டாத புத்திமோசம்
வைவதுவுஞ் சாஸ்திரத்தைப் பொய்யென்பார்
வாய்க்கொழுப்புச் சேலையிலே வடிந்தமார்க்கம்
கைபவித மானதிந்தக் கருவைச்சொன்னால்
கருமம்வரும் புண்ணியர்க்குக் கருச்சொன்னேனே. (19)

சிதம்பரபூசை.

புண்ணியத்துக் காகவொரு பூசைசொல்வேன்
புரிசடையோ னுடுகிற சிதம்பரந்தான்
கண்ணிமைக்குட் டோணுது வுட்கொள்ளாது
காலாலே வட்டமிடு நாதமையா
பெண்ணையிடப் பாகமதில் வைத்தோன்சொன்னார்
பேணியந்தப் படிதான்நான் பெற்றபேரு
எண்ணறிய சக்கரத்தில் ஞானபீடம்
இயல்பறிந்தே னுதவிந்து மோனமென்றே. (20)

மோனாதி நாதவிந்து பிரணவத்தை
மூச்சுவிடா திருபுறமும் வளைத்துக்கட்டி
வானாகா சத்தேறி மவுனந்தன்னை
வளைந்துநடு வேத்திவிட வாசல்மட்டும்
நானாக நின்றவுச்சி மேலுங்கீழும்
நவிலாதே சூலமிது நாட்டிப்பாரு
ஏனோதா னிப்படியென் றெண்ணவேண்டாம்
இருபுறமு மட்சரத்தை யியம்புவேனே. (21)

இயம்பினார் சித்தரெல்லா மூன்றெழுத்து
மெட்டெழுத்து மஞ்செழுத்து மார்க்கஞ்சொன்னார்
வியன்பலிக்க மாட்டாது சொல்வேன்யானும்
விட்டெழுத்தும் விடாதெழுத்து மிரண்டும்போடு
செயம்பிறக்க நாட்டிவைத்த சூலத்தின்மேல்
தேவியெழுத் தாமிரண்டுஞ் சேர்க்கவேணும்
மயங்கிடச்சித் தாகாது வாசல்நாலும்
வளையம்ரெண்டு போடுவலு மகிமைதானே. (22)

தானென்ற வாசலிலே வீரவாகு
தன்னோடு கணபதியுஞ் சுப்பிரமண்யன்
கானென்ற துர்க்கையொடு வயிரவன்றான்
கவனித்தே அச்சரத்தாற் கட்டிப்போடு
வானென்ற பரித்தகட்டி லிந்தசூட்சம்
வரைகிறிக் குருவினடி மறந்திடாமற்
பானென்ற கர்ணியாசம் அங்கர்ணியாசம்
படிதவறா தேகசுத்தி பண்ணிக்கொள்ளே. (23)

கொள்ளடா அஷ்டகும்ப மெட்டும்வைத்துக்
கும்பத்திற் கொள்ளமட்டுந் தண்ணீர்வார்த்து
துள்ளடா மாவிலையுந் தெற்பைசாத்திச்
சுகந்தபரி மளங்களொடு தூபதீபம்
விள்ளடா எலுமிச்சம் பழமுந்தேங்காய்
விசிதமா மஞ்சளொடு பணிதியொன்று
தள்ளடா ஆடையும்வெண் பட்டினாலே
சாற்றிவிடு கும்பமெல்லாந் தாழ்வில்லாதே. (24)

தாழ்வில்லாக் கும்பங்க ளெட்டுத்திக்குந்
தானிறைத்து யதினடுவே பரித்தகட்டைக்
கோணில்லா வில்வமெனும் பலகைமேலே
குறிப்பாகப் பதித்துமபி ஷேகஞ்செய்ய
நாளெல்லா மாகாது ஆதிவாரம்
நலமான பிராணயம் பண்ணிக்கொண்டு
பாளில்லாச் சமித்தெடுத்து ஓமஞ்செய்து
பரமாதி தப்பொருளைப் பணிந்துபோற்றே. (25)

போற்றுவாய் மவுனமென்ற யெழுத்தினாலே
பூரணசந் திரனம்மா வாசிமட்டும்
ஏத்துவாய் லெட்சமுருத் தீர்ந்ததானால்
யென்னசொல்வேன் கர்மவினை யேங்கிப்போகும்
சாத்துவாய் கற்பூர தீபதூபஞ்
சாதித்தால் சக்கரமுந் தானேசித்தி
கூற்றுவனு மிறந்துவிட்டா னமுதப்பாலைக்
கொண்டுவா மண்டலத்திற் கோள்கள்போச்சே. (26)

போச்சப்பா தரித்திரமும் பீடையெல்லாம்
பொறிப்பட்ட பஞ்சதுபோற் பொசுங்கிப்போச்சு
ஆச்சப்பா செகவசிய மாகுமாகும்
அந்தரங்கப் பொருளெல்லா மறிவிற்றோணும்
நீச்சப்பா திரோதாயி மாயைபோச்சு
நினைவினாற் சகலபொருள் முடிக்கலாச்சுப்
பேச்சப்பா பிர்மநிஷ்டைக் குள்ளேயாச்சுப்
பேரின்ப முத்திவழி பிலக்குந்தானே. (27)

பிலமான கற்பசித்தி காயசித்திப்
        பெரியோர்க ளுறவாகிப் பேசலாகும்
நிலமான வழலைதொட்டால் வாதமாச்சு
        நேரான யீசனுப்புக் கைக்குள்ளாச்சுத்
துலைதூர மாவதெல்லாங் கிட்டவாச்சுத்
        தொட்டசரக் கத்தனையுஞ் சொர்னமாச்சு
மலைவான சாபமெல்லாம் நிவர்த்தியாச்சு
        மகத்தான ரசக்குளிகை வாய்த்துப்போச்சே. (28)

வாய்த்துதிந்தப் படிதானே சித்தரெல்லாம்
        மானதத்தால் வாசிகொண்டு பூசித்தார்கள்
ஏய்த்துவிட்டா லாகாது தீட்சைமார்க்கம்
        எட்டமட்டு மேறுதற்கு யேணிவேணும்
தீர்த்தமென்ன யாத்திரைகள் செய்தாலென்ன
        சிவதலங்கள் கண்டுதெரி சித்தாலென்ன
மாத்திரையிற் சுத்தவறி வானாலிந்த
        மாயையெல்லா முன்னிடத்தில் வாராதென்னே. (29)

வாராது மூலத்திய் மவுனத்தாலே
        வாசிகொண்டு ஊதிவிடு மார்க்கமையா
கூறாதே முனையூடு கண்டம்பத்திக்
        குகைவாச லடியிலண்ணாக் கேறும்போது
பாராது மூக்குவழி பாய்ந்திடாது
        பரிசமென்ற சத்தவிடை யாதிக்குள்ளே
சேராது சகசபிரா ரத்வகர்மந்
        திரையாதி பிரபஞ்சச் சிருஷ்டிபோச்சே. (30)

சிருஷ்டிக்கு மூலாதா ரத்தினிட்சை
        சேகரத்தா லஞ்சுவகைச் சத்திசேரு
மிருட்டிலுற்று வச்சமிகப் பிறுந்தைமாயா
        விபத்துவெறு மவித்தையிலே மேவிக்கொண்டு
அரட்டிவிக்கு மனந்தானே மூலவித்துக்
        கவ்வுருவாய்ப் பலவிதமா யாகுமிந்தப்
பிரட்டனைத்து மவுனமுத்திக் கேறுதையா
        பேயர்களே சூஸ்திரத்தின் பெருமைதானே. (31)

வேடியுப்புக்கட்டு.

பெருமையென்ற வாதத்துக் காதியுப்பைப்
பேதகமாய் மறைத்துவைத்தார் பெரியோரெல்லாம்
அருமையென்ற பிள்ளையென்றால் கண்டுகொள்வான்
ஆகாசத் திடிபிறந்த அண்டவித்துச்
சருகுதுளிர் வெடியுப்புக் கட்டிப்போச்சு
சவுக்கார வழலையென்ற பேருமாச்சு
குருவிதுக்கு அடிமூலந் தீட்சையாச்சுக்
குடியிருப்புக் கயிலாசங் கொள்ளைபோச்சே. (32)

கொள்ளையிடப் போகும்நில வுப்பினாலே
கொண்டலுப்புக் காதியுவர் கூட்டங்கூட்டம்
வெள்ளையொன்று நீலமொன்று செகப்பதொன்று
வேதமறி யாதவர்க்கு வீண்தானையா
கள்ளனையும் வெள்ளனையுந் தண்ணீர்ப்பந்தல்
காட்டிவிக்குங் கதையினுடக் கருத்தோணுதோ
எள்ளுணரு மெண்ணெய்தனக் காகவேண்டி
யெலிப்புழுக்கை யுணர்ந்தவித மென்னதானே. (33)

சாதிலிங்கக்கட்டு.

தானென்ற கதையெனவோர் வாதஞ்சொல்வேன்
சாதிலிங்கக் கட்டியொரு பலந்தான்வாங்கிக்
கூனென்ற சிறுபாண்டந் தன்னிலையா
கொடியநவச் சாரம்வெடி யுப்புக்காரம்
மேனென்ற உவருப்புக் கல்லுப்போடு
மிஞ்சாமற் சரியிடையாய்ப் பொடியாய்ச்செய்து
கானென்ற அரைவாசிப் பாண்டத்திட்டுக்
கடிதான சாதிலிங்கங் கட்டிவையே. (34)

கட்டிவைக்கும் வகைவிபரஞ் சொல்லக்கேளு
கானகத்தின் குண்டுமணி யிலையரைத்துத்
திட்டமாய்க் கவசமிடு தேங்காய்போலச்
செய்தவுடன் பாண்டநடுப் பொடிமேல்வைத்துக்
கொட்டிவிடு வதன்மேலே உப்பின்தூளைக்
கூசாமற் றானமுழ்த்திக் குவிந்தவாய்க்குள்
சட்டிகொண்டு தான்மூடிச் சீலைமண்ணுஞ்
சாதித்து அலரயளவு குழிதானுள்ளே. (35)

குழியிலிந்தப் பாண்டமதை வைத்துமூடிக்
குளிரான பனிகாலங் கூறிவிட்டோம்
நெளியாமற் றைமாசி யிரண்டுஞ்சென்றால்
நேரான கவசத்தை நீக்கிப்போடு
வழியான லிங்கத்தை யெடுத்துக்கொண்டு
வாகான அயக்கரண்டிக் குள்ளேவைத்துத்
துளிரான சிப்பிநீர் சுருக்குத்தாக்கு
சுகமான லிங்கமது யிறகிப்போமே. (36)

இறகிப்போஞ் செம்பருத்தம் பூவின்சாறு
என்மகனே யரைப்படியுஞ் சுருக்குத்தாக்குக்
கருகிப்போ மென்றுசொல்லி மயங்கிடாதே
கண்ணெல்லா மிறுகியொரு கட்டியாகும்
உருகிப்போங் குடக்கரிக்குள் வைக்கச்சொல்வேன்
உத்தமனே வெடியுப்புச் சுண்ணந்தன்னைத்
தெரியத்தான் வெண்கருவா லறைத்துக்கொண்டு
திடமாகக் கவசமிட்டுச் சேலைசெய்யே. (37)

சேலையென்ன வெள்ளையாய் மண்ணில்லாமற்
சேர்த்திருபத் தஞ்சுமட்டுந் திரமாய்ச்சுத்தி
வேலையென்ன அயக்குடத்திற் சிறுநீர்தானும்
விட்டுவிடு ஆறுபடி மிச்சம்வேண்டாம்
வாலையெனுங் கெந்தியொரு பலந்தான்போடு
வளமான வெள்ளைக்கல் சுண்ணம்போடு
சோலியென்ன வன்னீர்க்குள் கிளியாய்க்கட்டித்
தூக்கியெரித் திடுசிறுகச் சுத்தமாமே. (38)

சுத்தமடா அமுரிகுளம் பாகுமட்டுஞ்
சூட்டடுப்பில் வைத்தெரிக்கச் சொன்னேனையா
வெத்திபோ லதையெடுத்துக் குமரிவேரை
வெட்டியறைத் திடுகவச பீறச்செய்து
பத்திரமாய்ச் சேலைமண்ணே ரேழுஞ்செய்து
பாங்காகப் புதுக்கலசந் தனிலடக்கு
குற்றமில்லை முப்பதெருப் புடத்திற்போடு
கொடுஞ்சுருக்காய் லிங்கமது கட்டிப்போச்சே. (39)

கட்டுகின்ற விரகமது கண்விட்டாடுங்
கரியிரு குழம்போது கசடில்லாமற்
தட்டியற வைத்தசொர்னத் தகட்டிலப்பாத்
தாக்கிவிடுச் சரியிடையாய்த் தளதளக்குஞ்
செட்டியுள்ள செம்பதனி லெட்டுக்கொன்று
கிருபையுடன் சேர்த்தாக்கால் களங்கமாகும்
பட்டினியே யிருப்பானே வெள்ளிபத்திற்
பாய்ச்சினுற் சிறிதளவு பலிக்குந்தானே. (40)

பலிப்பதற்கு அயமுருக்கிப் பாராரையோ
பாசாணப் புலனறியார் பஞ்சமாண்பர்
கலிப்புவிக்குள் ளாய்ப்பிரண்டு பேசிப்பேசிக்
கண்புகைந்து திரிவதையுங் கண்டபேர்கள்
வலிப்பெடுத்துச் சரசபரி யாசம்பண்ணி
வாழ்வதற்கு நம்பிவந்த பெண்டீர்பிள்ளைச்
சலிப்பதற்குச் செனனமெடுத் தானேயல்லாற்
சமாதிபுப்பை யறியாத தாட்சிதானே. (41)

தாட்சியில்லை சதாசிவனு ருப்பைக்கண்டால்
சத்தியுப்புச் சொன்னபடி தானேகேட்கும்
காட்சியென்ன வழலையல்லால் வேறுமுண்டோ
கவலையற்ற பேர்களுக்குக் கருமமுண்டோ
ஆட்சியல்லோ நவ்வெழுத்தைச் சவ்வுக்குள்ளே
யாட்டிவைத்துப் பார்த்திருந்தா லமுதயோகஞ்
சூட்சியல்லோ கண்டறிய வேணுமையா
சுழிமுனையி லொருமுனையைத் தூக்கியேத்தே. (42)

ஏத்தினுற் பன்னிரண்டு கதிருக்குள்ளா
யீரெட்டுக் கலையடங்கு மியக்கமில்லை
மாத்தினு ரிடகலையைப் பூரகஞ்செய்
மைந்தனே பின்கலையில் ரேசகஞ்செய்
தேத்தினுர் சுழிமுனையிற் கும்பகஞ்செய்
சிவயோக வாழ்க்கையினிற் சேர்ந்துபோகும்
காத்தினு லிறப்பதுவும் பிறப்பதாச்சுக்
கம்பியுப்புச் சுண்ணமதைக் காட்டுவேனே. (43)

வெடியுப்புச் சுண்ணம்.

கம்பியுப்பு ரெண்டுபலம் நாலாங்காய்ச்சால்
காசியினிற் பூநீரு பலமும்ரெண்டு
வெம்பிவிடா தெலுமிச்சம் பழச்சாறுதன்னை
விட்டரைத்து அயக்கரண்டிக் குள்ளேயிட்டு
நம்பியல்லோ உலையில்வைத்து ஊதும்போது
நலமாகச் சிலுசிலுத்துக் கட்டிப்போகுந்
தம்பிரவச் சாரமுடன் சீனங்கூட்டித்
தானரைத்து முன்போலே தாக்கியூதே. (44)

ஊதினதோ ரிரண்டையுமே பொடியாய்ச்செய்து
உத்தமனே பனியில்வைக்கச் செயநீராகும்
வாதிகளே யிந்நீரி லிணங்கன் தன்னை
வாரியிட்டு ரவியில்வைக்க வத்தும்நீர்தான்
கோதியல்லோ மேற்படருங் கம்பியுப்புக்
குணமாகக் கத்திகொண்டு வளித்தெடுத்துத்
தீதில்லா துப்பையெடு பலந்தானென்று
சேர்ந்தபின்பு யின்னமொரு சேதிகேளே. (45)

உரோமத்தயிலம்.

கேளப்பா ரோமமதைக் கொண்டுவந்து
கெடியான உவர்மண்ணைக் கரைத்துக்கொண்டு
கோளப்பா வாராம லுவருக்குள்ளே
குமுறவே காய்ச்சிவிடு சுத்தியாகும்
நாளப்பா பொடிப்பொடியாய் ரோமந்தன்னை
நருக்கியொரு பாத்திரத்தில் வைத்துநீயுந்
தாளப்பா அயக்கரண்டி தழலிற்காய்ச்சிச்
சாரஉப்பைத் தானுருக்குந் தன்மைகேளே. (46)

தன்மையா யுருக்கையிலே ரோமந்தன்னைத்
தாக்குவாய் மெள்ளமெள்ளச் சற்றுசற்றாய்க்
கன்மையுட னிப்படியே ரோமந்தன்னைக்
கம்பியுப்புக் கேத்திவிடு காரமாகும்
வன்மையாய்க் குடித்தவுப்புக் கட்டிப்போகும்
மகத்தான ரோமமெனுந் தயிலத்தாலே
வெண்மையாய்ச் சுண்ணமென்ற பேருமாச்சு
வேடிக்கை வாதமதில் விள்ளுவேனே. (47)

விள்ளுகிறேன் வெடியுப்புச் சுண்ணம்பத்து
விருதான சூதமது விராகன்பத்து
தெள்ளுகிறேன் சாரமது விராகன்நாலு
தெளிவான வீரமது மூன்றுசேரு
தள்ளுகிறே னிவையெல்லாங் கல்வத்திட்டுச்
சார்வான அரக்கப்பா லண்டநீருந்
துள்ளுகிறே னிதில்விட்டு அரைத்துவில்லைத்
துட்டதும்போற் செய்துலர்த்தித் தொழிற்செய்வாயே.(48)

தொழிலாளி யானாக்கால் செய்வாயையா
சுகிர்தமுள்ளச் செம்பதினாற் கிண்ணிமூடி
வழியாகச் செய்துமதில் மருந்தைவைத்து
வளமான சீலமண்ணா லேழுஞ்செய்து
குழியான மண்டமதில் மணலைக்கொட்டிக்
குறியாக வதுநடுவே குகையைவைத்துத்
தெளிவாக நால்சாமம் எரிப்புத்தீர்ந்து
செயமான பதங்கமது குருவதாச்சே. (49)

குருவான பதங்கமதை எடுத்துக்கொண்டு
குடகரியில் வைத்தூது மணிபோலாடுங்
கருவான வூமத்தங் காயிலிட்டுக்
கனத்தபுட மில்லாமல் பத்துந்தீர்ந்தால்
உருவாகுங் கெந்தியிட்டுச் செந்தூரித்து
வூட்டினா லேதேனு முண்டுவுண்டு
அருளாகுந் தினங்குன்றி யருந்தினாக்கால்
அப்பனே தேகசித்தி யாகும்பாரே. (50)

பாரையா முடியைவிட்டு அடியைத்தொட்டால்
பாதகரே நீங்களென்ன வாதம்பார்த்தீர்
ஊரையா சுடுகாடு சுத்தம்போட்டல்
உள்ளிருக்கு மடிமுடியை யுற்றுப்பாரு
காரையா அடிமுடிக்கு மூலவிந்து
கண்டீரோ கடல்நீரின் கருவைத்தானும்
ஆரையா காண்பதுவும் யோகிகாண்பான்
அப்பனே குருநூலன் பதுந்தான்முற்றே. (51)

உரோமரிஷி ஞானம், ௫௰.

முற்றிற்று.

பூங்குடி சச்சிதானந்த சுவாமி அவர்களிடம் வாங்கிய ஏட்டுப் பிரதியின்படி இச்சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவே துணை.

125 - வது:

உரோமரிஷி திருவாய்மலர்ந்தருளிய

வாதசூத்திரம் ௰௬.

பதினாறு பாடல் பரமனார் பாதம்
அதிலே தெளிந்து ஆடினார் சூட்சம்
விதியாம் வெகுதூரம் விளம்புவ தெல்லாம்
கதியேது மில்லைக் கணேச னருளே. (1)

அருளா யடிமுடி யறியார்கள் மூடர்
பொருள்காண்ப தெப்போ புலன்காண்ப தெப்போ
கருக்காண்ப தெப்போ காய்காண்ப தெப்போ
உருவாவ தெப்போ வூண்காண்ப தெப்போ. (2)

காண்ப தடிதன்னைக் காவென்றுஞ் சொல்லார்
வீண்பழி யாக விரைக்குஞ் சருகடா
ஊண்சிவ நீற்று லொடுங்கு மடிமுடி
தூண்தரும் பாகுந் துரும்புந் தூணுமே. (3)

ஆகுமே யூமைச்குள் ளாகாய விந்துவைப்
போகம் விழுந்தட்டிப் போல விறக்கிட
சாகு மடிமுடி தானடி மூன்றும்
போகுமே மாற்றுப் பொன்மேரு மட்டுமே. (4)

மட்டுமீ தல்லால் மார்க்க மிகவுண்டு
கட்டுமே நாதக் கருவாம் வழலையாய்
எட்டுமே யெட்டெட் டறுபத்து நாலும்
தொட்டுமே வாட்டத் தொழில்காணுஞ் சித்தரே. (5)

சித்தரக் கருவின் செய்பெயர் சொல்கிறேன்
வைத்தார்க் கலந்தக் குறியவ ளென்றுஞ்

செத்தாற் பிழைக்குஞ் சீர்பிண்ட மென்றுஞ்
சத்தாஞ் சருகு காயென்றும் பேரே. (6)

காயென்று மூன்மைக் கனியவ ளென்றும்
மாயென்று மில்லா மாப்பாவை யென்றும்பேர்
தாயென்றுங் கும்பிடு தானவ ளென்றும்
நாயென்றும் பீரில் நவ்வெள்ளைக் கல்லே. (7)

கல்லாகும் பச்சை கருநீல மென்றும்பேர்
சொல்லார் களிமைச் சுரோணித மென்றும்பேர்
வில்லா னதற்கு விசையம்பு வென்றும்
உல்லாசத் தேக உடல்ரெண்டு மானதே. (8)

உடலுக் குயிரு மோரங்கி யாலே
தடையா மூன்றுந் தான்சிவ மானார்
கடவினால் காத்துக் கைக்குள்ளே சிக்குஞ்
செடமழி யாது தெளிந்துகொள் வாரே. (9)

வாராணே வூனின் வடிவு கண்டாலே
பேராம் வழலை பேசாமற் கட்டுண்ணும்
கூராம் வழலைக் கொடுஞ்சுண்ண மாச்சுது
நீராம் வழலையால் நினைத்தது வாதமே. (10)

வாதத்துக் காதி வழலை யல்லாது
பேதித்து வேறே பின்னொன்று மில்லை
சாதித் தறியாத தன்னுண்மை யப்பா
வேதத்திற் சொன்னே மெய்யுரை யெண்ணே. (11)

எண்ணும் வழலை யிசைக்கும் பொழுது
மன்னிய தாக வகைதப்பிச் செய்தான்
சென்னி யடிநடு செயலது வான
கன்னியா மூன்றே சவுக்காரத் தாட்டே. (12)

காரத்தி னுட்டைக் கண்டான் பறங்கி
சீரொத்துச் செய்யத் திறந்தப்பி விட்டான்
வேரத்த தாலே வீணாகிப் போச்சுது
சாரத்து வண்ணான் சலவைக்கு மானதே. (13)

ஆனதி னாலே அடிமுதல் மூன்றும்
போனதி னாலே பொய்யாச்சு நூல்கள்
தானது வான தனியறி யாதலால்
ஏனிது வென்று லீசனுத் தாரமே. (14)

உத்தாராத தாலே யொளித்தார் ஏழலையைப்
பித்தனார் சொன்ன படிபுதைத் திட்டார்
கத்தா வருளைக் கடப்ப தரிதென்றே
வைத்தாரதிற் சூட்சம் வகையறி வாளர்க்கே. (15)

வகையறி வாளர்க்கு மச்சமுனி சொன்ன
துகையொரு யெண்ணூற்றிற் றுவண்டு அழிந்திடிற்
குகைமறைப் பொன்று குணஞ்சத் தறியலாஞ்
சிகையறிந் தோர்கள் தெளிந்துகொள் வாரே. (16)

உரோமரிஷி வாதசூத்திரம் மிசு,

முற்றிற்று.

திருமங்கலம் அருணாசலம் பிள்ளையவர்கள் குமாரர் வயித்தியம் சுப்பிரமணிய பிள்ளை யவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப் பிரதியின் படி இந்தச் சாஸ்திரம் அச்சிடலானது.

உ

கடவுள் துணை.

126 - வது:

உரோமரிஷி திருவாய்மலர்ந்தருளிய

அமிர்த கருக்கடை ௰சு.

காணப்பா ஆதியிலே பூத்தபூவும்
கண்மணியே ஆதிமண் ணுவருப்பாகும்
வானப்பா வகாரத்தில் நகாரமுப்பு
வளமான பிரமனொடு விஷ்ணுருத்ரன்
மானப்பா யிவர்மூவ ரமர்ந்தஉப்பு
மகத்தான பரமாக நின்றமுப்பு
ஆணப்பா பெட்டிரண்டும் பத்தாய்நின்ற
அன்பான மனோமணியாள் வாலையாச்சே. (1)

ஆச்சப்பா வாலையென்ன சவ்வீரந்தான்
அவ்வீரம் நின்றசரம் யீசன்விந்து
வாச்சப்பா வாலைரசம் முப்புவாமே
வாலைதிரி புரைமணியும் முப்புவாகும்
பாச்சப்பா சவ்வீரம் விடவேறுண்டோ
பண்பாக அண்டமென்றும் இதற்குப்பேரு
பேச்சப்பா பேருபெற்ற வீரந்தானே
பேர்பெரிய சரக்கப்பா துருசுபச்சை. (2)

பச்சையென்ற துருசெல்லாம் மஞ்சள்மஞ்சள்
பார்மகனே அதுநிறந்தான் படிகவெள்ளை
கச்சையென்ற சுண்ணத்தை வீரத்தின்மேல்
கடுகளவு வைத்திடவே சிவந்துபோகும்
பச்சைமஞ்ச ளிதுவப்பா கொச்சிமஞ்சள்
பார்மகனே வீரம்விட்டால் வேதைபோச்சு
செச்சையென்ற முப்பூவு மிதுதான்வீரந்
தேர்ந்துபார் சந்தேக மில்லைத்தானே. (3)

தானென்ற வீரமடா ஆதிமுப்பூ
சவ்வீரம் விட்டாக்கால் விழலாய்ப்போச்சு
வானென்ற வீரமடா சாரசாரம்
வகைவீரம் விடிற்கார சாரமில்லை
தேனென்ற அமுதமடா வீரராஜன்
தெவிட்டாத வழலையடா தலைமையானேன்
கோனென்ற குருவப்பா சவ்வீரந்தான்
கோடிவித்தை தொந்தங்க ளாடலாமே. (4)

ஆடலாம் தொந்தம்பதி னாறுசூஸ்திரம்
அப்பனே நீத்தினங்கை பாகஞ்சொன்னேன்
தேடாமற் சித்தர்சொன்ன மறைப்புக்கெல்லாம்
சேகரித்த பொக்கிஷத்தை வெளியாய்ச்சொன்னேன்
பாடலாம் ஆடிடலாங் கூத்தைத்தானும்
பரமரக சியமப்பா பதனஞ்சொன்னேன்
காடெல்லா மின்னாலே வெளியாகத்தான்
கசடருக்குச் சொல்லாதே பாவந்தானே. (5)

தானேதான் பிரணவத்தைச் சாற்றக்கேளு
தன்மையுடன் உண்மையடா தீக்ஷைக்கேளு
நானேதான் சிப்பியென்ற பிண்டந்தன்னை
நாடியெடுத் ததுவுண்ட நீரைப்போக்கி
மானேதான் சவுட்டுப்பை பொடித்துக்கொண்டு
மாங்கிசத்தி லிட்டுமதன் வாயைமூடி
தானேதா னேர்தினம்பின் கானில்வைக்கத்
தரமாகச் சதைகரைந்து சலமாம்பாரே. (6)

பாரப்பா சலந்தனிலே சவ்வீரத்தைப்
பண்பாகப் பொடிசெய்து போட்டுக்கொண்டு
ஆரப்பா ஆதித்தன் ரவியிற்றானும்
அப்பனே கடிகையஞ்சு மூவஞ்சாகும்
மாரப்பா வீரமய முறவாய்ப்போகும்
மார்க்கமுள்ள வீரமுற வானநீரில்
வீரப்பா கொச்சிரச கற்பூரத்தை
விதமாகத் துலைத்துப்பின் கானில்வையே. (7)

வையப்பா ரவியிற்சலங் கொஞ்சம்விட்டு
வற்றவற்ற வோதனைத் திருப்பிவைத்து
கையப்பா கடுவெய்யிலில் மாறிமாறி
கண்டுகொள் ரெண்டுபத்து மூன்றுரெண்டும்
பையப்பா ரவிகடிகை காய்ந்துதானால்
பார்மகனே ஊசரத்தில் நீருமோடும்
செய்யவட் டோட்டில்வைத் தோடுமூடி
சீலைசெய்து எருவிரண்டிற் புடந்தான்போடே. (8)

போட்டபுட மாறவிட்டு யெடுத்துப்பாரு
புண்ணியனே மஞ்சளுக்கு சிவக்குஞ்சுண்ணம்
ஆட்டமெல்லா முப்பூவாம் பூரச்சுண்ணம்
அடங்காத காலனுக்குக் காலகண்டர்
வாட்டமென்ற சரக்கதறு பத்திநாலும்
வாட்டிடவே மணியாம்நூல் தொந்தம்பாரு
காட்டமென்ற முப்பூவை யிதனிற்சொன்னேன்
கானாட்டா வின்னூலைக் கிழித்துப்போடே. (9)

போடப்பா சிவனோடீஸ் பரியாளாணை
பூவுலகிற் கிடையாது இன்னூலப்பா
ஆட்டப்பா ஆடுதற்கு வகையைக்கேளு
ஆண்டொன்று உட்கொண்டு நிலையைப்பாரு
பாட்டப்பா பரப்பிரம தூரதிஷ்டி
பார்க்கலாந் திரிகாலந் தெரியலாகும்
தேட்டப்பா பத்தியத்திற் திறமாய்நில்லு
தெரிவைசுகங் கடுகொடுநல் லெண்ணெய்தள்ளே. (10)

தள்ளவே பத்தியந்தான் வேறொன்றில்லைத்
தயவான பிரமகற்ப மதும்வேறில்லை
கொள்ளவே தூரதிஷ்டிக் கிதன்றியில்லை
கொடியதிரி காலவர்த்த மானமீது
அள்ளவே முப்பூவு மீதன்றியில்லை
அறுபத்து நாலுசரக் கிதன்றியில்லை
கள்ளவே சாகாக்கா லிதன்றியில்லை
கண்டுகொள்வே காத்தலைவே றில்லைதானே. (11)

தானேதான் இன்னூலை வெளியிற்சொன்னோர்
தப்பாது உந்தனுக்குச் சாபம்போட்டேன்
மானேதான் யென்னுடைய நூலீதப்பா
வையகத்தோர்க் கெய்தாது தவத்தோர்க்கெய்தும்
நானேதா னின்னூலை வெளிவராமல்
நலமாகச் சாபமிட்டேன் உலகிலில்லை
பானேமற் றோரிடம்நூ லிருக்குதென்றால்
பாலகனே தலைவெடித்து நரகெய்வாயே. (12)

வாயேது சிவயோகி ஞானிகேட்டால்
வழியறிந்திந் நூல்முப்பூச் செய்தோர்கேட்டால்
தாயேது சேயேது யென்றுநீயும்
தாட்சணியம் வையாதே தயவாய்ச்சாற்று
நாயேது நீயாவாய் நூல்காண்பித்தால்
நரகத்துக் காளாவாய் சாபம்போட்டேன்
காயேது பூவேது யிலையங்கேது
கனிந்துவிழும் பழமல்லோ யின்னூல்தானே. (13)

தானேதா னின்னூலே யாசானுசான்
தாரணியி லிதைவிடவே ருசானில்லை
நானேதான் யின்னூல்வைத் திருந்தோர்தன்னை
நாடியே நானவந்து முன்னேநிற்பேன்
தேனேதான் அமிர்தகருக் கிடைபன்னூறு
தெளிவான மனந்துறுதி யாகப்பாரு
வானேதான் சித்தர்சிவ யோகிவந்து
வளமான பொருளொடுநூற் கேட்டாற்கேளே. (14)

கேளப்பா அனேகநூல் கொடுக்கவேண்டாங்
கெட்டியாய் ஒவ்வொன்றாய்க் கொடுத்துவாங்கு
நாளப்பா சாபமில்லை நானுஞ்சொன்னேன்
நலமான அரைக்குள்ளே யின்னூல்வைத்தோர்
ஆளப்பா பிரபலங்கள் பிதற்றவேண்டாம்
அவையடக்க மாகவேநீ யூமையாக
தேளப்பா கொட்டுதல்போல் தெளிவுகாண
தேள்கொட்டும் வாயிற்சுண்ணம் வைத்துப்பாரே. (15)

பாரேநீ யருந்துசலங் கொஞ்சம்விட்டால்
பார்மகனே கடுப்பெரிவு குளிர்ந்துபோச்சு
வீரேநீ யரவுகடி விஷத்தால்மாண்டால்
விழியிரண்டிற் கடுகளவு போட்டாயானால்
காரேநீ விஷங்களெல்லா மகன்றுபோச்சு
கண்டுகொள்ளு தேள்கொட்டுஞ் சரக்கெல்லாந்தான்
தேறேநீ பரமபத முப்புச்சுண்ணம்
செப்பினேன் அமிர்தகருக் கடையுமுற்றே. (16)

உரோமரிஷி அமிர்த கருக்கடை ௰௬,

முற்றிற்று.

மதுரை புதுமண்டபம் பாத்திரக்கடைவியாபாரம் ந. ராம. கணபதியா பிள்ளையவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப் பிரதியின்படி இச்சாஸ்திரம் அச்சிடலானது.

உ

சிவமயம்.

127-வது:

உரோமரிஷி திருவாய் மலர்ந்தருளிய

பூரத்துறை ம்சா.

பாரப்பா முப்பூவின் கருவைக்கேளு
பகரரிய நாதாக்கள் வழலைதன்னை
நேரப்பா வெளிதிறந்து சொல்வேன்யானும்
நெத்திக்கண் போற்பூரத் துறையின்சூத்திரம்
மாறப்பா சத்திசிவம் ரெண்டேயல்லால்
மார்க்கங்கள் வேறில்லை சுத்தசிவங்கேளு
ஆரப்பா அப்புஅங்கி வாயுசேர்ந்தால்
அரன்மாயன் பிரமனுமாய் பிறந்தார்காணே. (1)

காணப்பா யேகநிலை வஸ்துவான
கண்மணியே ஒன்றாகி யிரண்டாய்நின்ற
வானப்பா கண்ரெண்டு சத்திசிவம்ரெண்டு
வளமான சரக்குவைப்பு முப்புரெண்டு
பேணப்பா நம்பியுப்புச் சத்திசாரம்
பெலமான விஷ்ணுஉப்பு சிவசாரந்தான்
ஈனப்பா சொல்லுதற்கு விபரங்கேளு
நாதாக்க ளாட்டமெல்லா மந்தம்ரெண்டே (2)

தானென்ற ரெண்டுமுப்பு திறந்துசொல்வேன்
சமுசியங்க ளில்லையதா யறியச்சொல்வேன்
வானென்ற சத்தியுட சாரந்தானும்
மைந்தனே பூரமென்றால் ரசகற்பூரம்
கோனென்ற சிவத்தினுட சாரந்தானும்
குறிப்பறிய வீரமென்றாற் சவ்வீரந்தான்
தேனென்ற அமுதமப்பா யிவ்விரண்டும்
தெளிவாகச் சொல்லுகிறேன் தெரிந்துகொள்ளே. (3)

தெரிந்துகொள் ரசகற்பூ ரத்தைத்தானும்
    தெளிவாகப் பலம்ஒன்று யெடுத்துக்கொண்டு
அறிந்துகொள் சுண்ணமென்றால் வெடியுப்புத்தான்
    அரகரா பலங்கால்தான் பொடித்துக்கொள்ளு
சொரிந்துகொள் பீங்கானிற் போட்டுக்கொண்டு
    சுகந்தமென்ற வாசனையாம் சவாதுதன்னைப்
பரிந்துகொள் பலமரைக்கா லதிலேபோட்டுப்
    பாங்காக மத்திக்க மெழுகுமாமே. (4)

ஆமப்பா மெழுகுதனை யெடுத்துக்கொண்டு
    அருள்பெருகும் பூரமப்பா ரசகற்பூரம்
சாமப்பா தாமதங்கள் செய்திடாமல்
    சல்தியாய்ப் பூசிப்பீங் கானில்வைத்து
வாமப்பா அகோரமென்ற ரவியில்தானும்
    வளமாக மூன்றுநாள் வைத்தேபார்த்தால்
தாமப்பா தானொடுங்கி பெண்ணைய்கக்கித்
    தான்செத்து உயிரொடுங்கிச் சாகும்பாரே. (5)

பாரேநீ ஓட்டில்வைத்துச் சேலைசெய்து
    பதிவாகக் குக்குடத்திற் போட்டாயானால்
ஆமேநீர் தும்பைமலர் போலாகத்தான்
    ஆச்சரிய முப்பூவுஞ் சுண்ணமாச்சு
சேரேநீ செம்பதனிற் சேர்த்துப்பாரு
    திறமான மாத்ததொன் பானின்முக்கால்
காரேநீ சரக்கறுபத் தோடுநாலுங்
    கண்காணக் கொள்ளுமடா கண்டுபாரே. (6)

கொள்ளவே குருமுடிக்குங் காலமப்பா
    கொடுங்காரம் பைங்குனிசித் திரையுமாகும்
தள்ளவே மற்றமற்ற காலமெல்லாம்
    தவறுண்டு போகுமடா வலுவோயில்லை
அள்ளவே மலைபொன்னும் நாமுஞ்சொன்னோம்
    ஆத்தாளே பூரமப்பா ரசகற்பூரம்
தெள்ளவே அப்பனல்லோ சவ்வீரநதான்
    தெரிந்துகொள் யிதிரெண்டும் சத்திசிவமாமே. (7)

சாரமென்றால் சிவசாரம் சத்திசாரம்
தானான ஆதிவஸ்து அனாதிவஸ்து
வாரமென்றால் காரமொடு சாரந்தானும்
வகைதோன்றச் சொல்லுகிறேன் வழியாய்க்கேளு
வீரமென்றாற் சவ்வீரங் காரசாரம்
வெளிதிறந்து வெட்டவெளி யாகச்சொன்னேன்
பாரமென்றாற் பூரமப்பா ரசகற்பூரம்
பாலகனே சாரம்நவச் சாரம்பாரே. (8)

பார்க்கவே சொல்லுகிறேன் நினைவாய்ப்பாரு
பகரார்கள் பெரியோர்கள் மறைப்பையெல்லாம்
வார்க்கவே கிளிஞ்சில்தனைக் கொண்டுவந்து
வாய்பிழந்து வெடியுப்பைப் பொடித்துவைத்தால்
ஆர்க்கவே சலமாகும் சலத்தினுள்ளே
அப்பனே வீரத்தைப் பொடித்துப்போட்டு
கார்க்கவே பீங்கானில் வைத்துநீயும்
கனமான ரவிதனிலே காயவையே. (9)

காய்ந்திருந்த சலந்தனிலே ரசகற்பூரம்
கருவாகத் தான்துவைத்து ரவியில்வைப்பாய்
பாய்ந்திருந்த பீங்கானில் வைத்துக்கொண்டு
பண்பாக ரவிகடிகை மூவேழ்நான்கும்
சாய்ந்திருந்த சரக்கதுவும் காயக்காயத்
தான்மாறி துலைத்தநீர் காய்ந்தபின்பு
தாய்திறந்த வட்டோட்டில் வைத்துநீயும்
தனிச்சேலை செய்கரிடை புடத்திற்போடே. (10)

போட்டபுட மாறவிட்டு யெடுத்துப்பாரு
புண்ணியனே நீயல்லால் வேறேயுண்டோ
ஆட்டமெல்லா மிதனைவிட ஆட்டமுண்டோ
அறுபத்து நாலுசித்தும் நொடிக்குள்ளாகும்
தேட்டமென்ன நவலோகம் பத்தரையுமாச்சு
திறந்தப்பா சொல்லிவிட்டேன் முப்பூவெல்லாம்
காட்டமென்ன இன்னாலைக் காட்டவேண்டாம்
காணவென்றால் மேலோரை யடுத்துப்பாரே. (11)

பாரப்பா பதினெட்டுச் சித்தர்பாதம்
பார்வதியாள் பரமனிரு பாதந்தன்னை
நேரப்பா தபோதனர்கள் ரிஷிகள்பாதம்
நிகழ்த்தினே னிவர்பதத்தை மறந்திடாதே
சாரப்பா சத்தியத்தின் நிலையில்நின்று
சார்வாக யின்னூலை வெளிவிடாதே.
பேரப்பா பெற்றதொரு புண்யாத்மாவே
பிரமமல்லோ இன்னூலைத் தெரிந்தோர்தாமே. (12)

தானேதான் குருவிந்நூல் வைத்திருந்தோர்
சத்தியமாய்ச் சொன்னேனுங் களுக்கேயானும்
நானேதா னின்னூல்வைத் திருந்தோறகொப்பாய்
நாட்டிலுள்ள சித்தர்களே தர்மவாலை
மானேதான் அவையடக்க மாகநூலை
மானிலத்திற் காட்டிவிட்டாற் சாபம்போட்டேன்
கோனேதா னுன்னுடைய குருவேயானால்
குற்றமில்லை யவர்களிடங் கொடுக்கலாமே. (13)

கொடுக்கலாம் யென்னுடைய கோவைநூல்கள்
கொடுஞ்சுருக்கு அமுர்தகருக் கடைதானென்று
எடுக்கலாந் தொந்தம்பன் னூலுக்குள்ளே
யேணிகொண்டு யேறலாம் தேதினங்கள்
அடுக்கலாம் கயிலாச மேருதானும்
ஆதிபிர்ம ஞானதிஷ்டி ரஞ்சிதந்தான்
எடுக்கலாம் பூரத்துறை சூத்திரமிந்நூல்
யென்மகனே யின்னூலின் கோவைபாரே. (14)

கோர்வையப்பா இன்னூல்கள் நாலுங்கோவை
கோடிநகர் போனாலு மகப்படாது
சேர்வையப்பா திரிமூர்த்தி சேவையாச்சு
திரிகாலம் தெளிதலெம் மாத்திரமாச்சு
பார்வையப்பா பிரமஞான திஷ்டிபன்னூற்
பரமகயி லாசமென்ற ஈசனீயே
வேர்வையப்பா நெத்திக்கண் திறந்துபோச்சு
வேதாந்த மெய்ச்சுடருந் தோணலாச்சே. (15)

ஆச்சப்பா அரனாரும் பிரமாவந்து
அடிபணிந்து கேட்டாலும் கொடுக்கவேண்டாம்
பேச்சப்பா பேசாதே மவுனமாகப்
பிரபலமாய்த் தர்க்கங்கள் பேசிடாதே
காய்ச்சப்பா கனல்காய்ச்சு மனக்கண்பாய்ச்சல்
கண்டுகொள் லாடதெரி சனங்களெல்லாம்
பாச்சப்பா இன்னூல்கள் வாச்சுப்போச்சு
வரிசையுள்ள சடைநூல்பன் னிருமுற்றே. (16)

முற்றான முற்றப்பா முற்றுஞ்சேரு
மோசங்க ளில்லையடா பூரத்துறைசூத்ரம்
பற்றான பூரமென்ற ரசகற்பூரம்
பாடிவிட்டே னிந்நூல்போல் தொந்தமாகும்
மாத்தான மாறலப்பா யிதுரெண்டுந்தான்
மார்க்கமுள்ள யின்னூலே அந்நூலாகும்
கற்றானபூரத்துறை சுருக்க மிந்நூல்
கண்டுகொள் ளிதிற்சேர்ந்த ஒன்றுமுற்றே. (17)

உரோமரிஷி பூரத்துறை ௰௬.

முற்றிற்று

ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த மகமதுசாயபுபுரம் திருவேங்கிடத் தேவரவர்கள் குமாரர் போத்திலிங்கத் தேவரவர்கள் ஏட்டுப்பிரதி யின்படி இச்சாஸ்திரம் அச்சிடலானது.

உ

சிவமயம்.

128 -வது:

உரோமரிஷி திருவாய்மலர்ந்தருளிய

பிர்மஞான திருஷ்டி ௱௨௰.

—]*[—

காப்பான வேதாந்த பரமெய்ஞ்ஞானக்
கருவிகர ணாதியுட் குருவேகாப்பு
மூப்பான தாபரத்தின் சொரூபமான
மூதண்டப் பதிபாச நிடதங்காப்பு
தோப்பான மரக்கிளையிற் பூப்பிஞ்சோடு
துவர்க்காயுங் கனிரசமாம் பொருளேகாப்பு
தாப்பில்லா பிர்மஞான திருஷ்டியான
சராசரங்கள் சூழ்ந்தகுண டலிகாப்பாமே. (1)

குண்டலியைச் சுழிமுனையிற் கூர்ந்துஒட்டி
குருவான பராபரத்தைப் பணிந்துநாமும்
அண்டமெலாம் பிண்டமதாய் மேவுஞ்சத்தி
அருள்பெருகுஞ் சின்மயத்தை யடிபணிந்து
மண்டலங்கள் மூன்றும்ரவி மதியாற்கண்டு
மகாதிரோ தாயைநாம் பூசித்தப்பால்
பிண்டமென்ற கருக்குருவை யறிவாற்கண்டு
பிரிந்துதன்னைப் பார்க்கயெல்லா மிருளாய்ப்போச்சே. (2)

இருளான இருளினுட ஒளியைப்பார்க்க
என்னசொல்வே னதினுடைய இன்பந்தன்னை
மருளான மனம்நிரத்தி மனக்கண்கொண்டு
மாசற்ற இருளொளியில் மகிழ்ந்தோர்தாமும்
அருளான பேருலகிற் றனேதானாய்
அமர்ந்துவெளி யறிந்துதன்னை ஒளியைப்பற்றி
வெருளாம விருளருளிற் றனாய்மேவி
விளங்குமருள் பொருளெனவே மேவிப்பாரே. (3)

பாரப்பா இருளொழியும் வெளிமூன்றப்பா
பதிவான தேகமதில் கண்டுகொள்ளு
சாரப்பா இம்மூன்றின் நிலையைச்சொல்வேன்
சரீரமென்ற சத்தியது இருள்தானப்பா
நேரப்பா வொளிவான அறிவிற்கண்ணு
நிசமான வெளியதுதான் மாயாமாயம்
காரப்பா மாமாயை கண்ணேசூட்சம்
கருவாகக் கண்டறிவாய் தன்னுள்தானே. (4)

தன்னுள்ளே தானறிந்து தன்னைப்பார்க்க
தனதான மண்டலங்கள் மூன்றினுள்ளே
விண்ணுள்ளே முச்சுடரைக் கண்டுஅந்த
வேதாந்த முச்சுடரின் வெளியைப்பார்க்கில்
கண்ணுள்ளே வெளிதனிலே தன்னைக்கண்டேன்
கருணைவளர் ஒளிதனிலே தன்னைக்கண்டேன்
என்னுள்ளே இருள்தனிலே நின்றுபார்த்தேன்
யேகநிரா மயமான அருட்கண்ணாச்சே. (5)

கண்ணான கண்மூடி விழியைத்தானே
கருணைவளர் சுழிதனிலே கருத்தைவைத்து
விண்ணான நேத்திரத்தை மனக்கண்பார்வை
விளங்கிநின்ற ரவிதனிலே சேர்ந்தேபோச்சு
ஒன்றான பிர்மம்வந்து சேர்ந்தபோதே
உத்தமனே அவமிருத்து ஓடிப்போச்சு
முன்னான சோதியிலே மனக்கண்சாத்தி
முத்தியுடன் பிர்மஞான திருஷ்டிபாரே. (6)

பாரப்பா ஒளிவான அறிவின்கண்ணும்
பதிவான வெளியதுதான் அண்டத்துச்சி
நேரப்பா அண்டமென்ற உச்சிமீதில்
நிசமான அறிவின்கண் மேலேபாய்ந்தால்
பேரப்பா பெற்றகொரு சீவாத்மாவும்
பேசாத மவுனமென்ற பரமாத்மாவும்
சேரப்பா ஒன்றிரண்டும் ஒன்றாய்ச்சேர்ந்தால்
சிவசிவா வெளியொளியாய்ச் சேரும்பாரே. (7)

பிரணவநீர்.

பாரப்பா பதினெண்பேர் சொன்னமுப்பு
    பரமகுரு வெளியாகச் சொல்வேன்யானும்
தீரப்பா கருக்கடையும் குருக்கிடையுங்கண்டு
    திரமாகச் செய்தமுப்பு சொல்லக்கேளு
ஆரப்பா வென்னைப்போலே சொல்லப்போரார்
    ஆச்சரிய மனிதரல்லோ சித்தரானோர்
தோப்பா கிளிஞ்சியென்ற செயநீர்தன்னை
    தீட்சைக்கி பிரணவநீர் செப்பக்கேளே, (8)

கேளப்பா அண்டமென்றும் விண்டமென்றும்
    கெடியான கிளிஞ்சிலுக்கே கோடிநாமம்
வாளப்பா அண்டபிண்டம் ரசகற்பூரம்
    வளமான சரக்கிதுக்கோ கோடிநாமம்
தேளப்பா கொட்டுதல்போ லிதுகொண்டுந்தான்
    திரமாகச் சொல்லுகிறேன் தீட்சைமார்க்கம்
பாளப்பா போகாமல் கும்பிடானை
    பண்பாக மாமிசத்தோ டெடுத்துக்கொள்ளே. (9)

கொள்ளவே சுத்திமுறை சொல்லக்கேளு
    கொடிதான கிளிஞ்சலது படிதான்ரெண்டு
தள்ளாமல் உயிரோடே கொண்டுவந்து
    தனிச்சுண்ணம் படியுவருப் போர்படிதான்
அள்ளவே அமுரியது படிதாமெட்டு
    அப்பனே கரைத்திருத்து கிளிஞ்சுகாய்ச்சு
தள்ளவே கசடெல்லாம் போகுமப்பா
    தண்ணீரு வற்றமட்டும் காய்ச்சுகாய்ச்சே. (10)

காய்ச்சியே யிரக்கிவைத்து சுத்தசலம்விட்டு
    கசடின்றிக் கழுவியே காயப்போடு
சாச்சியாய் உரல்தனிலே இருப்புலக்கை
    சாடித்து மட்டகட்டி மாவதாக்கி
தாச்சியவா ராதுபிங் கானில்வைத்துத்
    தயவாகப் பலமதுதா னிருத்துக்கொண்டு
வாச்சகோழி முட்டைவெண் கருவோபத்து
    வளமான சீனஞ்சவ் வீரங்காலே. (11)

காலப்பா யிதுரெண்டுந் தூளேசெய்து
கருசலத்திற் கலக்கிப்பீங் கானிலிட்டு
சேலப்பா கிண்டிகடு ரவியிற்காய்ந்தால்
செயலான சுண்ணத்தின் செயலோமெத்த
நீலப்பா நீலகண்டர் பச்சையதேவீரம்
நினைவாகப் பலமொன்று நிறுத்துக்கொண்டு
தாலப்பா யிதுரெண்டும் கல்வத்தாட்டத்
தாரணியிற் பிரணவநீர் சுயம்புநீரே. (12)

பிரணவநீர்.

நீரான பிரணவநீர் தீட்சைநீரில்
நீமகனே வெண்கண்ட ரசகற்பூரம்
வாரான ஜெயநீர்பீங் கானிலிட்டு
வளர்பிர்ம கற்பமரை வாசிமுங்க
காரான கடுவெயிலி விட்டுநீயும்
கணக்காக மாறிவைத்துக் காய்ந்தபின்பு
ஆரான ஜெயநீரை யதிலேவிட்டு
அப்பனே நாழிகைதான் ஐயைந்தாமே. (13)

ஐயஞ்சு நாழிகைதான் நன்றாய்க்காய்ந்தால்
அப்பனே நீர்வத்தி ஒடுங்கிப்போச்சு
மெய்யஞ்சும் தணலில்வைததுந் தீப்பிடித்து
மேன்மையாய்க் கட்டியதாய் நீதிப்போச்சு
பொய்யஞ்சும் யிந்நீற்றைப் பீங்கான்வைத்துப்
புகழான சந்திரனில் வைத்துப்பாரு
கையஞ்சு சிரமுடையோன் சுண்ணந்தானுங்
கடுஞ்சுண்ணங் குடுக்கைதன்னிற் பதனம்பண்ணே. (14)

பண்ணப்பா செம்புதனிற் பத்துக்கொன்றாய்
பதிவாகத் தான்கொடுத்து உருக்கிப்பார்த்தால்
திண்ணப்பா மாத்துப்பத் தரையேயாச்சு
திறமான பிரமகற்ப கற்சுண்ணாம்பு
கண்ணப்பா நவமணிபோல் முப்புதன்னைக்
கண்டெடுக்கக் கோடியிலே ஒருவனுண்டு
தண்ணப்பா யோகிசித்தர் கட்கேகிட்டும்
சண்டாள வாதிகட்குக் கிட்டாதின்னால். (15)

இந்நூல்தான் பிர்மகர்ப்ப ஞானதிருஷ்டி
இகபரத்தில் சிவஞானி சிவனுமாமே
இந்நூல்தான் தேவரிஷிகள் பார்கேட்டாலும்
இல்லையென்று யீசுரன்மே லாணைசொல்லு
இந்நூல்தான் குருநூலா மென்றாலுக்கும்
இதன்பொருளைச் சொல்லாதே மைந்தாநீயும்
இந்நூல்தான் கிளிஞ்சிலுக்கே சுண்ணத்தாதி
இயல்பாகக் கிளிஞ்சிசுண்ண மதைதான் தூக்கே. (16)

தூக்கப்பா சுகந்தமென்ற புனுகுகால்தான்
சுகமாக இரண்டுமொன்றாய் மத்தித்தேதான்
தாக்கப்பா ஆதியென்ற பூரந்தன்னில்
தரமாகப் பிரளாமல் தீட்சைசெய்து
வாக்கப்பா நவநாள்தான் ரவியிற்காய்ந்தால்
வளமான வெண்ணெய்க்கும் அனலிற்சுண்ணம்
கோக்கப்பா பூரத்துறை யிதனிற்சொன்னேன்
கோவைநூற் கிந்நூல்தான் குருநூல்முற்றே. (17)

மறக்காத நெறிதனிலே மனதைவைத்து
மௌனரச அமுதமதை மனதாய்க்கொண்டு
இரக்காத பூரணத்தைப் பூசைபண்ணி
இன்பமுனக் கில்லையடா யிருகால்கொண்டு
திறமாக யில்லறத்தைச் சுத்திபண்ணி
ஜீவசரா சரங்கள்சிவ மயமென்றெண்ணி
அறமான சிந்தையதா யிருந்தாயானால்
ஆதியந்தம் நடுவணையை யறியலாமே. (18)

உரோமரிஷி பிர்மஞான திருஷ்டி ௧௬.

முற்றிற்று.

மதுரை யானைக்கல் தெரு முத்தையாபிள்ளை யவர்கள் குமாரர் குழந்தைவேலுபிள்ளை யவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இச்சாஸ்திரம் அச்சிடலானது.

உ

கடவுள் துணை.

129 - வது,

உரோமரிஷி திருவாய்மலர்ந்தருளிய

வழலை சூஸ்திரம் ௧௬.

மூலாதா ரப்பொருளின் பாதம்காப்பு
முப்பொருளும் பாழான முதலேகாப்பு
மேலாதா ரத்தின்வளர் ஆயிபாதம்
வேண்டிக்கொண் டைஞ்ஞூறும் வெளியாய்ச்சொன்னேன்
ஏலாமற் புதைத்தார்க ளிந்தனூலை
இரண்டான ஐம்பதுக்குள் ளிசைந்துசொல்வேன்
பாலான நூறினிலே சிங்கிவித்தை
பாடினேன் வைத்தியமும் வாதந்தானே. (1)

வாதமென்ற சொல்லெல்லாம் உப்பினாலே
மானிலத்தோர் காணாமல் மயங்கிப்போனார்
போதமென்ற சொல்லெல்லாம் யோகத்தாலே
போக்கறியா மானிடர்கள் பொசுங்கிப்போனார்
வேதமென்ற சொல்லெல்லாம் அகாரத்தாலே
வெகுகோடி சத்தமெல்லாம் விளம்பலாச்சு
சூரூதமென்ற மாயையெல்லா மனதினாலே
கூர்ந்துதள்ளிப் பதினாறைக் கூறுவேனே- (2)

கூர்ந்துபார் யெந்தெந்த நூலானாலும்
குருமுறையை வெளிதிறந்து கூருவாரோ
தேர்ந்துபார் ரோமரிஷி நூல்தானென்றால்
சித்தர்களும் முனிவர்களும் திருடுவார்கள்
நேர்ந்துபார் குறிகளைநான் தூண்டினக்கால்
நினைவுகொண்டு பாராட்டால் நானென்செய்வேன்
சார்ந்துபார் நூலிருக்கு தென்றுசொல்லி
தனித்திருந்து தூத்தாதே தானேபாரே. (3)

பார்ப்பதென்ன வழலையுப்பே முடியுப்பையா
பகுத்தறிய வேணுமென்றால் நிலப்பூடப்பா
கோர்ப்பதென்ன உளசரமா நிலத்தைக்கண்டால்
கொக்கிருந்து மீன்பிடித்த குறிபோல்பாரு
சேர்ப்பதென்ன அவரவர்தன் சிலகாலத்தில்
திரண்டபெண்ணுக் கடையாளந் தெரிந்திடாதோ
ஏர்ப்பதென்ன ஒருவர்லகப் பொருளுக்காக
எத்தனைநா ளைக்குபவர்க் கேவலாலே. (4)

ஏவல்செய்து உன்முகம்பார்த் திரங்கமாட்டார்
இதனாலே ஞானபதம் இடரிப்போச்சு
சாவதிலே கிரியையென்ன பின்னுமந்தச்
சண்டாளப் பிரவியிலே சாரப்பண்ணும்
பூவிலையென் றலையாதே யெல்லாம்பூவோ
பூமியுட கருத்தானே பெரியபூவாம்
காவலுண்டோ கட்டுண்டோ அந்தப்பூவைக்
கண்டெடுக்க மாட்டாத கர்ப்பந்தானே. (5)

கர்ப்பத்தி னாலேயல்லோ மாய்கைமூடி
கணல்பூவும் சிலபூவும் காணமாட்டாய்
தர்ப்பத்தை யனுசரித்த ஞானிக்கல்லோ
சாஸ்திரமும் சூஸ்திரமுந் தானேகிட்டும்
வர்மத்தை வெளிவிட்டால் அபானத்தீயை
மாட்டுவார் பூரணத்தின் பதியுப்பாலே
ஜென்மத்தைக் கண்டேது செய்வாரிந்தத்
தீட்சையல்லோ சுத்தகெங்கை தெளிந்தநீரே. (6)

தெளிந்தநீர் மதிரெண்டுக் குள்ளேதீட்சை
திடமாகச் செய்தாக்கால் சித்தியாகும்
பொழிந்திடுவார் தசதீக்ஷை யென்பாரையோ
மோசமடா சத்திசிவ மிரண்டேயல்லால்
அழிந்திடும்நீர் ஒன்றுக்கும் ஆகாதய்யா
ஐந்துமொன்றாய்க் கலந்ததுவே அண்டஞ்செய்நீர்
மொழிந்திடும்நீர் பிரணவநீர் வழலைக்காதி
பூரணமாய் ஆயிரத்தின் இதழைப்பாரே. (7)

இதழான சுழிமுனையே வன்னிவன்னி
எட்டினால் காணலாம் ஆத்தாள்பாதம்
கதளான வாசிகொண்டு கனலைத்தூண்டு
கனவிமேல பானமது கசிந்துஊறும்
சிதலைத்தான் சென்னினலுண்ட வாறுபோலும்
சித்தெறும்பு ஊறவுங்கல் தேய்ந்தாப்போலும்
மதலைக்கா லிப்படியே வாசியோகம்
மவுனத்தைப் பெற்றிடுசன் மார்க்கந்தானே. (8)

மார்க்கமல்லோ பிராணாயம் பண்ணும்போது
வானிலுப்பை யறிந்தவர்க்கு மதியைக்காட்டும்
தீர்க்கமல்லோ ஊசரமே நிலவுப்பாகும்
தேங்காயைத் திருக்கினதோர் செய்கைபோலாம்
பார்க்கவல்லோ காணுமடா அந்தப்பூமி
பச்சென்று ஒருகாலம் பகிர்ந்துநிற்கும்
கார்க்கவல்லோ வடுகனுமே வந்துநிற்பான்
கருணைபெறப் பூசித்துக் காணுகாணே. (9)

காணவே ஐந்துநிலம் அதிலேஉண்டு
கனல்பூமிச் சுடுஞ்சுரத்தில் கண்டால்நன்று
தோணவே மற்றதெல்லா மிரண்டாம்பக்ஷம்
துரிசுதனை யறிவதற்கு ஜோவிமெத்த
பூணவே தீக்ஷைக்குச் சுத்தகெங்கை
பூவிலொடு முதற்பூவே பிஞ்சுபூவாய்
ஊணவே தீப்பூவும் தண்ணிப்பூவும்
உவர்ப்பூவும் கூடினால் முப்பூவாமே. (10)

முப்பூவைக் கண்டவனே ஞானியாவான்
முதற்காண்டம் ஐந்நூற்றின் முடிவைக்காண்பான்
எப்போது பிர்மரிஷி யாகவாழ்வான்
இகபரசா தனமிரண்டும் இவனுக்கெய்தும்
செப்பாதே ரகசியத்தைப் பதினாறுக்குள்
செப்பினேன் சித்தரிதைத் திருடினார்கள்
அப்பனிந்த ஈஸ்வரன் உதாரத்தாலே
அன்றமுதல் பிழைப்பதுவே யின்னூல்தானே. (11)

நூலான பிராணனல்லோ மூலாதாரம்
நடங்கினின்ற பிரணவமாம் யெழுத்தினூடே
காலான வன்னிகொண்டு சுழியிலூட்டு
கண்திறந்து அமிர்தமது குயளிபாயும்
பாலான நடுவிலண்ணுள் மேகவர்ணன
பாம்பணையில் பள்ளிகொண்ட பரிசுபாரீர்
மேலான விழிமடவார் ஆசையாலே
மேலும்விட்டீர் கீழும்விட்டீர் விதியென்றீரே. (12)

விதியிருந்தால் மதியும்உண்டு (விதி)யில்லாவிட்டால்
வேண்டியென்ன வேண்டாம விருந்தாலென்ன
நிதியிருந்தால் வருவார்கள் வந்தபேரை
நில்லென்று சொல்வானேன் நிற்கப்பண்ணும்
சதிரில்வந்து கூத்தாடி ஆடினாலும்
தரையைவிட்ட சிலம்பமுண்டோ சன்னியாசி
கெதியிருந்தால் யெவ்விதமும் வந்துகூடும்
கீழிருக்கும் சிவனுப்பும் கிடைக்கும்பாரே. (13)

கிடைப்பதற்கு வயணமொன்று சொல்வேனையா
கிளிஞ்சியிளங் கொப்பிளிநீர் கெங்கைதினக்ஷ
படைமிகுதி யிருந்துமென்ன ராஜனில்லாப்
படைவெட்டி ஜெயம்வருமோ பாரையுப்பை
எடுப்பதற்குச் சோம்பிவிட்டார் கோடாகோடி
எண்ணமெல்லாம் வாதைவித்தைக் கேர்க்குமோசொல்
கடல்புழுவும் மழைப்புழுவு மிரண்டும்மெய்தான்
காயசித்தி யாவதற்குக் கருவைப்பாரே. (14)

கருவான அக்கினியைத் தண்ணீர்கொல்லும்
கலக்கமில்லாத் தண்ணீரை வன்னிகொல்லும்
குருவாகும் இதுவிரண்டுஞ் சுத்தகெங்கை
கூர்மையிலே பட்டாக்கால் குணமதாகும்
அருவாகும் உருவாகும் அந்தவஸ்து
ஆதியிலே யைந்துருப்பட் டயர்ந்தவித்து
மருவாகும்காய்ப்பாகும் பூவுமாகும்
மாம்பழமென் றெண்ணாதே மணிபூரத்தே. (15)

மணிபூரம் வீரமல்லோ காரசாரம்
மன்னவனுந் தேவியுமாய் வாழ்ந்தவீடு
கெணியர்ரோ சரமறிந்த பெரியோரையா
கெணேசனுட பட்டணத்தின் கெடிமேலய்யா
பணியார மோவுனக்குச் சிலுசிலுப்போ
பசியமர்ந்தால் பலனுமக்குப் பலித்திடாதோ
வணிகனல்லோ திராசுமுனை கண்டாப்போல
மக்களே பதினாறும் வன்னிமுற்றே. (16)

உரோமரிஷி வழலை சூஸ்திரம் ௰௬,

முற்றிற்று.

மதுரை யானைக்கல்தெரு முத்தையாபிள்ளையவர்கள் குமாரர் வித்வான் குழந்தைவேலுப்பிள்ளை யவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இச்சாஸ்திரம் அச்சிடலானது.

உ

கடவுள் துணை.

130 - வது:

உரோமரிஷி திருவாய்மலர்ந்தருளிய

குருநூல் சிங்கிவைப்பு ௱.

மூலவட்ட மானகுரு பாதங்காப்பு
முத்திக்கு வித்தான முதலேகாப்பு
மேலேவட்ட மானபரப் பிரமங்காப்பு
வேதாந்தங் கடந்துநின்ற மெய்யேகாப்பு
காலவட்டந் தங்கிமதி யமுதப்பானைக்
கண்டுபசி யாற்றிமனங் கவடுநீக்கி
ஞாலவட்டஞ் சித்தாடும் பெரியோர்பாதம்
நம்பினதா லுரோமனென்பேர் நாயன்றானே. (1)

தானாக முன்னுரைத்த ஐந்நூற்றுள்ளே
நவறாமல் ஆடிவிட்டேன் யோகமார்க்கந்
தானாகும் வாதத்துக் காதியுப்பைச்
சமுசயங்க ளில்லாமல் சொல்லிவைத்தேன்
தானாகும் வழலையென்ற உப்பின்வித்தை
தன்னுக்குள் தன்னினத்தைத் தாக்கும்பாரு
தானான கருவுண்டு சுத்தகெங்கைச்
சலமதனை மறைத்துவைத்தேன் தன்மைபாரே. (2)

பாருநீ வழலையென்ற வுப்புமூன்றும்
பரிபாஷை யில்லையடா கைபாகங்கள்
சேருநீ பூதபஞ்ச தரணமான
தீட்சையுட பாகம்நன்றாய்ச் செப்பிப்போட்டேன்
காருநீ சுத்தகெங்கை மறைப்பேதென்றால்
கருவறியுஞ் சித்தருக்காய்ப் பயந்துவிட்டேன்
சேருநீ ஐந்நூற்றின் பொருளையாய்ந்து
செப்பிவைத்த ஐம்பதுக்குள் தெளிவுபாரே. (3)

தெளிவென்று லஜின்சூட்சங் காணப்போமோ
சேகரமாய்ப் பதினாறு சேர்த்துப்பாரு
குளிவென்ன மூன்றூல்தான் நூறும்பாரு
குறிதெரியுஞ் சூத்திரமோ ராறுகாண்டம்
நெளிவில்லை யென்னூற்கு நந்திசொன்ன
நிகண்டல்லால் பின்னென்றும் நிகரொவ்வாது
களியினுட போக்குமச்ச முனியெண்ணூற்றிற்
கபடாகக் காட்டிவைத்தார் கருத்தோணுதே. (4)

தோணமற் பாடிவிட்டார் சித்தரெல்லாம்
சூத்திரங்க ளறியவென்றால் குருதான்வேணும்
வீணாகப் போகாது அதிகபுத்தி
வினையாளர் காண்பதல்லால் மற்றோர்க்கேது
தோணமல் தோணுமடா இந்தநூலிற்
கொட்டினேன் வயித்தியமும் வாதயோகங்
காணும லலையாதே நினைவாய்ப்பாரு
கைபாக மைந்நூற்றிற் கண்டிடாயே. (5)

கண்டதென்ன உலகத்தில் வயித்தியமையா
கைகண்ட பலன்காணுஞ் சரியைமார்க்கம்
விண்டனப்பா நீற்றினத்துக் காதிசிங்கி
விட்டுவிட்டால் வயித்தியமும் வீணாய்ப்போகுந்
தொண்டுபண்ணிக் குருவினுட பாதம்போற்றிச்
சொல்லுவா ரில்லாட்டா லெந்நூல்சொல்லும்
சண்டையிட்டுப் பேசாதே சிங்கிமார்க்கம்
சாற்றினேன் பொதிகைமுனி தயவுதானே. (6)

தயவுவைத்துச் சொல்லவில்லை லெகுவாய்ச்சொன்னார்
தன்னையறிந்து கொங்கணவர் சரக்குவைப்பில்
நயமிகுத்துச் சொல்வதுபோல் நிமிஷையொன்று
நாட்டினார் குருசுக்குக் குருத்தானென்று
சுயமவர்க்கு நன்றாக நடக்கும்வாக்குச்
சொன்னதிலே கடுங்காரத் துறையொளித்தார்
செயமிகுந்த போகரிஷி நூற்றிற்சொன்ன
திஷ்டாந்தங் கருக்கிடையுந் திறம்போதாதே. (7)

திறம்போதா தென்றாலக் குப்பிக்கேற்றித்
        தீயெரிக்கச் சொல்லாமல் தீர்தள்ளிக்
குறம்பாடி னுப்போலே மறைத்தாரையா
        குறுக்குவழி செய்வதிலே மோசமாகும்
அறந்தழைக்குந் திருமூல ராயிரத்தில்
        அவையடக்கஞ் சிங்கிவித்தை யார்க்குந்தோணுப்
பரம்பரையாம் வந்தசித்தர் பாதம்போற்றிப்
        பாடுகிறேன் சிங்கிவித்தை பலிக்குந்தானே. (8)

பலிக்கவென்றால் சிங்கிக்கு நாதபேதம்
        பாடினு ரதனாலே ஆவதென்ன
கலிக்குகின்ற வங்கத்தி லிணங்கச்சேர்த்துக்
        கலந்ததினால் சிங்கியென்ற பேருமாச்சு
வலிக்கவென்று விதின்பெருமை வெகுவாயுண்டு
        வாதமுண்டு வயித்தியமுண்டு வழிபாடுண்டு
மெலுக்குடைய சிங்கியொரு பலந்தான்வாங்கி
        விருதான கல்வத்திற் பொடித்திடாயே. (9)

பொடித்திட்டுப் பீங்கானிற் பழச்சாறாற்றிப்
        பொடிமணலாய் ரவிமுகத்தில் வைத்துக்கொண்டு
ஒடித்திட்ட குச்சியினுற் கிண்டிக்கிண்டி
        ஓரேழு தினம்ரவியில் வைத்தபோது
குடித்திட்ட பொடிகளெல்லா மாடைபோலே
        குணமாகக் காட்டுமடா பழச்சாறுவேகம்
தடித்திட்ட பழச்சாறுமுன் விடுகும்போது
        சார்வாகப் படியரைதான் தாக்குவாயே. (10)

தாக்குவாய் ரவிசூடு மெத்தவானால்
        சாறெல்லா மோரேழு தினத்தில்வற்று
மார்க்கமாம் ரவியின்முகங் கண்டால்சாறு
        வற்றுமட்டுங் காய்ந்துவெண்மை யாகும்பாரு
தீர்க்கமாய்க் காந்தசிங்கி பலந்தானென்று
        சீனமென்ற வெள்ளையொன்று பூரமொன்று
காக்கவே சாரமொன்று கெவுரியொன்று
        கண்டுபா ரிதுநாலு கழஞ்சிதானே. (11)

கழஞ்சான திவைநால்சிங் கியிலேசேரு
கல்வத்தி லிவையைந்தும் பொடித்துக்கொண்டு
விளைஞ்சசவுக் காரமொன்று திராவகத்தில்
வெள்ளையென்ற கிளிஞ்சினீர் சங்குச்சுண்ணம்
நுளைஞ்சல்லோ பொடித்திடுவாய் விராகன்ரெண்டு
நுண்மையாய் மொளுமொளெனக் கொதிக்குந்தண்ணீர்
கிளிஞ்சலல்லோ குருவாங்கால் படியாந்தண்ணீர்
கணநாதன் தனக்குவிட்டுக் கிளறிபாட்டே. (21)

ஆட்டுவாய் சேர்த்தசரக் கெல்லாமாள
அய்யனே திராவகந்தான் வேகம்மெத்த
மூட்டுவா யிருசாம மரைத்துக்கொண்டு
முசியாமல் மயினமத மாக்கிப்போடு
கேட்டிடுவாய் குப்பிடுகல் லண்டத்தோடும்
கெடிபெற்ற சுண்ணமப்பா ஆதிகொண்டு
பூட்டுவாய் திராவகத்தில் குழைத்துநீயும்
புத்தியுடன் குப்பிக்குப் பூசுபூசே. (13)

பூசியே காயவைத்து மயினமெல்லாம்
புகழான குப்பியரைத் திட்டம்போடு
தேசியெனு மடிகனத்த தாழியொன்றில்
கிறுமணலா யரைவாசி மட்டுங்கொட்டி
வாசியென்ற குப்பியின்றன் நடுவேவைத்து
வளப்பக்கல் கொண்டுகுப்பி வாயைமூடி
தோஷிகளே யினிமேலுங் தெரிந்திடாதோ
சுருதிமனோன் மணித்தாயைத் தொழுதுபோற்றே. (14)

போத்துவது முத்தியு மூன்றுசாமம்
பொங்காமல் வெடியாமல் பூண்டுபாரு
ஆத்திவிடு குப்பிமறு நாளில்தானும்
அப்பனே பதங்கமென்ற குருத்தானையா
நீத்தினத்துக் கிதுவாதி திருசுக்காதி
நீருட்டால் சுட்டலேந்த குருட்டுவாதி
சாத்திரந்தா னென்னசெய்யும் புத்தியில்லாச்
சண்டாளர் பொய்யெனவே தள்ளுவாரே. [illegible])

தன்ளினது மவர்பேரில் குற்றமில்லை
சவுக்கார வழலையைத்தான் மறைத்ததாலே
வெள்ளையென்ற சிவனுப்பை மறைத்ததாலே
வெடியுப்புக் கட்டுவது விள்ளாதாலே
கொள்ளியென்ற பூநீரும் போனதாலே
குடதிசையிற் கல்லுப்பு காணுதாலே
துள்ளியென்ற சுத்தசல தீட்சைமார்க்கம்
சொல்லாமற் போனதினல் தோணுதன்றே. (16)

தோணுகின்ற சித்தர்கள்தான் கூடிக்கொண்டு
சூட்சமாங் காரணத்தா லுப்புமார்க்கம்
காணுகின்ற பரிபாஷை நாமத்தாலும்
கபடாக முன்பின்னு யுகமையாலும்
வேணுமென்றே அவரவர்கள் நூல்கள்தோறும்
விளம்பினர் பூராயம் மெத்தமெத்த
ஊணுகின்ற உப்பல்லால் வேறொன்றில்லை
யொளித்ததென்ன வழலையொன்றுந் தீட்சையொன்றே. ()

தீட்சையொன்றும் வழலையொன்றுஞ் சூட்சமாகச்
செப்பின ரதினலே உலகவாதி
மாச்சலுண்டு மனம்புண்ணுப் சாஸ்திரத்தை
மனம்வெறுத்தார் புத்திபண்ணி வருத்தினுக்கால்
நீச்சென்ற கடுநீச்சு நீஞ்சலாகும்
நெட்டிலே திரியாதே அடுத்துப்பாரு
வாச்சுதே வழலையென்ற உப்புத்தானும்
வகையான சருகுதுளிர் மார்க்கந்தானே. (18)

தானென்ற சிங்கியல்லோ குருதானுச்சு
தாரணியில் வாதமிந்தக் குருவிலாச்சு
ஏனென்ற குருவாலே வயித்தியந்தான்
இலக்குண்டோ ஆனாலு மிசைந்துகேளு
கோனென்ற தாம்பிரத்தைத் தகடுதட்டி
குருவிலொரு பணம்பூசிக் குகைக்குள்மூடி
காரனென்ற குக்குடத்தில் நீறிப்போகும்
களிம்புற்ற செம்புநிறங் காட்டொண்ணுதே. (19)

ஒண்ணான பற்பத்தைத் தேனிற்கொள்ள
ஓடுகின்ற மேகமெல்லா மொடுங்கிப்போகும்
கண்ணான சுக்கிலத்தைக் கட்டிக்கொள்ளும்
காயபல முண்டாகுங் கனகம்போலே
வெண்ணெய்யொரு கழஞ்சிக்குப் பணந்தான்பற்பம்
விரவினல் தயிலமதை விளங்கிப்போடும்
புண்ணியமே செய்தவருக் கிந்நூல்கிட்டும்
புசுண்டனுக்கு மெந்தனுக்கும் வாதுண்டாச்சே. (20)

வாதுவந்த தெதினலே யைந்நூற்றுள்ளே
மார்க்கமெல்லாம் பாடிவிட்டேன் மனிதர்க்காகச்
சாதுவென்ற திருமூல ரெந்தனூலைத்
தம்முடைய குகைக்குள்ளே மறைத்துப்போட்டார்
ஏதுவென்று அதற்கீடா யைம்பதுந்தான்
இகத்திலே சொல்லிவைத்தே னேறுமார்க்கம்
சூதுகொண்டு பார்த்திருந்தால் தோயுந்தோயும்
சொர்ணமதைச் சுத்திசெய்து ஓட்டாய்வாங்கே. (21)

வாங்கியந்தக் குருவிலொரு பணந்தான்பூசி
வான்பிரமி யிலையரைத்துக் கவசங்கட்டிப்
பாங்குபெறக் குக்குடத்தில் போட்டாயானல்
பசலைநிறம் போகாமற் பற்பமாகுந்
தூங்கியே திரியாதே திரிபலாதி
சூரணத்திற் கொண்டுவிடு மண்டலந்தான்
காங்கைக்ஷய ரோகமத்தி மூலச்சூடும்
கிராணிகுன்மம் பீலிகையுங் கடலிற்போமே. (22)

கடல்போகும் வெள்ளியொரு கட்டிவாங்கிக்
ககனத்தி னீராலே சுத்திபண்ணித்
திடமான குருவிலொரு பணந்தான்பூசித்
திருமேனி தனையரைத்துக் கவசங்கட்டிப்
புடமேது குக்குடத்தில் நீறிப்போகும்
பூசைதனை மறவாதே புண்ணியந்தான்
உடலெடுத்தால் கர்மவினைக் கீடாகாதே
உறுதிபற்பத் தனுப்பான முரைக்கிறேனே. (23)

உரைக்கிறேன் சஞ்சீவி லேகியத்தில்
உண்டுவர மண்டலத்திற் கண்ணோவில்லை
இரைக்கிறேன் குடல்வாத மேற்றமில்லை
ஏலும்புருக்கிப் பருப்பிளவை யேறுமில்லை
நரைக்கிறதோ ரோமமில்லை பித்தமில்லை
நாவில்வரு ரோகமெந்த நாளுமில்லை
திரைக்கிறதோ ருடலில்லை மேகமில்லை
சிவசிவா விதின்பெருமை செப்பொண்ணாதே. (24)

செப்பவே அயத்தகடு லேசாய்த்தட்டி
சிறுகீரி.லாதல்பழச் சாற்றிலாதல்
துப்பரவாய்ச் செய்துகொண்டு தகட்டின்மேலே
துருசுக்குக் குருவான சூட்சந்தன்னை
அப்படியே பணவிடைதா னெடுத்துப்பூசி
ஆமணக்கி னிலையரைத்துக் கவசங்கட்டி
உற்பனமாய்க் குக்குடத்தில் நீறிப்போகும்
ஓகோகோ இதின்பெருமை யுறுதிதானே. (25)

உறுதியென்ற லோகபற்பம் மண்டலந்தான்
உத்தமனே கரிசாலை லேகியத்தில்
பருதிமதி ரெண்டிலுமே கொண்டாயானால்
பாண்டுவொடு மூலமெல்லாம் பறந்துபோச்சு
குருதியென்ற தாதுபுஷ்டி யூறலாச்சு
குணக்கேடு செய்கின்ற சோகைபோச்சு
சுருதியிந்தப் படியேதான் காந்தஞ்செய்ய
சோகைகா மாலையெல்லாந் தோற்றுப்போச்சே. (26)

போச்சென்று விடுகாதே கருவங்கத்தைப்
புளிப்பான மோரதனிற் சுத்திசெய்து
ஆச்சென்ற குருவினிலே பணந்தான் தூக்கி
அருள்ளான வங்கத்துக் கப்பிப்போடு
காச்சென்ற கருஞ்சீகை யரைத்துக்கொண்டு
கவசமிடு கருவங்கங் கட்டிப்போகும்
மூச்சொன்று மோடாது குக்குடத்தில்
முழுவெள்ளை யாகுமடா மூர்க்கமென்னே. (27)

மூர்க்கமிந்த நீருலே களங்குசெய்தால்
முன்பின்னு யஞ்சாறு மாற்றுங்காணும்
சேர்க்கையடா பறங்கியடா பட்டைத்தூளில்
தின்னுவர மண்டலத்தில் தீரும்நோய்கேள்
நீர்க்குழியில் புண்ணூறும் வெட்டைதீரும்
நீர்செரிப்புக் காலெரிவு நின்றுபோகும்
ஊர்க்குளுனக் கீடானே ரொருவரில்லை
உத்தமனே வங்கத்தி னுண்மைதானே. (28)

உண்மையிந்தப் படிதானே வெள்வங்கத்தை
உண்டுபண்ணி மண்டலமே கொண்டாயானல்
பண்மையிந்த நீருலே மேகமெல்லாம்
பறக்குமடா உலகத்தில் பண்டிதந்தான்
தண்மையல்லோ வேணுமடா தேகரோகக்
தாதுவறி யாதவர்க்கு மருந்தேதுக்கு
வண்மையினுற் செய்துநெடு நாள்பழக்கம்
வந்தல்லோ விம்மூன்றும் வாய்க்குந்தானே. (29)

வாய்க்கவே சிறுநாகந் துத்தநாகம்
வாங்கிவந்து கரண்டியினி லுருக்கியேதான்
சாய்க்கவே யிலுப்பைநெய்யிற் சத்தியாச்சு
தகடுஒரு விரற்கனமாய்த் தட்டிக்கொண்டு
சீக்கிரமாய்க் குருவிலொரு பணந்தான்தூக்கிச்
சேர்த்துவிடு நாகத்தின் சீறல்போகும்
பேய்க்குமட்டிக் காயரைத்துக் கவசங்கட்டிப்
பேசாதே குக்குடத்தில் பேணிச்செய்யே. (30)

செய்யவே நாகபற்பம் தெளிவுமெத்த
திரிகடுகு லேகியத்தில் மண்டலங்கொள்
அய்யமில்லை காசமில்லை மூலத்துள்ளே
ஆணிமுளை யில்லையடா மேகத்தாலே
குப்பமதிற் பிறந்தபவுத் திரங்கள்புற்றுக்
குன்மமில்லை பித்தமில்லை தாதுபுஷ்டி
தையலரைக் கைவசமு மாக்கும்பற்பம்
தாரணியில் சொல்லிவிட்டேன் தனதுபாரே. (31)

தனதான பூமியிலே உப்போமெத்த
தன்னிலே மூன்றுவுப்பு சவுக்காரந்தான்
மனதான பேய்க்குரங்கு வேறென்றெண்ணி
மாளுவார் தினமுடிந்த மார்க்கம்பாரார்
கனமான பொன்னென்று பணிதிவேறே
கம்மாளன் தான்செய்த கதையைப்போலே
சினமான கேசாதி பாஷைமெத்தச்
செப்புவார் வார்த்தையெல்லாந் திரட்டினுரே. (32)

திரட்டினு ருப்புக்கு வெகுநாமங்கள்
தேசாதி வழக்கமல்லோ சித்தர்சொன்னூர்
மருட்டினு ரென்றுசொல்லி உலகமாடு
மதிமயங்கிப் பலநூலின் வகைதோணுமல்
உருட்டினதே யல்லாமல் நாய்க்குத்தேங்காய்
உடைக்கறியு மோவிதுதா னுவமைஅய்யா
குருட்டுநோ யீசலுக்குத் தாவுகின்ற
குணமாச்சு யாணைகண்ட குருடர்தானே. (33)

குருடனுக்குப் பால்கிறந்தான் கொக்குப்போலே
கொண்டுவந்து காட்டஅவன் தடவிப்பார்த்து
புருடனுஞ்சீ குழந்தையித்தை விழுங்கினுக்காற்
பிழைக்குமோ வென்றுசொன்ன புதுமைபோலும்
கெருடனுக்கு ஈப்பறவை காட்டினுப்போற்
கிஞ்சுகமாம் புத்தியுள்ளோர் வேறுண்டென்பார்
திருடனுக்குத் தோணுது வழலைமார்க்கம்
திராய்த்தகடு லேசாகச் செய்திடாயே. (34)

செய்திட்ட தகடுதன்னைப் பழங்காடிக்குள்
தீப்பாவக் காய்ச்சியதில் தோய்க்கச்சுத்தி
மெய்திட்ட குருவிலொரு பணந்தான்தூக்கி
விரவிவிடு தகடுதட்டி மேலுங்கீழுங்
கைதிட்ட மாஞ்சியிலே நொச்சிவேரைக்
கல்வத்தி லரைத்தெடுத்துக் கவசஞ்செய்து
வைதிட்ட குக்குடத்திற் பற்பமாகும்
மாநிலத்தி லித்தமுறை மகிமைதானே. (35)

மகிமையென்ற வெண்கலம்பித் தளையிரண்டும்
வாங்கிவந்து லேசாகத் தட்டிக்கொண்டு
பகலவனைப் போற்பழுக்க வெதுப்பித்தேசிப்
பழச்சாற்றில் தோய்த்திடவே சுத்தியாகும்.
சகலகுரு வானதிலே பணந்தான் றூக்கித்
தடவிவிடு கஞ்சுகத்தின் தகட்டின்மேலே
குகைமுறையாய்க் குக்குடத்தில் போடும்போது
குருநீற்றுப் பற்பமென்ன குணந்தான்காணே. (36)

குணமான பற்பத்தைத் தேனிற்கொள்ளக்
குன்மம்பீ லிகையெல்லாங் குடியோடிப்போம்
கூணநேர மானது மோடுங்காமம்
சன்னதமாந் தாதுவிர்த்தி தானேயுண்டாம்
பணமான தென்னசெய்யும் பாதாளத்திற்
பாயுமென்ற சொல்போலே இந்தப்பற்பம்
மணமாகு நரைதிரையும் மாறிப்போகும்
மாலைசிவ னுமென்ன மதிக்கலாமே. (37)

மதிக்கலா மப்பிரேகம் நிமிளையிரண்டும்
மகிமைமெத்த மகிமைமெத்த வுபரசத்தில்
துதிக்கலாங் கோசலத்திற் சுத்திசெய்து
சுருதிபெற்ற குருவிலொரு பணந்தான் றூக்கி
விதிக்கலா மிருபுறமுந் தடவிக்கொண்டு
வெண்குன்றி மணிவேரைக் கவசங்கட்டிக்
கதிக்கவே குக்குடமாய்ப் போட்டபோது
கனமான பற்பமிது கண்டுகொள்ளே. (38)

கொள்ளடா அமுதாதி லேகியத்தில்
கொண்டுவர மண்டலத்தில் தீரும்நோய்கேள்
கள்ளடா போலிருக்கும் சழிச்சல்மஞ்சள்
காந்தல்பர தாபநீ ரிழிவுதீரும்
விள்ளடா போகாது நீர்ச்சுருக்கு
மேலேறுஞ் சூலைமுதல் வீக்கந்தீரும்
தள்ளடா பெண்மாய்லக மூன்றுதிங்கள்
சதித்துவிடும் தேகமென்ன சவுக்கியமாமே. (39)

ஆகுமே சூதமொரு பலந்தான்வாங்கி
அரைத்துவிடு செங்கல்தூள் மஞ்சள்தூளில்
போகுமே யெவிகாரன் செந்தீயியம்
போக்கிவிட்டா லதுதாம்னை பலத்தசுத்தி
ஏகுமே சூதம்பீங் கானிவிட்டே
யெடுத்தகுரு வதிலுமொரு பணந்தான்போடு
வேகுமே கிறுகிறுத்துப் பொங்கிமிக்க
விரைந்துவிடுஞ் சூதபற்பம் வியாதிக்காமே. (40)

வியாதிபோம் வழிக்கிரச தாளிதன்னில்
விருதான பற்பமதை மண்டலந்தான்
பயாதியுடன் குணம்பார்த்துக் கொண்டாயானால்
பறக்குமே மேகமிரு பதுந்தானப்பா
சுயாதிகுணம் வாயில்வந்து கட்டினுக்கால்
தூற்றிவிடத் தலைவேறு கொப்பளிப்பாய்
தயாநிதியே யென்றுசெச முன்னைவாழ்த்தும்
சாதிலிங்கப் பற்பத்தைச் சாற்றுவேனே. (41)

சாற்றுவேன் சாதிலிங்கங் கழஞ்சிநானு
தனிசூரசங் கொளுந்தகரை சாறுவாங்கி
ஊற்றிவிடு கலசமதி லிலிங்கந்தன்னை
உச்சிதமாய்த் தோளாந்திர மாகத்தூக்கிப்
பார்த்திருக்கத் தீபெரிப்பாய் சாறுவார்த்துப்
பதங்கண்டு இறக்கிவிடு சுத்தியாச்சு
தீர்த்துவிடு குருவிலொரு பணந்தானையா
சிறுநெரிஞ்சிக் கவசமிட்டுப் புடஞ்செய்வாயே. (42)

வாய்கொள்ளப் பேசியதால் வருமோவாதம்
வாசிதனைச் செலவழித்தால் வருமோயோகம்
காயில்லாப் பழமாமோ வேதமார்க்கம்
காலடக்க மில்லாட்டால் ஞானமாமோ
தாயில்லாப் பிள்ளையுண்டோ உலகவாசம்
தழுவுகின்ற குறிபோலே சமாதிகாணும்
பேயனுக்குச் சொன்னதினு லொன்றுமில்லைப்
பிடரிவழி மார்க்கத்தைப் பேசொண்ணாதே. (43)

பேசினது மூன்னுரைத்த ஐந்நூற்றுள்ளே
பேசிவைத்தே னதினாலே மறைத்தார்சித்தர்
காசினியிற் சட்டைமுனி தீட்சைக்குள்ளே
கூறுப்பில்லா மல்வெளியாய்க் காணச்சொன்னார்
மோசமென்று திருமூலர் கிழித்துப்போட்டார்
மூலகுரு வர்க்கமெல்லாம் மோசக்காரர்
பாஷையினாற் பாடிவைத்தார் நூல்கள்தோறும்
பற்றிநின்று பார்த்தாலும் பனிரெண்டாண்டே. (44)

ஆண்டுபனி ரெண்டுக்கும் வேறேசித்த
மாகாமற் சேகரித்துப் பலநூலெல்லாம்
பூண்டிருந்து பார்த்தாக்கால் குருத்தானாகிப்
புத்தியெனு மறிவதினா லெய்துமெய்தும்
தூண்டுவது சொர்க்கபத மடைந்தாப்போலே
சுளுக்கிலே யிதுதோற்றுந் தோற்றுமப்பா
மாண்டதினாற் பலனென்ன ஞானமென்ன
மரணமடைக் தாப்போலே மனிதர்வாழ்வே. (45)

மனிதரெல்லாம் மரணமடைந் தார்களென்று
மனதிரங்கி ஐந்நூற்றில் வழியாய்ச்சொன்னேன்
சனியனைப்போற் சித்தரெல்லாங் கூடிக்கொண்டு
சமாதிக்கு ளடங்கிவிட்டார் சட்டைநாதர்
கனிவுவந்து சொன்னதையுங் கிழித்தாரையோ
கண்ராவி கண்ராவி யென்னசொல்வேன்
அனிதமாய்ப் போகுதையோ மனிதர்வாழ்க்கை
ஆனாலும் புத்தியில்லை சண்டாளர்க்கே. (46)

சண்டாளர் பெரியோரை அடுத்துக்காரு
சாஸ்திரத்தில் விநயம்வைத்துத் தாக்கிப்பாரு
பெண்டாட்டி பிள்ளையுட கழுத்தைக்கட்டிப்
பிதற்றுகிறாய் போனவுயிர் கொடுப்பாளோசொல்
திண்டாட்டம் பண்ணாதே யுனக்கேபுண்ணியஞ்
சேரடா வலையினுள்ளே சாரப்பாம்பைக்
கண்டாக்கால் சந்திரனு மொடுக்கமாவான்
கவசமிடச் சாதிலிங்க பற்பமாச்சே. (47)

ஆச்சப்பா லிங்கபற்பஞ் சூடுமெத்த
  ஆவின்பால் சருக்கரையாற் சேர்த்துக்கொண்டு
தோச்சுண்ண மண்டலத்தில் மேகவெட்டை
  சூலையொடு சன்னியெழு தோஷந்தீரும்
தீச்சமலம் நாவரண்டு மூலத்துள்ளே
  சிக்கிநின்ற வாயுவெல்லாந் தீரும்தீரும்
காச்சல்குளி ரணமாறல கண்டமாலை
  கன்னத்திற் சூலைமுதல் கடந்துபோமே. (48)

கடந்துபோ மிக்குருவில் வீரம்பூரம்
  கானகத்திப் புழுகோடு சேருமாகில்
துடர்ந்துபோஞ் சரக்கெல்லாம் மணிபோலாடும்
  சுகமான உபசரங்க ளீயமாகும்
படர்ந்துமணி களங்காகுஞ் செந்தூரித்துப்
  பாய்ச்சினால் வேதையென்ற பரிசுமாகும்
விடந்தானே சிங்கநவ லோகத்துக்கு
  வீரனென்று சித்தரெல்லாம் விளம்பினாரே. (49)

விளம்பினோஞ் சிங்கியால்செந் தூரபற்பம்
  வேணபடி செய்துகொண்டு உலகத்துள்ளே
பழம்பிணிகள் கொண்டவர்க்கே மருந்தேயீந்து
  பரிகாரஞ் செய்துவரப் பாவம்போச்சு
தளம்பியல்லோ திரியாதே கியாழகற்கந்
  தயிலசூ ரணகிருதஞ் சகலத்துக்கும்
உளம்பிலக்க விக்கிருவில் காணிசேரில்
  உசிதமடா குருசுகுரு உரைக்கிறேனே. (50)

உரைத்தவகை யேதென்றால் குருதானொன்று
  உயர்ந்திட்ட வீரமொன்று பூரமொன்று
துரைத்தனத்தார் பூசுகின்ற புழுகதொன்று
  சுருக்காக மத்தித்துத் திருசுக்கபபி
எரித்துவிடு அண்டத்தின் சுன்னத்துள்ளே
  என்மகனே கொடுஞ்சுன்ன மிதுக்குப்பாதி
விரித்தசுன்னஞ் செய்ததுபோல் சவுக்காரத்தை
மிளகளவண் டத்துடனே கூட்டியாட்டே. (51)

ஆட்டிவிடு அண்டநீர்த் தெளிவினாலே
அடைதட்டி சுன்னத்தி லெரித்துவாங்கு
பாட்டிலென்ன பலியாதோ வுற்றுப்பார்த்தால்
பலிக்குமையா அக்குருத்தான் பட்டபோதே
ஊட்டிவிக்கும் ரசமிதிலே கட்டிப்போச்சு
ஒருயாற்று கிலும்நிசமாய்க் காணலாச்சு
வீட்டிலிருந் தாயிழையைக் கொஞ்சிக்கொஞ்சி
விளையாட வோவுரைத்தேன் விளங்குமாறே. (52)

மாறடா குருசுகுரு சவுக்காரத்தை
வளமான கெந்திக்குப் பூசியூது
நீறடா கண்ணும்பா மிந்தச்சுன்னம்
நேரான சூதத்தை மணிபோலாட்டும்
கூறடா இம்மணிக்குப் பாரையுப்பைக்
கொண்டுவந்து கவசமிடு புடந்தான்பத்து
தீறடா சவ்வாது காரமிட்டுச்
சேர்த்துருக்க மணியென்ன சிவத்தின்கூறே. (53)

சிவத்துடனே தங்கமொன்று தாகமொன்று
சேர்த்துருக்கிச் செந்தூரம் செய்தாலையா
அவத்தமில்லை காவிக்கு நிலைக்குஞ்செம்பொன்
அலையாதே சாண்வயிறு அகலமோடா
குவித்திருக்க வேணுமோதான் மலைபோல்தங்கம்
கொண்டமலை யாட்டியர்க்கோ கூத்தியார்க்கோ
தவத்தையனு சரிப்பவர்க்குச் சொன்னவாதம்
தலைதெறித்துப் போகாதோ சாரத்தாட்டே. (54)

சாரத்திற் குருப்பூசி யூதவூது
தந்தம்போல் கட்டுமடா சிவமாஞ்சுன்னம்
வீரத்தி லேகினால் மெழுகாய்ப்போகும்
வேதைசொல்ல வேணுமோ விருதாமாடே
தூரத்தி லலையாதே அடுத்துப்பாரு
சுனையான வெடியுப்புச் சுன்னஞ்சுன்னம்
காரத்தைக் கண்டாலு மாங்காரந்தான்
கட்டுமடா வில்லாட்டால் கடினந்தானே. (55)

கடினமென்று தள்ளாதே துருசுச்சுன்னம்
கண்டதினால் சித்தரெல்லாஞ் சொல்லிவைத்தார்
படினமதுக் கேதென்றால் வழலையாதி
பண்ணாட்டால் சிங்கியிலே பலிக்குஞ்சுன்னம்
துடிமிகுத்த கண்டதினால் சூதராஜன்
துடியடங்கி யுன்னிடமாய்த் தொண்டுசெய்வான்
அடியிருக்கும் நடுமுடிக்கும் பேரேதென்றால்
அறைகிறேன் சுளுக்கைமெல்ல வறிந்திடாயே. (56)

அறிந்துகொண்டு வழலைசவுக் காரஞ்செய்யில்
அடிமுடியைத் தடியடியா யனந்தஞ்செய்தார்
விரிந்துதையா அதினாலே வண்ணான்சீலை
வெளுப்பதற்குச் செய்தாரே கேள்வியுண்டோ
தெரிந்துமுன்னாள் பாங்குசெய்யும் போதிலேனோ
சிற்றறிவால் மயங்கிவிட்டார் திரம்போதாது
எறிந்துவிட்டார் சித்தரெல்லாம் பேசிக்கொண்டு
ஈசனுப்பை நந்திமுன்னா லியம்பினாரே. (57)

இயம்புகின்ற வகையேது ஆதியுப்பு
ஈசனுப்பு ரெண்டுமென்ன ஒன்றேயாச்சு
சுயம்புலிங்க மென்றுபேர் ஆன்மியென்றும்
சுசாதிகப் படிகரவிச் சுடர்தானென்றும்
நயம்பிலக்குங் ககனார விந்தமென்றும்
ஞானதிஷ்டிக் காரர்சொல்வா ரனுப்பென்றும்
பயம்பிடிக்கச் சொன்னதல்லால் வேறொன்றில்லை
பற்றிப்பா ரவர்க்கடுக்கப் பளிங்குதானே. (58)

பளிங்கென்ன சிவரூப முடிதானாச்சு
பராபரையாள் ரூபமல்லோ சிவப்புமாச்சு
விளங்கியல்லோ சொல்லுகிறேன் நிலவானுப்பு
வேதனுப்பு நடுவாச்சு வேறேயில்லை
முளங்கியல்லோ தூரொன்றுக் கவர்கள்கோடி
மூடர்களே ஒன்றல்லோ மூன்றுமாச்சு
உளங்கருக்காய்ச் சொல்லுகிறேன் சத்தியுப்பை
உவரென்று மிந்தென்றும் ரவிதானென்றே. (59)

ரவியென்றுங் காலென்று மூத்தமென்றும்
ராசியென்றும் பூமியுட னாதமென்றும்
புவியென்றும் பூவெனறும் யோகியென்றும்
புல்லென்றும் பொலிந்தமணல் பொடிதானென்றுங்
குவியென்றுந் தாயென்றும் வந்தாளென்றுங்
குருதியென்றுஞ் சுட்டக்கல் கூத்தனென்றுந்
தவியென்று முப்பென்றுங் காரமென்றுஞ்
சத்தியென்றும் வளையலென்றுஞ் சாத்துவாரே. (60)

சாத்துவார் வழலையென்றும் வண்ணானென்றும்
சவுக்காரந் தானென்றுஞ் சாரமென்றும்
பூத்தமலர் சுரோணிதமாம் புஷ்டியென்றும்
புலம்பத்தா விடமென்றும் பூநீரென்றும்
கார்த்திகையில் மேகசல.வித்ததென்றுங்
கருவென்றும் பங்கூனிக் கதிர்தானென்றும்
நீத்தினத்துக் காதியென்று மண்டமென்றும்
நிசமான மூலமென்று மடியின்பேரே. (61)

அடிதானே நடுவுக்கு மாதியாதி
ஆகாச பிரமகெற்பத் தமூர்தமென்றும்
கடிதான பச்சையென்றும் நீலமென்றும்
கல்லென்றுங் கானலென்றுங் கம்பியென்றும்
வெடியோசைக் காரியென்றும் வில்தானென்றும்
மேகமென்றுஞ் சுன்னமென்றும் விஷ்ணுவென்றும்
குடியான விடமென்றுங் குசத்தியென்றும்
கூரையில்லாச் சுவரென்றுங் கூறுவாரே. (62)

கூறுவார் கூர்மையென்று மிணங்கியென்றும்
கூச்சமற்ற பேரெல்லாம் நடுத்தானுச்சு
வேறுவித மொன்றுமில்லை சாத்திரங்கள்
மெய்யாகப் பாடிவைத்தார் வீண்தானல்லால்
ஏறுதற்குத் தீட்சையொன்றை மறைத்துப்போட்டார்
இதினாலே சவுக்கார மெளிதாய்ப்போச்சு
காறுகின்ற மண்ணோடே நீருஞ்சேர்ந்தால்
நாமென்ன சொல்லுவது நாட்டுள்ளோரே. (63)

உள்ளமென்று மனந்தானே அறிவதாச்சு
ஓகோகோ வுங்கள்மனங் கெடுதலாச்சு
கள்ளமனம் போவதெப்போ மண்ணுந்தண்ணீர்
காண்பதெப்போ கண்டாலுஞ் சுங்கைதீட்சை
வெள்ளமென்ற பாலருந்தி யேறலெப்போ
மேலான குருபாதஞ் சேர்வதெப்போ
பிள்ளைகளே யுங்கள்புத்தி மூடத்தாலே
பிழைக்கறியீர் நான்சும்மா புலம்பினேனே. (64)

புலம்பிவிட்டே னென்றுசொல்லி யுலகத்தோர்கள்
புத்தியறிந் தவர்போலே பரியாசங்கள்
குலம்புழுக்கைப் பயல்களெல்லாங் கூடிக்கொண்டு
குருவுரைத்த சாத்திரங்கள் பொய்யென்பார்கள்
சிலம்புபோ லிருக்குமென்றாய் சொன்னவித்தை
தேவடியாள் மக்களுக்குச் சித்தியாமோ
தலம்பிலக்க வந்தடுத்த மகனேயுந்தன்
தனக்காகச் சொல்லுகிறேன் கங்கைதானே. (65)

ங்கை நதி யாடினால் வினைபோமென்றுங்
காசினியோர் சொல்லுவது கேட்டிலாயோ
அங்கல்லோ தீட்சைவிதிக் கந்தரங்கம்
அண்டயாள மேதென்றால் பிண்டம்பிண்டம்
வங்கணமா மண்டபிண்டஞ் சேர்ந்தபோதே
மண்ணல்லோ பொனனுச்சு மற்றமுண்டோ
உங்கள்கையிற் குருமுடித்துக் கொடுத்திருக்க
உங்கள்புத்தி வழிகெடுக வுளம்பப்போச்சே. (66)

போச்சென்று விடுகாதே குருசுச்சுன்னம்
புகழான சிவயோக தீட்சைக்குள்ளே
ஆச்சென்று திருமூலர் சொல்லிவைத்தார்
அந்தமுறைப் படிகார மேற்றிக்கொள்ளு
நீச்சென்ற குருசுவித்தை கடுநீச்சையா
நெறியான சித்தர்களும் நிகழ்த்தப்போகா
மூச்சென்ற காரத்தின் முடிதான்காணேன்
முடித்தவிடங் கண்டவரோ மூர்த்தியாமே. (67)

மூர்த்தியாஞ் சாரத்தைக் கட்டும்பூரம்
  மோசமில்லை சாரத்தால் திருகச்சுன்னம்
கீர்த்தியென்ன திருசாலே சொர்ணமாச்சு
  கெவுனமென்ற குளிகையது கைக்குள்ளாச்சு
வார்த்தையினாற் பகட்டுவது ஏதுக்காச்சு
  மனங்குவித்து உழைத்தாக்கால் வாராதுண்டோ
கார்த்திகையர்ச் சுனன்புதைத்த புதையலெல்லாம்
  கம்மாள னெடுத்தடித்த கண்ணாடிதானே. (68)

கண்ணாடி சிலமுடித்தா னப்பினாலே
  கருவகனை யறியாமல் மாண்டுபோனான்
விண்ணாடிப் பாராத குற்றங்குற்றம்
  வெறமண்ணாய்ப் போச்சுதவன் வித்தையெல்லாம்
ஒண்ணான மவுனமென்ற யோகம்விட்டால்
  ஒருபோதுஞ் சித்தியில்லை வாதந்தானும்
பெண்ணார்தன் னாசைதன்னை விட்டுவந்தால்
  பேரின்ப முத்திவழி பேசுவேனே. (69)

பேசுவே னிடகலையே சந்திரகாந்தம்
  பின்கலைதா னுதித்த னாதியாச்சு
நேசமதாய் நடுவிருந்த சுடர்தானீங்கி
  நீங்காம லொன்றான லதுதான்முத்தி
காதலாய்ப் பார்த்தோர்க்கு இதுதான்மோட்சம்
  காணாத பேர்க்கென்ன காமதேகம்
சோதனையா யிடகலையி லேறவாங்கி
  சுழிமுனையில் கும்பித்துச் சொக்குவீரே. (70)

சொக்குவீ ரிரேசகமுஞ் செய்பவேதான்
  சூரியனுஞ் சந்திரனு மொன்றாய்ப்போகும்
அக்கினியால் மதியமுர்தஞ் சக்குங்கக்கும்
  அப்பனே நோய்களெல்லாம் வெந்துபோச்சு
பக்குவத்தில் தேகமங்கே சித்தியாச்சு
  பதினாறு பன்னிரண்டு இருபத்தெட்டு
முக்கியமா யிதுவெல்லா மடக்கியாட்ட
  மூலத்தபதி னாறிதழில் வாங்குவாங்கே. (71)

வாங்கியந்தப் பன்னிரண்டி னுள்ளேரேசி
வன்னிநின்ற விடமல்லோ பானுவாழ்க்கை
ஓங்கியிந்த ரெண்டிடமு மறிந்தோன்யோகி
உற்றகா லடிதானே பதினாறுகுந்
தாங்கிநின்ற காலடிதான் பன்னிரண்டு
சார்வான பதினாறில் மெள்ளவாங்கி
ஏங்கினதைப் பன்னிரண்டில் நிறுத்தியூது
எழுந்தபுரி யட்டமடங் கிற்றப்பாரே. (72)

பாரையா குதிரைமட்டம் பாய்ச்சல்போச்சு
பரப்பிலே விடுகாதே சுத்தந்தன்னை
நேரையா ரெண்டிதழி னடுவேவைத்து
நிறைந்தசதா சிவனைத் தியானம்பண்ணு
கூரையா அங்குலந்தான் நாலுஞ்சென்றால்
குறிக்குள்ளே தானடங்கிக் கொண்டுதையா
ஆரையா உனக்கிது சொல்லப்போறேன்
அருமையுள்ள வென்மகனென் றழைக்கலாமே. (73)

அழைப்பதுவும் நல்லபிள்ளை யானால்நன்று
ஆகாத சீடர்களைச் சேர்த்தால்தோஷம்
பிழைப்பதற்கு வழிசொன்னால் பார்க்கமாட்டான்
பெண்டாட்டி மனங்குளிரப் பேசுமாடு
உழைப்பதற்குச் செனனமெடுத் தானேயல்லால்
உதவிதனக் கெவ்வளவு முண்டோவில்லை
இளப்பமிவன் பேச்சையடிக் கடிதானும்
ஏதுக்குச் சொல்லுகிறே னினிமேல்தானே. (74)

மேலென்ன விருக்கையிலும் நடக்கும்போது
வேறுரையால் சாரங்கள் விடாமலேற்று
நாலென்ன வெட்டென்ன வெல்லாமொன்று
நவமான அஷ்டாங்க மப்பியாசித்துக்
காலென்ன பிராணாய முன்னேசெய்யில்
கணக்காகப் பூரகமும் பகமோநாலு
கோலென்ன ரேசகந்தா னென்றுமூன்று
குறையாமற் சரபேசங் கூட்டித்தீரே. (75)

கூட்டியே பழகினபின் சரபீசத்தில்
குறையாமல் சாதித்தால் பிரமரந்திரங்
காட்டிவிக்கும் லலாடவிழிக் குழியினாலே
கண்மூக்கு மத்தியிலே கண்டுபாரு
முட்டிவிக்கு மாதார மாறுந்தானே
மூலவட்டக் கணபதிநான் முகத்தோன்மாயன்
தாட்டீக மணிப்பூரங் கையன்வட்டம்
தணலான ருத்திரனும் தணலுமாமே. (76)

தணலாகும் விசுத்தியறு கோணவட்டஞ்
சதாசிவனார் வட்டமல்லோ குருபீடந்தான்
மணியான பதியினிலே குறித்துப்பார்க்க
மதியமுத லகிரிகொண்டு தூங்குந்தூங்கும்
கனலேரிக் கொண்டிருந்தா லெல்லாமுண்டு
காற்றைவெளி விட்டாக்கால் கருமத்திதான்
புனலூறும் வழிப்பாதை யிந்தமார்க்கம்
பொல்லாத துரோகிக்குப் பொய்யாமன்றே. (77)

பொய்யாது சிங்கியிலே காரச்சுன்னம்
போடாட்டால் தருசுகுரு பொய்யாப்ப்போச்சு
எய்யாமற் சிங்கிக்குக் காரமேற்றி
எறியாட்டால் நவலோகத் தேறிடாது
கையாரக் கண்டதிந்த வித்தைபோலக்
காட்டுகிறே னுன்மனதில் கவலைவேண்டாம்
வையாதே யென்மகனே யுனக்குப்புண்ணிய
மாமுனிவர் சாபம்வரும் வழியிதாமே. (78)

வழியுண்டு கல்லாணை யாறுக்குள்ளே
வாகாக விந்தஉப்பு கம்பியாச்சு
சுழியான வெடியுப்பு வேகமெத்த
சுத்தசல திட்சைவிட்டா லொன்றுமில்லை
பழியாகச் சாகுதடா நாதம்வற்றிப்
பாழான உடம்பிரண்டு முயிருமொன்றுய்க்
கழியாக்குங் கும்பிடுதல் தண்ணீராலே
கட்டுமடா முப்பூவுங் கட்டுந்தானே. (79)

கட்டுகிறோ மென்றுசொல்லி சிறிதுபேர்கள்
கண்மூக்கு மத்தியிலோ ரெழுத்தைவைத்து
பட்டினியே தானிருந்து சாமநேரம்
பார்க்கின்ற போதுபளிச் சென்றுமின்னி
முட்டுமடா பசிக்கொடுமை யாலேதீத்தான்
முழிமுழித்துப் பார்நயனஞ் சிவந்துபோகச்
சுட்டிகளே யிதினாலே ஆவதுண்டோ
சோமப்பா லுண்பமென்று சொல்லுவாரே. (80)

வாறான மதியமுதம் பீரிட்டோடி
வருமென்று சிறிதுசன மாண்டாரையோ
நீரேது நீர்குடிக்க வாறங்கேது
நினைவுகெட்ட தோசிகளே நிறுத்திப்பார்க்கக்
கூறான சந்திரனி னாலேமிச்சங்
குடிக்கிறதும் பிடிக்கிறது மதுதானையா
சீரான மேல்வாசல் தமருக்குள்ளே
சிங்குவைநா லங்குலமுஞ் செலுத்திடாயே. (81)

செலுத்துவது உண்ணாக்கி தண்ணாக்கையா
சென்றேறிப் பிடரிவழித் தியானந்தோறும்
வலுத்ததடா நாலுமுனக் கமுதமாச்சு
மவுனமென்ற நிருவிகற்ப வாழ்க்கையாச்சு
சொலித்திருக்கும் பன்னிரெண்டி விருத்தியூது
சோடசமாம் சந்திரகலை தேய்ந்துபோச்சு
பலித்துதடா யோகசித்தி ஞானசித்தி
பருவமாய் நாடிவைத்துப் பழக்கம்பண்ணே.

பழக்கஞ்செய் நாள்தனிலே நோய்வராமல்
பாடிவைத்தே னிந்நூலிற் பற்பமெல்லாம்
விளக்கமல்லோ கொண்டேறித் திடத்தில்நில்லு
வீணாசை கொள்ளாதே பெண்கள்மேலே
வழக்கமல்லோ பசிதாகம் பிராணதாகம்
வஞ்சகக் கூற்றிதனில் மயங்கவேண்டாம்
பிளக்குமடா உன்சிரசு வெடியாவிட்டால்
பிணியாள னாயிருப்பாய் பேணிப்பாரே. (83)

பேணிக்கொள் ளாமல்வெகு பேர்கள்தானும்
பேதைமையி னால்மயக்கிப் பிரண்டுபோனார்
காணிக்கொத் ததினாலே கோடிக்காச்சு
கலைகுறையி னுள்குறையுங் கருத்தோ ணுதோ
வீணுக்கோ சொல்லுகிறே னிந்தயோகம்
மிஞ்சாதே குறையாதே விட்டிடாதே
தோணிக்கொள் ளாதோடா புத்திமானே
தொட்டல்லோ காட்டுகிந்தச் சுருதிநூலே. (84)

நூலிலே நந்திசொன்னார் முந்நூறுக்குள்
நுண்மையாய்க் கொங்கணவ ரைந்நூறுக்குள்
மாலிமையாய்ச் சொல்லிவைத்தார் பொதிகைநாயன்
வளமான ஆயிரத்தி யிருநூறுக்குள்
பாவிலே செப்பிரித்தாப் போலேஅய்யோ
பாடிவைத்தார் சித்தரெல்லாம் பாருபாரு
நாவிலே திருமூலர் பதினாறுக்குள்
ஞானமுண்டு காலாங்கி நவின்றிட்டாரே. (85)

நவிலாம லிருக்கவில்லை சூத்திரங்கள்
நாதாக்கள் பாடிவைத்தார் மறைப்புமெத்த
புவியாளர்க் கைந்நூறு சொன்னேனதைப்
புதைத்தாரே திருமூலர் பொருமலாலே
கவியாமல் சட்டைமுனி சொன்னதீட்சை
சாங்கமாய்க் கோள்சொல்லிக் கிழித்தாரையோ
குவியாமல் பலபலவா யோகமார்க்கம்
கொட்டினார் மவுனத்தைக் குறைத்திட்டாரே. (86)

குறைத்தாரே யென்றுசொல்லி மயங்கவேண்டாம்
கூர்ந்துபா ரேதேனுங் கூடிக்கொள்ளும்
இறைத்தாரைக் காராத பள்ளமுண்டோ
யென்றுசொன்னார் மச்சமுனி யிருநூறுக்குள்
சிரித்தாரே மூலகுரு ஆஆவென்று
திட்டந்தான் பேச்சருமை செய்துநன்றாய்
உரைத்தாரென் றதிசயித்தா ரானதாலே
உங்களுக்குச் சொன்னதிந்த உகமைதானே. (87)

உகமையென்ன ஒன்றுமில்லை வழலைக்காதி
உவராதி உப்பாதி உண்மையாக்கும்
வகையாதற் கேதென்றால் தீட்சையாதி
வாய்திறந்து சொல்லிவிட்டேன் உள்ளசேதி
பகமைபண்ணிக் கொள்ளாதே உலகத்தோரைப்
பழியாதே வியாசரிஷி பண்ணுங்கூத்து
சகமுழுதும் நீயல்லால் வேறேயுண்டோ
தம்பியுந்தன் குண்டியும்வாய் தன்னைமூடே. (88)

மூடாமல் சிறிதுமுக பாடம்பண்ணி
முழுதுமவன் வந்ததுபோல் பிரசங்கித்து
விட்டேது உடலேது யோகமேது
வீண்பேச்சாய்ச் சொல்லியல்லோ மாண்டுபோனார்
காடேறி மலையேறி நதிகளாடிக்
காய்கிழங்கு சருகுதின்று காமத்தீயால்
சூடேறி மாண்டவர்கள் கோடாகோடி
சொரூபமுத்தி பெற்றவர்கள் சுருக்கமாச்சே. (89)

சொருபமுத்திக் கடையாள மேதென்றக்காற்
சுடர்போலே காணுமடா தூலதேகம்
அருபமுத்தி யிடமல்லோ பிரமஞானம்
அபரோட்ச மென்றுசொல்லுஞ் சிரவணந்தான்
பருப்பதத்தை அசைப்பனெனச் சிற்றெறும்பின்
பழங்கதைபோ லாச்சுதிந்த யோகம்விட்டால்
வெறுங்கடத்தி லீப்புகுந்த வாறுபோலே
வேதாந்த மறியாத மிலேச்சர்தானே. (90)

மிலேச்சனென்று சொன்னமொழி யேதென்றக்கால்
விபரீத புத்தியினால் விண்ணைப்பார்த்து
மலேச்சல்லோ போனார்கள் வேறென்றெண்ணி
வாய்ப்பிலுக்காய் நூற்படித்து மாண்டரெல்லாம்
குலேச்சதல்லால் நிருவிகற்பங் காணாரையோ
குருக்களென்பார் சாராயக் கோஷ்டியாலே
பலிச்சதில்லை மேனோக்கிப் பார்க்கும்வித்தை
பண்பல்ல மைந்நூற்றிற் பாடினேனே. (91)

பாடுகிறேன் மணியொலியாம் நாக்கின்கீழே
பலநரம்பு பிடித்திருக்குங் கேளுகேளு
கூடுபெற்றிக் கூடியே யிழுத்தாப்போலக்
குணமிலாக் கூற்றுவன்முன் னின்றான்பாரு
நாடுகின்ற கருவியினு லறுக்கும்போது
நாக்குநரம் பற்றுமணி குறுகிப்போகும்
பாடுபட்டுண் ணாக்குநுனி தடித்துப்போனால்
பரியாச மாச்சுதிந்த யோகம்பாரே. (92

யோகமில்லான் ஞானமென்ன வீண்வீணையா
ஊடுருவிப் பாயாட்டா லென்னசொல்வேன்
நாகமல்லோ சந்திரனைக் கவ்வினாப்போல்
நான்முகன்றன் சூட்சமெல்லாம் நாவிலாச்சு
சாகவல்லோ படைத்தவிதி தன்னைத்தாண்டி
சட்டைமுனி கரிசாலை சாறேனென்றார்
சோகமது போகாது நெடுநாள்செல்லும்
சூட்சமுண்டு லெகுவாகச் சொல்கிறேனே. (93)

சொல்லவென்று லெனக்குப்பின் கூடாதையா
சொல்லவென்றால் சொல்லுகிறேன் சூட்சமாக
வெல்லவென்றால் கானகத்தில் கடலாமூலி
வெகுசுருக்கு தோத்திரத்திற் பிசினியுண்டு
செல்லடா பின்புரெண்டு சற்பந்தானுஞ்
செப்பரிது மூலரெண்ணா யிரத்திற்பாரு
அல்லவடா ரோமரிஷி யென்றாலுந்தான்
அடுத்தவர்க்கு ரகசியமா யருளுவோமே. (94)

ஓமென்ற கெட்டபுத்தி மாணாக்காகேள்
உலகத்தில் மானிடர்க்கு ஆண்டுநூறு
ஆமென்று இருபத்தோ ராயிரத்து
அறுநூறு சுவாசமல்லோ ஒருநாளைக்குப்
போமென்று போனதினால் நாள்குறைந்து
போச்சுபோ காவிட்டால் போறதில்லை
தாமொன்று நினைக்கையிலே தெய்வமொன்று
தானினைந்த தன்மையல்லோ விதிகள்

விதியல்லோ மதியாச்சு வேறேயுண்டோ
வேதாந்தப் பொருளறிந்த மெய்யுள்ளோரே
சதியல்லோ பண்ணிநீர் விதியைத்தாண்ட
தள்ளாம லுள்ளுடைந்து சாகுறீர்கள்
நிதியல்லோ சவுக்காரச் சுன்னஞ்சுன்னம்
நோமல் போகுதடா நிஷ்களத்தின்
பதியல்லோ கெதியாகும் மோட்சமாகும்
பரலோகஞ் சாதகமாம் படைத்தவாறே. (96)

படைத்திட்ட சவுக்காரத் தெண்ணெய்வாங்கிப்
பாடினார் சித்தரெல்லாம் பாஷைபாலே
உடைத்தல்லோ சொல்லுகிறேன் கருமானத்தை
ஊ ஆ ஓ வென்றெழுந்து கங்கையாச்சு
மடைத்தனமாய்த் திரியாதே அதுதானாகம்
வாங்கியல்லோ சவுக்கார வழலைதோய்த்து
புடத்திலிட்டு யெரிந்துவிடச் சுண்ணம்பாகிப்
பொன்மேரு மாற்றுச்சு புத்திபாரே. (97)

புத்தியுடன் பூரவுப்பு சொல்லக்கேளு
பூநீறு பலமொன்று பூரமொன்று
சுத்திபண்ணிப் பூநீற்றைக் கல்வத்திட்டு
துடியான பூரமதைக் கூடச்சேர்த்து
வெற்றிபெறக் கும்பிடுதல் சுன்னநீரால்
விரவியொரு பீங்கானி லடைத்துக்கொண்டு
சத்தியம்போற் சீலைமண்ணே ரேழுஞ்செய்து
தனிப்புடமாய் ரெண்டுமுழத் தாவுசெய்யே. (98)

தாவுள்ள குழிதனிலே பீங்கானிட்டுச்
சருகுசுட்ட சுண்ணம்பு வதின்மேற்கொட்டி
காவலிட்டுக் குழிமூடி மூன்றுதிங்கள்
கடந்தெடுத்தால் விளைந்துநிற்குங் கற்பூரந்தான்
பூவெல்லாந் தானெடுத்து அண்டநீரில்
பொடித்திட்டு ரவியில்வைக்க உப்பேயாகும்
ஊவல்லோ ஆவுக்கு உயிருமாச்சு
உத்திபண்ணிப் பார்க்கவுங்கற் பூரமாமே. (99)

உப்பல்லோ பிண்டத்தில் சேர்ந்தபோது
உடலுயிரு மொன்றாகித் தண்ணீராச்சு
அப்பல்லோ முப்பூவுக் காணியாணி
அதைவிட்டாற் கட்டாது வழலைமார்க்கம்
செப்பல்லோ பந்துக்கு மூடலாச்சு
தீட்சணமா யிந்தநூல் தெளிவோமெத்த
முப்பொருளு மொன்றாகி நின்றசோதி
மூலவட்டக் குருவருளால் மொழிதான்முற்றே. (100)

உரோமரிஷி குருநூல் சிங்கி வைப்பு ௱.

முற்றிற்று.

மதுரை வடக்குலயன்தெரு ரணவயித்தியம் பெரியசாமி பண்டிதர் இடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

சிவமயம்.

131 - வது:

உரோமரிஷி திருவாய்மலர்ந்தருளிய

வகார சூத்திரம் உரு.

மயமான சூத்திரத்தி லுப்புமார்க்கம்
வாதத்தி லாதியதாய் விரித்துச்சொல்ல
செயமான குருநந்தி யுபதேசித்தார்
சிவனோடு பார்பதிசிர் வாணிதானும்
நயமாக யெப்பொழுது முன்னேநின்று
நாடியே சூஸ்திரத்தை நயந்துபார்க்க
வயமாகச் சொல்லுகிறே னிருபத்தைந்தில்
வாதியரே யின்னூலை வணங்கிக்கேளே. (1)

கேளடா கறியுப்பைக் கட்டத்தானுங்
கணபதியின் தேவியருள் பதத்தைப்போற்றி
ஊளடா திரிந்தலையு முலுத்தருக்கு
ஒளித்துவைத்தா ரென்னூலை கைக்கொடாதே
வாளடா தீட்சணமாங் கவந்தமோடு
வளமான தக்காளி முசுமுசுக்கை
ஆளடா வகைக்குக்குக்கால் பழச்சாறு
அதிற்சொல்வேன் கறியுப்புக் கால்தான்பாரே. (2)

பாரடா சொருபானந் தாநீசந்தான்
பரிவாக யென்னூலைப் பழித்தாரானால்
ஊரடா நாயைப்போற் றிரிந்தலைவார்
உயர்தலையுந் தான்வெடிக்கும் நந்திசாபம்
காரடா குருபதத்தைக் காத்தாற்சொல்வார்
கண்டிந்த நூல்தன்னைக் கருதிவாங்கி
ஊரடா வருவார்க ளனேகம்பேர்க
ளுத்தமர்க்குக் கொடுக்கவுந்தான் வேணும்பாரே: (3)

பாரப்பா யிதைவிட்டு வுப்பைச்சொல்வேன்
பருமணியா யுரியுப்பு வளர்ந்துகொண்டு
தீரப்பா தீக்ஷணமாங் கலந்தச்சாறுஞ்
சிறக்கவிடு நாழியப்பா வுப்பிலேதான்
காரப்பா ரவிதனிலே மூன்றுநாள்தான்
கடுரவியில் வைத்தபின்பு தாளிச்சாறு
வாரப்பா முன்போல விட்டுநீயும்
வளமாக வற்றினபின் யின்னங்கேளே. (4)

இன்னமப்பா முசுமுசுக்கைச் சாறுநாழி
இணக்கமுடன் விட்டேதா னின்னஞ்சொல்வேன்
வன்னமா யிப்படியே வகையொன்றுக்கு
வளமாக ஒன்பதுநாள் காய்ந்தபின்பு
அன்னமடா வரக்காம்பால் நாழிவிட்டு
அதன்பிறகு அதினுடைய கட்டைவெட்டி
தின்னமதாய்த் தோன்றியதி லுப்பைவிட்டுத்
திடமாக மேலுமதாய் மூடக்கேளே. (5)

கேளடா யெருக்கிலையை யரைத்துப்பூசிக்
கிருபையுட னுப்பிட்டுப் பாலுமிட்டு
ஆளடா முன்னிலைதான் மேலேபூசி
அதின்மேலே சில்லிட்டுச் சீலைசெய்து
வாளடா யீசானம் நிருவாணிபூசை
வளமாக வாலைகண பதியின்பூசை
நாளடா செய்பின்முழுப் புடந்தான்போடு
நயமான வுப்பதுவுங் கட்டுந்தானே. (6)

தானென்ற வுப்பதுவு முலகத்தோர்க்குத்
தாங்காது சித்தருக்கா மின்னூலப்பா
வானென்றப் பசன்களுக்குக் கொடுக்கவேண்டாம்
வளர்நந்திக் குருசாபம் பலிக்கும்பாரு
தேனென்ற மனோன்மணியாள் சிவனைக்கேட்டு
திறமாக யெந்தனுக்கு வுபதேசித்தாள்
பானென்ற ரவிகோடி காந்திபட்டுப்
பஞ்சுபோ லெரிந்திடுவாய் பாழ்போவாயே. (7)

போகாமற் சொல்லுகிறே னிந்தவுப்பிற்
　　பொய்யல்ல மெய்யாக யினிமேல்நாதம்
வாகாம விரண்டையுந்தான் கூட்டிக்கொண்டு
　　வயிரவர்க்குப் பூசைபண்ணிப் புடத்தைப்போடு
ஆகும்பார் செந்தூர மருணன்போலா
　　மதினுடனே வீரமொடு தங்கஞ்சேர்த்து
நோகாமற் செந்தூரங் களஞ்சிசெம்பி
　　ஞெருக்கியிட்டு வெள்ளியேழ் சேர்த்திடாயே. (8)

சேர்த்தபின்பு மாத்துமெட் டரைதானப்பா
　　செகமென்ற செம்பதுவுந் தங்கமாகும்
ஆத்தென்ற மற்றநூல் சொல்லாதுப்பு
　　அடக்கிவிட்டேன் சுருக்கமதா யிருபத்தைந்தும்
கூத்தென்ற கோளருக்குக் கொடுக்கவேண்டாங்
　　கொடுத்தாக்கால் பெருவயிறு குருடுமாவாய்
வாத்தென்ற நரகத்தில் வீழ்வாய்சொன்னேன்
　　வயதெல்லாங் குறைநோவாஞ் சாபந்தானே. (9)

சாபந்தான் தீராது யார்வந்தாலுஞ்
　　சற்குருவாம் நந்தியருள் பதம்பெற்றாலும்
அபலமாய்ப் போகாதே யின்னூல்தன்னை
　　ஆராய்ந்து பார்த்தவர்க்கே வாதந்தங்கும்
நிபமான நூல்தன்னை யொன்றுசொல்லி
　　நிமிஷத்தில் சித்தியா முப்பின்மார்க்கஞ்
சபமாகப் போகாதே பேணிப்பாரு
　　சண்டாள னுனுக்காற் சாவான்பாரே. (10)

சாகாம லிருக்கவென்றாற் றூலைப்போற்று
　　சரணமென்று நந்தியடி தெண்டம்பண்ணு
வேகாமல் நின்றதொரு தலையைக்கேளு
　　விதமாகச் சாகாத காலைக்கேளு
வாகான விரண்டையுந்தா னுருஞ்சொல்லார்
　　மகத்தான நந்திகுரு வுபதேசிப்பார்
போகாமற் பரிவாசி யம்மென்றேற்றிப்
　　பொறிவழியே லாடத்திற் புகுந்துபாரே. (11)

பார்த்தபின்பு வொளியேது வெளியாய்ப்போகும்
பரமான நந்திதெரி சனமுமுண்டாங்
காத்தபின்பு யின்னமொரு சிமிட்டுச்சொல்வேன்
கரைகண்ட நந்தியப்பா வுபதேசித்தார்
நாத்தமென்ற கெந்தகத்தின் மெழுகைக்கேளு
நாருதக் காந்தையுட சாறுவிட்டுச்
சித்தென்ற ரசமூட்டி விரமிட்டுச்
சிறக்கமனே சிலையிட்டு ஆட்டுவாயே. (12)

ஆட்டியதோர் தங்கமப்பா கூடச்சேர்த்து
அழகான வூர்க்குருவிப் புடந்தான்போடு
வாட்டியப்பா செந்தூரங் கண்கொள்ளாது
வளமான சிதம்பரத்திற் கொடுத்தாற்சேரு
வேட்டியதோர் வெள்ளியப்பா பொன்போலாகும்
விளங்கவெள்ளி சேர்த்திடவே வயதாருகும்
மூட்டியதோர் மூட்டெல்லா மிதினுடையமூட்டு
மூதண்டங் கிழித்தாலே மூட்டுந்தானே. (13)

தானான யின்னமொரு சிமிட்டுச்சொல்வேன்
தனிச்செம்பு கட்டுதற்கு வகையைக்கேளு
தேனான மனோமணியாள் சிறந்தரூபி
சிரக்கரைத்துத் தகட்டின்மேற் பூசிப்போடு
கானான சீலைசெய்து புடத்தைப்போடு
களிம்பற்று செம்பதுதான் கனகமாகும்
மானாக ஐந்துதர மிப்படியேயப்பா
வளமாகப் போட்டிடவே வளஞ்சொல்வேனே. (14)

சொல்லுகிறேன் கேளடா சொரூபானந்தா
சூட்சமாய்ச் செய்புசுத்தி சொல்லொணாது
வெல்லுமப்பா முன்னுப்பின் செந்தூரத்தை
விதமாகச் செம்பிலே விரைந்துவூட்டிச்
செல்லுமடா வெள்ளியிலே செம்பைப்பூட்டிச்
சிதந்துருகி யெடுத்துப்பா ராறுமாற்று
தள்ளுமடாப் புடம்போடத் தங்கமாச்சு
தட்டுண்டு நவலோகம் பொன்னுமாமே. (15

ஆமப்பா யித்தொழிலைச் சொல்லவேண்டாம்
அழகான நூல்தன்னைக் கொடுக்கவேண்டாம்
நாமப்பா சொல்லுகிறேன் சொருபானந்தா
நாய்போலத் திரியாதே நயந்துபாரு
வேமப்பா பூநீற்றின் குருவைச்சொல்வேன்
விரிந்தண்டங் கிழிந்தாடச் சித்தர்மெச்ச
ஆமப்பா யகத்தீச மூர்த்திசொன்ன
அழகான பூரணசூஸ் திரந்தான்பாரே. (16)

பாரப்பா பூரணசூஸ் திரத்தில்நன்றாய்ப்
பாடினார் சவுக்கார வைப்புத்தானும்
ஆரப்பா கைமுறைகள் சொல்லவில்லை
ஆச்சரிய மாய்வழலை சொன்னார்நந்தி
சீரப்பா சவுக்கார வைப்புச்சொன்னார்
திரமான வெண்ணெயது கழட்டச்சொன்னார்
வேரப்பா மாதமொன்று காய்தானென்று
வெட்டவெளி யாகவுந்தான் விளம்புவேனே. (17)

வெளியாகத் தோணுமடா யிந்தநூலில்
வேறுவித மொன்றுமில்லை வண்ணாறுதி
அழியாத பூநீறு நிலவுப்போடு
அன்றுரைத்த கெங்கையுப்பு வழுரிநீரில்
மொழியாக மைந்துதரங் காய்ச்சிப்பின்பு
மோசமே வாராம லேழுதரங்காய்ச்சி
களியான மெழுகுபதம் வரும்போதப்பா
கடைமருந்தைச் சொல்லுகிறேன் கருதிக்கேளே. (18)

கேளப்பா வீரமுடன் பூரம்வெள்ளை
கிருபையுடன் வெடியுப்பு ஊசியுப்பு
வாளப்பா சீனமொடு புழுகோடொக்க
வளமாக யறத்தூவி நுணிக்கிப்போடு
ஆளப்பா யண்டம்போ லுருட்டிக்கொண்டு
அப்பனே ரவிதனிலே காய்ந்தபின்பு
தூளப்பா கடுங்கார மேற்றியேற்றித்
துடியுள்ள சுண்ணாம்பிற் புடத்தைப்போடே. (19)

போட்டபின்பு வழலைதன்னை தங்கச்செம்பிற்
புகழாக வைத்துமேற் கொண்டாற்கேளு
ஈட்டதொரு வறுபத்து நாலுபேரும்
இறைப்பார்கள் பரம்பதனைக் கண்டாலையா
மேட்டியாய்ச் சொல்லாதே வழலைவைப்பு
சொன்னாக்கால் சாபமது வந்துதீரும்
காட்டிலே திரிந்தாலு மெலிவாய்ப்போவாய்
கண்குருடு கால்முடங்கள் செவிகேளாதே. (20)

கேளாதே போனாக்கா லிந்தநூலைக்
கிழித்துத்தான் விட்டெறிவார் கிளைகளெல்லாம்
பாழாகுந் தலைமுறைகள் குருடுநொண்டி
பறையனாய் நாய்போலே படுவாய்நீதான்
மாளாதே யின்னூலைக் கொடுக்கவேண்டா
மற்றுமொரு சாபமப்பா தீர்க்கஞ்சொல்வேன்
நாளான சப்பாணி குறைநோயப்பா
நற்குத்து க்ஷயரோகம் நாடுந்தானே. (21)

தானென்ற யின்னமொரு சிமிட்டுச்சொல்வேன்
தாரமொடு வீரமப்பா லிங்கஞ்சூதம்
வேனென்ற பாஷாணஞ் சிலையினோடு
விதமான கெந்திதங்கந் துரிசுசுண்ணம்
நானன்றாய்ச் சொல்வேன்கா சிடைதானப்பா
கலமாக பழஞ்சாற்றா லரைத்துருட்டி
ஏனென்ற புடம்போடச் செந்தூரந்தான்
என்னாலே முடியாது யிந்தப்போக்கே. (22)

போக்கான செய்தியொன்று சொல்லக்கேளு
புகழான செம்பிலிட மாற்றுப்பத்தாம்
ஆக்கான அண்டரண்டம் விரிந்தேயாடும்
அறுபத்து நாற்பேருஞ் செந்தூரந்தான்
வாக்கான ரகசியமா மிந்தப்போக்கு
வளம்விட்டா லினமதுவே முடியாதப்பா
நீக்கான சூஸ்திரத்தை வைத்துக்கொண்டு
நிலையில்லாக் கரையில்லா வேதையாமே. (23)

வேதையின்னஞ் சொல்லுகிறேன் றூருசுநீறு
    வெள்ளைப்பா ஷாணமுடன் வீரம்பூரம்
பாதையென்ற கெந்தியொடு அண்டநீறு
    பரமான சூதமப்பா வங்கத்தோடு
மேதையென்ற கருவோடே பாலையூட்டி
    விதமாக வைத்திருந்தாற் சலமதாகுங்
காதையிதை விட்டறைத்துத் தூருசுக்கப்பி
    கடுவெயிலில் வைத்திடவே சுண்ணமாமே. (24)

ஆமப்பா யிக்குருவிற் சூதங்கட்டும்
    அரனுணை நந்தீச ருபதேசித்தார்
நாமப்பா சொல்லிவிட்டோஞ் சொரூபானந்தா
    நன்றாக யின்னூல்தான் சுருக்கமப்பா
காமப்பா விரைத்தவனை யகிக்கவேண்டாங்
    கைமுறைகள் காட்டாதே கருச்சொல்லாதே
ஆமப்பா முன்சாபம் வந்துதீரும்
    அருளான சூஸ்திரந்தா னிருபத்தைந்தே. (25)

அஞ்சான நந்தீச ரெந்தனுக்கு
    அருளினா ரென்மகனே ரோமரிஷியென்று
கஞ்சமலர்த் திருப்புயனே சொரூபானந்தா
    கடாக்ஷித்தா ரெந்தனுக்கு யானுஞ்சொன்னேன்
வஞ்சகமாய்த் திரியாதே குருவைவிட்டு
    வானமென்ற பொறிவந்து நீறிப்போவாய்
தஞ்சமென வந்தடைந்து சரணம்போற்றித்
    தயவுசெய்வார் சூஸ்திரந்தான் முடிவுமுற்றே. (26)

உரோமரிஷி - வகாரசூஸ்திரம்-உரு

முற்றிற்று.

மதுரை புதுமண்டபம் பாத்திரக்கடை க. ராம. கணபதியாபிள்ளை யவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப் பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது:

உ

மனோன்மணி துணை.

132 - வது:

உரோமரிஷி திருவாய்மலர்ந்தருளிய

அமுத கலைக்யானம் ரும.

—]*[—

மூலாதா ரத்தொளியாய் வெளியாய்ரூபாய்
முக்கோண வட்டமதில் முளைத்ததேவி
மேலான பாதமது போற்றியேற்றி
மெய்ஞ்ஞான சித்திமுதல் வாதஞ்சொல்வேன்
ஆலால முண்டதொரு ஐயர்பாதம்
அழகான பார்வதியா ளருளைப்போற்றிச்
சாலோக சாமீப சாரூபந்தான்
சாயுட்சியங் கடந்தபதந் தானேகாப்பாம். (1)

காப்பான முன்னுரைத்த ஐந்நூற்றுள்ளே
கவறாமல் சொல்லிவிட்டேன் யோகஞானம்
கோப்பான சித்தரெல்லாங் கூடிக்கொண்டு
குகைக்குள்ளே யடக்கிவிட்டார் சட்டைநாதர்
வாய்ப்பாக ஐந்நூற்றின் பொருளையாய்ந்து
வகையாகச் சொல்லிவிட்டே னைம்பதுக்குள்
ஏய்ப்பாகச் சொல்லவில்லை வாதயோகம்
இயல்பான ஞானத்தின் குறியேகாப்பு. (2)

காப்பான தீட்சையது பத்துங்கண்டு
கருவான ரேசகத்தின் குறியும்பார்த்து
மேப்பான பூரகமுங் குறியுங்கண்டு
மேன்மையுள்ள கும்பகமுஞ் சித்துங்கண்டு
வாய்ப்பான ஆறுவரை யகண்டங்கண்டு
வாரான வாதசித்தி முழுதுங்கண்டு
கோப்பான பதினெண்பேர் பாதம்போற்றிக்
குறிப்பான ஞானமது கூறுவேனே. (3)

கூறுவேன் வாலையுட சாபந்தீர்த்துக்
    கூரான சித்தருட சாபந்தீர்த்து
ஆறவே தீட்சையது பின்னேசொல்லு
    அப்பனே கடுஞ்சுருக்குப் பிராணயந்தான்
தேறவே தேவியுட பூசைவிட்டால்
    தெருமண்ணாய்ப் போகுமடா சித்தியெல்லாம்
ஆறவே பரையினுட தெரிசனத்தால்
    ஐயமில்லை பூசையப்பா பெருமைகேளே. (4)

கேளப்பா முக்கோண முன்னேயிட்டுக்
    கெடியான சற்கோணம் பின்னேயிட்டு
நாளப்பா நவகோணஞ் செய்யநன்று
    நலமான நாற்பத்து முக்கோணந்தான்
சூழப்பா யிப்படியே செய்யாவிட்டால்
    சுலபமென பூசையொன்று சொல்லக்கேளு
மூழப்பா பலகையின்மேற் புட்பம்போட்டு
    மூலமுதற் றுயைநீ முகூர்த்தஞ்செய்யே. (5)

செய்தபின்பு பெண்ணைவைத்துப் பூசைபண்ணித்
    திடமான கடத்தையவள் கையிலீய்ந்து
செய்தபின்பு குருநாதன் கடத்தைவாங்கித்
    தேவிக்கு முன்னிருந்து செபத்தைப்பண்ணு
செய்தபின்பு தாம்பூல மடைக்காயீய்ந்து
    தேவியுட பாதமது பிடித்துக்கொள்ளு
செய்தவங்கள் சித்தியப்பா மாணுக்காளே
    சித்தான சித்தெல்லாஞ் சித்தியாச்சே. (6)

ஆச்சப்பா ஐந்துவகைத் தீட்சைபெற்றால்
    அடைவாக ரேசகந்தா னெழும்பும்பாரு
மூச்சப்பா ஆளுயர மேலெழும்பி
    முக்கியமாய் மிகநடக்கத் தானேசெல்லும்
நீச்சப்பா வெகுதூரம் நடந்தாலுந்தான்
    நிலத்தினிற்கால் பாவாது ரேசிரேசி
கூச்சப்பா கும்பகத்திற் சிங்கென்றாது
    குறிப்பாகச் சுழிமுனையில் நிறுத்தியாட்டே. (7)

ஆட்டான சூடனென்று வீரமொன்று
அடவான காரமொன்று சூதமொன்று
மூட்டான கெந்தியொன்று கெவுரியொன்று
முனையான கொச்சியொன்று முப்பூவொன்று
கூட்டாகச் சரியிடையே கழஞ்சுதூக்குக்
குணமான அஞ்சுசுண்ணச் செயநீராட்டி
வாட்டாக வில்லைதட்டி யுலரப்போட்டு
வகையோடே கெவுரியினாற் குகையுஞ்செய்யே. (8)

செய்யப்பா செயநீராற் கெவுரியாட்டித்
திரமாகக் குகைசெய்து குகைக்குள்வைத்து
வையப்பா மூன்றெருவிற் புடமுந்திரு
வாகாகச் செந்தூர மிரவியாச்சுத்
தையப்பா செம்பதுதா னாற்றுக்கொன்று
தாக்கிடவே தங்கமது வாகும்பாரு
வையகத்திற் காட்டாதே தோஷந்தோஷம்
வகையோடே தீட்சைகொண்டு மலையிலேறே. (9)

எறினவர்க் கல்லோநற் பலன்தானுண்டு
இகத்திலுள்ள மாந்தருக்கு யேதுமில்லைத்
தூரிதற்கு அஞ்சுவகைத் தீட்சைகேட்டுத்
துரையான ரேசகத்திற் றொடர்ந்துநில்லு
ஆறுதற்கு அஞ்சுவகைத் தீட்சையில்லா
வழகான ரேசகத்தி லேறொட்டாது
மாறுகின்ற வயிரவன்றன் சாபந்தீர்த்து
மகத்தான குருபதத்தை வணக்கம்பண்ணே. (10)

பண்ணான தெரிசனந்தான் வகையாய்க்கேளு
பண்பாக வுதையத்தி லஞ்சுநாழி
நண்ணாக யிரண்டெழுத்துங் கருத்திற்றூக்கி
நயனத்தை நிழலோடே யடுத்துப்பாரு
விண்ணாடுங் கடந்துவிடு சோதியப்பா
விள்ளார்கள் மகத்தான பெரியோர்தாமும்
அண்ணலெனு மரனுமைக்குச் சரநூல்சொன்னார்
அக்குறியு மிக்குறியு மாகும்பாரே. (11)

பாரப்பா சரநூல்தான் யோகமாச்சு
பதறுமற் சொல்லிவிட்டே னூல்கற்றோர்க்கு
வேரப்பா ஐங்தெழுத்து மிருக்குந்தானம்
வியனாகச் சொல்லுகிறேன் விண்ணைப்பார்த்து
சீரப்பா கண்டத்தில் நாமாவைத்துத்
திரமாக நெத்தியிலே ரண்டுவைத்துத்
தேரப்பா சுழினையிலே ஒன்றாய்க்கூட்டித்
திருப்பிவிடு பூரகத்தி லஞ்சுஞ்சேரே. (12)

சேர்த்தபின்பு வோரெழுத்தைச் சுழியில்வைத்துத்
திருப்பிவிடு பூரகத்திற் சுவாசஞ்சேரும்
தேத்தபின்பு கும்பகத்திற் கடிகையொன்று
திடமாக நிறுத்தியதைப் பழக்கம்பண்ணு
நாற்றிசையும் புகைபோகா திடங்கள்பார்த்து
நாட்டிவிடு மேல்நோக்கித் திரும்பமட்டும்
வாய்த்தபின்பு எந்திடமுஞ் செய்யநன்று
வகையோடே குருபாதம் வணங்கிக்காரே. (13)

காரான விருட்டதிலே நடந்தாலென்ன
கருமேக மிரவிதனிற் சென்றாலென்ன
சீரான அரைவீட்டி விருந்தாலென்ன
திரமான ரவிமதியெப் போதுங்காணும்
பாரான வுலகத்திற் கண்டோர்சொல்லார்
பாங்கான பன்னிரண்டு வருஷங்காரு
தீராத மூடருக்கு மறிவில்லார்க்கும்
திரம்பார்த்து வாசானும் செப்புவாரே. (14)

செப்பயிலே முகக்குறியுங் கண்ணும்பாரு
திடமாக யிடக்கையிலே சங்குசக்கரம்
ஒப்பயிலே யுலகத்து வாட்கையென்றால்
உத்தமனே வலக்கையிலே யிருக்கும்பாரு
அப்பயிலே நெற்றியிலே ரேகைபாரு
அடவாக அரம்பையைப்போற் காணுங்காணும்
செப்பயிலே யிக்குறிகள் தப்பிற்றானால்
சிவசிவா பிராணாயஞ் சித்தியாதே. (15)

சித்திசெய்யும் பராபரையைத் தினங்கடோறுஞ்
சித்திசெய்தோர் மானதமாம் பூசைசெய்வார்
பத்திசெய்து தொண்டுசெய்து ஏறுவோர்க்குப்
பாங்காகப் பெண்ணைவைத்துப் பூசைபண்ணி
வெத்திசெய்து யிப்படியே யுலகத்தோர்கள்
வெகுகோடி மாணுக்கள் மலையில்வந்தோர்
சித்திசெயும் வச்ரபதி லேகியந்தான்
தினந்தோறுங் கொண்டவற்குத் திரமுமாச்சே. (16)

வச்சிரபதிலேகியம்.

ஆச்சப்பா வுடலிலுள்ள மந்தவாயுவு
ஆகாத குன்மமெட்டு மேககுலை
மூச்சப்பா வுள்மூலம் பிரமூலந்தான்
உயர்ந்துவரு நோய்முந்நூற் றிருபத்தஞ்சும்
போச்சப்பா அயனமுருக் கொண்டாப்போலப்
பொற்கம்பம் போலிருக்குந் தாதுவிர்த்தி
பேச்சப்பா லேகியத்தின் விபரமெல்லாம்
பெருமையுடன் பேசுகிறேன் வகையாய்க்கேளே. (17)

சேளப்பா சாதிக்காய் பலந்தானொன்று
கெடியான யேலமது பலந்தான்ரெண்டு
வாளப்பா வால்மிளகு பலந்தானொன்று
வகையான லவங்கப்பூ பலந்தானொன்று
நீளப்பா சீரகமும் பலந்தானஞ்சு
நிறமான கொடுவேலி பலந்தான்ரெண்டு
நாளப்பா கோஷ்டமது பலந்தான்ரெண்டு
நலமான அதிமதுரம் பலந்தானஞ்சே. (18)

அஞ்சாத அக்கிறுக் காரபலமொன்று
அடைவான பரங்கியின்வேர்ப் பலந்தான்பத்து
துஞ்சாதே குங்குமப்பூ அரைக்கால்போடு
சுகமாங்கோ ரோசனைகாற் பலமதாக
மிஞ்சாதே ரவிதனிலே யுலரவைத்து
வியனாக இடித்ததனை யெடுத்துக்கொண்டு
மஞ்சாரும் பசுவினெய் யுலையாய்க்கட்டி
வகையோடே மெழுகதுபோற் றாவிக்கிண்டே. (19

கிண்டையிலே பழச்சாற்றிற் சர்க்கரையைப்போட்டுக்
கிருபையுடன் கலக்கியதை வார்த்துவார்த்துப்
பண்டாரும் பதமாக விளகொட்டாமற்
பதறுமற் கவசத்தில் வைத்துக்கொண்டு
வண்டாரும் பூங்குழலாள் மாதுபூசை
வகையோடே செய்தபின்பு உண்டுவாநீ
தண்டாருந் தாய்பதத்தை மறந்தாயானல்
தவறிவிடும் வித்தையெல்லாஞ் சாற்றுவேனே. (20)

சந்தனாதித்தைலம்.

சாற்றுசந்த ஞதியதி மதுரங்கோஷ்டம்
தானுமக்கி ராக்காரந் தேவதாரம்
போற்றினேன் சந்தனமுஞ் சுக்குமேலம்
புகழாகச் சரியிடையாய் வாங்குவாங்கு
காட்டிலே பிராயின்வேர் வில்வவேருங்
கனமான பாதிரிவேர் வெட்டிவேரும்
வாட்டியே கிஷாயமது வைத்துக்கொண்டு
வாகான சாறுவகை வாங்குவாயே. (21)

வாங்குகிறேன் பழச்சாறு சேர்தானென்று
வளமான தென்னம்பால் சேர்தானென்று
பாங்குபெற ஆவின்பால் சேர்தானென்று
பதராமல் நெல்லிப்பால் சேர்தானென்று
தாங்குகிறேன் முசுமுசுக்கைச் சேர்தானென்று
தவருமற் பசுவினெய் சேர்தானென்று
நோங்குகிறே னிவ்வளவுங் கூட்டிவைத்து
நுண்மையாய் கிஷாயத்தி லூற்றிக்கொண்டே: (22)

கொண்டபின்பு அடுப்பில்வைத்து அனலைமூட்டிக்
கொப்புடனே பக்குவத்திற் பொடியைத்தூவி
முண்டியன லெரித்தாக்கால் முதிர்ந்துபோகும்
முழித்திருந்து கமலத்தீ யாகப்பாரு
கண்டபின்பு தயிலத்தை வைத்துக்கொண்டு
கன்னியுடப் பூசைதனைக் கனமாய்ச்செய்து
மண்டலந்தான் மூன்றுமட்டு மூழுகினோர்க்கு
மகத்தான பிணிகளெல்லா மாறிப்போமே. (23)

மாறுமடா நாட்சென்ற உதிரமேகம்
மகத்தான உள்மூலம் பிரமூலந்தான்
தூறுகின்ற பெருநோவு மகோதரந்தான்
சூலையொடு பித்தமெல்லாந் துலைந்துபோகும்
ஏறுகின்ற ரேசகந்தான் செய்வோர்க்கப்பா
என்னசொல்வே னாரோக்கிய மேறுமேறும்
மாறுகின்ற வுலகத்தோ னுண்டானாகில்
மகத்தான பிணியெல்லா மயங்கிப்போமே. (24)

போகமது செய்துமிந்த அவிழ்தங்கொண்டாற்
புத்திகெட்ட மாணுக்காள் வீணாய்ப்போகும்
போகமது செய்யவென்று மனமுண்டானால்
பிர்மமா மிரவிகலை தன்னிற்சேரு
போகமது திங்களுக்கோர் தினமுமாகும்
புண்ணியனே விந்துவைநீ நிறுத்திக்கொள்ளு
போகமது பூரகத்தி லிருத்தியாட்டு
பூவையுட விந்துவெல்லா முனக்கேயாச்சே. (25)

ஆச்சிந்தப் படிசெய்வா ருலகஞானி
ஆடிடுவான் பின்னுமப்பா ராசயோகி
ஏச்சிந்தப் படியப்பா வுலகத்துள்ளே
இருப்பார்கள் கோடான கோடியுண்டு
மூச்சிந்தப் படிகண்டோர் விள்ளாரப்பா
முனையாகப் பன்னிரண்டு வருடங்காரு
பாச்சிந்தப் படியப்பா மலையில்வாழ்வோர்
பாவையரைக் கூடார்கள் பகர்ந்திட்டேனே. (26)

இட்டமுடன் குருபதத்தைத் தொண்டுபண்ணி
இனிதாக வாழ்ந்தவனே சீசனாகும்
நட்டமது குருவுக்கு நினைந்தானாகில்
நம்பாமல் மனம்வேறா யிருப்பார்பாரு
அஷ்டகர்மங் கோகர்ண மாடினாலும்
அப்பப்பா நாள்வரட்டு மென்பார்மேலோர்
கட்டளையாய்த் தன்மனது வரவேவேணும்
சாக்கையிலே மனதிரங்கிக் கடாச்சிப்பாரே. (27)

பாரிலே சித்துண்டு ஞானமுண்டு
பண்டுவிட்ட குறையோர்க்கு யெதிரேகாண்பார்
பாரிலே துலாராசி கன்னிராசி
பண்பில்லாப் பாவிகட்கு யெதிர்காணாது
நேரிலே வந்தாலு மறைந்துபோகும்
நிலையோடே கற்றாலும் நிலைத்திடாது
சீரிலே யுதித்தவர்க்குச் சித்தியாகுஞ்
சிறப்பான வாதமெல்லாஞ் சித்தியாமே. (28)

ஆமப்பா வுலகத்து வாசானென்றால்
அவசரங்க ளில்லாம லடுத்துக்காரு
ஓமப்பா அவசரங்கள் செய்தாயானால்
உத்தமனே மறைத்திடுவா ராமோவென்ன
தாமப்பா செலவுக்குப் பணங்கள்கேட்பார்
தவறிற்று வேறுதொழி லுண்டென்பார்கள்
வாமப்பா லுண்ணார்கள் குறியைப்பாரு
மானதத்தில மானதமாம் பூசையாச்சே. (29)

ஆச்சிந்தப் படிசொல்லி மறைப்பார்மேலோர்
ஆகடியஞ் செய்யாதே யவமாய்ப்போகும்
மூச்சிந்தப் படியப்பா வுலகவாதி
முறையாக வுலகத்து ளொற்றுவாழ்வார்
பாச்சிந்த விட்டகுறை யோரேயானால்
பண்பாகக் காத்தவர்க்குப் பலிதமாகும்
வாச்சிந்த வுலகத்தின் வாதிக்கப்பா
வச்சிரத்தின் பாறையப்பா மனமுந்தானே. (30)

தானென்ற முப்பூவின் முறையினாலே
தரணியெல்லாம் பொன்னாச்சு தரித்துப்பாரு
பானென்ற பெண்ணைவிட்டால் வித்தையெல்லாம்
பாழாச்சுப் பகுத்துப்பா ருன்னுக்குள்ளே
கானென்ற கற்பூர வுப்பினாலே
காடெல்லா மலையெல்லாம் பொன்னாய்ப்போகும்
மானென்ற மனோன்மணித்தா யருளேவேணும்
மகத்தான பூசையிலே வருந்துவாயே. (31)

வருந்துவா யாத்தாளைத் தினந்தோறுந்தான்
வகையோடே குருவினுட முறையைக்கொண்டு
திருந்தவே நூல்பார்த்துத் தேறவேணுந்
தியங்குவா னூல்பாரான் திருடன்றானும்
அருந்தவே வாதத்தை முன்னேகேட்பான்
ஆகாத கர்மியென்று வகலப்பாரு
வருந்தியே காத்தபின்பு குறிகள்கண்டு
வாதமென்ற வார்த்தையைநீ பின்னேபேசே. (32)

பேசுவது யாருக்கு மைந்தாகேளு
பேரான துலாத்தோர்க்குங் கன்னியோர்க்கும்
வீசியதோர் தனுசோர்க்கு மீனத்தோர்க்கும்
வியனான மேடத்தோர் விரைந்துகூறு
ஆசான்முன் சொன்னபடி துலாமுங்கன்னிக்
கரைவாசி பின்மூன்று மரைக்திட்டார்கள்
தேசியவன் தாய்பூசை செய்யாவிட்டால்
தேடியவள் பரித்திடுவாள் தெரிந்துகொள்ளே. (33)

கொள்ளப்பா மூலாதா ரத்தினுள்ளே
குறிப்பான ரேசகந்தான் பத்துஞ்செய்கை
பிள்ளையாச ருள்ளங்கை நெல்லிக்காய்போல்
பேசுகிறே னுள்ளதெல்லாம் பெருமைகேளு
அள்ளியிடு மூலத்தில் ஓங்காரந்தான்
அடைவாகக் கொண்டெழும்பு மதிகமாச்சு
நள்ளியதோர் சுவாதிஷ் டானத்திற்றானே
நன்றிவைத்து நகாரமதைப் பாங்காய்ப்பாரே. (34

பாங்கான மணிபூர கத்திற்கேளு
பண்பாக மகாரமுமே யடங்கும்பாரு
ஆங்கான அனாகதத்திற் சிகாரம்பத்தும்
அசையாமல் விசுத்தியிலே வகாரம்போடு
நீங்காத வாக்கினையில் யகாரம்போடு
நிறுத்தியபின் னஞ்சையுந்தா னடைத்துக்கொண்டு
தூங்கான நால்வாசல் கட்டிக்கொண்டு
துரையான ரேசகத்தில் ரேசிப்பாயே. (35

பாயாமல் மனதுள்ளே அங்கென்றாணிப்
பதியான வங்கென்று சிங்கென்றாணு
ஓயாமல் மேல்நோக்கி யோடிடாது
யுயராது சந்திரகலை தேயும்பாரு
தாயான மாதாவைப் பூசைபண்ணித்
தவறாமற் பூரகத்திற் சாருசாரு
மாயான காலன்வந்தா லோடிப்போவான்
மகத்தான பூரகத்தின் வரையிற்றானே. (36)

தானென்ற கும்பகத்திற் கலையைவைத்துத்
தவறாமல் விண்ணோக்கி யிருக்கும்பாரு
கோனென்ற வெளியெல்லாம் நீயாய்க்காணும்
குமரகுரு கூப்பிட்டால் வாவாவென்பார்
தேனென்ற வாலைசிவ காமியாத்தாள்
ஜெகஜால வித்தையெனச் செய்யச்சொல்வள்
மானென்ற பெண்மாயை மறந்துபோட்டு
மகத்தான குருவினுட வழியிற்காரே. (37)

கார்மேகம் போலெழும்பும் மாயையெல்லாம்
கனமான ரேசகத்தாற் கலைந்துபோகுந்
தார்பூணுந் தாய்பூசை மறந்தாயானல்
தவறிவிடும் வித்தைமுதல் ஞானமெல்லாஞ்
சீர்மேவு மரியேது வயன்றானேது
சிறப்பான சிவமெல்லா மொன்றேயாச்சு
ஆர்மேவு மாகாச மாணேயாச்சு
அழகான பிரிதிவியும் பெண்ணேயாச்சு. (38)

ஆச்சப்பா பெண்ணென்று ஆண்தானென்றும்
அறியாத மாண்பருக்கு வெவ்வேராகுங்
கூச்சப்பா பூதமஞ்சு மெங்குமாச்சுக்
குவலயத்தி லறியாத மூடருக்கு
ஏச்சப்பா பரையென்றும பரைச்சியென்றும்
எழிதாகப் பேசிடுவா ரறிவில்லார்கள்
பாச்சப்பா பூசையென்றால் தேவிபூசை
பரையென்று மறையென்றும் பார்க்கொண்ணாதே. (39)

ஒன்ணுன பூசையப்பா தொண்ணூற்றெட்டு
ஓதுகின்ற சாதியர்க்கு மொன்றேயாகும்
பண்ணுன பூசையப்பா பழித்தபேர்க்குப்
பரகெதியுங் கிட்டாது பாருபாரு
கண்ணடிக் குள்ளிருக்குஞ் சோதிபோலக்
கனகசபை திருநடனங் காணமாட்டார்
அண்ணுட்டம் நித்தியகர்ம செபங்களெல்லாம்
அலைந்தலைந்து திரிவார்க ளசடர்தானே. (40)

தானென்ற வாணவத்தைப் போக்கமாட்டார்
தருதுன்பங் கோபத்தைத் தள்ளமாட்டார்
ஓமென்ற ஓங்கார மூருக்கமாட்டார்
உகந்துமே பாதமது வணங்கமாட்டார்
வாமென்ற வாதமது மவனுக்கேது
வகையான ஞானமது மவனுக்கேது
தாமென்ற கெருவத்தா லெல்லாம்போச்சுத்
தவமான மனோமணிதன் சகாயத்தாலே. (41)

தாலமென்ற பூமியிலே பிறந்தாற்கேளு
தானமென்றுந் தவமென்றுஞ் செய்யவேணுங்
கோலமெனுந் தானமது செய்தபேர்க்குக்
குவலயத்தில் மறுபிறவி கொள்ளுங்கொள்ளுஞ்
சீலமெனும் பிறவிதனக் கிடஞ்செய்வார்கள்
செல்வமது தானளித்துத் திறமாய்வாழ்வார்
பாலமெனுந் தீட்சையுள்ளோர் செபங்கள்செய்வோர்
பரலோக சித்தரென்றும் பகரலாச்சே. (42)

ஆச்சப்பா அஞ்சனத்தைப் போட்டுப்பார்த்து
அளவற்ற திரவியங்க ளிருந்ததென்றால்
மூச்சப்பா நெடுநாட்கள் சென்றுதானல்
முக்கியமாய்த் தெய்வமுதற் பூதங்காக்கும்
பேச்சப்பா வதையெடுக்கச் சுளுவாய்க்கேளு
பேரான பெண்ணினுட வழலைவாங்கிக்
காச்சப்பா வழலையுப்புக் காணுமுன்னே
காதவழி யோடிவிடும் பூதந்தானே. (43)

தானென்ற வழலையது வாங்கும்வாறு
சஞ்சாரக் கிரியையுடன் வாங்குவாங்கு
கோனென்ற அஞ்சனத்தி னெழுத்தைநாட்டிக்
கூட்டியல்லோ உவராலே வாங்கிக்கொண்டு
வேனென்ற கழுதையின்பால் கூடச்சேர்த்து
வியனாக ஒருகழஞ்சு வுப்பிற்றாக்கித்
தேனென்ற திரிவாங்கி யெண்ணெய்விட்டுத்
தீபமிட ஓடிவிடுந் திடமாய்ப்பாரே. (44)

பார்க்கையிலே தேவியுட பூசைபண்ணிப்
பதினைந்து நாளளவும் வழலைவாங்கி
ஏர்க்கையிலே தனமெல்லா மெடுத்துக்கொண்டு
இதமாகத் தேவியுட பூசைபண்ணிக்
கார்க்கவே பெண்டனக்கு வுபதேசித்துக்
கருணையுடன் பணிந்தவனை வழலைவாங்கு
சோர்க்கையிலே வேதாந்த குறியைக்கண்டோர்
குவலயத்தோர் தனக்குகுறி தோற்றுதென்னே. (45)

என்னசொல்வேன் வேதாந்த எழுத்தினாலே
இதமான பொருள்முதலா யுருவங்கொண்டால்
மன்னுபுவி யோர்வேறே மந்திரத்தால்
மாட்டாது மாட்டாது மயங்கிப்போகும்
முன்னுபுகழ் பவளமதி துளியில்வாங்கி
முன்புசொன்ன வழலையிலே கூடச்சேர்த்துப்
பன்னியதோ ரஞ்சனத்தி னெழுத்தையந்தப்
பாவைமுகந் தன்னில்வைத்து வாங்குவாங்கே. (46)

வாங்கியே யலைவீசும் வையத்துள்ளே
வகையான தனங்கோடி குடாரங்கோடி
தாங்கியே யிதையெடுத்து யோகம்பார்த்துத்
தயவாகக் காயசித்திக் கற்பங்கொள்ள
ஏங்கியே திரியாதே யென்னவுண்டு
ஏரப்பா வுழுதல்லோ விதைக்கவேணும்
காங்கியே கருவில்லான் குருவுமில்லான்
காணியோன் வீட்டிருந்த கழுதைதானே. (47)

தானென்ற வாதமது வேணுமென்றாற்
சதாநித்தம் நூல்பார்த்துக் குருவைக்காரு
பானென்ற பணமிருந்தா லெடுத்துப்போட்டுப்
பாதமலர் பூசைபண்ணிப் பரிந்துநில்லு
கோனென்ற குவலயத்தில் வெகுபேரப்பா
குறையாமற் பூசையினாற் சித்தர்வாழ்வு
ஊனென்ற வுலகத்தில் வாதிமார்க்கம்
உற்றகுறி நன்றாக வுரைக்கிறேனே. (48)

உரைக்கிறே னுலகத்தில் வாதிவாழ்க்கை
உளவாகக் குருமுடித்துப் பதனம்பண்ணி
இரைக்கிறே னென்றுசொல்லிச் சோறுங்கேட்பான்
ஏழையெனக் கடன்படுவா னீய்ந்ததீவான்
நிறக்கவே பணிபூணு னுசைசாற்றுன்
நீனிலத்து மானிடரோ டொற்றுவாழ்வான்
சிறக்கவே யவர்பாதம் பூசைபண்ணிச்
செம்பொன்னாற் பூச்சொரிந்து திறமாய்க்காரே. (49)

காரப்பா பன்னிரண்டு வருடமட்டுங்
கல்நெஞ்சா யிருந்தாலுங் கரைந்துபோகும்
நேரப்பா பணங்கேட்டா லெடுத்துப்போடு
நெறிபார்த்துப் பின்பல்லோ பொருளைச்சொல்வார்
ஏரப்பா வுழுதல்லோ விளைவுண்டாகும்
ஏரில்லா னூமையென்ற வித்துமாச்சு
ஆரப்பா இவ்வளவு முனக்கார்சொல்வார்
ஆசானைக் கண்டல்லோ போற்றுவாயே. (50)

போற்றுவாய் பூவுலகில் ஞானிகட்கும்
புகழாக வாதமது வந்துதென்றால்
நேத்தியாய்ப் பணிபூணுன் கடனும்வாங்கி
நீநிலத்தில் மானிடர்போல் வாட்கைசெய்வான்
வார்த்தையால் புரட்டிடுவான் மனிதர்க்காக
மயக்கமது வருகுமென்று மதுக்களுண்ணுன்
தேற்றியே பணங்கேட்பா னெழியோமென்பான்
திரப்பார்த்து மவர்பாதந் திருந்திவாழே. (51)

வாழ்ந்ததொரு ரோமர்சொன்ன வன்பத்தொன்றும்
வகையோடே பார்த்தவர்கள் யோகியாவார்
ஆழ்ந்ததொரு ரிஷியாவார் சித்தராவார்
அழகான ஞானியுமா யீசனுவார்
போழ்ந்ததொரு மாணுக்கன் சொன்னநூலைப்
பொதிகையின்மேல் தமிழ்முனிவன்'தெரிந்துகொண்டு
எழ்ந்ததொரு வுலகுக்கு வேணுமென்று
இயம்பினு ரன்பதின்மே லொன்றுமுற்றே. (52)

உரோமரிஷி அமுகலைக்யானம் ௫௰.

முற்றிற்று.

ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த மகமதுசாயபு புரம் வைத்தியம் எ. எஸ். அழகமுத்து வைத்தியர் அவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ.

பராசத்திதுணை.

133 - வது:

உரோமரிஷி திருவாய்மலர்ந்தருளிய

சோதிவிளக்கம் உஎ.

தஞ்சமென்றேன் நெஞ்சறியாப் பொய்யுமில்லை
தாயென்றேன் சேயென்றாய்ப் பின்னுமென்னை
வஞ்சகமாய்ப் பிரபஞ்ச மாயைதன்னில்
மாட்டியெனைக் குலக்கோட்டி கொண்டாயம்மா
கெஞ்சியுனை யெத்தனைநாள் கெஞ்சப்போறேன்
கேவலமாய் நினைத்துவிட்டா யினிமேலுன்னை
அஞ்சிநான் மொழிவதில்லை சொல்லக்கேளு
ஆதியிலே யேன்தடுத்தா யென்னைத்தானே. (1)

தடுத்ததினாற் பேச்சுனக்கு வருமேபின்னுந்
தாயாதிக் காரியென நின்றாயம்மா
தொடுத்துவிட்டேன் உனக்குநான் தோற்றுப்போகேன்
சொல்லிவிட்ட தாயாதிப் பங்கைநீயும்
கொடுத்துவிடு யில்லையென்றாற் சபையிலேத்திக்
கொத்தோடே உன்முதலைப் பறித்துக்கொள்வேன்
தடுத்தவள்நீ யுணர்ச்சிகெட்டுப் போனதென்ன
சங்கதியு மல்லவினிச் சாற்றக்கேளே. (2)

சாற்றினேன் வெகுநாளாய்ச் சொல்லிவந்தேன்
சமர்த்தில்லாப் பிள்ளையென்றால் தள்ளலாமோ
சாற்றினேன் பூவாலர்ச் சனையேசெய்து
தன்னினைவு கெட்டுப்போ யிருந்ததென்ன
போற்றினே னெனையாள யினிமேல்நீயும்
புத்திகெட்டுப் போகாதே அம்மா அம்மா
சேர்த்துநீ யுன்பாத சேவைதந்து
செயல்பெருகக் கெதிதந்து செப்பக்கேளே. (3)

செப்பக்கேள் செப்பொன்றிற் பந்தாமைந்தை
 செப்பமுட னுடிநின்ருய் காணப்போமோ
செப்பக்கேள் உன்னுட்டுக் காலைக்கண்டு
 சேர்ந்திருந்தார் கோடிக்கொன் றநேகம்பேர்கள்
செப்பக்கே ளுனக்கொன்று செப்பக்கேளு
 சித்தடியில் முடிநடுவி விருத்தியென்னை
ஒப்பக்கேள் மூன்ரென்ரு யாண்டுகொள்ள
 உனக்குமதி பத்தாதோ புத்திதானே. (4)

புத்தியுடன் பார்த்தென்னை யிந்தப்பேச்சுப்
 புகலுகின்ரு யாதியிலே உனக்குப்புத்தி
புத்திசொன்னேன் மலரேழிற் சிவத்தோடென்னைப்
 பூசித்தால் வாசிப்பெண் கண்டேகொள்ளப்
புத்திசொன்னேன் கண்டாயோ வண்டாயென்னைப்
 புத்திகெட்டா யென்ருயே உன்னைப்போலே
புத்தியுண்டோ மூவேழிற் பொருத்தம்பார்த்துப்
 பூவேழிற் ருடுசேரமாய் முடிப்பாயென்றே. (5)

என்றுனக்கு ஆதியிலே சொன்னபேச்சு
 ஈரேழு மொருபதிலே மூன்றுமொன்ருய்
அன்றுனக்காய்ச் சொன்னபேச் சறியாவிட்டால்
 ஆரடா பிணைப்பட்டா ரார்தான்சொல்லு
மன்றுனக்கு விண்ணுமுதல் வெளியாய்ச்சொன்னேன்
 வாய்மறந்து பேசுகிருய் மதத்தாலென்னை
இன்றுனக்கு ஆங்கால மெழுகாற்குள்ளே
 எட்டுக்கால் விட்டகுறை சொன்னேன்பாரே. (6)

விட்டகுறை யறிந்துகொண்டால் கெட்டிக்காரன்
 மேன்மைபெற மைக்கொன்றை முடித்துக்கொள்வாய்
தட்டுதலை யொருநாளு மில்லைகேளு
 சற்புத்ரன் நீயெனவு லறிந்தேகொள்வாய்
கட்டழகி நீயுரைத்த பேச்சும்நன்று
 கையுமெய்யாய்ப் பார்ப்பதற்குக் கருணைதந்து
விட்டகுறை யறியவகை சொன்னையானல்
 மெய்யறிய உனதடிமை விளம்புவேனே. (7)

விளம்புமொழி நன்ருச்சு மைந்தாகேளு
　　வேண்டியுனைச் சொல்லுகிறே னென்கால்ரண்டும்
உளம்புகுந்து உளம்பினே னென்கால்கொண்டு
　　உன்னைப்பா ரென்னைப்பா ரென்றேனுன்னை
குழம்பினேன் மனக்குழப்பம் வேண்டாங்கேளு
　　குறியறியச் சொன்னதைநீ குணமாய்க்கேளு
அழிம்புகளைப் பேசாதே அங்கைகொண்டு
　　ஐயனே உய்யும்வகை யறிந்துகொள்ளே. (8)

அறிந்துகொள்ளச் சொன்னேன்பா ரப்பாவுன்னை
　　அங்கையா லெடுத்தணைத்துக் கொள்வேனையா
அறிந்துகொள்ளச் சொன்னேனு னுனக்குப்புத்தி
　　அறியாட்டால் நானேது சொல்வேனுன்னை
அறிந்துகொள்ளச் சொன்னாய்நீ உன்கால்ரண்டும்
　　ஆடிடுவா யீரேழு மோடிப்பாயும்
தெரிந்துநீ யிப்படியுஞ் சொன்னாய்பாவி
　　திருடிவெகு வம்பியடி நீதான்கேளே. (9)

நீதானே யெடுத்துருவா யாக்கிக்கொண்டு
　　நிசத்தைவிட்டுப் பொய்மாயை யதனாலென்னை
நீதானே பாரெனவே சட்டாய்ச்சொல்லி
　　நீயுரைத்த பேச்சறிவேன் வம்பிவம்பி
நீதானே யாதிமுத லந்தம்நீயாய்
　　நின்றாடிக் கொண்டவள்நீ நினைவுதப்பி
நீதானே யிப்படியும் சொன்னாயானால்
　　நீலியுனைப் போலில்லை நிசஞ்சொன்னேனே. (10)

நிசமெனக்கு உன்னையல்லால் வேறொன்றில்லை
　　நீலியென்றூற் பாவமென்று முன்னூல்சொன்ன
நிசமெனக்கு அறிவதனா லறிந்துகொண்டேன்
　　நீயாக நானாகி நான்நீயாகி
நிசமெனக்கு உள்ளமதி லுள்ளமாகி
　　நின்றுபரஞ் சோதியென நின்றசூட்சம்
நிசமெனக்கு சூட்சமதிற் காட்சிகாண
　　நீவாவா முக்காலு மறித்தேன்பாரே. (11)

மறித்தேனு ஞாணையிட்டுத் தடுத்தேனுன்னை
மறியல்மிஞ்சிப் போகாதே அரமனையிற்சொல்வேன்
மறித்தென்னை யாதிபிலே தடுத்ததாலே
மனதாரத் தடுத்தேனு னுன்னையின்று
குறித்தென்னைப் பார்த்துமனங் கோணுமற்றுன்
கூறுமொழி யறிந்துஉப தேசங்கூறும்
மறுத்துமொழி பேசாதே யென்னைத்தள்ள
வழக்கேது உன்னைமடி பிடிப்பேன்பாரே. (12)

மடிபிடித்து அடியென்பே னடியோரீவி
வாயறிந்து-பேசடியோ வம்பியுன்னை
மடிபிடித்தாற் சலுகையுனக் கார்தான்சொல்லு
மாய்மாலக் கள்ளிமகா கள்ளிகள்ளி
துடிதுடிப்பாய்ப் பேசாதே மகனேயுன்னைச்
சோதித்தேன் மதியமுத மிந்தாயிந்தா
அடிதொடுத்து ஆறுவரை யேழுக்குள்ளே
ஆமெனவும் ஓமெனவு மழைத்திடாயே. (13)

அழைத்திட்டா லுன்னுனை வருவேனுன்னை
அழைத்தெடுத்து மேல்வீட்டில் வைப்பேனுன்னை
இளைத்துவிட்டே னெண்ணாதே வேதாந்தத்தை
இருத்திப்பார் உனக்குகொழு கொம்புமாவேன்
பிழைத்திட்டால் முப்பொருளு முனக்கேதந்தேன்
பிரட்டல்ல உருட்டல்ல முன்னும்பின்னும்
தழைத்திட்ட தறிவாயே யென்னைப்போலே
தாயுனக்குக் கிடையாது தன்னைப்பாரே. (14)

தன்னைப்பா ரென்றுசொன்ன சூட்சங்கண்டேன்
தாயாதி அனுதியென்ற கருவுங்கண்டேன்
என்னைத்தான் தன்னைப்பா ரென்றேசொன்னுய்
ஏழைதனக் குனைப்போலே சொல்வாரில்லை
உன்னைப்பார்த் தெல்லோருந் தன்னைப்பார்த்தார்
உத்துப்பார்த் துரையாமற் சொன்னுயென்னைப்
பொன்னைப்போல் மின்னொளியே தங்கத்தாயே
போதகத்தை யெனதுளத்திற் புகட்டுவாயே. (15)

புகட்டியே யெனை வளர்த்த அம்மா அம்மா
பொன்மேர்வி லிருந்ததுரைப் பெண்ணே பெண்ணே
பகட்டியே பெண்ணுருப்போ லுலகத்தோரைப்
பரிசளித்தாய் ரகசியம்போ லுயிரையெல்லாம்
முகட்டினெலி தனைப்பாயும் பூனைபோலே
முழித்திருந்து முக்கோணத் திமனேயுன்னை
நகட்டியே தள்ளவேன்று லென்னாற்கூடா
நல்லதடா யிடகலையை நசித்துப்பாரே. (16)

நசித்துப்பா ரென்றுரைத்த தாயேயுன்னை
நம்பினவன் கடத்தேற வகையைச்சொல்லு
பசித்தவய றெரியும்போ திடக்கைகீழாய்ப்
படுத்திருந்து சுழினையைநீ பாருபாரு
நசித்துவிடு மிடகலைதா னேமூவாரம்
நவமறிந்து தம்பிப்பா யாதிநாளில்
நிசக்கருவா மிதைப்பாருன் வசமேயாவேன்
நீவாவா வென்றழைக்க வருவேன்பாரே. (17)

வருவேனுன் வந்துனக்கு போதாபோதம்
மவுனமுதல் மாசித்தி பெறவேயானுந்
தருவேனுன் தந்துனக்கு மேலுங்கேளு
தங்கமகா மேருதனி லிருத்திவைப்பேன்
குருவெனவே யுனக்கறிவா யுன்னைக்கூறி
கோத்திரமும் சூத்திரமும் நானேயென்பேன்
வருவதுநீ பார்த்திருக்க முக்கோணத்துள்
வதனவட்டத் துட்சோதி மவுனம்வையே. (18)

மவுனமென்றால் தெரியவில்லை தாயேயுன்னை
வருந்தினே னெனக்குநீ மவுனஞ்சொல்லு
மவுனமது நாலுவித முன்னேதூலம்
வருமுன்பே நீகருவாய்த் தரிக்கும்போது
சிவநிலையாய்த் திருவாகி நாமேநின்று
திருநாளிற் பூத்தமலர் சரந்தானும்
மவுனமாய் நின்றதடா அடக்கங்கேளு
மனதறிந்த மவுனமிதை மனதிற்கொள்ளே. (19)

கொள்ளாத மனதோர்க்குக் கொள்கையென்ன
குறிப்பறிந்து கொள்ளாட்டா லாவதென்ன
விள்ளாத பொருளுனக்கு விண்டேன்பாரு
விளுப்பத்தி முக்கோணத் துள்ளேநின்று
கள்ளானான் திருடியென்றே தறிந்தேகொள்வாய்
கசடறவே கண்டறிநீ கருவைச்சொன்னேன்
அள்ளாத பண்டமது குறையாதையா
ஐயனே யரைச்சணத்தி லதீதந்தானே. (20)

தானென்ற அதீதமதை யுனக்காய்ச்சொன்னேன்
சருவசித்தி விஷயமென்ற தறியச்சொன்னேன்
தேனென்ற தின்பமடா நானேயுன்னுள்
சிறந்துநின்ற தாலறிவாய் முக்கால்சொன்னேன்
வானென்ற மதியமுத மதனையுண்டு
மகிழ்ந்திருப்பா யண்டவெளி யுச்சிமீதில்
ஏனென்றால் நீசுகமாய் நானேநீயாய்
இருப்பதற்கு உருப்படுத்தி விட்டேன்பாரே. (21)

விட்டகுறை யறியாட்டா லுன்னைநானும்
வினைக்கெட்ட பிள்ளையென்று தள்ளிப்போவேன்
நட்டணையாய்ப் பேசாதே அம்மாஅம்மா
நச்சுவா யுன்வாக்குப் பலிக்கும்பாவி
முட்டமுடி போகவெனைத் தடுத்தாள்முத்தி
முக்காலுந் தந்துகெதி பெறவேயென்னை
கட்டழகி யென்னுள்ளத் திருந்துநீயும்
காக்கவுன்மேற் கடனென்று கருதினேனே. (22)

கருதினேன் திருத்தாளை மனதுட்பத்திக்
கண்டதுகொண் டானந்தக் கவியைப்பாடிக்
கருதினேன் கருக்குருவாய் முடித்துவுன்னைக்
கண்டேனு னுனைக்கண்டு விண்டிடாமல்
கருதினேன் சுருதிமுடிந் தொடுங்கிநின்ற
காரணத்தைக் கண்ணாலே காணக்காணக்
கருதினேன் மனதுருகி உறுதியென்று
கனிந்துருகி யுள்ளமதி விருத்தினேனே; (23)

இருத்தினே னென்னுடைய தாயேதேவி
ஏகபரா பரமான மயமேஅம்மா
ஒருத்திதிரு வுலகமெல்லாந் தானேநீயாய்
ஓங்காரத் துள்ளொளியாய் வெளியாய்நின்று
திருத்தியா யன்பருக்கு ளின்பமாகித்
தெவிட்டாத மாங்கனியே கனியுட்டேனே
வருத்தியெனைப் பெற்றதிரு மாதேசோதி
மலைமகளே கலைமகளே மானேயென்னே. (24)

என்னினைவு நீயாகி அறிவும்நீயாய்
இருவினையும் நீயாகிப் பொருளும்நீயாய்த்
தன்னினைவுள் நினைவாகி யென்னைத்தானுய்த்
தடுத்தாண்டு நின்றசற் குருவும்நீயாய்ப்
பொன்னனையே மாத்தேறும் பொன்னும்நீயாய்ப்
பூரணமாய்க் காரணமாய்ப் போதம்நீயாய்
உன்னினைவை யறிந்தோத அறியோமம்மா
உற்பனத்து ஞற்பனமே ஓமாமென்னே. (25)

ஓமெனவும் ஆமெனவு மிரண்டுமொன்றாய்
உதித்ததெழுந்த தற்பரமே கற்பகமேவாமி
பாமகளே பூமகளே பராபரமேதேவி
பதிதலமே நிதிதனமே படைப்பாயம்மா
காமகளே கலைவாணி காமரூபி
கசிமனமே வசிவசியே காலேமேலே
கோமளையே தோமுகமே கோதைப்பெண்ணே
குறிமேலாம் பரகுருவே குமரியென்னே. (26)

குமரிதிரி சூலிசிறு வாலைப்பெண்ணே
கொடியிடையே அடிமுடியே நடுவும்நீயே
சமரிதிருத் தாண்டவமே ஆடிப்பாடித்
தனுவளைத்துச் சரந்தொடுத்த தசமிசத்தி
அமரியறு வரையேறி அப்பால்ஏழில்
அமர்ந்தகரு வுருதுருவ மானாய்நீயே
கமரியொரு மானனையே ரோமமூலங்
கருவேழில் மாதறிவாஞ் சுருக்கமுற்றே. (27)

சருக்கமது யிருபத்தி யேழிற்பாடிச்
சொன்னகரு வறிந்துணரச் சோதிபாதம்
இருக்குமதி லுணைத்தூக்கி யிருத்தும்பாரு
இதுமேலாம் பரமாகு மின்னூல்தன்னை
உருக்கமுட னிணைந்துருகி மனதையூட்டி
யுள்ளிருத்திப் பார்த்தவர்க்கு மெய்துமுத்தி
கருக்கிடையுங் குருக்கிடையு மாத்தாள்சொன்ன
கருவேழில் மூவ்வேழுங் கருத்தான்முற்றே. (23)

உரோமரிஷி சோதிவிளக்கம் உஎ.

முற்றிற்று.

திருமங்கலம் அருணாசலம் பிள்ளை அவர்கள்குமாரர் வைத்தியம் குமரகுருபரம்பிள்ளை யவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

மனோன்மணி துணை.

134 - வது:

சட்டைமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய

கற்பவிதி - ௱க.

பாடுகிறேன் சற்பமைங் கரனேகாப்பு
பரிவான சின்மயத்தின் பாதங்காப்பு
நாடுகிறேன் சித்தருட பாதங்காப்பு
நாதாந்த மனோமணித்தாய் பாதங்காப்பு
தேடுகிறே னென்றாலு மென் னூற்போலச்
செப்பார்கள் காயசித்தி சித்தரப்பா
சூடுகிறேன் காயசித்திக் காதியந்தம்
சொல்லுகிறேன் னன்றாகக் கேளுகேளே. (1)

உள்வழலை.

கேளப்பா முந்திமுந்தி வழலைமார்க்கம்
கெடியாக வாங்குகிற வரிசைசொல்வேன்
நீளப்பா பெருவிரலிற் கருசலாஞ்சாறு
நெய்யோடே மத்தித்துப் பூசிக்கொண்டு
சூளப்பா அண்ணாக்கில் விரலையோட்டிச்
சுழற்றையிலே கபாலகப மெல்லாம்விழும்
நாளப்பா உதையத்திற் செய்வாயாகில்
நலமான குணத்தையினிச் சொல்லுவேனே. (2)

சொல்லுகிறேன் வாருதிபோற் கபநீர்விழும்
சோதிக்கி லண்ணாக்கிற் குறியைக்கேளு
மல்லுகிறேன் சுழிமுனையின் ராகுகேது
மைந்தனே சங்கொடுசக் கரம்போல்நிற்கும்
அல்லுகிறேன் பேருரவி மதிதானென்பர்
ஆச்சரிய மிடைபின்னு யமர்ந்தநாக்கு
கொல்லுகிறே னென்றுசொல் ஜனங்களைத்தான்
கூட்டியல்லோ கபத்தைப்புள்ளே வளர்த்துந்தானே. (3)

தானென்ற யிதைமடக்கி விரலையேற்றச்
சாதகமாய்ச் சுழிமுனைதான் விரலிற்றட்டும்
கோனென்ற சுழிமுனையே திறந்ததானாற்
குறிசொல்வே னமுர்தமங்கே குமிழிபாயும்
ஊனென்ற அமிர்தசுக் தாமேயையா
உற்றுப்பா ரிளந்தேங்காய் போலேகாணும்
தேனென்ற அமுர்தமுண்டாற் காயசித்தி
செப்பாமற் சித்தரெல்லாம் மறைத்திட்டாரே. (4)

மறைத்திட்டா ரமுதத்தை விழுங்கிக்கொள்ள
மைந்தனே விஷமதுகண் டத்தில்நிற்கும்
நிறைத்திட்ட தட்சணைமத் திமையுங்கூட்டி
நேராகக் கண்டத்தே அமைத்தூட்டு
உரைத்திட்ட விஷங்களெல்லாங் கக்கிவிழும்
உத்தமனே பித்தமென்பா ருலகமாடு
கறைத்திட்ட கண்டருஞ்சின் மயந்தான்சொன்னாற்
காயசித்திக் கின்னமொரு அங்கங்கேளே. (5)

கேளப்பா ஆமணக்கி னெண்ணெயோடு
கொடியான குமரிச்சாறு கூடக்கூட்டி
நாளப்பா தட்சணையிற் றேய்த்துக்கொண்டு
நலமான பாவையைப்போ லிருந்துகொண்டு
நீளப்பா அபானத்திற் சுத்தியாட்ட
நேரான துர்மலங்க ளெல்லாம்போகும்
சூளப்பா யிதைமறைத்துக் காயசித்தி
சொன்னார்கள் துறந்துவிட்டேன் வழலைதானே. (6)

சித்திக்கக் காயமுதல் வாதந்தானும்
செப்புகிறேன் வாலைமூன் றெழுத்தைக்கேளு
பத்திக்கக் குருவினுப தேசங்கேட்டுப்
பண்பாகத் தேவியைத்தான் பூசைபண்ணி
ஒத்திக்க நோக்கித்தா ரகத்தைப்பார்த்து
உண்டிடுவார் கற்பகத்தை யுடனேசித்தி
மத்திக்க வாலைமூன் றெழுத்தைவிட்டால்
மண்ணாச்சு சித்தியெல்லாம் மனதிற்காணே. (7)

காணப்பா வாலைமூன் றெழுத்தைநாட்டு
கைமுறையாய்ப் பூமியொன்று காயமொன்று
தோணப்பா உலகமொன்று மூன்றுய்நின்று
சுகமோக சித்திகளை யீயும்பாரு
ஊணப்பா சொல்லார்கள் வாலைதீட்சை
ஒருகோடி தனமீயுஞ் சொல்லார்சொல்லார்
வீணப்பா தேவியுட தீட்சைவிட்டால்
வெறும்பொய்யாம் நூல்முதலாய் சித்திபோமே. (8)

வாலை.

போகாமற் சிவனுடசக் கரத்தின்மையம்
புகழான தேவியின்சக் கரத்தைவைத்து
வாகாமற் சிவசத்தி சமாதிபூசை
மைந்தனே தசதீட்சை கேட்கவேணும்
சாகாம லிருத்திவைப்பா ளவனுங்கூடி
சவுசஷ்டி வித்தையெல்லா மவனுக்குள்ளாம்
வேகாமல் வேகுந்தீ வினைகளெல்லாம்
மேனோக்கிச் சத்தமுண்டு யேறுயேறே. (9)

நூல்பெருமை.

ஏறுமென்ற பலநூலிற் கோடாகோடி
என்னைமெச்சுங் கொங்கணர்தான் பாடிப்போட்டார்
தேறுமென்று கண்டுகோ ரக்கர்சொன்னூர்
சிவமான மூலகுரு உண்பாயென்றூர்
கூறுமென்ற சிலநூலிற் கொள்ளுமென்றூர்
கூர்மச்ச முனியறிந்து பாருமென்றூர்
மாறுகின்ற மடபதியாஞ் சித்தரெல்லாம்
வைத்தாரே காயசித்தி மாண்டார்காணே (10)

காணப்பா காயபற்பங் கொள்ளுவோர்க்குக்
கைமுறையாய்க் காட்டுகிற வரிசையில்லை
தோணப்பா கொள்ளையிலே மயக்கந்தாகம்
சொற்பெரிய உடல்நோவு வருத்தமானுல்
வீணப்பா வென்றுவிட்டோர் கோடாகோடி
விதியளவோ மதியளவோ வினையோகாணேன்
ஊணப்பா வென்றுசொன்ன நூலின்தொன்மை
ஒருமொழியாய்க் குருசொல்லாத் தோஷந்தானே. (11)

தானென்ற படிநூலிற் பாடிவிட்டார்
சட்டைமுனி நூல்பாரு வென்றோர்கோடி
கானென்ற காடுபோற் காயசித்தி
கைமுறையாய்ப் பாடாமல் மறைத்தாரையோ
ஏனென்று கேட்டாக்காற் சுந்தரானந்தர்
எல்லாருங் காயசித்தி யாவாரென்று
கோனென்ற ஆதிமுத லென்பார்சித்தர்
கோடியாய் நவகோடி சித்தராச்சே. (12)

ஆச்சப்பா நவகோடி கோடாகோடி
ஆச்சுதென்று சித்தரெல்லாம் பேசிக்கொண்டு
போச்சப்பா காயசித்தி மறைத்துச்சொன்னார்
போக்கறியா ருலகத்தோர் நின்றுகேட்டார்
ஏச்சப்பா வாதசித்தி கருவைவாதி
எழுப்பாமல் வழலையைத்தா னிழுக்கச்சொல்லி
காச்சப்பா காயசித்தி கடுநீச்சாகக்
கண்டோடி யென்னூலை யொளித்தார்பாரே. (13)

பாருமெந்தன் நூலோடு கண்டுகொண்டு
பரிசமுதல் சந்தான வேதையெல்லாம்
காருகண்டா யவர்பதத்தைப் பனிரண்டாண்டு
கருணையுடன் கைகொடுத்தார் கண்டுபாரு
மாறுகொண்டு திருடாதே வாயாடாதே
மயக்கமொடு வல்லமைகள் செய்திடாதே
போருகொண்டு வாங்காதே பொய்சொல்லாதே
புத்திகெட்ட சித்தர்களே புகலக்கேளே. (14)

கேளப்பா யென்னூல்வைத் திருந்தோர்பாதம்
கொடியாக தொழிதிறஞ்சி வாங்கனன்று
நாளப்பா யில்லாவிட்டாற் கேட்டதனமீந்து
நலமாக வாங்குவது யிரண்டாம்பட்சம்
தாளப்பா யென்னூற்குச் சரிநூலில்லை
சாதகமாய்க் கொடுப்பதற்கு சிலநூலொவ்வா
சூளப்பா நூல்கொடுத்தேன் மனதுநொந்தாற்
சுத்தப்பா மாகுமென்று சபித்திட்டேனே. (15)

இட்டதொரு சாபத்தாற் பயந்துசித்தர்
என்னாலே வாங்கையிலே குளிகையீவார்
பட்டதொரு தனங்கேட்டார் கோடியீவார்
பரிவாகத் தொண்டுசெய்து வாங்குவார்கள்
திட்டமுடன் வாங்கையிலே பூசைசெய்வார்
செகத்தோர்க்குக் கிட்டினல் சித்தராவார்
மட்டமருங் குழலாளுஞ் சிவனும்வந்து
வசனிப்பார் காயசித்தி வரிசைகேளே. (16)

வரிசையுடன் கடுக்காய்க்குச் சுந்தரானந்தர்
மாதத்தைச் சொல்லுகிறே னுனியாடி
உரிசையுடன் வெல்லத்தோ டொக்கக்கொள்ளு
உத்தமனே ஆவணிக்கும் புரட்டாசிக்கும்
பரிசையுட னிந்துப்பு வுடனேகொள்ளு
பாங்கான அற்பிசிக்குங் கார்த்திகைக்கும்
தரிசையுடன் சக்கரையிற் கூட்டிக்கொள்ளு
சாதகமாய் மார்கழிக்குந் தைக்குங்கேளே. (17)

கேளப்பா சுக்குகியா முத்திற்கொள்ளு
கெடியான மாசிபங் குனிக்குந்தேனும்
நீளப்பா சித்திரைக்கும் வைகாசிக்கும்
நிலையான அமுரியிலே கொண்டுதேரு
தூளப்பா செய்திடுதல் கடுக்காய்நன்று
சுகமான செங்கடுக்காய் மெத்தநன்று
தாளப்பா கடுக்காய்நன் னயமாய்ச்செய்து
சாதகமாய் வயதறிந்து சாப்பிட்டேறே. (18)

ஏறியபின் மிளகுதன்னைக் கணக்காய்ப்பார்த்து
எடுத்தல்லோ பீங்கானில் வைத்துக்கொண்டு
மாறியபின் னமுரியிலே முறித்துக்கொண்டு
வாகாக ஐயைந்தாய்த் தினமுமேற்றிக்
கூறியதன் னூறுமட்டாய்க் கொண்டுதள்ளு
கொள்ளையிலே வெட்டைசற்றே மீறிற்றானல்
தேறியபின் னறுகுடனே மிளகுகாய்ச்சி
சிறுகவதில் வெண்ணெயிட்டுத் திறமாய்க்கொள்ளே. (19)

காந்தை.

கொண்டபின்பு கரந்தைச்சூ ரணமேசெய்து
கூட்டியல்லோ சக்கரையில் நாலுக்கொன்று
தண்டவது தேனோடு கழஞ்சிகொள்ளு
சாதகமாய் மண்டலத்தில் வாசியேறி
ஒண்டவதுக் கிடமற்று வாதமோடு
உத்தமனே பித்தமெல்லாம் கீழேநோக்கும்
கண்டிதமாய்க் கொள்மவுனந் தீர்ந்தபின்பு
கற்பத்தின் வரிசையெல்லாஞ் சொல்கிறேனே. (20)

சொல்லுறவே பொற்சீந்தி யானால்நன்று
துலங்காது கிடையாட்டால் நல்லசீந்தி
அல்லுறவே மேற்றோலை யுரித்துப்போடு
அடித்தண்டாய்க் கொண்டுவந்து கிழித்துப்போட்டு
நல்லுறவே யுலர்ந்தபின் பிடித்துத்தூளாய்
நாவிலொன்று சக்கரையுங் கூட்டிநன்றாய்
ஒல்லுறவே தினந்தோறுங் கழஞ்சிகொள்ளு
ஓராத மண்டலமு முண்டுதேறே. (21)

தேறப்பா சுரதோஷ மெல்லாம்போகும்
ஜெயமறிய மேகமென்ற தெல்லாம்போகும்
வாறப்பா கபாலத்தில் வெட்டைபோகும்
வற்றிநின்ற தாதுவெல்லாம் மருவியூறும்
வேறப்பா அஸ்திசுரம் வெட்டைபோகும்
மெய்நிறைந்த நாடியெல்லா மமுதமாகும்
பேரப்பா சீந்திச்சாறு வேறேயில்லை
பேரதுவும் அமுதசஞ் சீவியாமே. (22)

ஆமப்பா கடந்தநா ருண்டின்வேம்பை
அப்பனே பட்டையைத்தான் வெட்டிவந்து
ஓமப்பா மேற்பாணை சீவிப்போட்டு
உத்தமனே நிழலுலர்த்தா யுலர்ந்தபின்பு
தாமப்பா யிடித்துச்சூ ரணமேசெய்து
சாதகமாய்க் கருங்குன்றிச் சாறுவார்த்து
தேமப்பா யெழுதிரம்பா வணையேசெய்து
திறமாக நிழலுலர்த்தா யுலர்த்திடாயே. (23)

உலர்ந்தபின்பு வெட்டிவேர்கற் கண்டுகூட்டி
உத்தமனே கழஞ்சியிரு நேரங்கொள்ளு
மலர்ந்துநின்று நீயும்மண் டலந்தான்கொள்ளு
மைந்தனே வயிரம்போ லிருக்குந்தேகம்
கலந்துநின்ற நாடியெல்லா மிருகுமேறிக்
கண் துலக்க முண்டாகி அழுந்துந்தேகம்
நலந்திகழும் நரைதிரைகள் மாறுபட்டு
நமனுக்கு நமனாவான் நன்றாய்ப்பாரே. (24)

பாரப்பா யிதுகடந்து பின்புநீதான்
பரிவான கரிசாலை குப்பைமேனி
சேரப்பா சிறியசெருப் படையினோடு
தெளிசமனாய்க் கூட்டிச்சூ ரணமேசெய்து
வாரப்பா தேனதிலே கிண்டிவைத்து
மைந்தனே தினங்கழஞ்சி கொண்டுவாநீ
தாரப்பா யிருபதுநாள் கொண்டாயானாற்
றரையிலுள்ள தோஷமெல்லாஞ் சாடிப்போமே. (25)

வாக்குண்டாதல்.

சாடுமே சுயம்பாட வாக்கில்வாலை
சகலநூல் கருவெல்லாந் தானேதோன்றும்
வாடுமே தேகம்பொன் னிறம்போலாகும்
மன்மதன்போற் கண்ணிரண்டுஞ் சிவப்பதோடித்
தேடுமே பெண்மயிலே மோகமப்பா
தெளிந்துகொண்டு மாயத்திற் சிக்கவேண்டாம்
ஓடுமே சேட்டுமந்தான் கீழ்நோக்கும்
உதரத்தில் வாயுவெலா மொழிந்துபோமே. (26)

சிவனார்வேம்பு.

போனபின்பு யின்னுமொரு கற்பங்கேளு
புகழ்ந்துநின்ற சிவனார்தன் வேம்பினோடு
ஆனபின்பு வாலுளுவை வித்துங்கூட்டி
அப்பனே சமனாகக் கூட்டிக்கொண்டு
தானபின்பு ஈதையிடித்துப் புடத்திற்றைலஞ்
சாதகமாய் வாங்கியல்லோ வடித்துக்கொண்டு
ஏனபின்பு சிரகஞ்சக் கரையும்போட்டு
இதமாகக் கலக்கியதை வைத்துக்கொள்ளே. (27)

வைத்ததயி லத்தைதினந் தோறும்மைந்தா
　　வாகாகக் காற்கழஞ்சி கொண்டுவாநீ
நைத்ததொரு மண்டலமே யுண்டாயானால்
　　கலமான தாதுவெல்லாஞ் சுத்திராகும்
கைத்தமொழி பித்தமறுங் கபத்தைச்சாடும்
　　கனகம்போற் றேகமுமாங் கண்டுகொள்ளு
மெய்த்ததொரு சரஸ்வதியாள் நிர்த்தஞ்செய்வாள்
　　வேதாந்த சாரமெல்லாம் வெளியாய்ப்போமே. (28)

தூதுவளை.

போமப்பா யிதைவிட்டுக் கற்பஞ்சொல்வேன்
　　புகழான தூதுவளை யிலையினோடு
ஓமப்பா தக்கோலஞ் சாதிக்காயும்
　　உத்தமனே வாலுளுவை வித்துங்கூட்டிச்
சேமப்பா கொடிவேலி வேரினோடு
　　சேர்ந்துநின்ற நிலைப்பனையின் கிழங்குகூட்டித்
தாமப்பா கொன்றையுட பூவினோடு
　　சாதகமா யைங்கோல வித்துங்கூட்டே. (29)

கூட்டியல்லோ யிதுவெல்லாஞ் சமமாம்பாகம்
　　குமிறிடித்துச் சூரணமாய்ச் செய்துகொண்டு
ஆட்டியல்லோ முட்பன்றி நெய்யினோடு
　　அப்பனே காசிடைதான் தினமுங்கொள்ளு
பூட்டியல்லோ மண்டலமுங் கடந்துதானாற்
　　பொற்சடையோன் றேகமுமாம் பொய்யேயில்லை
காட்டியல்லோ மூலகுரு யிந்தகற்பங்
　　கைமுறைய தாகவுந்தான் பாடினாரே. (30)

பாடினதோர் கற்பத்தைக் கடந்தபின்பு
　　பார்மைந்தா வாரணத்தின் கற்பஞ்சொல்வேன்
நீடினதோர் கருங்கோழி சேவலுடற்போடு
　　நிலையாக வதன்குஞ்சு முட்டையெல்லாம்
ஊடினதோர் கல்லுப்புக் குள்ளேவைத்து
　　உத்தமனே கல்லுப்பு மேலேமூடித்
தேடினதோ ரிருதிங்கள் கடந்தபின்பு
　　சிவசிவா அண்டமெல்லாங் கட்டிப்போச்சே. (31)

அண்டகற்பம்.

கட்டியதோ ரண்டமெல்லா மெடுத்துக்கொண்டு
கைமுறையாய்க் கெருடனுட கிழங்குச்சாற்றில்
மட்டியதோ ரண்டமிட்டி ரண்டுசாமம்
வாகாக வெடுத்தெரித்து வைத்துக்கொண்டு
தட்டியல்லோ மேலோடு தள்ளிப்போட்டுச்
சாதகமாய்த் தினமொன்று அண்டமொன்று
தொட்டியல்லோ யிரண்டாகிப் பாதிகொள்ளு
துயர்தீருஞ் சுகமாகக் கொள்ளுகொள்ளே. (32)

கொள்ளப்பா யிருபதுநாள் காயங்காணும்
குறுகாது நெடுகாது கற்றாணுகும்
விள்ளப்பா சுக்கிலத்தைக் கட்டிநிற்கும்
மேலேற்று மல்லாது கீழோடாது
துள்ளப்பா யடங்கிற்று காமவித்தை
சுகபோகஞ் செய்தாலும் விந்துவீழா
தள்ளப்பா யிவ்வளவிற் சுன்னமாகச்
சட்டைபோஞ் சட்டைபோஞ் சாதித்தேறே, (33)

தாம்பூலச் சுன்னம்.

சாதிக்க இனும்பத்தி யத்தைக்கேளு
தாம்பூலந் தின்பதற்குச் சுன்னஞ்சொல்வேன்
ஓதிக்கக் கற்பூரச் சிலையைவாங்கி
உத்தமனே வெண்கருவா லரைத்துக்கட்டிப்
பேதிக்கச் சரியோட்டி யூதவூது
பேரான சுண்ணம்பாம் பின்னுங்கேளு
வாதிக்கக் கல்நாரை யிப்படிக்கு
மசத்தான அண்டத்தோ லூதிடாயே. (34)

ஊதிடவே சுன்னமா மொவ்வொன்றப்பா
உத்தமனே அருந்தும்வெற் றிலையிற்பூசிக்
கோதிடவே கொட்டைப்பாக் கதனைச்சீவி
குமரவே தாம்பூலந் தின்னநன்று
ஓதிடவே முன்சாற்றை யுமிழ்ந்துபோட்டு
உண்டபின்பு தாம்பூலந் தின்றுதுப்பு
வாதிடவே சேத்துமத்தை யறுத்துப்போடு
மகத்தான யுபரசத்தின் சுன்னந்தானே. (35)

தலைமுழுக.

தானென்ற தலைமுழுக வரிசைசேளு
சாதகமாம் மிளகோடு கடுக்காய்மஞ்சள்
வேனென்ற வேப்பரிசி நெல்லிக்காயும்
மீருத சமபாகம் நிறுத்துக்கொண்டு
கோனென்ற யாவின்பால் விட்டுஆட்டிக்
குமரவே முழுகிவரப் பட்சந்தோறும்
ஊனென்ற நெய்வார்த்து வாரந்தோறும்
உத்தமனே பசும்பயர்க்காய்ப் பாகம்பண்ணே. (36)

அன்னத்திலுப்புகூட்ட.

பண்ணப்பா யன்னத்தி லுப்பொடுங்கப்
பாடுகிறேன் நாதாக்கள் பாடாதெல்லாம்
கண்ணப்பா அண்டமைந்து கல்வத்திட்டுக்
கல்லுப்புப் பலம்பத்து மதிலேபோடு
விண்ணப்பா வெடியுப்புப் பலந்தானைந்து
மேவியதோர் நவச்சாரம் பலந்தான்ரண்டு
ஒண்ணப்பா சீதமது பலந்தான்மூன்று
ஒக்கநன்று யரைத்துலர்த்த மெழுகுமாமே. (37)

மெழுகெடுத்துப் பாறையுப்பை யுடைத்துப்பூசி
வெயிலிலே யுலரவைத்துக் காய்ந்தபின்பு
உழுகெடுத்த க்ஷாரத்தைக் கீழ்மேலிட்டு
ஓட்டிலே மூடிநன்றாய்ப் புடத்தைப்போடு
கழுகெடுத்துப் போகாது உப்புக்கட்டும்
நலமாக வுடைத்தவாய் வயிரமின்னும்
தழுகெடுத்த வுப்பையல்லோ சோத்திலிட்டுச்
சாப்பிடவே மிகநன்று சாப்பிடாயே. (38)

வேதையாதம் உப்பு.

சாப்பிட்டா லிந்தவுப்புச் சட்டைதள்ளும்
சாமதிக்கு யுருவமைந்த மாதிறக்குமப்பா
கூப்பிட்டா லுன்மனத்தாய் வாவாவென்பாள்
கூசாதே கட்டோடே மேலேயேற்றும்
ஏப்பட்ட யமுரியிலே யிறங்காதுப்பு
இதுவுமொரு கற்பமுமா யிருக்குந்தோஷம்
வாய்ப்பட்ட கொழுப்பாலே (பச்சை) யுப்பைத்தின்றால்
வாய்த்திருத்தி சித்தியெல்லாம் மண்ணுப்போமே. (39)

உப்பு சுண்ணம்.

போமென்ற வுப்புக்கும் சாரமேற்றிப்
புகழாக வூதிடவே சுண்ணமாகுந்
தாமென்ற சுண்ணத்திற் சாரஞ்சேர்க்கச்
சலமாகு மிதுக்குள்ளே வீரம்போட்டு
ஆமென்ற சரக்கையெல்லாந் தோய்த்துவாட்ட
அசையாது அசையாது மணிபோலாடும்
நாமென்ற நவலோகத் துள்ளேயீந்தால்
நாலாறு மாற்றாகும் நயந்துகாணே. (40)

காணப்பா யிதையெடுத்துச் செலவுசெய்து
கனமான கற்பத்தைத் தின்றுயேறு
வீணப்பா கெடுக்காதே கெதியில்லையென்று
வேதாந்த வாலையைத்தான் நித்தம்பூசி
தோணிப்பா யெந்தனைப்போற் சொன்னாரில்லை
சொன்னதினாற் சித்தரென்மேற் பகையுமாச்சு
ஊணப்பா யிதைவிட்டுக் கற்பஞ்சொல்வேன்
உத்தமனே வெகுசுருக்கா யுணர்ந்துபாரே. (41)

செயநீர்.

வாரப்பா பழச்சாற்றி லறபொடியைப்
பாங்காக வூறவைத்து மூன்றுநாள்தான்
நேரப்பா வுறசியதைக் கழுவிப்போட்டு
நிறுத்தல்லோ பலமைந்து மெடுத்துக்கொண்டு
தாரப்பா பலமொன்றுக் கட்டியதோருப்பு
தன்னோடே அரைப்பலந்தான் வீரம்போட்டுச்
சேரப்பா வெண்காரம் பலமும்ரெண்டு
திறமான சாரமது பலமுங்காலே. (42)

அயச்செய்பு.

காலோடு அரைப்பலந்தான் துருசுபோட்டுக்
கைமுறையா யரைப்பலந்தான் துத்தம்போட்டுச்
சேலோடு சூதங்காற் பலமும்போட்டுத்
திறமான வெடியுப்பு நீராலாட்டிச்
சாலோடு சாரநீர் விட்டுஆட்டிச்
சாதகமா யிருசாம மிரண்டுநீரும்
மேலோடு யெரிபாதாம் பருப்புத்தானும்
மெச்சவே யிரண்டுபலங் கூட்டிப்போடே. (43)

போட்டரைத்து மைந்துபங்காய்ப் பருந்துகொண்டு
புகழுவொரு பங்குஅரைப் பொடியிற்கூட்டி
நீட்டதனைக் குகையிலிட்டுச் சில்லுப்போட்டு
நேராகக் குகையிலுள்ளே வுருகஆட்டு
மீட்டிதனை யரைத்தெடுத்து நொறுக்கிக்கொண்டு
மீளவொரு பங்கெடுத்து யுருக்கிநீயும்
பூட்டதனை யிப்படியே மைந்துபங்கும்
புகழாக யுருக்கிலய மாடும்பாரே. (44)

பாரப்பா யிவ்வைந்துக் கிடையேதங்கம்
பாய்ச்சியொரு மணியாக வுருக்கிவாங்கி
நேரப்பா யிதிலேயொரு கழஞ்சியோடு
நிலைக்கவொரு குகையிலிட்டு வுருக்கும்போது
தூரப்பா நாகமொரு கழஞ்சியோடு
சுகமாக வாங்கியது ஆடும்போது
காரப்பா காரீயங் கழஞ்சியோடு
கண்திறந்து அப்பனே பிரளுந்தானே. (45)

தானகக் கண்திறந்து பிரளும்போது
தாக்கதிலே முக்கழஞ்சி லிங்கர்தானுக்
தேனகக் களங்காரு மிதனைவாங்கிச்
செம்பிரண்டு வெள்ளியெட்டுச் சிறக்கஆட்டி
கோனன களங்கையொன்று கொடுத்தாயானுற்
குறையாது யேழுரைதான் கூர்ந்துபாரு
பானன லோகமங்கே பொன்னுமானுற்
பண்பாகக் காயசித்தி சொல்லக்கேளே. (46)

காயசித்தி அயச்சேந்தூரம்.

கேளப்பா வுருகுமிரும் பிடைக்குத்தங்கம்
கெடியாக வைத்துருக்கி யெடுத்துக்கொண்டு
தாளப்பா யிதிற்பாதி சூதங்கூட்டிச்
சாதகமாய்ச் சூதமிரட் டிப்புக்கெந்தி
நீளப்பா கூட்டிப்பொற் றலையின்சாற்றுல்
நிலைக்கவரைத் தொருசாமம் வில்லைசெய்து
நாளப்பா ஓட்டிவிட்டுச் சீலைசெய்து
நலமாக லகுபுடமாய்ப் போட்டிடாயே; (47)

போட்டிடுவாய் புடந்தோறுங் கெந்திகெந்தி
புகழாக வெளிமட்டும் பிறகுசும்மா
நாட்டிடுவாய் பின்புபுடங் கனமாய்நீயும்
நலக்கமது செந்தூர மாகமட்டும்
ஆட்டிடுவாய் செந்தூர மானபின்பு
அப்பனே காற்கழஞ்சு சருக்கரையிற்
கூட்டிடுவாய் காயமது யிருப்புத்தூணும்
செயலோடு மண்டலந்தான் கொண்டுதேறே. (48)

காந்தகற்பம்.

தேறியபின் காந்தமென்ற கற்பங்கேளு
ஜெகமறியப் பயிர்காந்தம் உருளைக்காந்தம்
மாறியதி லூசியெட்டிப் பிடிக்குங்காந்தம்
மைந்தனே அரக்காந்தம் பலமொன்றாகும்
ஆறியதோ ரிதுநாலி லாகநன்று
அப்பனே கிடையாட்டால் நீதான்கேளு
கூறியதோ ரூசிதனைப் பிடிக்குங்காந்தம்
கொண்டுவந்து நொறுக்கிநன்றாய்ப் புடத்தைப்போடே: ()

போடப்பா வெள்ளாட்டின் ரத்தத்துள்ளே
பூட்டியல்லோ வெள்ளாட்டின் கொழுப்புப்போட்டு
நீடப்பா வதின்றேலிற் கட்டிநன்றாய்
நிலையான நெற்குழியிற் கூடவைத்து
ஊடப்பா நாலுதிங்க ளானபின்பு
உத்தமனே யிதையெடுத்து யுருக்கிக்கொள்ளு
கூடப்பா யிந்திடைக்கும் பாதிகாரங்
குறையாமற் சாரமைந்து காந்தம்பத்தே. (50)

பத்தோடு துரிசிரண்டு பலமுங்கூட்டிப்
பாங்கான சாரமதைப் பலமும்போட்டுக்
கொத்தோடு சன்னமீ துளுந்துமொச்சை
கோதும்பை குன்றுமணி கொள்ளுங்கூட
சித்தோடு புருவெச்சஞ் சீனிவெண்ணெய்
தேனோடு கையொன்று பலமதொன்று
நத்தோடு ஆட்டுரத்தம் விட்டுஆட்டி
நலமாக மைந்துபக்கு கூறுசெய்யே. (51)

செய்யபின்பு காந்தமொரு கூறுகூட்டித்
திரளநன்றாய்த் தாக்குலேயி லூட்டியாட்டு
பையதன்பின் புடைத்தெடுத்து வூதிப்போட்டு
பங்காகப் பின்னுமொரு பங்குகூட்டி
நையுபின்பு முன்போலே யுருக்கியாட்டி
நலமாக வைந்துபங்கு முடைத்தூதி
லைகயபின்பு நாதமது சத்தாய்நிற்கும்
காயசித்தி யிதின்பெருமை காட்டுவேனே: (52)

காட்டுகிறேன் காந்தசத்து பலந்தான்ரெண்டு
கனகமிலாத் தங்கமது பலந்தானென்று
வூட்டறவே யிரண்டுமொன்று யுருக்கிவாங்கி
உத்தமனே சூதமதிற் பலந்தானென்று
நீட்டறவே கெந்தகமும் பலந்தானாலு
நேரயிதை பொற்றலேயின் சாற்றாலாட்டி
மூட்டறவே வில்லைதட்டி யோட்டில்மூடி
மூதண்ட யனல்மரவிற் புடத்தைப்போடே: (53)

போடப்பா யிப்படிபன் னொருபுடந்தான்
புகழாக இதையெடுத்து அரைத்துக்கட்டி
நீடப்பா வோட்டிலிட்டுச் சீலைசெய்து
நேர்பாக வெளிப்புடமா யேற்றிப்போடு
வூடப்பா செந்தூர மாகுமட்டும்
உத்தமனே புடம்போட்டுத் தீர்ந்துவாங்கி
தேடப்பா யிரண்டுபணந் தூக்கந்தானும்
தினந்தோறும் மண்டலந்தான் தின்றயாரே: (54)

ஏறையிலே காயமெல்லாஞ் சிவந்துமின்னும்
எழுந்ததொரு நரைகளெல்லா முதிர்ந்துபோகும்
தேறையிலே கண்ணிரண்டுஞ் சிவந்துமின்னும்
சிறுபிள்ளை முகம்போலே சிவந்துகாணும்
நாறையிலே வுடம்புகஸ் தூரிவீசும்
நலமான தந்தமெல்லா மிருகியேறும்
கூறையிலே காந்தத்துச் சுருக்குமெத்த
கோரக்கர் சித்தியெல்லா மிதற்குள்ளாச்சே. (55)

சூதமணி.

ஆச்சப்பா காந்தத்தால் வேதைசொல்வேன்
அண்டரண்டங் தாண்டியப்பே மணகொட்டாது
ஓச்சப்பா யதின்வேரை சித்தர்மெச்ச
மூட்டுகிற வரிசைசொல்வேன் சுந்தரானந்தர்
பாச்சப்பா காந்தசத்தின் சமனுய்த்தங்கம்
பாங்காக வார்த்திடித்து வுலர்த்திப்போட்டு
ஓச்சப்பா யுருக்கையிலே (நாக)மிட்டசூதம்
மூட்டுவொரு மணியாக வாங்குவாங்கே. (56)

வாங்கியந்த மணியிடைகெந் தகந்தான்கூட்டி
மருவியதோர் மணிக்குமனே சிலையுங்கூட்டி
ஓங்கியிதைப் பொடியாக்கி குப்பிக்கேற்றி
உத்தமனே வாலுகையி லெரித்துயேறு
தாக்கியது செந்தூரப் பதத்தைக்கேளு
சதாகிட்டாற் காய்ப்பாகு மடியிலேதான்
பொங்கியிந்தப் பதத்திற்செந் தூரம்வாங்கிப்
புகழாகத் தேவியைத்தான் பூசைபண்ணே. (57)

பூசைபண்ணு அவள்பதமுஞ் சிவபதமும்
புகழ்பெரிய யீசன்நிர் வாணிபாதம்
பூசைபண்ணி வஸ்துவைநீ பானம்பண்ணிப்
போக்கோடே தாரகத்தில் நின்றுபாரு
பூசைபண்ண மறந்தாக்காற் காயசித்தி
பொய்பூட்டும் வேதையெல்லாம் பொய்யாய்ப்போகும்
பூசைபண்ண தேவியுட பத்துதீட்சை
புகழாகக் கேட்டவரே சித்தராமே. (58)

வாதசித்தி.

ஆமப்பா காந்தமென்ற செந்தூரத்தை
அறைகிறேன் வேதமுக மாடக்கேளு
ஓமப்பா செம்பதிலே நூற்றுக்கொன்று
உத்தமனே வெள்ளியிலன பதுவுக்கொன்று
தேமப்பா குடவனிலும் பதுவுக்கொன்று
திறமான யிரும்பதில்முப் பதுவுக்கொன்று
தாமப்பா தாரவிலே பத்துக்கொன்று
தாக்கிட்டா சரிமாற்று தப்பாவாறே. (59)

வாஞன பூநாகங் குளக்கரையில்
மண்தின்று கக்கியல்லோ புத்தாய்நிற்கும்
தாஞன புத்தெடுத்துத் தண்ணீர்வார்த்துச்
சமரசமா யறித்திறுத்து அடியிற்பார்க்க
வீருக பளபளப்பாய் மின்னிக்கொண்டு
விடங்கியதோர் சத்தெல்லாங் கீழேநிற்கும்
கூஞன திதுவெல்லாம் வழித்துக்கொண்டு
குமுராமே காரமிட் டுருக்கிடாயே. (60)

உருக்கியது மணிபோல வெடுத்துக்கொண்டு
உத்தகரு வளையல்சவ் வீரங்காரம்
மருக்கியது நாலுக்கு வொன்றுகூட்டி
மைந்தனே குகையிலிட்டு நன்ருயூது
செருக்கியிது மணிபோலே சத்தாய்நிற்கும்
சிவசிவா பூநாகம் சுத்தியாச்சு
கருக்கியிதைச் சொல்லாம லெடுக்கச்சொன்ன
கருத்துக்கே சித்தரெல்லாம் மெச்சினுரே. (61)

மெச்சினதோர் சத்துருக்கு நாலிலொன்று
மேலான தங்கத்தை யிட்டுயாட்டி
நச்சினதோர் சூதமிடைக் கிடையேகூட்டி
நன்ருக அரைத்திதனைப் பொடிபோலாக்கிக்
கச்சினதோர் கெந்தகத்தைச் சமனுய்க்கூட்டிக்
கற்ருழம் பாலாலே அரைத்துக்கட்டி
ஓச்சினதோர் வில்லையைத்தான் ஓட்டில்மூடி
உத்தமனே மணல்மறைவிற் புடந்தான்பத்தே. (62)

பூநாக செந்தூரம்.

பத்தான புடமிட்டு மேருக்கேற்றிப்
பாங்காகப் புடம்பத்துத் தீர்ந்தபின்பு
முத்தான கற்ருழம் பாலாலாட்டி
முதிராம லொருவில்லை யாகக்கட்டி
அத்தான வெளியில்புட மேற்றிப்போடு
அரகரா நாகஞ்செந் தூரமாச்சே
சித்தாக வேணுமென்ருற் றினமிரண்டு
தேன்கூட்டிச் சக்கரையிற் கூட்டிக்கொள்ளே. (63)

கொள்ளப்பா யிருபதுநாள் சட்டை(யொன்று)போகுங்
கூப்பிட்டே சித்தரெல்லாம் வார்த்தைசொல்வார்
பிள்ளப்பா லவரோடே குளிகைமார்க்கம்
வேதாந்தத் திருமூலர் மார்க்கமென்றால்
உள்ளப்பா நம்முடைய வர்க்கமென்று
ஓடுகிற குளிகையைத்தான் கையிலீந்து
நள்ளப்பா யாருடைய வர்க்கமென்றால்
நலம்பெரிய சட்டைமுனி வர்க்கமென்னே. (64)

என்னவே யென்னுடைய நாமஞ்சொல்லி
எடுத்ததனைச் சித்தரெல்லா மியல்பாய்ப்பேசி
மன்னவே சட்டைமுனி நாலுக்குள்ளே
வாமமென்ன வென்றுசொல்லிக் கேட்டாராகில்
தன்னவே சனகாதி மூலரோடு
சபையாகக் கயிலாயத் திருக்கும்போது
பன்னவே கொங்கணரென் னூலைவைத்துப்
படியுங்கோ ளென்றுசொல்லிப் பகுந்திட்டீரே. (65)

பகுந்திட்ட நூலெடுத்து மச்சமுனிதானும்
பாடினர் சபையெல்லாம் கேட்டுமெச்ச
வகுந்திட்ட வாதமா யிரத்திலொன்று
மைந்தனே காயசித்திக் கிதுதான்நூறு
நகுந்திட்ட நிகண்டுபெனி ரண்டுநூறு
நவமான ஞானமதி லிரண்டுநூறு
ஒருந்திட்ட வாறுபத் தைந்துநூறு
ஒளிப்பில்லை சித்தருக்கா மென்றார்காணே. (66)

காணப்பா பிறகுபிரு நூறுபாட்டு
கைமுறையாய்த் தீட்சைவிதி தன்னைப்பார்த்து
ஊணப்பா தீட்சைவிதி சத்திமார்க்கம்
உத்தமனே பூசைவிதி சிவத்தின்மார்க்கம்
தோணப்பா வெட்டவெளி யாகச்சொன்னேன்
சொன்னதொரு இருநூறு பாட்டும்பார்த்து
ஆணப்பா யாணவத்தாற் சொன்னாரென்று
அரைச்சணத்தி லென்னையங்கே பழியென்றாரே. (67)

அழைத்தென்னை மச்சமுனி கூட்டிப்போனார்
அப்பவல்லோ ஜனகாதி சித்தரெல்லாம்
குழைத்தகுரு வலக்காதில் சொல்லுந்தீட்சை
கொழுப்போடா பாடினது வென்றுகேட்டுத்
துழைத்தகுரு சித்தருக்கு நீரானீரோ
சொற்பெரிய பூரணத்தைத் தள்ளினீரோ
இழைத்தகுரு வானரோர் சித்தரெல்லாம்
இடும்போடா பாடினது வெனச்சொன்னாரே. (68)

சொன்னமொழி கேட்டசந்து நிற்கும்போது
துடிமூல குருவியிரு நூறும்வாங்கிப்
பன்னநல்ல பாமென்று கிழித்துப்போட்டார்
பாடினதோ ரிருபத்து யைந்துநூறுங்
கன்னநல்ல சித்தருக்கா மென்றுசொல்லிக்
கைகொடுத்து குகைக்குள்ளே வையுமென்றார்
இன்னபடி கண்டமுனி நூல்தான்சித்தர்
இருபத்து யைந்நூறு மிதுதான்பாரே. (69)

பாரென்று கைக்கொடுக்கச் சித்தர்மெச்சிப்
பாங்கான கெவுனத்தே பழைத்துப்போவார்
காரென்று கறுப்பாக்கி மூலிகையைத்தானுஞ்
சாதகமா யதின்பிறகு வண்ணகற்பம்
நேரென்று பூமியிலே குழியைவெட்டி
நினைவாக செங்கோட்டை வெட்டிப்போட்டுத்
தூரென்று முழவுயாம் பரப்பிக்கீழே
சுகமாக மண்வெட்டி மேலேபோடே. (70)

போட்டதில்நீர் விட்டுக்கா யாமகற்கட்டும்
புகழாக மூன்றுதிங்க ளழுகிப்போகும்
நீட்டதிலே சிறுகவதைக் கொத்திப்பார்த்து
நேராக மண்கறுத்த பதத்தைக்கண்டு
மூட்டதிலே முழுக்கொட்டை போட்டாயானால்
மூதண்ட மாறுதிங்கள் பொருமிநிற்கும்
காட்டிலே ஜலம்விட்டு மேலேகிண்டிக்
காயாம லெழுதிங்கட் சேருமாமே. (71)

ஆமப்பா வெட்டினதோர் கொட்டையானல்
அசைவில்லே மூன்றுதிங்கள்வித் தெல்லாம்போடு
ஓமப்பா வெட்டாதே கொட்டையானல்
ஓரெட்டுத் திங்களில்வித் தெல்லாம்போடு
சேமப்பா வித்தென்ன தெளிப்பதென்றாற்
செப்புகிறேன் நீலிகரி சாலேகரந்தை
தாமப்பா பொற்றலேவல் லாரையோடு
சாதகமாய்ச் சிறியசெருப் படியும்போடே. (72)

போடப்பா குமரிக்கண் ணேடுதானும்
புகழான நிலப்பனையுங் கொல்லங்கோவை
நீடப்பா திருமேனி விழிவிழி
நிலையான முறைமசைக்கி சிவனார்வேம்பு
ஓடப்பா கொடிவேலி யிதுகளெல்லாம்
ஒவ்வொன்றாய் வரிசையுடன் பயிரேசெய்து
சூடப்பா தேவிபதம் பூசைபண்ணி
சுணங்கலாய் மறந்துவிட்டாற் பயிராகாதே. (73)

அவுரிமுதலான கற்பமூலிகை உற்பத்தியின்விதி.

பயிரான மூலிமுதற் றாத்திற்கேளு
பாங்காகக் கால்வாசி கருப்பேயோகும்
பயிரான மறுதரத்தி லரைகறுக்கும்
பாரப்பா மறுதரத்தில் முக்கால்வாசி
முயிரான மறுதரத்தில் முழுதுமாகும்
மோசமில்லேக் கறுப்பாகு முன்னேர்செய்தார்
மயிராகுங் கறுப்புநீசா தனேயேசொல்வேன்
மைந்தனே மனமகிழக் கண்டிடாயே. (74)

கண்டுகொள்ளச் சோதனைசொக் கிறகுதானுங்
கைமுறையாய் முக்காப்பின் பன்னீர்க்குள்ளே
கண்டுமொள்ளப் பிரட்டியதைத் தேய்த்துப்பார்த்தாற்
சாதகமாய்க் காகத்தின் நிறமேயாகும்
ஓண்டுகொள்ளக் கழுவித்தேய்த்தாலும்போகா
தண்டவர்க்கு மயிர்கறுக்கும் கண்டுசொல்வீர்
பண்டுகொள்ளக் கால்கறுப்பை முன்னேகொள்ளு
பாங்கான யரைக்கறுப்பை பின்னேகொள்ளே. (75)

கொள்ளப்பா வதின்பிறகு முக்கால்வர்ணங்
கூசாதே மூழுக்கறுப்பைச் சண்ணித்தின்னு
உள்ளப்பா சட்டையொன்று கழன்றுபோகும்
உத்தமனே ரோமமெல்லாந் தும்பிபோலாம்
மெள்ளப்பா முந்திவல் லாரைகொள்ளு
விழுங்கியபின் கரந்தைகரி சாலைகொள்ளு
நள்ளப்பா குமரிகொள்ளு வோமங்கொள்ளு
நலமாகச் செருப்படியும் விழிகொள்ளே. (76)

மச்சமுனி முதலானோர் வுண்ட கற்பவிதீ.

விழிகொண்ட மச்சமுனி ஆழிகாலம்
வேதாந்த சமாதியிலே யிருந்தாரையா
ஆழிகொண்ட கமலர்கொடு வேலிகொண்டு
அடங்காத சமாதியிலே வுகந்துநின்றார்
வாழிகொண்ட பிரமர்செருப் படியையுண்டு
வாகாக சமாதியிலே யிருந்துபோனார்
சூழிகொண்ட வாகர்பொற் றலையைக்கண்டு
சுகமாகச் சமாதியிலே யிருந்திட்டாரே. (77)

இருந்திட்ட கோரக்கர் கஞ்சாவுண்டு
மேழுயுகங் கடந்தபின் பெழுந்திருந்தாரையா
அருந்திட்ட கரிசலைகொங் கணர்தானுண்டு
ஆச்சரியம் நாலுயுகம் வாதம்பார்த்தார்
பெருந்திட்ட திருமேனி சொருபாநந்தர்
பேணியுண்டு சமாதியிலே யுகந்துநின்றார்
பொருந்திட்ட கொல்லனுட கோவையுண்டு
போகமுனி கோடிவரை யிருந்திட்டாரே. (78)

கருநெல்லி உற்பத்திவிதீ.

இருந்திட்ட மலைதோறுஞ் சுந்தராநந்தர்
எல்லோருங் கறுப்பாகச் செய்தமார்க்கம்
பருந்திட்ட குழிவெட்டி யிரண்டாள்மட்டம்
பாங்கா யதினின்நிறையச்செங் கொட்டைபோட்டு
வருந்திட்ட மண்போட்டு அதின்மேலையா
வைத்தாரே கருநெல்லி கருத்தநொச்சி
கருந்திட்ட கொடுவேலி கஞ்சாவோடு
கைமுறையாய் வைத்தார்கள் கருத்துப்போச்சே. (79)

பொய்யாமை.

கருத்திருந்த மூலிகுகை தோறுமிற்கும்
கைமுறையா யிதுகள்ரண்டுங் கடந்தபின்பு
ஒருத்திருந்த குளிகையிட் டோடிச்சென்று
உத்தமனே அவரவரைக் கேட்டுவுண்ணு
மறுத்திருந்து திருடாதே பொய்சொல்லாதே
வாயாடித் திரியாதே நமக்குக்கொஞ்சம்
பொருத்திருந்த சட்டைமுனி பிள்ளையென்றுற்
போகுமுன்னே கைகொடுத்துப் புகழ்செய்வாரே. (80)

சாதிவிருக்ஷ முதலானதுகளின் பாலுண்ணல்.

புகழான பிறகுமுட் பணியையுண்ணு
போக்கோடே சோதியொடு சுணங்கமுண்ணு
தகழாதே ரோகத்தின் விருட்சந்தானும்
சாதகமாய்ச் சேர்ந்தோடு பாலையுண்ணு
துகழாகச் சுரபிவிருட்சஞ் சோமவிருக்ஷம்
சொற்பெரிய யெருமையுட விருட்சமுண்ணு
இகழாம லுன்மனையைக் கண்டுதேறி
இவளுடைய நாதத்தின் கற்பங்கேளே. (81)

கெந்தகபானம் நாதகற்பம்.

கேளப்பா அண்டத்தைப் பணம்போற்பொத்துக்
கெடியான வீரங்கற் பூரஞ்சாரம்
தூளப்பா வெடியுப்பு சவுக்காரத்தின்
சுன்னமுமே வகையொன்று பலந்தானொன்று
நாளப்பா பொடிசெய்து நாலண்டத்தில்
நலமாகப் பொட்டிதனை வெயிலில்வைக்கச்
சீளப்பா கொடியதொரு வேகம்போலச்
சினத்திலே யிரண்டுக்குச் சிலமுமாச்சே. (82)

ஆச்சப்பா கெந்தகந்தான் பலமேபத்து
அப்பனே கல்வத்தி லிட்டுக்கொண்டு
ஓச்சப்பா அண்டத்தில் நீர்தான்விட்டு
உத்தமனே யண்டங்கள் தண்ணீர்பண்ணி
ஆச்சப்பா கெந்தகத்தில் மூன்றுவிட்டு
அரைத்தபின்பு வெண்காரப் பலந்தான்றூக்கி
தேரப்பா கழுவிபலத பிதிலேபோட்டுத்
திறமாக வொருநாள்தா னரைத்துக்கட்டே. (83)

கட்டியதோர் வில்லைதனை யானைமேலோட்டிற்
கடுகவைத்து வாலுகையி லேற்றிமெள்ள
ஒட்டியதோர் திவ்வியரிப்பாய் தினந்தானொன்று
உரவாகக் கட்டிப்போங் கெந்திகெந்தி
மட்டியதோர் கெந்திக்குப் பாதிசூதம்
மாட்டியல்லோ பொடியாக்கி வைத்துக்கொண்டு
நெட்டியதோர் பூநாகங் கழுவிப்போட்டு
நேராகப் பீங்கானிற் பிழிந்துபோடே. (84)

போட்டதிலே சவுக்காரச் சுண்ணஞ்சாரம்
புசமாக வெடியுப்பு மூனுஞ்சேரு
நீட்டதிலே வகைக்குமொரு காசுதூக்கி
நேராகப் பொடிசெய்து அதிலேபோட்டு
மூட்டதிலே துள்ளியது தண்ணீராகும்
மோந்துமந்த நீரைக்கெந் தகத்திலிட்டு
ஆட்டதிலே தினமூன்று மெழுகுபோல
அப்புறத்தே வாங்கிவைத்து அறையக்கேளே. (85)

தங்கச்செம்பு.

கேளப்பா தங்கமது குகையிலிட்டுக்
கெடியான செம்புநாலி லொன்றுபோட்டு
நீளப்பா வுருக்கையிலே மெழுகு தானும்
நேர்ப்பாகப் பணம்போலே யெடுத்துப்போடு
தாளப்பா தங்கமிடை யிட்டபின்பு
சாதகமாய்ச் சோதித்தெ டுத்துநன்றாய்
நாளப்பா குகையிலிட் டுருக்கிக்கொண்டு
நலமாக முன்போலே செம்புகூட்டே. (86)

கெந்தீச்செம்பு.

கூட்டியல்லோ முன்போலே யுருக்கிக்கொண்டு
குறையாமல் முன்போலே மெழுகுபோடு
நீட்டியல்லோ யெடுத்துச்சோ தித்துவாங்கி
நேராக முன்போலே செம்புகூட்டி
ஆட்டியல்லோ வுருக்கையிலே மெழுகுபோடு
அப்பனே யிப்படியே முறைகள்தோறும்
பூட்டியல்லோ பத்துதரந் தீர்த்தாயானாற்
பொன்னிற்கும் செம்பெல்லாம் போகும்பாரே. (87)

பாரப்பா குகைதோறுஞ்சோ தித்துவாங்கிப்
பதராம லெடுத்தல்லோ முறித்துக்கொண்டு
கோரப்பா வோட்டிவிட் டுருக்கிக்கொண்டு
கிலேத்தங்கம் விராகனுக்கு (பண)மதிகமிற்கும்
தாரப்பா தங்கமது செம்பேயாச்சு
சாதகமாய்க் கெந்தகத்தின் செம்பினாலே
ஊரலப்பா கொள்ளாது செம்பின்வேதை
யோட்டிவைக்க ஆண்பிள்ளை யுண்டோசொல்லே. (88)

ஆபரணமணியும்விதி

சொல்லியதோர் செம்பதனாற் குளிகைபண்ணு
சுகமாக வேடங்கள் பண்ணுபண்ணு
சொல்லியதோர் செம்பினாற்குண் டலங்கள்பண்ணு
துடியான மோதிரமாத் திரையும்பண்ணு
சொல்லியதோர் செம்பதனால் வளைவிபண்ணு
துலங்கியதோ ரருகுகட்டிக் குவளைபண்ணு
சொல்லியதோர் சித்தர்களிப் படியேசெய்து
சுகமாக வாபரணம் பண்ணினாரே. (89)

கெந்திமெழுகு.

பண்ணியதோர் கெந்தகத்தின் பெருமைதன்னைப்
பணவிடைதா னிரண்டுதிங்கள் தின்னுதின்னு
உண்ணியதோர் மண்டலத்தில் சட்டைதானும்
உத்தமனே தளமாகத் தள்ளிப்போடும்
நண்ணியதோர் மேனிதன்னைப் பார்க்கும்போது
சலமாக அருணனைப்போற் காணுங்காணும்
புண்ணியமே செய்தவர்க்கித் தனையுமெய்தும்
பொய்சொல்லும் பாவிகட்கு யெல்லாம்பொய்யே. (90)

நூல்பொய்யென்று இகழ்ந்தவர் சாபம்

பொய்யாகும் நூல்கொடுத்த குருவைப்பார்த்துப்
புகழாமற் றூஷித்தாற் போகும்பாழாய்ப்
பொய்யாகுக் காயசித்தி (வாத)முதலென்றாற்
போக்கோடே கோடிசென்மம் புலையனாவான்
பொய்யாகுக் தேகியுட வாதமென்றாற்
புகழாக யிகத்தில்பெரு வயறுமாவான்
பொய்யாகு மூலகில்சித்த ருண்டோவென்றாற்
போசனமுங் கிடையாது புலையனுமே. (91)

வாலை அருக்கிடைப்பது.

ஆமப்பா முன்னெடுத்த தங்கச்செம்பை
அடித்துநன்றாய்த் தகடாக்கி யதிலேகேளு
ஓமப்பா வாலைரசங் கெந்திகூட்டி
உறவாகத் தகடுகொண்டு மூடிக்கட்டிச்
சேமப்பா வப்பிரேகத் தகட்டில்வைத்துத்
திறமாகத் தகடுகொண்டு மூடிக்கட்டித்
தேமப்பா வோட்டிலிட்டு வோடுமூடி
தீக்கொளுத்திக் கனபுடமாய்ச் சிறக்கச்செய்யே. (92)

செய்யயிலே தேவியைநீ பூசைபண்ணு
திறமாகச் சமாதியிலே யிருந்துபாரு
மையயிலே தாரகத்தில் தேவிநின்று
வாய்த்துதடா வாய்த்துதடா காயசித்தி
கையயிலே வாதசித்தி மௌனசித்தி
கைமுறையாய்ப் பலித்துதடா மைந்தாஎன்பார்
கொய்யயிலே யாதுதலம் வெளியாய்க்காட்டிக்
கூப்பிட்டு சக்கரத்தின் குறிசொல்வாளே. (93)

சொல்லியதோர் புடமாறிக் குளிர்ந்தபின்பு
சுகமாகப் பூசித்து யெடுத்துப்பாரு
மல்லியதோர் பொடியாக நொறுங்கிநிற்கும்
மைந்தனே யிதையெடுத்து வைத்துக்கொண்டு
ஒல்லியதோர் பொழுதுக்கே குன்றியுண்ணு
ஓங்கியதோர் மண்டலத்தி ரொளிபேமீறுஞ்
சல்லியதோ ரிருண்டறையி லிருக்கும்போது
சந்திரசூ ரியனேயென் பார்கள்காணே. (94)

பூசை செய்யுமுறை.

காணப்பா பூசைசெய்ய முறையைக்கேளு
கைமுறையாய்ச் சுவடிவைத்துப் பூசைசெய்வார்
பூணப்பா சிலபேர்தான் தீபம்வைத்துப்
புகழாகப் பூசைசெய்வார் பெண்ணைவைத்தும்
நாணப்பா சக்கரத்தைப் பூசைசெய்வார்
நம்முடைய பூசையென்ன மேருபோலே
ஊணப்பா நாற்பத்து முக்கோணம்வைத்து
உத்தமனே பூசைசெய்வார் சித்தர்தானே. (95)

தானென்ற மேருவைத்தான் பூசைசெய்வார்
சாபமிட்டா லண்டரண்டம் தீயாய்வேகும்
தேனென்ற மேருவுக்கு தசதீட்சைவேணும்
திறமிள்ளை யாமொருவர் தீண்டற்போகா
வானென்ற மேருவைத்தான் பூசைசெய்தோர்
வாய்திறந்து உபதேசஞ் சொன்னாராகில்
கோனென்ற வாதசித்தி கௌனசித்தி
கொள்ளையிட்டா னவன்சீஷன் கூறினேனே. (96)

கூடியதோர் வாலைமூன் றெழுத்தைக்கேளு
குறியறிந்து பூசைசெய்து பின்புகேளு
மாறியதோர் திரிபுரையெட் டெழுத்தைக்கேளு
மைந்தனே யிவளைநீ பூசைபண்ண
தேறியதோர் புவனையுட யெழுத்தைக்கேளு
திறமாக புவனையைநீ பூசைபண்ணு
ஆறியதோர் யாமளையா றெழுத்தைக்கேளு
அவளுடைய பதம்போற்றிப் பூசைபண்ணே. (97)

பண்ணியபின் யாமளையைந் தெழுத்தைக்கேளு
பண்பாகத் தீட்சையைந்து முடிந்தபின்பு
வண்ணியதோர் வாசியென்ற யோகத்துக்கு
மைந்தனே வைத்துபிராண யாமந்திரு
கண்ணியதோ ரித்தனையு மறிந்திருந்தாற்
காயசித்தி விக்கினங்க ளில்லையில்லை
உண்ணியதோ ருலகமென்ன சித்தரென்ன
உத்தமனே விட்டகுறை யெகிக்குக்காணே. (98)

காயசித்திசெய்ய வயதினளவு கூறல்.

காணப்பா காயசித்தி பண்ணும்போது
காட்டுகிறேன் வாலையிலே நின்றாராகிற்
பூணப்பா வாலைபோ லிருந்துவாழ்வார்
புகழாக யெவ்வனத்தே நின்றாராகிற்
வணப்பா யவ்வண்ண மென்றும்வாழ்வார்
உத்தமனே முப்பதிலே நின்றாராகில்
தோணப்பா முப்பதுபோ லென்றும்வாழ்வார்
சுகமாக யைம்பதிலே நின்றாற்கேளே. (99)

கேளப்பா யைம்பதுபோய் பதினாறுக்கும்
செடியான யெண்பதிலே தின்றானாகில்
வாளப்பா யிருபதுபோ லென்னாருநதான்
வாங்காமல் நின்றுவிடும் வளர்த்திகூடா
நாளப்பா யிதின்மேலே வளர்த்திமிஞ்சில்
நரம்பெல்லாந் தளர்ந்துபோங் கடினம்பாரு
வேளப்பா வெரித்தசிவன் சொன்னமார்க்கம்
வெவ்வேறும் சித்தர்சொன்ன வித்தைபாரே. (100)

பாரப்பா காயசித்தி செய்யும்மார்க்கம்
பஞ்சிட்டுப் பாரம்வைத்தாப் போலேசொன்னேன்
ஊரப்பா சித்தர்சொன்ன கற்பத்துக்கு
என்னுடைய நூலுக்கு மிசைந்துபாரு
ஆரப்பா தொட்டுமுடி வரைக்குஞ்சொன்னேன்
சொல்லாதே வொளித்திட்டார் சித்தரெல்லாம்
காரப்பா குருபதத்தைக் காத்தார்சித்தி
காயசித்தி பாடியதோர் காட்சிமுற்றே. (101)

சட்டைமுனிவர் கற்பவிதி ௱௧.

முற்றிற்று.

மதுரை புதுமண்டபம் பாத்திரக்கடை ந. ராம. கணபதியாபிள்ளை யவர்களிட மிருந்துவாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்தசாஸ்திரம் அச்சிடலானது.

உ

தேவிஸஹாயம்.

135-வது:

ஜனகர் திருவாய்மலர்ந்தருளிய

ஞான சூஸ்திரம். உச.

ஆதியெனு மூலபரஞ் சுடரேகாப்பு
    அறிவிற்குள் ளறிவான அறிவேகாப்பு
நீதியெனு மனோன்மணியின் பாதங்காப்பு
    நெஞ்சகத்தி லுறைந்ததொரு நாதன்காப்பு
சோதியெனுங் கலைக்கோட்டார் பாதங்காப்பு
    சுந்தரமாய் வந்துதித்த சோதிகாப்பு
பாதியெனு மதியணிந்த யீசன்காப்பு
    பச்சமொடு மூலவினா யகன்காப்பாமே. (1)

மூலமே நடுமூல மறுகோணத்தில்
    முப்பாழி லாடியபொற் பாதமெல்லாம்
சீலமெனத் தூக்கிநின்ற பாதமுண்டு
    சிறுவாசல் சிறுவழியில் நுனிபோலப்பா
ஆலவிட முண்டஅரன் பாதந்தானும்
    அங்கெனவே யிருத்தியே வங்கென்றேற்ற
ஞாலவழி யொன்பதுவா சலுமடைத்து
    நடுவழியி லேயிடைபின் கலையையேத்தே. (2)

ஏத்தவே சிறுவாசல் திறக்குமப்போ
    இதமாகக் கமலநடங் காணுமங்கே
போத்தவே சாகாக்கால் கணீரென்றோசைப்
    பிரகாசஞ் சத்திசிவம் நடனமையா
ஆத்தாளா யிரங்கோடிச் சூரியப்பிரகாசம்
    அமுதமுண்ட சிறுவாசல் வந்துபாயும்
சாத்தறிய நடனத்தைக் கண்டுதேறு
    சாதகமாய்க் கலைதன்னை நிறுத்திக்காணே. (3)

காணரிய கமலத்தே பரமசத்தி
கருதறிய வாயிரத்தெட் டிதழின்மத்தி
பூணரிய ஆகாச நடனமங்கே
புகலரிய சிறுவாசல் திறந்துபார்க்கில்
வேணவதி சயங்களெல்லா முண்டுஉண்டு
விளையாடுந் தொழிலெல்லாம் நடனம்பார்த்துத்
தோணரிய கமலத்துக் கப்பால்வீதி
சூட்சாதி சூட்சமுயர் வீதிதானே. (4)

ஆதிசூட்ச வீதியிலே யங்கேபோக
ஆறுநெருப் பாறுமயிற் பாலமுண்டு
கதிகடந்து மயிற்பால மீதிலேறிக்
காணாத சுழிபரத்தின் வீடுபார்க்கில்
அதிபதியாஞ் சுழிபரத்தின் வீட்டில்வாசல்
அகத்திலுள்ள வாசலெல்லாம் பிரியுமங்கே
மதியுடைய பதினொருவா சலும்பிரியும்
மகத்தான சுழிமுனையைப் பார்த்துக்கொள்ளே. (5)

பார்த்துமங்கே மயிற்பால மீதிலேறிப்
பகரறிய நெருப்பாறுந் தாண்டியப்பால்
போத்தரிய அதிசூட்ச மூன்றும்வீதி
பிரகாசங் கொள்ளாத காந்தியங்கே
வீத்திருக்கும் பராபரந்தா னெல்லைவாசல்
விட்டவிடந் தொட்டவிடத் திருத்திவாழ்வோர்
நாத்திசைக்கு மெவ்வுயிர்க்குந் துணைவனான
நாட்டிலுமெய்ஞ் ஞானகுரு வாகிவாழ்வார். (6)

நாடரிய வெல்லையெனும் வாசலுள்ளே
நாதமீ ராறுவிந்து பதினாறப்பா
சூடரிய பனிரண்டு பரத்தின்வாழ்வு
தொல்லையற்ற பதினாறு பரத்தின்வாழ்வு
நீடரிய பரந்தானும் போக்குவரத்தாகி
நிற்குமப்போ சடம்வேண தெல்லாஞ்செய்யும்
தேடரிய பராபரந்தான் விளையாடுமப்போ
தெல்லையற்ற நித்திரையாந் தோர்க்குபாரே. (7)

நித்திரையிற் பதினாறு கலைகள்பாயும்
நிர்மயமாய்த் தொழிலெல்லா மசரப்பண்ணி
கத்துறுமிக் குரட்டைவிட்டுத் தூங்குமப்பா
காயமேற் பாம்பேறிற் றெரியாதாகுஞ்
சத்துருவா ளுருவிவெட்ட வருகும்போது
தன்மனது கெட்டுறங்குந் தெரியாதப்பா
சித்திரமாய்ப் பதினாறும் விளையாடுமப்போ
செடமிழந்து கெட்டுறங்குஞ் சிவன்றானே. (8)

சிவனிந்திர சாலவித்தை சொர்ப்பனங்கள்
சிவனையும் மயக்கிபதி னாறுன்றானும்
அவையடக்க மாகவே யுறங்குமப்போ
அருகினிலே மனுடர்வந்து கூப்பிடும்போதப்பா
தவமினிய பதினாறும் பனிரெண்டானைத்
தட்டியெழுப் பித்தனது மனையிற்சேர்வன்
பவுசுடைய பன்னிரண்டான் பதியில்வருமப்போ
பஞ்சறிவும் பலதொழிலு மைவரும்வந்துதவாம். (9)

பன்னிரண்டும் பதினாறு மெல்லையிலேதொட்டுப்
பரியேறும் வாசியின்மே லேறியுட்பிறப்பும்
கன்னியெனும் பன்னிரண்டு நாதவிளையாட்டுக்
கந்தரியாம் பதினாறுன் விந்துவிளையாட்டு
உன்னிதமாம் பனிரண்டாங் கன்னிமனத்தொழில்கள்
உகந்திடுவன் பதினாறு னவன்றொழிலைவேறற்று
சென்னிலயந்து படைத்தமரா பரமப்பாவுரைக்கச்
செயலுடைய பரமனது அறிவதெல்லாங்காட்கி. (10

பன்னிரண்டு முறைமைகூறு மனமகிழ்ச்சியெல்லாம்
பதினாறுஞ் சிவன்கூறு மனமுறக்கந்தானும்
உன்னிதமாய்க் கண்டபடி சூட்சத்தைச்சொன்னோம்
உற்றபிள்ளை கண்டுமனந் தெளிந்துபிறப்பறுப்பாய்
வன்னநடு வணையுமுச்சி யுக்கிராணம்
மற்றவிடத் திருந்துவிட்ட விடத்தன்னிற்றான்
பன்னியிருந் திவர்பரா பரந்தானாகிப்
பக்கேவு மற்றிடத்தே யிருப்பர்தாமே. (11)

இருப்பர்களே பெரியோர்கள் அளவில்லாமல்
எண்ணரிய ஞானமதைக் கைக்கொண்டார்கள்
விருப்பதிலே ஆசைவைத்து வெகுபேர்தானும்
மெய்மறந்து சோதிசொரூபத்தைக்கண்டு
திருப்பதிக மாகவவர் தேவிதன்னைத்
தெரிசித்து அழியாத தேகமானார்
மருப்பில்லா பிர்மதண்டி யெண்ணெய்தன்னை
வகையுடனே சொல்லுகிறேன் மைந்தாகேளே. (12)

வகையான எண்ணெய்தனைப் புகலக்கேளு
மைந்தனே சொல்லுகிறேன் சூட்சமாகத்
துகையான பிரமகண்டி சமூலந்தன்னைத்
துரிதமாய்த் தானிடித்துப் படிசாறுவாங்கி
நகையாதே வெந்தயமுஞ் சீரகந்தான்
நலம்பெறவே அதிமதுரம் பலமுமைந்து
பகையாம விடித்துநன்றாய்க் கலந்துபின்னர்
பரிவுடனே விளக்கெண்ணெய் சேர்ப்பாய்தானே. (13)

எண்ணெயது மூக்கால்தான் படியேயப்பா
ஏற்கெனவே மிகக்கூட்டி அடுப்பிலேற்றித்
திண்ணமாய் நீதானுந் தீபம்போல
தீர்க்கமதாய் எரித்திறக்கிப் புணர்தங்காமல்
வண்ணமுற வேயடுத்து யிருத்தோர்பின்கான்
வகையான பாண்டத்தி லூற்றியேதான்
அண்ணலென மனதில்வைத்துப் பிணியாளர்க்கு
அன்புடனே சிறுகரண்டி யளவதாமே. (14)

அள்விடைதான் கொடுத்திடவே யிதில்சேர்கின்ற
அடங்காத கைகாலின் பிடிப்புநோய்கள்
தளும்பிநிற்கும் வாதமொடு மேகவெள்ளை
தயங்கியநோய் தங்காமல் நீங்கிப்போகும்
குளம்பியது மேற்கொண்டு யேறிடாது
குணமான சித்தர்கள்தான் சொன்னவித்தை
களங்கமருந் தேகத்தின் பிணியைமாற்றிக்
கனத்தயிந்த வியாதியெல்லாம் போகுந்தானே. (15)

தானென்ற மூலியிது ரணத்தையாற்றும்
தப்பாது பிடிப்பனைத்தும் தானேபோகும்
நானென்று பேசுவதேன் பெரியோர்சொல்லால்
நானறிந்த விதப்படியே யுனக்குச்சொன்னேன்
ஏனென்று சொல்லதுபோல் பேசுகின்ற
இசைவான மூலியெனச் செப்பலாகும்
கானென்ற வரிசையுடன் செய்தபேர்க்குக்
கருதியசொற் றவறாமல் நடக்குந்தானே. (16)

நடத்தினதோர் யென்னென்றால் பலமதாக
நன்றாகப் பேதித்து நோயைத்தீர்க்கும்
சடத்தினிலே தான்சென்று யிறுக்குகின்ற
சலிப்பான வியாதிகளைத் தான்கண்டிக்கும்
படத்தினிலே எழுதிவைத்த தன்மைபோல
பாலகனே சொல்லிவிட்டே னருமையாக
இடத்தையறிந் தேயுணர்ந்தால் விண்டுநிற்கும்
இயல்பான தொழிலறிய மார்க்கந்தானே. (17)

மார்க்கமுள்ள சாத்திரத்தைப் படித்தபேர்கள்
மனதுகந்து தேர்ந்துநின்று மகிழ்வாய்ச்செய்வார்
ஏர்க்கையுள்ள இலக்கணமாய் மருந்தைச்சொன்னால்
என்மகனே யாருக்குந் தெரியாதப்பா
தீர்க்கமுடன் வெளிப்படையா யிருந்தால்நன்றாம்
செய்வதற்கு லகுவாகுஞ் செளிப்பதாகும்
ஆர்க்குமிது தெரியவென்றே சொல்லிவிட்டேன்
அருமையுடன் செய்தறிந்து ஏற்றிப்பாரே. (18)

*ஏற்றியதோர் பத்தியம்பத் தியத்தைக்கேளு
எளிலான ஆட்டிறைச்சி துவரையாகும்
ஆற்றியதோர் சிறுபயறு வுள்ளானாகும்
அன்பான கத்தரிக்காய் பிஞ்சதாகும்
மாற்றியதோர் வெண்டைக்காய் பிஞ்சதானும்
மணமறிய பருப்பரைத்துப் புசிக்கலாகும்
சாற்றியதோர் அறைக்கீரை யுண்ணலாகும்
சாதமதில் பால்விட்டு மருந்தலாமே. (19)

*வெள்ளைப்பூண் டுகேருதள்ளவும் புளியைச் சுட்டு உப்புவறுத்துக் கூட்டவும்.

அருந்தினவர் தங்களுக்குச் சொன்னநோய்கள்
அணுகாது கடும்பத்யம் யிருந்தால்நன்று
திருந்தவேதா னப்படியே ஆயிசொல்லத்
திறந்துவிட்டே னொளியாமல் மறைத்திடாமல்
மருந்துவகை யானதிலே யிதுவோர்மூலி
மகாபெரியோர் பார்த்துணர்ந்த வித்தையப்பா
பெருந்தபத்தோர் புகன்றதனை யாராய்ந்தேதான்
பேசினதென் றேவுனக்குள் பேணிப்பாரே. (20)

தைலஞ்ஸ்நானஞ்செய்ய எண்ணெய்

பேணியே விளம்புகிறேன் ஆதண்டைவேரும்
பிரியமுள்ள பட்டையொடு நன்னாரிவேரும்
ஊணியே சடாமாஞ்சி வில்வவேரும்
உண்மையுடன் தானெடுப்பாய் பலம்ரெண்டாக
ஆணியாம் உரலிலிட்டு யிடித்துநன்றாய்
அகண்டஒரு பாண்டத்தில் போட்டுக்கொண்டு
காணியாம் எள்ளெண்ணெய் அரைப்படிதான்விட்டுக்
கவனமதாய் எரித்திறக்கிச் சாறப்போடே. (21)

சாறமது ஒருகளஞ்சி பொடித்துக்கூட்டு
சபாஷெனவே ஆபிபதம் பூசித்தேதான்
காறமுள்ள தேகமதை யறிந்துபார்த்துக்
கருணையுடன் தலைமுழுகச் சொல்லுசொல்லு
தீரமுடன் சிறுபயறு சீவக்காய்தேய்த்துச்
செழிக்கவே வெந்நீரால் ஸ்நானமாக்கி
பாரமில்லா ஆட்டிவறச்சி வத்தல்கூட்டிப்
பகருடனே புசித்திடவே அதிவிதமுமாமே. (22)

கியாழம்.

புசித்தபின்போர் பாகமதைப் புகலக்கேளு
புகல்பெரிய மிளகுதான் பலந்தானொன்று
சுசிகரத்தின் சீரகமும் பலமுங்கால்தான்
சுருக்காகக் கியாழமிட்டுக் குடிக்கச்சொல்லு
வசிகர மருந்திது லெகுத்தவேகம்
வணங்கியே தேகமது நிறையதாகும்
பசியெடுக்கும் நடப்பதற்குக் கொடுப்பதாகும்
பண்புடனே செய்தொழிலின் பாகந்தானே (23)

பாகமதைச் சொல்லிவிட்டே னப்பாகேளு
பண்புடனே ஸ்நானஞ்செய் தைந்துநாள்பின்
தாகமுடன் காலையினி லொருதரந்தான்
தன்மையுடன் கியாழமதைச் சாப்பிட்டேதான்
வேகமுடன் பசுவவெண்ணெய் சேர்த்துக்கொள்ளு
மேன்மையாம் பத்தியமோ கரப்பான்தள்ளு
ஏகமதா யிருப்த்தி நாலும்பாரு
எண்ணூறு ஐம்பதையுங் குருக்கிப்பாரே. (24)

ஜனகர் ஞானசூஸ்திரம் உச.

முற்றிற்று.

பழனிமலையில் வசிக்கும் ஸ்ரீ கைலாச தெண்டாயுதபாணி ரிஷீஸ்வரசுவாமி யவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப் பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

சிவமயம்.

136-வது:

கலைக்கோட்டு மஹாரிஷி திருவாய்மலர்ந்தருளிய

பிர்மதீட்சை ஞானம் ௩௨.

ஆதியாய் நின்றமனோ மணியைப்போற்றி
        அன்பாக ஞானமதை அடியேன்பாடச்
சோதியதாய் நின்றபிர்ம சொரூபம்போற்றிச்
        சொல்லவொண்ணாப் பூரணத்தி னருளைப்போற்றி
நீதியதாய் நின்றசித்தர் பாதம்போற்றி
        நிறைந்துநின்ற ஓங்காரத் தருளைப்போற்றி
பாதியதாய் நின்றசிவ சத்தியின்ற
        பரம்பொருளாய் நின்றகண பதிதாள்காப்பே. (1)

காப்பாகப் பாடிவைத்தேன் பிர்மஞானம்
        கனிவாக வெளிவிடா திருந்தநூலைத்
தாப்பாக ஜனகரேநீர் சொல்லக்கேளு
        தன்மையுட னுனக்காகச் சொன்னேனப்பா
நீப்பாக முன்சொன்னே னநேகநூல்தான்
        நிட்சயமா யிந்நூல்போல் நிகழ்த்தவில்லை
சாப்பாக இந்தநூல் பரமனப்பா
        தனையறியத் தானுரைத்தா ருனக்காய்ச்சொன்னேன். (2)

சொன்னேன்கா ணுந்தனுக்கா யிந்தநூலைச்
        சுருதியெனத் தானறிந்தால் மூன்றேநாளிற்
இன்னேகேள் நாதாந்தச் சோதிகாண்பாய்
        இந்நூலை யெவர்களுக்கும் இயம்பொண்ணாது
முன்னேதா னடிவணங்கிக் கேட்டதாலே
        முத்திபெற இவ்வழியை மொழிந்தேன்பாரு
தன்னைத்தான் தானறிய இந்நூல்போலே
        தாரணியிற் சித்தர்களுஞ் சாற்றார்பாரே. (3)

பாரப்பா ஜனகமுனி இந்தநூலைப்
　　பதியான பதியதுவும் முக்கோணந்தான்
நேரப்பா உந்தியென்ற சுழினைமீதில்
　　நிலையான மோட்சகெதி வீடென்றெண்ணித்
தேரப்பா மதிரவியை ஒன்றாய்க்கூட்டித்
　　திருவான பராபரந்தா னெழுத்தென்றெண்ணிக்
காரப்பா வேதாந்தச் சரக்கொடுத்துக்
　　கருணையுடன் விண்ணோக்கி உருவேசெய்யே. (4)

செய்யப்பா மனதடங்கி நிலையில்நின்று-
　　திடமாக மனதொடுங்கிக் குடசலம்போல்
மெய்யப்பா கலங்காமல் நிலையில்நின்று
　　மேதினியி லாதியுமந் தம்வரைக்கும்
வையப்பா கோணமின்றி யிருந்துகொண்டு
　　வருத்தமின்றி மனதையோர் நிலைநிறுத்திக்
கையப்பா அசையாமற் றியானஞ்செய்தால்
　　மசடறவே பராபரந்தா னெழிதிற்காணும். (5)

காமென்ற பரவெளியின் பெருமைகாணக்
　　கருத்துடனே புகலுகிறேன் புலத்தியர்கேள்
ஓமென்ற மந்திரங்க ளேதுமில்லை
　　உறுதியுள்ள அஷ்டாங்க யோகமில்லை,
தாமென்ற அட்சரங்க ளொன்றுமில்லை
　　தன்மையில்லா ஆசையொடு கோபமில்லை
ஓமென்ற வாசிதனை யடைப்பதில்லை
　　ஓங்கார மாய்நிற்ப ததுவேநாட்டம். (6)

நாட்டமென்ற காமமொடு கோபம்லோபம்
　　நன்மையில்லா ஆசையெனும் பாசம்பாசம்
தேட்டமென்ற அறுபத்து நாலுயோகம்
　　திறமான தர்மமொடு அதர்மமில்லை
மேட்டிதவ யோகசிவ பூசையில்லை
　　மேன்மையாம் புராணங்கள் வேதமில்லை
வாட்டமிலாப் பிர்மமதை மனதுட்கொண்டு
　　வளமாக நிலைநிற்ப ததுவேநாட்டம். (7)

அதுவென்ற பிரமமதை அறிந்துகாணே
அப்பனே நாசிநுனி தன்னிலேதான்
கெதியாம்நூற் றிருபத்தெண் ணூறலவாசி
கேசரத்தி லமருவதே பிரமமென்றும்
விதியாக ரேசகபூ ரகமாய்நின்று
விள்ளுதடா பிரமம்நான் பிரமமென்று
குதியான வாசிபனி ரண்டைப்பற்றிக்
கூர்மையுடன் தானிருப்ப ததுவேபிர்மம். (8)

பிரமமென்று எண்ணிநீ நிலையில்நிற்கப்
பிசகாமல் குருவினுப தேசம்வேணும்
தருமமென்று பனிரண்டு ஆண்டுதொண்டு
தான்செய்தார் குருவுமுப தேசஞ்செய்வார்
வருமமென்று ஜனகரேநீர் கேட்டதாலே
வழுத்தினே னுபதேச மார்க்கந்தன்னைக்
கருமமென்று நீயெண்ணி வெளிவிட்டாக்காற்
கட்டாகச் சாபமது இடுவோம்பாரே. (9)

பாரப்பா முன்சொன்ன விபரம்போலே
பதிவாக நின்றாக்காற் பிரமமாச்சு
நேரப்பா நின்றிலங்கும் ஜடங்களெல்லாம்
நீங்காமல் பார்வைக்குப் பூதமாச்சு
சாரப்பா பூதத்தை ஏவல்வாங்கும்
தருவான ஆதிகுரு தாளைப்பற்றிக்
காரப்பா மனதொடுங்கி நிலையில்நின்றால்
கண்காணப் பரவெளியிற் கலப்பாய்தானே. (10)

தானென்ற சுழிமுனையின் சோதியைத்தான்
தன்மையுடன் சொல்லுகிறேன் மைந்தாகேளு
கோனென்ற ஆதாரம் மேலாதாரம்
கூர்மையுடன் ஆரறிவார் உலகமாந்தர்
சானென்ற தன்புலனை யொடுக்கிமைந்தா
சரியாகப் புருவநடு வெளியிலேதான்
நானென்ற உச்சியுண் ணாக்கின்மேலே
நன்றாகப் பார்த்துநீ பூசைபண்ணே. (11)

பண்ணப்பா ஓம்நமசி வாயாவென்று
பதிவாக நிலைநிறுத்திப் பூசைசெய்தால்
விண்ணப்பா நிறைந்ததொரு ஆதிசோதி
விளங்குமடா கண்டுநீ பூசைசெய்தால்
கண்ணப்பா சாயூக்ஷ பதவிபெற்றுக்
கருவான பிறப்பிறப் பற்றுநீயும்
உண்ணப்பா உள்நாக்கின் வெளியில்நிற்க
உகந்துபத்மா சனத்தின்மேற் பூசைசெய்யே. (12)

செய்யப்பா அருவுருவில் லாதசோதி
சின்மயமா யுந்தனையு மிழுத்துக்கொண்டு
கையப்பா அமுதமதை ஊட்டுவிக்கும்
கருணையுடன் பெரும்பாழ்தன் வெளியிலேதான்
செய்யப்பா எண்பத்து நான்குலெட்சம்
ஜீவபே தங்களிலே தானாய்நின்று
மெய்யப்பா ஆட்டுவிக்கும் சிவத்தினோடே
மேன்மையுடன் தான்கலந்து இருப்பாய்தானே. (13)

மவுனபூசை.

தானேதான் தானவனாய் நிற்பதற்குத்
தன்மையுட னின்னமொரு சூக்ஷங்கேளு
கோனேதான் மவுனமதின் பூசைசெய்யக்
குறிப்புடனே சொல்லுகிறேன் கூர்ந்துநீயும்
தானேதான் பிறரறியாத் தலத்திருந்து
தன்னிடது கரத்தினில்வி பூதிவைத்து
தேனேதான் கற்பூர மேற்றிவைத்துத்
தீபமதை மகிழ்ச்சியுடன் நன்றாய்ப்பாரே. (14)

பாரப்பா தீபமதை நன்றாய்ப்பார்த்துப்
பத்தியுடன் பூதிதூ ளிதமாய்ப்பூசி
நேரப்பா வடகிழக்கு முகமாய்க்கொண்டு
நீமகனே முன்போலப் பூதிவைத்து
காரப்பா கருணையுடன் வலதுகையிற்
கசடறவே ருத்ராக்ஷ மணியைவாங்கிச்
சேரப்பா கற்பூர தீபமேற்றித்
திருவான வாசியைத்தான் மேலேநோக்கே. (15)

நோக்கியே பார்க்கமந் திரத்தைக்கேளு
நுண்மைஓம் றீங்றீங்றீங் சிவசிவவென்று
வாக்கியம்நா ளொன்றுக்கு நூற்றியெட்டு
வகையாகச் செபித்துநீ வாசிபார்த்தால்
பாக்கியமாய்த் திங்களொடு மூன்றுக்குள்ளாய்ப்
பஞ்சவடி வானவள்தன் செயலைக்காண்பாய்
தேக்கியமாய்க் காடுமலை அலையவேண்டாம்
திருவான தேகமதின் சுழியில்நோக்கே. (16)

நாற்பத்தி முக்கோணபூசை.

நோக்கப்பா நோக்குதற்கு இன்னுங்கேளு
நுண்ணறிவைத் தன்னிடத்தில் நிலைநிறுத்தித்
தாக்கப்பா எட்டெரெண்டும் ஒன்றாய்க்கூட்டித்
தன்மையுடன் தானேதச் சோதியாகும்
வாக்கப்பா எட்டிரெண்டும் கூடியல்லோ
வளமான திறவுகோ லாச்சுதப்பா
தேக்கப்பா அக்கோலாற் றிறந்துகொண்டால்
சின்மயமாஞ் சோதிதனைக் காணலாமே. (17)

காணவே சின்மயமாய் நின்றவாலை
கனியாநீ மனதறிவின் கனிவினாலே
பூணவே வாசியினாற் கருவைப்பற்றிப்
புகழ்ந்துநீ நிலையறிந்து பாணங்கொள்ளு
தோணவே அறுசமையும் நிலைதப்பாது
சொல்லவொண்ணு அடிமூலங் கணேசன்சத்தி
காணவே அடிமூலம் ஆதியந்தம்
கண்ணறிந்து சிறிங்கென்று ஓதிடாயே. (18)

ஓதியதோர் நாழிகையிற் புலத்தியாகேள்
ஓங்கார விஞ்சையவள் நவகோணத்தில்
ஆதியந்த மில்லாத ரூபத்தோடே
அண்டசரா சரமெங்கும் நிறைந்துநின்று
சோதிமய மாகவேதான் நடனஞ்செய்வாள்
சொல்லவொண்ணு நடனமதைத் தியானஞ்செய்து
ஆதியுடன் வாழ்வதற்கு மவுனத்தாயை
அப்பனே மனதறிவால் மதிக்கண்ணெண்ணே. (19)

கண்ணான கண்மணியே ரூபாரூபி
கண்ணிறைந்த கமலித்திரி சூலிவாமி
பெண்ணான பூரணமே கமலத்தாயே
பிரபலமாங் கண்மணியே அருளுமைத்தாயே
ஒண்ணான பூரணமா யெந்நாளுந்தான்
ஓமென்ற மூலமந்த்ர சத்திமாயை
விண்ணான விண்ணிறைந்த ரூபாரூபி
வேதாந்த தோத்திரமாய் விளங்குந்தாயே. (20)

விளங்கிநின்ற மோனமந்த்ர விவேகத்தாயே
வெற்றிதரும் சமர்முனையின் ரூபாரூபி
முழங்கிநின்ற நவகோணத் தமர்ந்தரூபி
முத்திதரும் மூலமந்த்ர சத்திமாயை
தலங்குவிந்த தடமதிமேல நின்றதாயே
சத்தியமாய் நின்றசிவ சத்திதேவி
கலங்கமிலா ஆதியந்த வடிவுமாகிக்
கண்ணின்மணி மணியாகி நின்றமாதே. (21)

மாதென்று எண்ணிநீ தியானஞ்செய்து
மகிழ்ச்சியுடன் விள்ளுகிறேன் மைந்தாகேளு
வாதென்ற உள்ளமதைத் திசமுமைந்தா
வழுவாம லுருமைவைத்துப் பார்த்துக்கொண்டு
தீதில்லாப் பரஞ்சோதி ஆத்தாள்தன்னைத்
திடமறிந்து அறிவதனாற் கண்டுகொண்டால்
வாதென்ற கூற்றுவனும் ஓடிப்போவான்
வடிவான சடாக்ஷரத்தின் விஞ்சைகேளே. (22)

சடாக்ஷர விஞ்சை.

கேளப்பா ஜனகமகா முனியேஅப்பா
கிருபையுடன் சடாக்ஷரத்தின் பெருமைதன்னை
ஆளப்பா ஆரறிவார் உலகமாந்தர்
அப்பனே சடாக்ஷரமா விஞ்சைசொல்வேன்
காளப்பா மூலமடா வடிவுமாசசு
கருத்தாய்ப்பார் றீங்காரம் வேலுமாச்சு
நாளப்பா வடிவேலர் மந்த்ரந்தன்னை
நாட்டமுடன் ஓம்றீங்கு என்றுஊன்னே, (23)

எண்ணியே பூரணமாய் நின்றுகொண்டு
ஏகமாங் கேசரத்தில் வாசமாகி
நண்ணியே ஓம்றீங் வசிவசியென்று
நாட்டமுடன் தானோத வசியமாகும்
வண்ணமும் றீங்நசி நசியேயென்றால்
வந்ததொரு பீடையெல்லாம் மாண்டுபோகும்
திண்ணமும் றீங்மசி மசியேயென்றால்
தீராத விஷமெல்லாந் தீர்ந்துபோமே. (24)

போமப்பா சடாக்ஷரத்தின் பெருமையாலே
புத்தியுடன் விந்துவட்டம் நன்றாய்க்கீறி
ஆமப்பா நால்மூலை சூலம்போட்டு
அச்சூல முனையிலோங் காரம்நாட்டித்
தாமப்பா வட்டத்தி னுள்ளேநன்றாய்த்
தன்மையுடன் ஓங்காரம் மூன்றும்நாட்டி
நாமப்பா மேலோங்கா ரத்தில்நன்றாய்
நன்மையாம் மகாரமதை நாட்டுகொட்டே. (25)

நாட்டப்பா நடுவான பிரணவத்தில்
நலமாகச் சிகாரமதை நாட்டிப்பின்னும்
தேட்டப்பா கீழான பிரணவத்தில்
திடமாக நகாரமதை நன்றாய்ப்பூட்டி
மாட்டப்பா சக்கரத்தை அபிஷேகித்து
வணக்கமுடன் மசிநசி நசிமசியென்று
சாட்டப்பா உருபதினா யிரத்தெட்டு
தன்மையுடன் தான்செபிக்கச் சித்தியாச்சே. (26)

ஆச்சப்பா உருபதினா யிரத்தெட்டாகில்
அப்பனே சக்கரமும் உயிராய்ப்போச்சு
மூச்சப்பா பேய்கணங்க ளெல்லாமோடும்
முடுகிநின்ற விஷமெல்லா மலறியோடும்
போச்சப்பா மெய்யதிலே தியானஞ்செய்து
பூதியைநீ மானிடர்க்குப் புரோக்ஷித்தாக்கால்
பாச்சப்பா பாய்ந்துநின்ற வியாதியெல்லாம்
பறிவாக அலறிக்கொண் டோடுந்தானே. (27)

ஓடுவது மந்திரத்தின் பெருமைதன்னால்
உத்தமனே இதையறிந்து மவுனமாகத்
தேடுவது பரஞ்சோதி பாதந்தன்னைத்
தினந்தினமுந் தொழுதிறைஞ்சி வணங்கிநில்லு
கூடுவது பெரியோர்கள் ஜனத்தைப்பற்றிக்
குணங்கெட்ட துரோகிகளுக் கீயொண்ணாது
சாடுவது உன்றனக்குத் தொண்டுசெய்யச்
சண்டாளர் சார்ந்திடுவார் யீயாதப்பா. (28)

ஈயாதே இந்நூலை மற்றோர்கட்கு
இதுபோலே நூலதுவுங் கிடைக்காதப்பா
சாயாதே சாகாக்கால் வேகாச்சென்னி
தானறிந்த பேர்க்குரைப்பாய் தரணிமீது
வாயாதே இந்நூல்போல் மற்றநூல்தான்
வழுத்தவில்லை எந்நூலும் இதற்கீடாமோ
தோயாதே பராபரன்று னெனக்குச்சொன்ன
தொடுகுறிபோ லுன்றனக்கு உரைத்தேன்பாரே. (29)

உரைத்தேன்நான் ஞானமுப்பத் திரண்டிற்சொன்ன
உள்ளபடி நடந்தாக்கால் அவனேபிர்மம்
மறைத்தேன்நான் சண்டாளர்க் கிந்நூலை
மகிழ்ச்சியுடன் மற்றவர்க்கு யீயொண்ணாது
கரைத்தேன்நான் இந்நூலை மனதுட்கொண்டு
கர்மவினை யோடிடவே கடத்தில்நின்று
உரைத்தேன்நான் ஓங்காரச் சுழியாமப்பா
உத்தமனே இதையறிந்து சுழியில்நில்லே. (30)

நில்லடா சுழிதனிலே நினைவாய்நின்று
நிசமான பூரணத்தின் நிலைகண்டோர்க்கு
ஒல்லடா சதநிட்சை கடாக்ஷம்பண்ணி
உத்தமனே பூரணமு மவனுக்கீய்ந்து
செல்லடா சாத்திரஞ்சூத் திரமுமீய்ந்து
தெளிவான மந்திரத்தின் சூக்ஷங்காட்டி
சொல்லடா ஆதாரம் ஆறுதாரம்
சொரூபமென்ற அனுக்கிரக வுண்மைசொல்லே. (31)

சொல்லான சொல்லதுவும் ஹரிஓம்என்று
சொகுசாகச் சொல்லையிலே தொட்டுக்காட்டு
நல்லாய்த்தான் தெரியாட்டாற் கையைக்கொண்டு
நலமுள்ள தீர்த்தந்தாற் குணமாய்க்காட்டி
சொல்லான சொல்லதுவும் அம்பாற்பூட்டிச்
சுகமுடனே தெரியாட்டாற் செவியில்காட்டி
வில்லாத பரம்பொருளை விண்டுகாட்டும்
வேதாந்தப் பரம்பொருளின் பாதம்முற்றே. (32)

கலைக்கோட்டார் பிரமதீட்சை ஞானம் ௩௨.

முற்றிற்று.

பழனிமலையில் வசிக்கும் ஸ்ரீ கைலாசதெண்டாயுதபாணி ரிஷீஸ்வர சுவாமியவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குமரன் றுணை.

137-வது:

திருமூலர் திருவாய்மலர்ந்தருளிய

குளிகை நூல்.

தம்பனந் தன்னைத் தான்கட்டும் வாறுகேள்
நம்பத் திரணம் நற்று ளகமொடு
கொம்பச் சிமிழிக் கிழங்கின் சாற்றினால்
வெம்பெழு சாமம் விட்டரை சாறே. (1)

சாத்தி லரைத்திடு சாமமே ழானபின்
போத்திய வங்கமேல் போடுபுட மொன்று
மாத்தி யரைத்து வங்கரசி தத்தில்
ஏத்தி யெடுக்க யிறந்தது ரசிதமே. (2)

ரசிதத்தைச் சூதன்மேல் நாட்டி யரைத்திடு
கசிவத்து வெண்ணெய்போல் கண்டு மயனமாம்
ஓசிதத்தின் வெண்ணெய்யை ஒக்கஉ ருட்டிடு
மகிமித்த நீரில் மறுகநீ போட்டிடே. (3)

போட்டே யெடுத்துப் புதைமத்தங் காயிலே
ஆட்டே புடந்தான் அப்பாபன் னொன்று
கூட்டிய ஆரை யிலையிற் பொதிந்ததை
நீட்டு புடந்தான் நிரைபதி னொன்றே. (4)

பதினோர் புடந்தான் பாங்காகத் தீர்ந்தபின்
மதியே யிதுவென வளமாங் குளிகையை
அதீதமாஞ் சாரணை அப்பனே பண்ணிடு
கெதியான யோகத்திற் கிட்டுஞ்ச மாதியே. (5)

சமாதி யிருக்கத் தன்வாயில் வைத்திடு
அமாதிய மூலம் அடியிற் பனிச்செனும்
வமாதி யறுதலம் வளமாகக் கண்டிடு
சமாதி குளிகையைத் தான்விட்டேவ றுதே. (6)

ஏறுது யோகம் யெழும்பாது வர்ணம்
பாராது ஆறும் பட்டப்பக லாகா
தேறுது சித்தியு முத்தியும் வாராது
வேறுகப் போகும் மெய்யா மறிவே. (7)

வசிய குளிகை.

மத்திய தங்கம் வனமா யோரிடை
ஒத்திய சூதம் ஒன்றரை கூட்டி
உத்தி யரைக்க உருண்டுமணி யாகும்
அத்தர மணியை அடவா யுருட்டிடே. (8)

உருட்டிடு முன்போ லுறப்புடம் போடு
அருட்டிக் குதித்து ஆகும் வசியமாம்
உருட்டுக்கு லோகத்தில் உச்சியி லேத்திட
மருட்டுக்கு நல்ல வசியம தாமே. (9)

வசியம் பிறக்கும் மகத்துவங் கேளாய்
உசிய சிவமணி ஒக்கப்பன் றாறும்
அசியவே வசியென் றனுதினம் நாடினால்
கசியவே காமியங் கைவந்த சித்தியே. (10)

சித்தி கொடுக்குஞ் சிவன்வெளி மூலம்
புத்தி கொடுக்கும் புகழாகுங் கால்தலை
நத்திக் கொடுக்கும் ஞானவ னாகிடும்
வெத்தி கொடுக்கும் மெய்யாங் குளிகையே. (11)

சலத்தம்பம்.

பார்சலத் தம்பம் பகர்ந்த குளிகையை
நேர்நல கஞ்சா நிறைசா திக்காய்
ஓர்சேங் கொட்டை உள்ளே பருப்புடன்
கார்கரு மத்தின் காட்டிய வித்தே. (12)

வித்து அழுஞ்சி விபரமோ ரஞ்சும்
பத்தியொவ் வொன்றும் பாங்கா யெடுத்திடு
அத்துளே தானே அதை வெவ்வே ருக்கிடப்
புத்தியாய்த் தயிலம் புக்கிட்டு வைத்திடே. (13)

வைத்ததயி லத்தை வகையாய் நிறுத்திடு
பத்தியே ஒன்ருய் பாங்காகச் சேர்த்திடு

வெத்திக்க வேபுடம் மேலாக மண்டலம்
சித்திக்கப் பாங்காம் சிறந்த குளிகையே. (14)

குளிகைக்கு மேற்குணம் குமட்டி புதைத்திடு
அளிகைக்கு மேலாம் அப்பா கடிகைதான்
மளிகைக்கு நாழி வகைமுப் பதுபார்
பளிகைக்குக் குளிகை பணவிடை தின்றிடே. (15)

தின்றிடத் தம்பனந் தீர்க்கும் முறைகேள்
உன்றிட முப்பது உறவு கடிகையாம்
பொன்றிடக் குளிகை பொறியை யடக்கிட
ஒன்றிட னூறு ஓர்பெணுஞ் சோருமே. (16)

சோருமொன் றல்ல சொரூபம் சொலக்கேள்
ஓரும் வசியம் உடன்கக்கத் தம்பமும்
பேரும்வைத் தம்பம் பேரான அஞ்சனம்
ஆருமறியா ரறிந்துகொள் ளுண்மையே. (17)

உண்மையே சொன்னேம் உடனேகப் பார்த்திடு
தன்மையே பெரியோர் தான்கண்ட கூறிது
நன்மைமா சித்தியும் நானே சதாசிவம்
உண்மையா யோகிக் குடன்வாயில் வைப்பதே. (18)

வைத்த குளிகை மார்க்கங்கா லாங்கி
ஒத்த செபஞ்செய ஒருகோடி சித்தியாம்
அத்த வசியம் அதுக்கிடு தம்பனம்
பைத்த குளிகை பட்டப்பக லாமே. (I9)

பகலாமோ அய்யா பாவிப்பாய் நந்தி
அகலாத பூரணம் அப்பாவா வென்றிடும்]
ஒகலாத மூட்டு ஒருநா ழிகைவிடா
வகலாதே முத்தி வழியாகி வந்ததே. (20)

அடுக்காது குளிகை யதுபதி னறுடன்
முடுக்காகக் கோர்த்து முடிச்சிட்டுள் வைத்து
அடுக்காக வேவசி வாவென்று செப்பிடில்
நடுக்காகக் காமியம் நாட்டு வசியமே, (21)

வசியம் பிறக்கும் வசிவா வென்றிடில்
வசியம் பிறக்கும் வன்சேர் குளிகையால்
வசியம் பிறக்கும் மகாமந்தி ரத்திலே
வசியம் பிறக்கும் மகத்தான மூலமே. (22)

மூல மிருந்த முறைகேளு அண்டம்போல்
கோல நடுவே குலாவிய முக்கோணம்
ஆலய மாக அமிர்ந்த திருக்கூத்து
மூலக் குளிகை முன்னாகக் கேளுமே. (23)

கேளுமே சிரா கெடியாக வோரிடை
ஆளுமே சூதம் அப்பனே மூவிடை
தாளுமே நாலுந் தனியொக்க அரைத்து
ஆளுமே வெண்ணெய்போ லப்பா உருட்டிடே. (24)

உருட்டியே தண்ணியில் ஊக்கவே மூன்றுநாள்
மருட்டியே போட்டு வளமாய்ப் புடஞ்செய்து
கருட்டியே நன்மணி கனமாய்ச் செபஞ்செய்ய
அருட்டியே கோடி அம்பல சித்தியே. (25)

சித்தியொன் றல்ல சேர்கா மியமீயும்
வெத்தியொன் றல்ல வேதாந்தங் கண்டிடும்
பத்தியொன் றல்ல பராபர முன்னிற்பான்
அத்தியொன் றல்ல அருள்வாலை சொன்னதே. (26)

சொன்னாளே ஆத்தாள் சுகமாங் குளிகைதான்
வென்னாலே மோகனம் விரைந்த குளிகைகேள்
வண்ணா னறியாத மகாசத்தி பூநீரில்
அண்ணாவி சொன்னா ரருள்வாத மானதே. (27)

ஆனதே பூநீரி லப்பா துரிசியைப்
போனதே குருவாய்ப் பொருந்திடுந் தம்பனம்
ஆனதே மோகனம் அப்மூன்று லோகத்தில்
நானதே பார்த்து நடுக்கண்ட வாறதே. (28)

வானதே குச்சார மணியா யுருகிடும்
தானதே சூதம் சாகாமற் செத்திடும்

ஊனதே கண்டங் குறவாய்க் குளிகைசெய்
நானதே யோகத்தில் நடுவாயி விட்டதே. (29)

இட்ட குளிகையை யேமம் நடுக்கூட்டி
தொட்ட குளிகையைச் சூட்டி யுருக்கிடு
பட்ட குளிகை பதையாமல் மாண்டிடும்
ஓட்ட உருக்க ஒருகோடி வேதையே. (30)

வேதை பிறந்தது மெய்யாந் துரிசியில்
வேதை பிறந்தது மெய்யான விந்துவில்
வேதை பிறந்தது விளங்கிய வீரத்தில்
வேதை பிறந்த விதமறி யாரே. (31)

அறியா ரறியா ரறிவுள்ளோர் காண்பது
சிறியா ரறியார் சித்துக்கு வித்துகேள்
முறியாச் சூதமும் முன்னே குளிகையாய்ப்
பிறியா மகாசித்தி பேராகக் கண்டதே. (32)

பேராகு மூலி பெலத்த மகாசித்தி
ஆராலுங் காண அரிது யெளிதோ
வாரான மூலி மகத்துவ மெத்துண்டு
ஊராலும் விட்ட குறையால் முடிந்ததே. (33)

முடிந்தது மூலி முப்பத்தி ரெண்டுண்டு
கடிந்தது வெள்ளை கருங்கத்தி வெள்க்கொட்டை
மடிந்தது கலனுக்குள் கஞ்சங் கொடுவேலி
அடிந்தது வெண்துத்தி ஆகின்ற மூலியே. (34)

மூலி பரசு முடுகிய செந்திரா
ஞாலி மகாசித்தி நடுக்கொட்டக் கிரந்தியும்
பாலி வித்துடன் பட்டணஞ் சேர்மூலி
கோலி நடுவர் கூர்காணுச் சோதியே. (35)

சோதியாம் வல்லி சுகமான வெள்தொட்டி
நீதி பரத்தி நெடுமூக்கி சங்கரி
பாதி பரிசி பட்டப் பகல்போல்
ஆதி பூந்தொட்டி அடுக்கிய மூலியே. (36)

மூலிகை கண்டால் மூவுல காளலாம்
காலிகை கண்டால் கடிய பிறப்பறும்
ஞாலிகை கண்டால் ஞானவழி கூடும்
பாலிகை கண்டால் பருவாத சித்தியே. (37)

சித்தியொன் றல்ல சொர்ணமர மாகும்
வெத்தியொன் றல்ல வெட்டவெளி காணும்
பத்தியொன் றல்ல பராபரை சொன்னது
அத்தியொன் றல்ல ஆதியு மந்தமே. (38)

அந்தத்தைப் பாரும் அனேகவிதஞ் சித்தி
சந்தத்தைப் பாருந் தானே பிறப்பறும்
சொந்தத்தைப் பாருஞ் சோதிமய மாகும்
முந்தத்தைப் பாரு முப்பாழு மூலமே. (39)

மூலங் கடந்து முனைமூக்கிற் சார்ந்தது
ஞாலங் கடந்து நடுவணை பாரு
பாலங் கடந்து பருமணி கட்டிடும்
மூலங் கடந்து முன்னின்று பாய்ந்ததே. (50)

பாய்ந்தானே ஆத்தாள் பட்டப் பகற்போல்
வாய்ந்தானே பாரு மனோமணி தன்பதம்
சேர்ந்தாளே ஆத்தாள் செல்கின்ற மூலத்தில்
காய்ந்தானே யேட்டின் கருணையைக் கண்டிடே. (41)

கண்டிடு ஆத்தாளைக் கனபூசை வஸ்துவால்
ஒண்டிடு வாவென் றுறுதியாய்ப் பார்த்திடு
தொண்டிட்டுக் கொள்ளத் துலைபாய்ப் பிறவிபோம்
மண்டிட்டு வாசியை வைத்துநீ பார்த்திடே. (42)

வைத்த குளிகைக்கு மாரண மின்னங்கேள்
பைத்த குளிகையை பதையாம லெட்டியில்
ஒத்த குளிகையை ஒருநாள் புரத்தே
அத்த குளிகை யதுமாரண மானதே. (43)

மாரண முச்சா டனவகை சேளுங்கோ
காரண வேம்பு கண்டபுள் ளடியும்

ஆரண மாக அமத்திக் கடைந்ததே
வாரண வெண்ணெய் வருநவ நீதமே. (44)

நவநீதந் தன்னை நன்று யெடுத்திட்டு
பவநீத மாகவே பார்த்துப் பழத்தினில்
அவநீதி பத்துக்கு ஐயிரண் டொன்றிட்டு
சவநீதி முத்து தங்கும் குளிகையே. (45)

குளிகை யெடுத்துக் குமட்டு வலக்கரம்
அளிகை நசியென் றப்பா செபித்திடு
மளிகை உச்சாடனம் வந்து தமப்படும்
அளிகைய வாசி அப்பா வசியமே. (46)

வசியம் பிறக்கும் வசிய நமவெனில்
வசியம் பிறக்கும் மநய வசியெனில்
வசியம் பிறக்கும் வாலையுட கூரில்
வசியம் பிறந்த வகையறி யாரே. (47)

வகையுடன் மோசனம் தம்பமுச் சாடனம்
அகையுடன் வசியம் ஆனதோர் மாரணம்
தகையுடன் போதனம தானு கிருஷ்ணம்
வகையுடன் கைவர மாயிலைப் பூசியே. (48)

பூசிக்கப் பூசிக்கப் போட்ட குளிகையாம்
பூசிக்கப் பூசிக்கப் பொன்மலை யாகும்
பூசிக்கப் பூசிக்கப் புகட்டுவாள் ஞானத்தை
பூசிக்கப் பூசிக்கப் புருவமையங் காணுமே. (49)

காணுமே மூக்கால் கடிதான மந்திரம்
காணுமே மூலம் கண்ட யெழுத்துடன்
காணுமே யெட்டின் கரையத்த பூரணம்
காணுமே நாலும் கரைகண்ட வாறே. (50)

பேறான யோகக் குளிகைக்கு மந்திரம்
பேறு மெழுத்து பெவ்வாதி அவ்வுடன்
கூறான சௌவுக் குறியாங் கிலியும்
வேறான அய்யும் வெட்டவெளி மூலமே. (51)

திருமூலர் குளிகை ருயு.

முற்றிற்று.

உ

தேவிஸஹாயம்.

138-வது:

அழுகணிச் சித்தர் திருவாய்மலர்ந்தருளிய

ஞான சூஸ்திரம். ௨௩.

தும்பிமுகன் குண்டலித்தா யருளினாலே
சொல்லுகிறேன் ஞானமதின் சூட்சந்தன்னை
அம்பரமே வெளியாச்சு வொளியுமாச்சு
ஆதியாய் நடுவாச்சு முடியுமாச்சு
தம்பரமே யிருந்தகுரு மூலந்தன்னைத்
தானறிவ தறிவாளி யறிவானப்பா
நம்பினவர் வாசியென்ற குதிரையேறி
நடத்தினார் பன்னிரண்டு காதந்தானே. (1)

பன்னிரண்டு காதவழி சென்றவாசி
பழையபடி மீளவென்றாற் கடினமெத்த
உன்னியே நடத்துகின்ற வீரனுக்கு
ஒருகாசு சம்பளமுங் கிடையாதப்பா
நன்றீந்தச் சேவகமே பெரிதென்றெண்ணி
நான்வருவேன் நான்வருவே னென்கிறார்கள்
சின்னநெருப் பாற்தாண்டப் பரிநடாத்துஞ்
சேவகனுக் கெப்புவியுஞ் சொந்தமாமே. (2)

சொந்தமெனுங் காணியா ளனுக்குப்பங்கு
சும்மாவா கொடுப்பார்கள் கொடுக்கமாட்டார்
மந்தனென்றுந் தீவிரனென் றிரண்டுபேர்கள்
மற்றுமதிற் றீவிரனே முதற்பங்காளி
முந்துமதி தீவிரனுக் கிரண்டுபங்கு
முந்தாததீ விரனுக்கொன் றரைப்பங்காகும்
பிந்தியமந் தனுக்கரைப்பங் கென்றுசொல்லிப்
பேசினா ரொத்திருந்தார் பிரிந்திட்டாரே. (3)

பிரிந்திட்ட பேரிலதி தீவிரர்க்குப்
பிங்கலையை யிடகலையோ டிணைக்கச்சொந்தம்
பரிந்திட்ட தீவிரர்க்கோ கலையிரண்டாய்ப்
பார்த்திடந்தான் சொந்தம்பின் மந்தனுக்கோ
அறிந்திட்டோ ரறியாதோர் பேசக்கேட்ப
ரதுமட்டுஞ் சொந்தமென்ப ராகையாலே
தெரிந்திட்டே னச்சமுற்றப் பரியிலேறித்
தேடினேன் செகசிவ பரத்தைத்தானே. (4)

தானேதா னாகவென்றால் வாசிபற்றி
தற்பரத்தை யெந்நாளுஞ் சாரவேண்டும்
கோனான குருபதத்தை யடுக்கவேண்டுங்
குறியான குறியறிந்து கொள்ளவேண்டும்
ஆனாலு மென்மகனே அறிவுள்ளோனே
அம்மையெனுங் குண்டலித்தா யருளினாலே
மானாகி நடுவணையில் மனதைவைத்து
மாறாம லனுதினமும் பார்த்திடாயே. (5)

பார்த்திடுவாய்ச் சந்திரனை ரவியிற்றூக்கிப்
பாலகனே சுழிமுனையில் நிறுத்திக்கொண்டு
காத்திடவே கும்பகத்தி லிருந்தால்மைந்தா
கனலெழுந்து மேலேறிக் கபாலமுட்டி
வேர்த்திடும்நீ ரதுவல்லோ வமுதமாகும்
மெய்யான ஊசிநீ ரதனிலென்றும்
கோர்த்திட்டார் கோடானு கோடிசித்தர்
குறிப்பறிந்து சுழினையிலே கூடுவாயே. (6)

கூடியே பூரகமுப் பத்திரண்டு
குறியான கும்பகமு மிதற்குரெட்டி
நாடியே ரேசகந்தான் பதினாறாகும்
நலமான மாத்திரைகள் தெரியச்சொன்னேன்
வாடிடா நங்வங்வய நமசியென்று
மாறியொரு தரஞ்சொலமாத் திரையொன்றாகும்
தேடியிந்தப் படியிரண்டு தரமேசெய்யத்
தேர்ந்துமனக் கண்ணாலே தெரிந்தனுனே. (7)

ஊணியே கண்மூடி யிருக்கும்போது
உன்னுள்ளே காணுமங்கே நந்திமூலம்
தோணியே மந்திரஞ்செய் மாத்திரைக்கு
சொல்லும்அங் அங்யநம சிவாவென்றேத்தி
ஆணியே நாலுதரங் கும்பித்தாக்கால்
அப்பொழுதே பிங்கலையில் ரேசகஞ்செய்
பாணியே ஓம்சிங் நவாயநமாவென்று
பற்றினல் ரவிமதியு மொன்ருக்தானே. (8)

தானேநீ யொருதரந்தான் ரேசகஞ்செய்
தப்பாது யோகத்துக் கிதுவேயாதி
வானேநீ யிப்படிசோ டசமுந்தீர்ந்தால்
வளமான நந்திகொலு பவர்ணைதொட்டு
கோனேயம் மாவாசை வரைக்கும்பாரு
குணமான மீனமே சமதிரண்டில்
மானேநீ யமாவாசை வரைக்குந்தீர்ந்தால்
மகனேகேள் மதிதேய்ந்து போகும்பாரே. (9)

பாரேநீ சோடசமுந் தீர்ந்தபேர்க்குப்
பரிவுடனே சொல்லிவிட்டே னெவருஞ்சொல்லார்
சாரேநீ யிதுவல்லோ ராஜயோகம்
தவருமல் முறையாக யெவருஞ்சொல்லார்
காரேயின் னூல்தனக்கென் னூலொவ்வாது
கணக்காகச் சொன்னேனே யோகமார்க்கம்
தேரேநீ மாத்திரையீ ரிரண்டுந்தீர்ந்து
திடமுடனே மதிப்பாதி புக்கிப்பாரே. (10)

பாரேநீ மாத்திரைநூற் றிருபத்தெட்டும்
பக்குவமாய்ப் பின்னுமறு பத்தினாலு
தேறேநீ பிரதமைதா னறுபானாலுந்
தீர்ந்துபிர தமையதனிற் சாதகஞ்செய்
நேரேநீ சதுர்த்திவரை சொல்லக்கேளு
நிகழ்த்துவே னென்போல வெவருஞ்சொல்லார்
மாறேநீ மாத்திரையின் குறியைச்சொன்னேன்
மறவாம லமாவாசை வரைக்குமென்றே. (11)

ஊன்றடா பூர்வபட்ச பிரதமைமட்
டுத்தமாத் திரைநாத்தி யிருபத்தெட்டும்
ஊன்றடா மதியையுண்டு விழுங்குமார்க்கம்
உத்தமனே விபரமதாய்ச் சொல்லிவிட்டேன்
ஊன்றடா பௌர்ணமியைத் தான்றொடங்கி
உத்தமமா மமாவாசை மறுநாள்மட்டும்
ஊன்றடா மற்றதெல்லாம் யோகமாமோ
உயர்மதிபோ விடகலையுங் குறைந்துபோமே. (12)

குறையுமிட கலைவானின் மதியம்போலக்
குறைந்திதமாய்ப் பின்கலையிற் கூடிப்போச்சு
குறையாத பதினாறு மாதமப்பா
கூடியே யிவ்வண்ணம் யோகம்பாரு
குறையாத சந்திரகலை தேய்ந்துபோச்சு
குணமிருந்த நந்தியைப்போய்க் கூடலாச்சு
குறையாத புரியெட்ட சரீரமையா
கூகூகூ ஓம்முடிந்த துண்மைதானே. (13)

தானேதா னின்னமொன்று சொல்லக்கேளு
சரியைமுதற் கிரியையொடு யோகமார்க்கம்
நானேதான் சொல்லிவிட்டேன் வெளியதாக
நற்றவத்தாற் சூடெழுந்து கனலுண்டானால்
ஞான ரகசியந்தான் மைந்தாமைந்தா
சுகந்தமுள்ள வில்வாதித் தைலமப்பா
பானுரு மாலுமைக்குச் சொன்னமார்க்கம்
பக்குவமாய் முழுகுபரி மளிக்கும்பாரே. (14)

பரிமளிக்கும் வில்வாதித் தயிலந்தன்னைப்
பண்புடனே புகன்றிடக்கேள் பாகமாக
சரியான பாகமிந்தத் தயிலமப்பா
சாற்றினே னோய்களெல்லா மகன்றுபோகும்
விரிவான தல்லவிதன் மகிமைமெத்த
விபரமுட னேயுரைப்பே னுன்றனக்காய்
அறியாத பேர்களுக்குச் சொல்விடாதே
அப்பனே இதனுடைய சூட்சங்கேளே. (15)

சூட்சமுள்ள வில்வமதின் பழயோமூவேழ்
சுகமாகப் பார்த்தெடுத்து விரைதோல்நீக்கி
காட்சியாய் நல்லசலம் படிமூன்றப்பா
கருத்துடனே பாண்டமதி லூற்றிக்கொண்டு
தாச்சியின்றிப் பழம்போட்டுக் கரைத்துக்காய்ச்சித்
தப்பாமல் வடிசெய்தோர் படியாய்வாங்கி
வாச்சநல் லெண்ணெய்யோர் படியுங்கூட்டி
மைந்தனே வாலுகையி லேற்றிடாயே. (16)

ஏற்றியே தீயெரித்துப் பதமாய்க்காய்ச்சி
இதமுடனே பொங்காம லருகிருந்து
தேற்றமுடன் பக்குவங்கள் பார்த்துப்பார்த்துச்
சீர்தெரிந்து யிரக்கிவைத்துச் சூடுபோக்கி
ஆற்றியே யெடுத்தூத்துப் பீங்கானிற்றான்
அப்பனே சர்க்கரையும் பலமொன்றிட்டு
போற்றியே தேவிபதம் பூசைசெய்து
புகலுவே னின்னமொரு வயனங்கேளே. (17)

வயனமென்ன பீங்கானி லடைத்துக்கொண்டு
வளமான ஆண்டகையைத் தோத்தரித்து
நயமாகச் சிரசிலிட்டு முழுகினாக்கால்
நாடாது கண்ணெரிச்சல் மாறிப்போகும்
சுபமான கைகாலின் காந்தல்தீரும்
சூடகலுங் கண்குளிரும் வெப்பும்போகுஞ்
செயமான தயிலமிதற் கிணையோயில்லைத்
தீவிரம்பார் சூட்சமிது லகுவுதானே. (18)

இலகுவாந் தேகமதற் கொளிவுண்டாகும்
இரத்தவிர்த்தி மிகவுமுண்டா மனலோநீங்கும்
தொகுப்பான மேகமென்ற தெல்லாம்போகும்
சொர்னம்போ லிருக்குமப்பா தேகந்தேகம்
வகுப்பான குட்டம்போம் வெட்டைதீரும்
மாறாத கைகால்கள் குடைச்சல்நீங்கும்
பகுப்பாக நானுரைத்தேன் மைந்தாமைந்தா
பத்தியொடும் புத்தியொடு பரிந்துநில்லே. (19)

நில்லென்ற பத்தியந்தா னெதுவென்றுக்கால்
நிரைதுவரைக் கத்திரிக்காய் முருங்கைப்பிஞ்சு
நல்லதொரு அரைக்கீரை கருணையாகும்
நாரத்தைப் பசும்பயறு அவரைப்பிஞ்சு
மெல்லினமாய்ப் பசுநெய்யுஞ் சேர்த்துக்கொள்ளு
வெண்ணீரில் ஸ்நானஞ்செய் சீயக்காய்தேய்
வல்லமைகள் மிகச்சேரும் பகற்றூங்காதே
வாரமிரு நாள்முழுகி வாழ்குவாயே. (20)

வாழ்கவே சீரகமுங் கிராப்புயேலம்
மைந்தனே கடுக்காயுங் கெருடபச்சை
மீள்கவே வகைக்குயிரு வராகனாகும்
மிக்கபளம் பாசிசிறு கீரையோடு
தாழ்கவே தகரையொடு அகத்திமைந்தா
தாக்கான கொடுப்பையிந்த ஐந்தின்சாறும்
சூழ்கவே வகைக்கரைக்காற் படிசாறுவாங்கி
சுத்தமுடன் முன்மருந்தை யரைத்துச்சேரே. (21)

சேரேநீ யோரண்டத் தெண்ணெயோடு
சிறந்ததொரு வெள்ளாட்டுப் பாலுங்கூட்டி
சாரேநீ படியரைதான் வகைவகைக்குத்
தப்பாம லிதுவெல்லாஞ் சட்டியிட்டுத்
தேறேநீ மெழுகுபதங் காய்ச்சிவாங்கி
தினங்கரண்டி விதமப்பா விரண்டுவேளை
கூறேநீ குடிக்கவுஷ்ண வாய்வுமேகங்
கொடியகெந்த தாளியொடு சுரமும்போமே. (22)

போமேதான் பத்தியந்தான் சொல்லக்கேளு
புத்திரனே யென்மகனே! அருமையாக
நாமேதான் சொல்லுகிறோம் பழஞ்சோற்மோரும்
நல்லெண்ணெய் கடுகுமொச்சை யுழுந்துமாகா
தாமேதான் மீனிறைச்சி கோழியாகும்
தன்மையிலாச் செம்மரியாட் டிறைச்சியாகா
ஆமேதான் மற்றதெல்லாஞ் சேர்த்துக்கொண்டு
அரிவையரின் படுக்கைதள்ளி யறிவாய்வாழே. (23)

அழுகணிச்சித்தர் ஞானசூஸ்திரம் உடு முற்றிற்று.

உ

பரமபதி துணை.

139-வது

அழுகணிச் சித்தர் பாடல்.

கண்ணிகள்.

மூலப் பதியடியோ மூவிரண்டு வீடதிலே
கோலப் பதியடியோ குதர்க்கந் தெருநடுவே
சாலப் பதிதனிலே தனலாய் வளர்ந்தகம்பம்
மேலப் பதிதனிலே—என்கண்ணம்மா
விளையாட்டைப் பாரேனோ. (1)

ஏஞ்சா னுடம்படியோ ஏழிரண்டு வாயலடி
பஞ்சாயக் காரரைவர் பட்டணமுந் தானிரண்டு
அஞ்சாமற் பேசுகிறார் ஆக்கினைக்குத் தான்பயந்து
நெஞ்சாற நில்லாமல்—என்கண்ணம்மா
நிலைகடந்து வாடுறண்டி. (2)

முத்து முகப்படியோ முச்சந்தி வீதியிலே
பத்து இதழ்பரப்பிப் பஞ்சணையின் மேலிருத்தி
அத்தை யடக்கிநிலை யாருமில்லா வேளையிலே
குத்து விளக்கேற்றி—என்கண்ணம்மா
கோலமிட்டுப் பாரேனோ. (3)

சத்துச்சம் பாவரிசிச் சாதஞ்ச மைத்திருக்க
உத்தண்பா யென்றுசொல்லி உழக்கழக்கு நெய்வார்த்து
முத்துப்போ லன்னமிட்டு முப்பழமுஞ் சர்க்கரையும்
தித்திக்குந் தேனமிர்தம்—என்கண்ணம்மா
தின்றுகளைப் பாரேனோ. (4)

பைம்பொற் சிலம்பணிந்து பாடகக்கால் மேற்றாக்கிச்
செம்பொற் கலையுடுத்திச் சேல்விழிக்கு மையெழுதி
அம்பொற் பணிபூண் டறுகோண வீதியிலே
கம்பத்தின் மேலிருந்து—என்கண்ணம்மா
கண்குளிரப் பாரேனோ. (5)

எட்டாப் புரவியடி யீராறு காலடியோ
விட்டாலும் பாரமடி வீதியிலே தான்மறித்து
கட்டக் கயிறெடுத்துக் கலைநாலுஞ் சேர்த்திருக்கி
அட்டாள தேசமெல்லாம்—என்கண்ணம்மா
ஆண்டிருந்தா லாகாதோ. (6)

கொல்ல னுலைபோற் கொதிக்குதடி யென்வயிறு
நில்லென்று சொன்னால் நிலைநிறுத்தக் கூடுதில்லை
நில்லென்று சொல்லியல்லோ நிலைநிறுத்த வல்லார்க்கு
கொல்லென்று வந்தநமன்—என்கண்ணம்மா
குடியோடிப் போகானோ. (7)

ஊத்தைச் சடலமடி உப்பிருந்த பாண்டமடி
மாத்திப் பிறக்க மருந்தெனக்குக் கிட்டுதில்லை
மாத்திப் பிறக்க மருந்தெனக்குக் கிட்டுமென்றால்
ஊத்தைச் சடலம்விட்டு—என்கண்ணம்மா
உன்பாதஞ் சேரேனோ. (8)

வாழைப் பழந்தின்றால் வாய்நோகு மென்றுசொல்லி
தாழைப் பழந்தின்று சாவெனக்கு வந்ததடி
தாழைப் பழத்தைவிட்டுச் சாகாமற் சாகவல்லோ
வாழைப் பழந்தின்றால்—என்கண்ணம்மா
வாழ்வெனக்கு வாராதோ. (9)

பையூரி லேயிருந்து பாழூரி லேபிறந்து
மெய்யூரிற் போவதற்கு வேதாந்த வீடறியேன்!
மெய்யூரிற் போவதற்கு வேதாந்த வீடறிந்தால்
பையூரும் மெய்யூரும்—என்கண்ணம்மா
பாழாய் முடியாதோ. (10)

மாமன் மகளடியோ மச்சினியோ நானறியேன்
காமன் கணையெனக்குக் கனலாக வேகுதடி
மாமன் மகளாகி மச்சினியும் நீயானால்
காமன் கணைகளெல்லாம்—என்கண்ணம்மா
கண்விழிக்க வேகாதோ; (11)

அந்தரத்தை வில்லாக்கி ஐந்தெழுத்தை யம்பாக்கி
மந்திரத்தே ரேறியல்லோ மான்வேட்டை யாடுதற்குச்
சந்திரருஞ் சூரியரும் தான்போந்த காவனத்தே
வந்துவிளை யாடியல்லோ—என்கண்ணம்மா
மனமகிழ்ந்து பாரேனோ. (12)

காட்டானை மேலேறிக் கடைத்தெருவே போகையிலே
நாட்டார் நமைமறித்து நகைபுரியப் பார்ப்பதன்றோ
நாட்டார் நமைமறித்து நகைபுரியப் பார்த்தாலும்
காட்டானை மேலேறி—என்கண்ணம்மா
கண்குளிரக் காண்பேனோ. (13)

உச்சிக்குக் கீழடியோ ஊசிமுனை வாசலுக்குள்
மச்சுக்குள் மேலேறி வானமுதந் தானெடுத்துக்
கச்சை வடம்புரியக் காயலூர்ப் பாதையிலே
வச்சு மறந்தல்லோ—என்கண்ணம்மா
வகைமோச மானனடி. (14)

முக்கா லரும்பெடுத்து மூவிரண்டாய்த் தான்தூக்கி
நற்கால் வளைபரப்பி நாற்சதுர வீடுகட்டி
நற்கால் வளைபரப்பி நாற்சதுர வீட்டினுள்ளே
முக்காலைக் காணாமல்—என்கண்ணம்மா
முழுதுந் தவிக்குறண்டி. (15)

காச மலர் தூவக் கருத்தெனக்கு வந்ததடி
பாச வலைதொலைக்கப் பாசவலை யொட்டுதில்லை
பாச வலைதொலைக்கப் பாசவலை நிற்குமென்றால்
காச மலர்மூன்றும்—என்கண்ணம்மா
கண்ணெதிரே நில்லாதே. (16)

தங்காயந் தோற்றாமற் சாணகலங் சொல்லைகட்டி
வெங்காய நாத்துமிட்டு வெகுநாளாய்க் காத்திருந்தேன்
வெங்காயந் தின்னாமல் மேற்றோலைத் தின்றலவோ
தங்காயந் தோணாமல்—என்கண்ணம்மா
சாகுறண்டி சாகாமல். (17)

பற்றற்ற நீரதிலே பாசி படர்ந்ததுபோல்
உற்றுற்றுப் பார்த்தாலும் உன்மயக்கந் தீரவில்லை
உற்றுற்றுப் பார்த்தலவோ உன்மயக்கந் தீர்ந்தாக்கால்
பற்றற்ற நீராகும்—என்கண்ணம்மா
பாசியது வேறாமே. (18)

சுற்றாரு முற்றாருந் தொண்ணூற்றி யாறதிலே
உற்றாரும் பெற்றாரும் ஒன்றென்றே யானிருந்தேன்
உற்றாரும் பெற்றாரும் ஊரைவிட்டுப் போகையிலே
சுற்றாரு மில்லாமல்—என்கண்ணம்மா
துணையிழந்து நின்றதென்ன. (19)

கண்ணுக்கு மூக்கடியோ காதோரம் மத்திபத்தில்
உண்ணாக்கு மேலேறி உன்புதுமை மெத்தவுண்டு
உண்ணாக்கு மேலேறி உன்புதுமை கண்டவர்க்கு
கண்ணுக்கு மூக்கடியோ—என்கண்ணம்மா
காரணங்கள் மெத்தவுண்டே. (20)

சட்டச் சரக்கெடுத்துச் சாதிலிங்கந் தான்சேர்த்து
மட்டப் பொடிகலந்து வாலுழுவை நெய்யூற்றிப்
பொட்டென்று பொட்டுமிட்டுப் புருவத் திடைநடுவே
இட்ட மருந்தாலே—என்கண்ணம்மா
இவ்வேஷ மானேனடி. (21)

பாதாள மூலியடி பாஷாணந் தான்சேர்த்து
வேதாளங் கூட்டியல்லோ வெண்சாரை நெய்யூற்றி
சிதாசெந் தூரமையால் ஜெகமெல்லாந் தான்மிரட்டித்
தாதா மருந்தாலே—என்கண்ணம்மா
தனலாக வேகுறண்டி. (22)

கள்ளர் பயமெனக்குச் சால்தூக்க வொட்டாமற்
பிள்ளை யழுதுநின்றால் பெற்றவட்குப் பாரமடி
பிள்ளை யழுகாமற் பெற்றமனம் நோகாமல்
கள்ளர் பயமெனக்கு—என்கண்ணம்மா
கடுகளவு காணாதே. (23)

பட்டணத்தை யாளுகின்ற பஞ்சவர்கள் ராசாக்கள்
விட்டுப் பிரியாமல் வீரியங்கள் தான்பேசி
விட்டுப் பிரிந்தவரே வேறு படுங்காலம்
பட்டணமுந் தான்பரிபோய்—என் கண்ணம்மா
படைமன்னர் மாண்டதென்ன. (24)

ஆகாப் புலையனடி அஞ்ஞானந் தான்பேசி
சாகாத் தலையறியேன் தன்னறிவு தானறியேன்
வேகாத காலறியேன் விதிமோச மானனடி
நோகாமல் நொந்தலவோ—என் கண்ணம்மா
நொடியில்மெழு கானனடி. (25)

தாயைச்சத மென்றே தந்தையரை யொப்பென்றே
மாயக் கலவிவந்து மதிமயக்க மானனடி
மாயக் கலவிவிட்டு மதிமயக்கந் தீர்ந்தாக்கால்
தாயுஞ் சதமாமோ—என் கண்ணம்மா
தந்தையரு மொப்பாமோ. (26)

அஞ்சாத கள்ளனடி ஆருமற்ற பாவியடி
நெஞ்சாரப் பொய்சொல்லும் நேயமில்லா நிஷ்டூரன்
கஞ்சா வெறியனடி கைச்சேத மாகுமுன்னே
அஞ்சாதே யென்றுசொல்லி—என் கண்ணம்மா
ஆண்டிருந்தா லாகாதோ. (27)

உன்னை மறந்தல்லோ உளுத்த மரமானேன்
தன்னை மறந்தார்க்குத் தாய்தந்தை யில்லையடி
தன்னை மறக்காமற் றுயாருமுண்டானால்
உன்னை மறப்பேனோ—என் கண்ணம்மா
ஒத்திருந்து வாழேனோ. (28)

காயப்பதி தனிலே கந்தமூ லம்வாங்கி
மாயப் பணிபூண்டு வாழுஞ் சரக்கெடுத்து
ஆயத்துறை தனிலே ஆராய்ந்து பார்க்குமுன்னே
மாயச் சுருளோலை—என் கண்ணம்மா
மடிமேல் விழுந்ததென்ன. (29)

சித்திரத்தைக் குத்தியல்லோ சிலையை யெழுதிவைத்து
உத்திரத்தைக் காட்டாமல் ஊரம்பல மானேன்
உத்திரத்தைக் காட்டியல்லோ ஊரம்பலமானால்
சித்திரமும் பேராமோ—என்கண்ணம்மா
சிலையுங் குலையாதோ. (30)

புல்லரிடத் திற்போய் பொருள்தனக்குக் கையேந்திப்
பல்லை மிகக்காட்டிப் பறக்க விழிக்குறண்டி
பல்லைமிகக் காட்டாமல் பறக்க விழிக்காமல்
புல்லரிடம் போகாமல்—என்கண்ணம்மா
பொருளெனக்குத் தாராயோ. (31)

வெட்டுண்ட சக்கரத்தால் வேண தனமளித்து
குட்டுண்டு நின்றேண்டி கோடிமனு முன்னாலே
குட்டுண்டு நில்லாமற் கோடிமனு முன்னாக
வெண்டுண்ட பிணிநீக்கி—என்கண்ணம்மா
விழித்துவெளி காட்டாயோ. (32)

என்னோ டுடன்பிறந்தா ரெல்லோரும் பட்டார்கள்
தன்னந் தனியனுமாய்த் தனித்திருக்க லாச்சுதடி
முன்ன மிதுதெரிந்தால் முழுமோசம் போகேனே
இன்னவித மென்று—என்கண்ணம்மா
எடுத்துரைக்க லாகாதோ. (33)

எல்லாரும் பட்டார்கள் இன்னவிட மென்றறியேன்
பொல்லாங்கும் போச்சுதடி புலனும் மறந்ததடி
கல்லான வென்மனது கரைந்திருக்கு மேயாகில்
எல்லாரும் வந்து—என்கண்ணம்மா
எனக்கேவல் செய்யாரோ. (34)

என்னை யெனக்கறிய இருவினையு மீடழித்துத்
தன்னை யறியுமிடம் தானறிந்து கொண்டேண்டி
தன்னை யறியுமிடம் தானறிந்துக் கொண்டபின்பு
என்னை யறியாமல்—என்கண்ணம்மா
யிருந்தே னொருவழியாய். (35)

ஆதார மாறினையும் ஐம்பத்தோ ரக்ஷரமும்
சூதானக் கோட்டையெல்லாம் சுட்டுத் தொலைத்தார்கள்
சூதானக் கோட்டையெல்லாம் சுட்டுவிட நாளானால்
பாதாள வஸ்துவெல்லாம்—என்கண்ணம்மா
பக்கத் திருக்காதோ. (36)

கடல்நீரின் ஆழமதைக் கண்டுகரை யேறிவந்து
உடலுமுயி ரும்போல ஒத்தே யிருந்தோமடி
உடலுமுயி ரும்போல ஒத்தே யிருக்கையிலே
திடமா மயக்கம்வந்து—என்கண்ணம்மா
சேர்ந்ததென்ன சொல்லாயோ. (37)

கல்லுள் ளிருந்த கனலொளியைக் காரணமாய்ப்
புல்லுள் ளிருந்துவந்த பொருளறியக் காணேண்டி
புல்லுள் ளிருந்த பொருளறியக் காணாட்டால்
வல்லபங்கள் தோணாமல்—என்கண்ணம்மா
மயங்கித் தவிக்குறண்டி. (38)

பொற்பூவும் வாசனையும் போதமறிந்தோர்க்குக்
கற்பூவும் வாசனையுங் காணாங் கயவருக்கு
கற்பூவும் வாசனையுங் கண்டதுண்டே யாமானால்
பொற்பூவும் வாசனையின்—என்கண்ணம்மா
புலன்கள் தெரியேண்டி. (39)

ஆதிமதி யென்னும் அதின்விடாய் தானடங்கிச்
சோதிவிந்து நாதமெனச் சுக்கிலமாய் நின்றதடி
சோதிவிந்து நாதமெனச் சுக்கிலமாய் நின்றாக்கால்
நீதியுடன் பூர்வபக்ஷம்—என்கண்ணம்மா
நிலைதெரிய மாட்டேனே. (40)

ஞானமிது நாற்பதையும் நலமாக வேதெரிய
மோன மயக்கத்தில் முழுதுமே கொட்டிவிட்டேன்
மோன மயக்கத்தை முழுதும் அறிந்தோர்கள்
ஞான மடைவார்கள்—என்கண்ணம்மா
நன்மைபெற்று வாழ்வார்கள். (41)

வாதகற்பம்.

கண்ணிகள்.

மூலம்நடுவீதி ஆத்தாளே மும்மண்டலத்தமர்ந்த
நீலகண்ட வஸ்துவைத்தான் ஆத்தாளே நின்மலனைப் போற்றுவனே.

மேகத்தா லிந்தாச்சு ஆத்தாளே விஜயரவிச் சுண்ணும்பாம்
ஆகச் சிவநீரால் ஆத்தாளே அஷ்டசித்தி யாவள்சத்தி. (43)

இரவிமுகத்தாலே ஆத்தாளே ஈசனென்ற உப்பாச்சு
வருகங்கை தன்னுமேல ஆத்தாளே மயமாகச் சுத்திசெய்தே. (44)

மூர்ந்தின வுப்பிரண்டும் ஆத்தாளே முழுக்கல்லுப் பொன்னுகத்
தொக்திக்க விவ்விடைக்கு ஆத்தாளே சூழ்சீனங் கால்சேர்த்து (45)

ஆறுதலச்செயநீர் ஆத்தாளே அதிலேகற் சுண்ணும்பாம்
மீறுமிந்தச் சுண்ணும்பில் ஆத்தாளே வீரமுடன் கற்பூரம். (46)

சாரநீ ராலரைத்து ஆத்தாளே தனிக்கவச மேபூசி
ஆறுவகைச் செயநீரால் ஆத்தாளே அதன்மேலே சுத்திவைக்க. (47)

உப்பென் றறியாரே ஆத்தாளே உலகத்தி லுள்ளோர்கள்
உப்பல்லோ சுண்ணும்பாம் ஆத்தாளே ஊர்க்குள் விலைகூறுதடி. (48)

சவ்வீரம் முப்புச்சுண்ணம் ஆத்தாளே தனிப்பூரம் மேற்பூசி
ஒவ்வாத பான்முகத்தில் ஆத்தாளே வடுருவச் சுண்ணும்பாம். (49)

காரமிதி லேற்றலடி ஆத்தாளே கருவறியார் தண்ணீரைச்
சீருடனே சுத்தியடி ஆத்தாளே தீமுகத்தில் வாட்டிவிடு. (50)

கற்பூரச் சுண்ணமடி ஆத்தாளே கடுங்காரச்சுண்ணமடி
வெற்பாக வைத்தானே ஆத்தாளே வேதைகவர் கோடியடி. (51)

எண்ணெண் சாக்குமடி ஆத்தாளே இப்பூரச் சுண்ணமடி
சுண்ணத்தில் வீரமிட ஆத்தாளே துரிசதிலே சுண்ணும்பாம். (52)

அக்காரச் சுண்ணும்பாம் ஆத்தாளே ஆகரெண்டு சுண்ணமதை
உக்காரம் மேற்பூசி ஆத்தாளே உலையிலே வைத்தூத. (53)

எண்ணெய் யெல்லாம் போக்குமடி இருக்கும் சவுக்காரம்
சுண்ணமடி மேற்கவசம் ஆத்தாளே சொல்லுகிறே னுப்புச்சுண்ணம்.

கற்பூரச் சுண்ணும்பாம் ஆத்தாளே கலந்திருந்த ரெண்டுமடி
செப்பமுள்ள செயநீரால் ஆத்தாளே சேர்த்தாட்டி வீரமிட்டு. (55)

வழலைக்கு மேற்கவசம் ஆத்தாளே வளமாய்ப்பொதிந்தபின்பு
தழலிலே தானுட்டி ஆத்தாளே சற்குருவாம் உப்பாலே. (56)

உப்புச் சுண்ணங் கற்பூரம் ஆத்தாளே உண்மைசவுக்காரம்
செப்பமுடன் மூன்றுசுண்ணம் ஆத்தாளே சேர்த்துரவியிலிட்டு. (57)

இக்குருவில் மஞ்சாடி ஆத்தாளே யெடுத்துத் துருசிலிட்டு
முக்கியமுடன் மேற்கவசம் ஆத்தாளே முன்பூசி வெயிலில்வைக்க. ()

சுண்ணும்பு தங்கிவிது ஆத்தாளே துடிதாளகம் வெளுக்கும்
சுண்ணும்பு வங்கமடி ஆத்தாளே துடிலிங் கனேமாட்டும். (59)

சாதிலிங்கச் சுண்ணும்பு ஆத்தாளே தனிலோகச் சுண்ணும்பாம்
நாதந்தச் சுண்ணும்பாம் ஆத்தாளே நாகமிதிற் சுண்ணும்பாம். (60)

சுண்ணந்தா னுகவடி ஆத்தாளே துடிகெந்த கம்வெளுப்பாம்
சுண்ணும்பாங் கெந்தகந்தான் ஆத்தாளே துடியானே பட்டுவிடும். (61)

சூதனடி பட்டாண்டி ஆத்தாளே சூழ்ந்தங்கர் தான்சேர்க்க
வேதை சவ்விரனடி ஆத்தாளே மீறும்வகை மூன்றுமொன்ருய். (62)

சேர்த்துருக்க வேமணியாம் ஆத்தாளே செம்புவெள்ளிசேர்ந்தேதான்
நூத்துக்கொரு மாவிடவே ஆத்தாளே நூத்தெட்டு மாத்தாகும். (63)

இத்தங்கம் செந்தூரம் ஆத்தாளே இந்த மணியாலே
சத்தபேதி யாகுமடி ஆத்தாளே தான்பரிச பேதியிதாம். (64)

மண்டலம் பேதிக்குமடி ஆத்தாளே மலையும் பழுக்குமடி
அண்டத்தைத் தொட்டாட்ட ஆத்தாளே அடங்காப் பொருளாகும்.

மண்ணேது கல்லேது ஆத்தாளே மரமேது இவ்வேதை
ஒண்ணுது வொண்ணுது ஆத்தாளே ஒடுங்கும் பொருளுரைப்பேன்

தாளகம் வெள்ளியிலே ஆத்தாளே தப்பாது பத்தரையும்
பாளித்த லோகச்சுண்ணம் ஆத்தாளே பத்தரையாம் வங்கமதில். (67)

வீரச்சுண்ணம் வெள்ளியதாம் ஆத்தாளே வெள்ளிபதினெட்டாகும்[ம்
பூரச்சுண்ணஞ் சேர்க்கவடி ஆத்தாளே பொன்வயதோ யெண்ணுன்கா

சிலபற்பஞ் செம்பினிலே ஆத்தாளே சேர்க்கவய தெட்டரையாம்
துலையாக் கவர்கோடி ஆத்தாளே சொன்னூர் திருமூலர். (69)

பார்த்தேனடி கண்டேனடி ஆத்தாளே பாசங் குருபாதம்
காத்தேனடி கண்டேனடி ஆத்தாளே கைமுறையா மென்னூல்தான்.

கருவை யொளியாமல் ஆத்தாளே காசினியி லுள்ளோர்க்குக்
குருவைநாம் காண்பித்தோம் ஆத்தாளே குணமான வாதவித்தை (71)

உண்டென்ற பேர்க்குமடி ஆத்தாளே உண்டா யிருக்குமடி
சண்டாள னாக்கால் ஆத்தாளே தான்லபிக்க மாட்டாதே. (72)

லபிக்கவழி சொல்லுகிறேன் ஆத்தாளே நந்திதிரு மூலரையும்
லபிக்கக்கா லாங்கியையும் ஆத்தாளே நாதாந்தப் போகரையும். (73)

சத்தி சிதம்பரமும் ஆத்தாளே சட்டைமுனி பூசைசெய்வாய்
உத்தமக் கொங்கணரை ஆத்தாளே உசிதமாய்ப் பூசைசெய்வாய். ()

கருவூரா னந்தர் ஆத்தாளே கண்டு வழிதெரிந்தோர்
ஒருநெறியா யிவர்களையும் ஆத்தாளே உண்மையுடன் பூசைசெய்தால்.

சண்டாள னானாலும் ஆத்தாளே தான்வேதை காண்பானே [னே
கண்டசெய்தி சொன்னேன்நான் ஆத்தாளே கற்பவகை சொல்லுவ

சொல்லுகிறேன் கரிப்பான் ஆத்தாளே சுத்த யிலைபறித்துச்
செல்லும் பழச்சாற்றில் ஆத்தாளே செம்பழத் தளவரைத்து. (77)

அரைத்தாவின் நெய்யதனில் ஆத்தாளே அதுசிவக்கக் காய்ந்தபின்பு
திரமாயோர் பிங்கானில் ஆத்தாளே செப்பமுடன் வைத்தேதான். ()

பதனமாய் வண்டுகட்டி ஆத்தாளே பரமென்று நம்பியேதான்
திதிபூரு வந்தனிலே ஆத்தாளே செயல்பொருந்தும் நாட்பார்த்து. ()

அமுதயோ கம்பார்த்து ஆத்தாளே ஆனதொரு கற்பமதைக்
குமுதவொலி யுண்ணாக்கில் ஆத்தாளே குலாவுகின்ற வாசலிலே. (80)

பெருவிரலா லதைத்தொட்டு ஆத்தாளே பேதைமன மெண்ணாமல்
ஒருநெறியாய் நாலுதரம் ஆத்தாளே உயரவலஞ் சுற்றிடவே. (81)

நாலுதரம் சுத்திசெய்தால் ஆத்தாளே நன்றாயகக்கதனில்
ஆலமுண்டோன் தன்னாணை ஆத்தாளே அஞ்சுகத வுந்திறக்க. (82)

கற்பதுநாட் கொள்வாரேல் ஆத்தாளே நற்கதவஞ்சுந்திறக்கும்
தீர்க்கமதாய்ச்சித்தியுண்டாம் ஆத்தாளே தேகம்வச்ரகாயமதாம். (83)

மறவாமற் கற்பவகை ஆத்தாளே மனசாரத் தின்றுவிட்டால்
இறவாம லஷ்டசித்தி ஆத்தாளே இக்கற்பங்கொண்டபின்பு. (84)

உத்ததொரு கற்பமதை ஆத்தாளே உணவாகத் தின்றுவிட்டால்
செத்திறந்து போவதில்லை ஆத்தாளே திடமா யிருக்குமடி. (85)

கெதிபெற வேணுமென்றால் ஆத்தாளே கேளாமலேகேட்டு
மதியமுதம் கொண்டபின்பு ஆத்தாளே மறுகற்பங்கொண்டிடுவாய். ()

வேதாள கற்பமதை ஆத்தாளே விதுவளருமஷ்டமிநாள்
மாதாவிம் மூலிகைக்கு ஆத்தாளே மயமாய்நெய் வேத்யமிட்டு. (87)

நமஸ்கரித்துத் தாம்நோக்கி ஆத்தாளே நயமாகவாங்கிவந்து
நமஸ்கார சித்தியுடன் ஆத்தாளே நன்றாய் நிழலுலர்த்தி. (88)

சூரணஞ் செய்தேதான் ஆத்தாளே சுயமான நாட்பார்த்து
மீறும் வெருகடியாய் ஆத்தாளே வெண்டுந்தேன் நெய்சேர்த்து. (89)

கொள்ளவே மண்டலந்தான் ஆத்தாளே கூறுமஷ்ட சித்தியுண்டாம்
தென்னு மவர்களுக்கு ஆத்தாளே தேவ வருஷமதில். (90)

பதினு யிரவருஷம் ஆத்தாளே பண்பா யிருப்பனடி
ரதிதேவப் பெண்முதலாய் ஆத்தாளே நன்மையுடன் மேவுவர்பார். ()

பூலோக மாதர்களை ஆத்தாளே புகலவேஆகாது
மேலோகப் பெண்கள்சித்தி ஆத்தாளே மேவுதற்குந் தானாகும். (92)

சையான்சங் காயளவு ஆத்தாளே கறிமிளக திற்பாதி
செய்யாதி மண்டலமே ஆத்தாளே தின்றால் நரைகளில்லை. (9

திரையில்லை அட்டசித்தி ஆத்தாளே தேகமது வெவ்வர்ணமாய்
வரைவச்ர காயமதாம் ஆத்தாளே வயதுமுந் நூறிருப்பன். (94)

கொடுப்பையிலே லேசாக ஆத்தாளே கொள்வாபோர் மண்டலமே
நடுக்கமில்லை தான்பகலில் ஆத்தாளே நட்சேத் திரந்தோன்றும். (95)

பத்தியம் பச்சரிசி ஆத்தாளே பாலிட்ட சோறுகும்
மத்தொன்று மாகாதே ஆத்தாளே வண்மையுட னிக்கொடுப்பை. (96)

சமூலங் கழுவிநன்றாய் ஆத்தாளே தயவாய் நிழலுலர்த்தி
சமூல மிடித்துநன்றாய் ஆத்தாளே சதிராகச் சூரணஞ்செய். (97)

பாலில் வெருகடியாய் ஆத்தாளே பதிமண்ட லங்கொளவே
மேலும் வச்ரகாயமடி ஆத்தாளே வேதையுமி நீராலே. (98)

பழுக்கும் நவலோகம் ஆத்தாளே பரமட்ட சித்தியுண்டாம்
அழுக்கெடுத்து வெள்ளீயம் ஆத்தாளே அதிலிய நீர்வாங்கும். (99)

சித்திபெற்ற கற்பமடி ஆத்தாளே தேவ வருஷமதில்
அத்தியின் றன்மிலமாய் ஆத்தாளே ஆயிரம் வயதிருப்பாய். (100)

உத்தமர்க்குச்சொன்னேன்நான் ஆத்தாளேஉயரவெளிகண்டதெல்லாம்
பத்தியுள்ள பத்தர்கட்கு ஆத்தாளே பலிக்கும்பார் கண்டாயே. (101)

பத்தியுடன் செய்துவந்தால் ஆத்தாளே பரம்பொருளுந் தோன்றுமடி
சித்தி யடைந்தவர்க்கு ஆத்தாளே தெரியுமே சோதியுந்தான். (102)

மாணிக்கத் துள்ளொளிபோல் ஆத்தாளே மருவியசோதிதனைப்
பேணித் தொழுமடியார் ஆத்தாளே பேசாப் பிரமமடி. (103)

அன்றுமுத லின்றளவும் ஆத்தாளே அறியாப் பருவமதில்
என்றும் பொதுவாக ஆத்தாளே இருந்த ரகசியந்தான். (104)

ஓங்காரங் கொண்டு ஆத்தாளே உள்மூலந் தான்தெரிந்து
ஆங்காரம் விட்டு ஆத்தாளே ஐம்புலனுங் கண்டுதடி. (105)

உள்ளுணர்வாய் நின்றிருக்கும் ஆத்தாளே ஓங்காரந்தன்னையுமே
எள்ளளவா கிலுந்தான் ஆத்தாளே எத்தித் துதிப்பாயே. (106)

பாவிகள் தங்களுக்கு ஆத்தாளே பரிவாக விந்நூலைத்
தாவிக் கொடுக்காதே ஆத்தாளே சண்டாளர் தங்களுக்கே. (107)

அனுபோக கற்பசித்தி ஆத்தாளே ஆருமிதைப் படித்தோர்
னுவிச்யா னந்தெரிந்து ஆத்தாளே வாழ்வார் வெகுகோடி. (108)

ஆறு தாரம்.

வெண்பா.

ஞானநூல் கற்றாலென் னற்றறவு பூண்டாலென்
மோன சமாதி முயன்றாலென்—றானுநி
யெல்லாக் கவலையுமற் றின்புற் றிருப்பதுவே
சொல்லாரு முத்தி சுகம்,

கண்ணிகள்.

மேலத் தெருவாகி விந்துதித்த வீடாகிக்
கோலத்தி லேயடி கூறும் அறுகோணம்
சீலத்தில் முக்கோணம் சேர்ந்தப்பு வீடாகி
மூலத்தில் மண்ணாகி—என் ஆத்தாளே
முதலெழுத்தைப் போற்றிசெய்தேன். (109)

[இதன்கருத்து.] மேலத்தெருவாகிய ஆகாச வட்டத்தில் ஆயிரத்தெட்டிதழில், விந்துவும் நாதமுங்கூடின சிகார வகார மிரண்டும் பதியிற்குவிந்து மண்ணில்வியாபித்து மூலாதாரப்பொருளைத்தெரிசனைசெய்புமென்றவாறு.

ஆதியென்னும் மூலமடி அவ்வோடே உவ்வாகி
நீதியெனும் நாளமடி நின்று விசையெழுப்பி
ஜாதிமதி யென்னுந் தாகவிடாய் தானடங்கிச்
ஜோதிவிந்து நாதமென்ன—என் ஆத்தாளே
சுக்கிலமாய் நின்றதடி. (110)

[இ-க-து.] ஆதியென்னும் மூலத்தில் ஓரெழுத்தாகப்பட்டது, இடை பிங்கலையாகிய பனிரண்டங்குலம் சுவாசந்தன்னில், எட்டங்குலம் உட்கொண்டு மூலத்தில் வந்தொடுங்கி நடுத்தானத்திலேகி பிரிதிவில் வந்து நின்று ஆயிரத்தெட் டிதழில் விந்து நாதங்கூடி சுக்கில முதித்ததாம். எ-று.

துய்யவெள்ளை யானதடி துலங்கும்வட்டத் தோரெழுத்து
மெய்யில்நடு நாளமடி விளங்கும்விந்து தானிரங்கிப்
பையரவு யோனியிலே பராபரத்தி லேவிழுந்து
செய்யவட்ட மாகியடி—என் ஆத்தாளே
சீமூல மாச்சுதடி. (111)

[இ-க-து.] துய்ய வெள்ளையாகிய நாதமும் விந்துவும் மெய்யாகப்பட்ட பிரிதிவியில் அப்பு தேயு வாயு ஆகாய மூருவி நடுநாளத்தின்வழியே இறங்கி, லிங்கத்தினிடத்தில் வந்து ஜீவனாய் சிவமாய் அஷ்டமந்திரத்தினாலே ஆவுடையாரிற் றரிக்க வளைந்துவாங்கி வலுவாய் மூலக்கிழங் குண்டாகச் சென்றதாம் எ-று.

நவ்வோடே மவ்வாகி நாலிதழின் மேற்படர்ந்து
உவ்வோடே சவ்வாகி யுயர்வுன்னி யூடெழுந்து
நவ்வோடே மவ்வாகி நாடுகின்ற காலாகி
இவ்வோ டுதித்தாண்டி—என் ஆத்தாளே
இலக்குகின்ற திங்களடி. (112)

[இ-க-து.] நவ்வாகப்பட்ட மனந்தானே கூடி நாலிதழாகப்படர்ந்து முக்கோணமாகிய கோணத்தில் வெளியாகி வெளியின்மேலே பிரிதிவியில் அப்புப்பாதியாய் அதற்குமேல் வாயுபிறந்து மூலாதாரமென வெவ்வேறாய் ஒரு மாதத்தில் உற்பத்தியாகும் எ-று.

கதிரங்கி பாகியடி கருணையினில் விந்திரங்கி
உதிரம் திரட்டியடி ஓமென் றதனிலுன்னி
சதுரமது மண்ணாகிச் சதுர்முகனார் வீடாகி
மதுரம் பிறந்ததடி—என் ஆத்தாளே
வையகனும் வந்தாண்டி. (113)

[இ-க-து.] சூரிய கலையாகப்பட்ட வொளியில் விந்திறங்கி வந்து மூலாதாரச் செய்யெல்லாம் பயிராகி அதில் ஓங்காரம் பிறந்து சதுரமாய்ப் பிரமஸ்தானத்தில் தனுபொருந்தக் குய்யமென்ற பிரிதிவியில் ஆகாரமாகும் எ-று.

மெய்யாய்ச் சதுரமடி மெய்யா யதிற்பார்த்து
ஒப்பாய் நடுநாளம் ஓங்கி யதில்முளைத்துச்
செப்பா ரிளமுலையார் சீருடனே தானிருந்து
அப்பாலே மாலாகி—என் ஆத்தாளே
ஆனந்த மானதடி (114)

[இ-க-து.] சதுரத்து மூலாதாரத்தைத் தொட்டு பிரம ஸ்தானத்திலுன்னி கதிர்போல் நாளம் வளர்ந்து சத்தியும் பிறந்து செப்பரிதான இன்பமா யிருக்கப்படா நின்ற ஸ்தன்னியத்திற்குடைய லெட்சுமி அப்பால் ஒப்பாய் நின்ற மாலாகிய விஷ்ணுவுங் கூடியிருக்கிறதாம் எ-று.

உன்னியப்பு மேலேபடி யோங்கிக் கதிர்பார்த்து
மின்னியதிற் றூன்முளைத்து மேவுகின்ற சீயாகிப்
பன்னிவரு முக்கோணப் பதியதனி லேமுளைத்து
வன்னியென்னும் பேராகி—என் ஆத்தாளே
மருவுகின்ற ருத்ரனடி. (115)

[இ-க-து.] அப்புவிற் சத்தமுண்டாகி சத்தத்திற் கெந்தமுண்டாகி கெந்தத்திற் பஞ்சபூதமுண்டாகி அக்கினி கதிர்போற் படர்ந்து சியென்று இருந்துகொண்டு முக்கோணமாய் பெரும்பாழாய் எண்ணத்தில் அசைவு சீவனுயுண்டாகும் எ-று.

வீரான வன்னியதன் மேல்நாளந் தான்முளைத்து
ஓராறு கோணமதாய் உள்ளேஓர் காலாகிப்
பேராக நின்றதடி பெருங்கிளையாங் கூட்டமதில்
மாறாமல் மாறியடி—என் ஆத்தாளே
வைபத் துதித்தாண்டி. (116)

[இ-க-து.] வன்னியில் நநோளம்முளைத்து அறுகோணமாய் நடுநிலையில் வகாரமாய் மூலாதாரந் தொடுத்து ஆகாசபரியந்தம் போய் அதற்குத் தலைநிலையான படியினாலே வாய்வென்று மூலாதாரம் சுவாதிஷ்டானம் மணிபூரகம் அனாகதம் விசுத்தி பரியந்தம் உற்பத்தியாய் வயிற்றிற் கிடந்து துடிக்கும் எ-று.

உதையாம லென்னையிப்போ துதைத்தவனுங் கீழிறங்கி
மதியான மூலமதில் வந்திருந்துக் கொண்டாண்டி

நிதியா மிரண்டெலும்பு நீளெலும்பிரண்டாகி
முதியாத மாங்கிஷமும்—என் ஆத்தாளே
மூடி யதிலிருந்து. (117)

]இ-க-து.] வாயுவாகப்பட்டது நடுநாளத்திலிரங்கி மூலத்திலிருந்து கொண்டு சுக்கிலத்தின் வெள்ளையைக் காலெலும்பு இரண்டும் கதிரெலும்பு இரண்டும் கீழிரங்கி மாங்கிஷம் பறந்து தேகங்கொண்டுமூடி அங்கை வளை போலே வட்டமாயென்பாய் அதிலிரண்டாம் எ-று.

மாதவனைக் குள்ளேயடி வந்தவது கீழ்ப்படர்ந்து
போதத்தின் முட்டியடி புகழ்நரம்பை யுண்டுபண்ணி
நீதம தாகவிந்த நீணிலத்தி லேதிரியப்
பாதமா யுன்னியடி—என் ஆத்தாளே
பதியாய் வளர்ந்ததடி. (118)

[இ-க-து.] தவளைபோல இரண்டு முழங்காற் சிப்பியுமுண்டாகி மாதாவின் வயிற்றிலே கால்கீழே பறந்து முடிபோலடர்ந்து நரம்பினாற்கட்டி பாதமுற்பத்தியானதாம் எ-று.

இருகண்ணீன் மேலேயடி யிருந்தநரம் பூடுசென்று
பெருநரம்பாய் விம்மிப் பெருக்க மூளைத்ததடி
தரிநரம்பும் யீரெலும்பாய்த் தானென் பதுவெலும்பாய்
விரிநரம்பு போலாக—என் ஆத்தாளே
மேலாய் நுழைந்ததடி. (119)

[இ-க-து.] காலிற் பெருவிரல் இரண்டாய் வளர்ந்து மூலாதாரத்தில் நடுநாளத்துக் கடுத்த யிடத்திற் பெருநரம்பா யோடி பிடரியிற் சுருக்கிட்டு இரண்டெலும்பாய் வட்டமிட்டு அதற்குமேல் ஒன்பது நரம்பாய்ப் படர்ந்து மாமிஷம் மூடியிருக்கின்றது எ-று.

இட்ட வெழுத்திரண்டில் ஏங்கியதில் மேற்படர்ந்து
வட்டமதி போலெலும்பு வளர்ந்து கவிந்ததடி
எட்டிரண்டு மொன்றாகி யிருந்தவர்க்கு வீடாச்சு
வெட்டவெளி யானதடி—என் ஆத்தாளே
மெய்யா யிருந்ததடி. (I20)

[இ-க-து.] இட்ட வெழுத்தாகப்பட்ட ஆதியில் விந்துதித்த நாள்வரைக்கும் கண்டிதமாய் வடுவாய் உட்குளிர்ந்து முன்னேடாய் தலைமண்டையுண்டாய் வெட்டவெளியா யிருந்தவிடத்தில் எட்டாங்கால் இரண்டு அகார உகாரம் எ-று.

அகார உகாரத்தில் ஆருனி யம்பிறந்து
அகாரந் தனிவிரங்கி அரிமூலந் தன்னில்வந்து
உகாரத்துள் ஆவேறி யோடி யுலாவுதற்கு
நிகரற்ற நாதனடி—என் ஆத்தாளே
லிங்கமாய் வந்தாண்டி. (121)

கருவாகி வந்தானே கருவழிக்க வந்தானே
உருவாகி வந்தானே உருவழிக்க வந்தானே
குருவாகி வந்தானே குலமறுக்க வந்தானே
திருவாகி வந்தானே—என் ஆத்தாளே
சீர்திருத்த வந்தானே. (122)

மெய்ஞ்ஞானம்.

ஐங்கரனைத் தெண்டனிட்டு அருளடைய வேணுமென்று
தங்காமல் வந்தொருவன் என் ஆத்தாளே
தற்சொரூபங் கொண்டாண்டி. (123)

உள்ளொளியாக ஓங்காரத் துள்ளிருந்து
கள்ளப் புலனறுக்க என் ஆத்தாளே
காரணமாய் வந்தாண்டி. (124)

ஆதார மாறினையும் ஐம்பத்தோ ரட்சரமும்
சூதானக் கோட்டையெல்லாம் என் ஆத்தாளே
சுட்டான் குருசாலே. (125)

என்னோ டுடன்பிறந்தா ரெல்லோரும் பட்டார்கள்
தன்னந் தனித்தேனே என் ஆத்தாளே
தானிருக்க மாட்டேண்டி. (126)

கல்வி லொளியானைக் கருத்தி லினியானைச்
சொல்லிமுழு தாலொழிய என் ஆத்தாளே
துயரமெனக் காருதே. (127)

மண்முதலாய் ஐம்பூதம் மாண்டுவிடக் கண்டேண்டி
விண்முதலா யைம்பொறியும் என் ஆத்தாளே
வெந்துவிடக் கண்டேண்டி. (128)

ஆங்காரந் தான்கெடவே ஆறடுக்கு மாளிகையும்
நீங்காப் புலன்களைந்தும் என் ஆத்தாளே
நீருக வெந்ததடி. (129)

போற்றும்வகை யெப்படியோ பொறிபேத கம்பிறந்தால்
ஆத்தும தத்துவங்கள் என் ஆத்தாளே
அடுக்கழிய வெந்ததடி. (130)

வித்தியா தத்துவங்கள் விதம்விதமாய் வெந்ததடி
சுத்தவித்தை யத்தனையும் என் ஆத்தாளே
சுட்டான் துருசறவே. (131)

கேடுவரு மென்றறியேன் கெடுமதிகண் தோற்ருமல்
பாடுவரு மென்றறியேன் என் ஆத்தாளே
பதியி லிருந்தாண்டி. (132)

எல்லோரும் போனவழி யின்னவிட மென்றறியேன்
பொல்லாங்கு நீரவடி என் ஆத்தாளே
பொறியழியக் காணேண்டி. (133)

உட்கோட்டைக் குள்ளிருந்தோர் ஒக்கமடிந்தார்கள்
இக்கோட்டைக் குள்ளாக என் ஆத்தாளே
எல்லோரும் பட்டார்கள். (134)

உட்கோட்டை தானும் ஊடுருவ வெந்தாக்கால்
கற்கோட்டை யெல்லாம் என் ஆத்தாளே
கரிக்கோட்டை யாச்சுதடி. (135)

தொண்ணூற் றறுவரையும் சுட்டேன் துருசறவே
கண்ணேறு வாருமல் என் ஆத்தாளே
கருவருக்க வந்தாண்டி. (136)

ஓங்காரங் கேட்டுதடி உள்ளமெல்லா மொக்குமடி
ஆங்காரம் பட்டுவிழ என் ஆத்தாளே
அடியோ டறுத்தாண்டி. (137)

முன்னை வினையெல்லாம் முழுதும் அறுத்தாண்டி
தன்னையறிந்து என் ஆத்தாளே
தாஞெருத்தி யானேண்டி. (138)

என்னை யெனக்கறிய இருவினையு மூடறுத்தான்
தன்னை யறியவடி என் ஆத்தாளே
தனித்திருக்க லானேனண்டி. (139)

இன்னந் தனியேநா னிங்கிருக்க மாட்டேனண்டி
சொன்னசொற் றிரவடிவு என் ஆத்தாளே
சுட்டான் துருசறவே. (140)

வீட்டி லொருவரில்லை வெட்டவெளி யாச்சுதடி
காட்டுக் கெரித்தநிலா என் ஆத்தாளே
கனவாச்சு கண்டதெல்லாம். (141)

ஈசையாரோ கண்டவர்கள் நாட்டுக்குட் பட்டலவோ
பகையாரோ விண்டவர்கள் என் ஆத்தாளே
பாசம் பகையாச்சே. (142)

என்னையிவன் சுட்டாண்டி யெங்கு மிருந்தாண்டி
கன்னி யழித்தாண்டி என் ஆத்தாளே
கற்பைக் குலைத்தாண்டி. (143)

உள்ளரையிற் கள்ளனடி உபாயம் பலபேசிக்
கள்ளக்கண் கட்டியடி என் ஆத்தாளே
காலைப் பிடித்தாண்டி. (144)

பற்றத்தான் பற்றுவரோ பதியி லிருந்தாண்டி
ஏற்றத்தா னென்றவரோ என் ஆத்தாளே
என்னை யறிந்தாண்டி. (145)

கண்டாருக் கொக்குமடி கசடுவித்தை யத்தனையும்
பெண்டாக வைப்பனென்று என் ஆத்தாளே
பேசா தளித்தாண்டி. (146)

மால்கோட்டை யிட்டுமென்னை வசையிலாக் காவல்வைத்தான்
தோல்கோட்டை யிட்டடியோ என் ஆத்தாளே
சுடா திருக்கச் சொன்னாண்டி. (147)

எந்த விதமோவறியேன் இம்மாயஞ் செய்தாண்டி
சந்தைக் கடைத்தெருவே என் ஆத்தாளே
தமோறச் சொன்னாண்டி. (148)

சூலத்துக் காதியடி துன்பமுற வத்துடே
பாலத்தி லேறியடி என் ஆத்தாளே
பங்க மளித்தாண்டி. (149)

பண்டிவனை நானறியேன் பலகாலம் வந்தாண்டி
அண்டி யிருந்தாண்டி என் ஆத்தாளே
ஆகலத்தில் வைத்தாண்டி. (150)

பத்தினியா யென்னாளும் பாடறிந்து கூடாமல்
மத்தியா னத்திலென்னை என் ஆத்தாளே
வாசிரிக்கச் சொன்னாண்டி. (151)

வாடைதனைக் காட்டியடி மஞ்சளிஞ்சி வையாமல்
ஆடை குலைத்தெமையும் என் ஆத்தாளே
அலங்கோலஞ் செய்தாண்டி. (152)

சற்புக் கரசியென்ற காரணப்பேர் விட்டகலப்
பொற்புக் குலைத்தெமையும் என் ஆத்தாளே
போத மிழந்தனடி. (153)

என்ன வினைவருமோ இன்னதெனக் கென்றறியேன்
சொன்ன சொல்லெல்லாம் என் ஆத்தாளே
சொல்லறவே வெந்ததடி. (154)

கந்குல்பக லற்றிடத்தே காட்டிக் கொடுத்தாண்டி
பங்க மழித்தாண்டி என் ஆத்தாளே
பாதகனைப் பார்த்திருந்தேன். (155)

ஓதியுணர்ந்த தெல்லாம் உள்ளபடி யாச்சுதடி
சாதியிற் கூட்டுவரோ என் ஆத்தாளே
சமையத்தாற் குள்ளாமோ. (156)

என்னகுற்றஞ் செய்தேனோ எல்லவருங் காணாமல்
அன்னை சுற்றமெல்லாம் என் ஆத்தாளே
அறியாரோ அம்புவியில். (157)

பொய்யான வாழ்வெனக்குப் போதமெனக் கண்டேண்டி
மெய்யான வாழ்வெனக்கு என் ஆத்தாளே
வெறும்பாழாய் விட்டதடி. (158)

சொல்லானைச் சொல்லுதற்குச் சொல்லவா யில்லையென்று
எல்லாருங் கண்டிருந்தும் என் ஆத்தாளே
இப்போ தறியார்கள். (159)

கன்மாயம் விட்டுதடி கருத்து மழிந்தேண்டி
உன்மாய மிட்டவனை என் ஆத்தாளே
உருவழியக் கண்டேண்டி. (160)

என்னசெய்யப் போறேன்நான் இருந்த அதிசயத்தைக்
கன்னி யிளங்கமுகு என் ஆத்தாளே
காரணமாய்க் காய்த்ததடி. (161)

அந்தவிட மத்தனையும் அருளா யிருந்ததடி
சொந்தவிட மெல்லாம் என் ஆத்தாளே
சுகமாய் மணத்ததடி. (162)

இந்தமன மெங்கும் இயற்கைமன மென்றறிந்து
அந்தச் சுகாதீதம் என் ஆத்தாளே
அருட்கடலில் மூழ்கினண்டி. (163)

அத்திமதிசூடும் ஆனந்தப் பேரொளிதான்
சத்திசிவ மென்றறிந்தே என் ஆத்தாளே
சச்சுபலங் கொண்டாண்டி. (164)

உள்ளத்தொளி யாகவடி ஓங்காரத் துள்ளிருக்கும்
கள்ளப் புலனறுக்க என் ஆத்தாளே
காரணமாய் வந்தாண்டி. (165)

கணக்கனுர் வாசலது கதவுநான் தாள்திறந்து
பிணக்காத பிள்ளையென்று என் ஆத்தாளே
பீடமிடம் பெற்றேண்டி. (166)

மூன்று சுழிவழியே முன்னங்கால் தான்மடித்து
ஈன்று சுழிவழியே என் ஆத்தாளே
இசைந்திருந்த மந்திரமும். (167)

தோன்றுது தோன்றுமடி சுகதுக்கமற்றிடத்தே
மூன்றுவழி போகவடி என் ஆத்தாளே
முதியமன மாச்சுதடி. (168)

சுத்த மத்தமற்றே தொண்டராய்த் தொண்டருடன்
அத்திவித்தின் போலே என் ஆத்தாளே
அதிக மளித்தேண்டி. (169)

வித்துருவத் தோடே விநாயகனைத் தாள்தொழுது
அத்துருவம் நீக்கியடி. என் ஆத்தாளே
அறிய வளித்தேண்டி. (170)

மின்னார் விளக்கொளிபோல் மேவுமிதே யாமாகில்
என்னாலே சொல்லவென்றால் என் ஆத்தாளே
எழும்புதில்லை யென்னாவு. (171)

அரூபமாய் நின்றானை அகண்டபரி பூரணத்தைச்
சொரூபமாய் நின்றிடத்தே என் ஆத்தாளே
தோன்றிற்றுத் தோன்றுமடி. (172)

அட்சரங்க ளானதுவும் அகங்கார மானதுவும்
சட்சமைய மானதுவும் என் ஆத்தாளே
தணலாக வெந்ததடி. (173)

சமையஞ் சமையமென்பார் தன்னையறியாதார்
நிமைக்கு ளுபாயமென்பார் என் ஆத்தாளே
நிலைமை யறியாதார். (174)

கோத்திரம் கோத்திரமென்பார் குருவையறியாதார்
தோத்திரஞ் செய்வோமென்பார் என் ஆத்தாளே
சொரூப மறியாதார். (175)

உற்றார் நகைக்குமடி உறவர்பகைக்குமடி
பெற்றார் இணக்கமடி என் ஆத்தாளே
பேரில் லிணக்கமடி. (176)

தேய்ந்த விடத்திருக்கச் சிந்தையறியுமனம்
ஆய்ந்த விடமெல்லாம் என் ஆத்தாளே
அவசமனம் வீசுதடி. (177)

பேதிச்சு வாழ்ந்ததெல்லாம் பேச்சுக்கிடமாச்சுதடி.
சாதியிவ னன்றெனவே என் ஆத்தாளே
சமையத்தா ரேசுவரே. (178)

நல்லோ ருடன்கூடி நாடறிய வந்ததெல்லாம்
சொல்லவா யுள்ளவர்கள் என் ஆத்தாளே
சொல்லி நகைப்பாரோ. (179)

இன்பமுற்று வாழ்ந்ததடி யென்மாய மாச்சுதடி
தம்பமறத் தள்ளிவிடில் என் ஆத்தாளே
தனம்போன மாயமடி. (180)

வல்லான் வகுத்தவழி வகையறிய மாட்டாமல்
இல்லா னிருந்தவழி என் ஆத்தாளே
இடமறியா தானேண்டி. (181)

கல்லாலே வேலிகட்டி கனமே லொளிவுகட்டி
மல்லால் வெளிபுகட்டி என் ஆத்தாளே
மலவாசல் மூண்டுதடி. (182)

ஆசாபா சம்மறியா தன்பு பொருந்தினபேர்
ஏசாரோ கண்டவர்கள் என் ஆத்தாளே
எவரும நகையாரோ. (183)

இன்பமுற்ற பேர்கடனை யெல்லோரும் பேசுவரோ
துன்பமுற்ற பேர்கடனை என் ஆத்தாளே
சொல்லி நகையாரோ. (184)

விண்ணையெட்டிப் பாராமல் விதத்தை யுற்றுப்பாராமல்
மண்ணையெட்டிப் பார்த்தொருவர் என் ஆத்தாளே
வலுப்பேசி யேசுவரோ. (185)

என்னையிவன் கொண்டாண்டி யிருவினையுங் கண்டாண்டி
சன்னசொல்ல விண்டாண்டி என் ஆத்தாளே
சமையம்பிணக் கானேண்டி. (186)

இந்நிலத்திற் கண்காண ஏகாத மானிடத்தே
கன்னி யழித்தாண்டி என் ஆத்தாளே
கற்பைக் குலைத்தாண்டி. (187)

சுத்தத்தார் பார்த்திருக்கச் சூதுபலபேசிப்
பத்தாவாய் வந்திருந்தான் என் ஆத்தாளே
பாசமதைத் தாண்டி. (188)

அண்டத்தைக் கட்டியடி ஆசையறுத்தாண்டி
தொண்டராய்த் தொண்டருக்கு என் ஆத்தாளே
தோற்ற மொடுக்கமடி. (189)

கற்பனையும் மூன்றுவிதம் காரமாய்க் கொண்டேண்டி
ஒப்பனையு மல்லவடி என் ஆத்தாளே
ஒடுக்க மறியேண்டி. (190)

பாருக்குள் மாயையடி பார்க்கவெள்ளை பூத்ததடி
மோருக்குள் வெண்ணெய்யைப்போல் என் ஆத்தாளே
முழுங்கிக் கலந்திடவே. (191)

உண்மைப் பொருளடியோ ஒடுங்கிநின்ற பேர்களுக்கு
விண்ணிலே போச்சுதடி என் ஆத்தாளே
வெகுபேரைப் பார்த்திருந்தேன். (192)

இரும்பினுறை நீர்போ லென்னைவிழுங்கிக் கொண்டாண்டி
அரும்பினுறை வாசமும்போல் என் ஆத்தாளே
அன்றே யிருந்தாண்டி. (193)

அக்கினிகற் பூரத்தை யறவிழுங்கிக் கொண்டதுபோல்
மக்கனப் பட்டுள்ளே என் ஆத்தாளே
மருவி யிருந்தாண்டி. (194)

கங்குகரை யில்லாண்டி கரைகாணுக் கப்பலடி
எங்குமள வில்லாண்டி என் ஆத்தாளே
ஏகமாய் நின்றாண்டி. (195)

தீவரம்போ லென்னைச் சேர்ந்தபர சின்மயங்காண்
பாவகமொன் றில்லாண்டி என் ஆத்தாளே
பார்த்திடமெல் லாம்பரங்காண். (196)

உளளுக்குள் ளுள்ளாண்டி ஊருமில்லான் பேருமில்லான்
கள்ளப் புலனறுக்க என் ஆத்தாளே
காரணமாய் வந்தாண்டி. (197)

அப்பிறப்புக் கெல்லாம் அருளா யமர்ந்தான்காண்
மெய்ப்பொருட்கு மெய்ப்பொருளாய் என் ஆத்தாளே
மேவி யிருந்தாண்டி. (198)

நீரொளிபோ லெங்கும் நிறைந்த நிராமயங்காண்
பாரொளிபோ லெங்கும் என் ஆத்தாளே
பரந்த பராபரன்காண். (199)

நூலா லுணர்வறியேன் நுண்ணிமையை யானறியேன்
பாலாறு சர்க்கரைதேன் என் ஆத்தாளே
பார்த்தறிந்த பூரணன்காண். (200)

அழுகணிச் சித்தர்பாடல் உ00.

முற்றிற்று.

திருநெல்வேலி சாலியத்தெருவிலிருக்கும் நல்லகண்ணுக் கோனாரவர்கள் குமாரர் அற்புதானந்தசாமி யவர்களிட மிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்தசாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவேதுணை.

140-வது:

மச்சேந்திரநாதரென்ற

நொண்டிச்சித்தர் திருவாய்மலர்ந்தருளிய

சிவயோகம் ௰௬.

அத்துவித வாசாம கோசரத்தை
    அனுபவநிர்க் குணமனோ தீதந்தன்னை
சுத்தநிரா மயவசல துரியந்தன்னைச்
    சுயம்பிர காசமுள்ள சூட்சந்தன்னை
நித்தியபூ ரணயேக நிமலன் றன்னை
    நீங்காது நின்றசிவ சத்திதன்னை
சித்தமதி லேநிறுத்துஞ் சமயாதீத
    சித்தர்பதந் தலைக்கணிய சிறப்புஞ்சீரே. (1)

சீரான மனமென்ற வாசிதன்னைத்
    திரமாகத் தானிருத்தி யோகம்பாரு
நேரான வழியில்மனந் தனைத்திருத்தி
    நிறைந்ததொரு பூரணத்தை நிலைக்கச்சேரு
வீரான மயனென்ற லகிரிபாரு
    மேன்மையுள்ள காயாதி கற்பம்பாரு
தூரான வடிமுடியு மொன்றாய்ப்பாரு
    சுந்தரனே யென்மதலாய்ச் சுகமாய்த்தானே. (2)

தானேதா னிருமூன்று சமயம்பாரு
    தப்பாமற் குருவிருப்பிற் சோதிதோன்றும்
மானான மனுதானுந் தேய்ந்துமெல்ல
    மார்க்கமுள்ள சூரியனிற் சேர்ந்துபோகும்
கானான மதிதேய்ந்து ரவியிற்சென்று
    கலைகுறைந்த விபரமதைக் காணமாட்டார்
நானான வாக்குமன மொன்றதாகி
    நல்லகதிர் மதியதனை நாடிப்பாரே. (3)

நாடியே சோமசூ ரியனைப்பார்க்க
நலமான யோகமடா நன்மைநன்மை
தேடியே காமப்பால் கானற்பாலைத்
திகைத்துவிட்ட சித்தரல்லோ கண்டுதேர்வார்
மோடியே செய்யாம லருவிகொண்டு
முனையான கம்பமதில் வாசிசேர்த்து
வாடியே யலையாமல் வாமப்பாலை
மடுத்துண்டு அவ்வழிபி லேறலாமே. (4)

ஏறலா மெந்தவிதத் தாலுமைந்தா
எழிலான பெருவெளியி லேறிக்கொண்டு
கூறலாங் கலைக்கியானஞ் சகலமுந்தான்
கூர்மையுற்ற வக்கனலைச் சூழ்ந்துகொண்டு
தேறலா மதிசரைந்து ரவியிற்புக்கித்
தீர்க்கமுடன் வாசியென்ற குதிரையேறிப்
பாரெலா மொருநொடிக்குட் சுற்றிவந்து
பக்குவமாய்ப் பதிதனிலே பாய்ச்சலாமே. (5)

ஆமேதான் வாசியிலே பூட்டிப்பின்பு
அப்பனே ரேசகபூ ரகமும்பண்ணி
நாமேதா னலையாமற் கும்பகத்தில்
நடுவணையைத் தானறிந்து நின்றுகொண்டு
ஓமேதான் சத்தாந்தந் தன்னிற்சென்று
உருதியுடன் குருபதத்தை வணங்கிப்போற்றி
காமேதான் வன்னியினாற் சுட்டெரித்த
கருவிதா னுவியந்தக் கசட்டைத்தள்ளே. (6)

தள்ளென்ற கசடற்றாற் சுத்தமாகுந்
தாரணியி லுயிர்களெல்லாந் தயங்காதப்பா
உள்ளென்ற வுடம்பெடுத்தாற் சாகாக்கல்வி
யுடைபவனு யாகவென்று னுன்னைப்பாரு
தெள்ளென்ற அமுதகலை மேலேயேறித்
தீயான நெருப்பாறு மயிர்ப்பாலத்தில்
வள்ளென்ற ஆலசயைநீ யகற்றினுக்கால்
வாய்க்குமடா மயிர்ப்பாலஞ் சொந்தமாமே. (7)

சொந்தமென்ற மயிர்ப்பால மீதிலேறி
சுருக்காக நாதாந்த வீட்டைத்தாண்டி
பந்தமென்ற மதியதனால் விதியைப்போக்கி
பாக்கரனில் மதியதனைப் பதியச்செய்து
முந்தமத்தி னொளிவீட்டின் முன்னதாக
முழித்திருந்து சந்ததமு முற்றுப்பாரு
சுந்தரமாய் நின்றிலங்கு முக்திதோண
சுயஞ்சோதி யானதொரு தீபங்காணே. (8)

காணப்பா சோதியென்ற மின்னலோடு
கனகமெனப் பூரணமாய் நிறைந்ததீபம்
தோணப்பா மகாமேரு நடுவதென்னச்
சொல்கின்ற கீழ்மேலாய் நின்றதீபம்
ஆணப்பா வாலைபதம் பணிந்தாயானால்
அட்டகன்ம மெட்டுவகை யாடலாகும்
வேணப்பா மெய்ப்பொருளா மாதிதீபம்
மிகுந்தறிவ தாகியநன் தீபந்தானே. (9)

தீபமடா அறிவென்ற அகாரமாச்சு
செப்புகின்ற அந்தரங்க வதீதமாச்சு
தீபமடா மேருநடு சொரூபமாச்சுத்
திடமாயக் குறிப்பதனைக் கண்டாயானால்
தாபமடா நீசசில்லை நிலைப்போயில்லை
சாவுபிறப் பற்றதடா சார்ந்துபாரு
ஞாபகமா மூலமடா முப்பாழாகும்
நானேனே னீதுனக்கு நல்லவீடே. (10)

வீடான மூலமடா உகாரரூபி
வித்தாரக் காரிமிகு சலிகைக்காரி
பாடான மாயமுள்ள மார்க்கக்காரி
பக்குவமாம் போதையுள்ள வாமரூபி
கேடாக மதிமயங்கக் கேட்டைச்செய்வாள்
கிளர்த்தறியாள் மூச்சறியாள் கேளாயப்பா
தாடாள மாயமுதங் கொள்ளாப்பேதை
தகமையுள்ள பூரணியை வணங்கிகில்லே. (11)

வணங்கிமிக வடிபணிந்து நின்றாயானால்
மகிமைமிகும் வாலைபவள் வலுமையாகி
சுணங்கிவிளை யாடியுன திடத்திருந்து
சொல்லுவா ளோரெழுத்தும் வீரெழுத்தும்
குணக்குவிந்த மெய்க்குருவைப் போற்றியேற்றிக்
கூரறிந்து வாழாமல் குறிப்பைக்கொண்டு
சுணங்களைப்போ லலைந்தாக்கால் சித்தியாமோ
சுழிமுனையை யெந்நாளுந் துடர்ந்துபாரே. (12)

பாரப்பா சொல்லுகிறேன் மேகத்தெண்ணெய்
பரிவுடனே நன்றாகக் கேட்பாயப்பா
சீரப்பா சகலமே கங்களுக்குஞ்
சிறப்பான சித்தண்டத் தெண்ணெய்தானும்
நேரப்பா படியொன்று வாங்கிமைந்தா
நிகழ்த்துகிறேன் வெள்ளறுகு குமரிதானுங்
காரப்பா வல்லாரை அத்திப்பட்டை
கனத்ததொரு தாளிபூ வரசம்பட்டை. (13)

பட்டையுடன் முள்ளங்கி யாவின்பாலும்
பக்குவமாய்ச் சாறுபடி வகைக்குக்கால்தான்
திட்டமுட னொன்றாகச் சேர்த்துக்கொண்டு
திரமான கடைச்சரக்கு மதுரங்கோஷ்டம்
சட்டமுடன் திரிகடுகு கடுக்காய்ப்பிஞ்சு
சடாமாஞ்சி யத்திதிப் பிலியுஞ்சீரம்
வெட்டெனவே சிறுதேக்குப் பரங்கிச்சக்கை
மிக்கதொரு ரோகணிவால் மிளகிதெல்லாம். (14)

எல்லாமோர் வகைவகைக்குப் பலந்தானொன்று
இதம்பெறவே சுத்திசெய்த வாளமொன்று
நல்லாய்நீ யரைத்திடுவா யிளநீராலே
நலம்பெறவே யிடித்ததனை வடித்துக்கூட்டி
வல்லாய்நீ யனைத்தையுமே சட்டியிட்டு
வாகுபெற மெழுகுபத மாகக்காய்ச்சி
தொல்லுலகில் மாந்தருக்கு வருநோய்கண்டு
சுகமாகக் கொடுக்கின்ற விபரங்கேளே. (15)

கேளப்பா நாளொன்று காற்கரண்டி
கிருபையுடன் காலையிலே யொருவாரந்தான்
நாளப்பா கொள்மருந்தின் பத்தியங்கேள்
நலமாக வறுத்ததுவ ரம்பருப்பு
தாளப்பா விவைதவிற மற்றொன்றுகா
தலைமுழுகிப் பத்தியந்தான் முறிக்குமட்டும்
கேளப்பா உப்புமுதற் கூட்டக்கூடா
கொடுமையுள்ள பத்தியமாய்க் கொள்ளுவாயே. (16)

நோண்டிச்சித்தர் சிவயோகம் ௧௬.

முற்றிற்று.

மதுரை அ. இருளப்பசாமியவர்களிட மிருந்துவாங்கிய ஏட்டுப் பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

கடவுள் துணை.

141-வது:

மச்சேந்திரநாதரென்ற

நொண்டிச்சித்தர் பாடல்.

நொண்டிச்சிந்து.

ஆதி பராபரையாள் சிவசத்தி
அம்பிகையின் பாதமதைக் கும்பிட்டு நித்தம்
கோதிலாச் சுடரொளியிற் றிரிகோணக்
குஞ்சரத்தின் பாதமலர் தஞ்சமாய்க் கொண்டு. (1)

திருமூலர் காலாங்கி போகர்
தென்பொதிகைக் குருமுனி தன்வந்திரியர்
கருவூ ரிடைக்காடர் அத்திரி
கலைக்கோடர் மச்சமுனி புலத்தியரே. (2)

சுந்தரா னந்தர்கபிலர் கொங்கணர்
சூதமுனி கோசிகர் வேதமுனிவர்
நந்தீசர் சட்டைமுனிவர் தன்னை
நான்தொழு தேனடி தான்பணிந்தேன். (3)

அஞ்சுபுலக் கதவறிந்து பிர்ம
ரந்திரத்தி னுண்மைவழி விந்தைதெரிந்து
சஞ்சலந் தனைப்பிரிந்து சித்தாதிகள்
தாள்பணிந் தேனந் நாள்துணிந்தே. (4)

சரியையுங் கிரியையும் விட் டப்பாற்
சாதனமா யோகமதின் பாதமதைத்தொட்
டுரியா தீதவெளிப்பட் டங்கு
சும்மாயிருந் ததைச்சொல்ல எம்மாலாகுமோ. (5)

பராபர வெளிகைக்கொண்டு மனமொன்றிப்
பற்றிடவே சிற்பரத்தி னுற்பனங் கண்டு
நிராதர மான பண்டு சுகநிலை
நீங்கா வானந்தரசம் பாங்கதாயுண்டு. (6)

அடிநடு முடிவு கண்டேன் மோனநிலை
அறிந்துகொண்டேன் ஞானந் தெரிந்துகொண்டேன்
முடிவில்லாப் பரப்பிர்ம சொரூபத்தை
முற்றுங் கண்டேனிகப் பற்றும் விண்டேன். (7)

சுத்தப் பரவெளியே ஒளியாகத்
தோன்றிட மெய்ஞ்ஞானச் சுகமடைந்தேன்
சத்துச்சித் தானந்தத்தைத் தெரிசிக்கச்
சகலமும் பிர்மமயம் புகலரிதே. (8)

நாசிமுனை நடுவில் விளங்கிய
நயனத்திடை வொளியாம் பரவெளியில்
தேசிகன் திருக்கூத்தை அங்கு
தெரிசித்தே மோனநிலை பரிசமுத்தே. (9)

நினைவே கனவெனவும் தெளிந்தந்த
நினைவையு மறந்தெழு கலைமறந்தே
தனதெனுந் தனைமறந்தே சுத்த
சாகரத்தி லுழலாத பாகந்துறந்தே. (10)

ஓமென்ற பிரணவத்தை இன்னதென
உண்மைகண்ட பின்புவெகு நன்மையும் பெற்றேன்
நாமெனு மகங்காரந் தனைவிட்டு
நாட்டந் தெரிந்து கொண்டேன் தேட்டமுடன். (11)

ஆசையை விட்டொளித்து விரிந்தோடும்
ஐம்புலனைத் தானறுக்குந் தெம்பையளித்துப்
பாசந் தனைக்கடந்து குருசொற்
படிதவ ருமலைப் படிநடந்து. (12)

கவனக் குளிகை கொண்டு அதனாலே
ககனமார்க்கந் தனிலே அகனமாய்ச்சென்று
தவமுறுமா சித்தர்கள் வாழ்கின்ற
சதுரகிரிக்குப்போய் குதூ கலித்தேன். (13)

தவசுப் பாறையின்மே லிருக்கிற
சாமிபா ஞானநல சித்தருடனே

சிவசொரூபந்தெரிந்தேன் மனதினிற்
தீபவொளி கண்டபின்பு ஆவலும் விண்டேன். (14)

மூலாதாரந் தெரிந்தேன் தெரிந்தந்த
மூச்சுடரின் தீபவொளி கண்டுமகிழ்ந்தேன்
நாலா கலையறிந்தேன் என்பாட்டன்
நந்தீசர் கிருபையாற் சந்தோஷங் கொண்டேன். (15)

யோகானு பவமறிந்தே மணிபூரகம்
உத்தமர்க்குச் சித்தியென மெத்தவுங் கண்டேன்
சாகா திருந்திடவே விசுத்திநிலை
தன்னிலிருந் தன்னிலையே நன்னிலையதாய். (16)

கண்டதே அங்கு நின்றேன் சிவசத்தி
கற்பனைய தென்றுமகிழ்ந் தப்புறஞ்சென்றேன்
பண்டா ருமையவட்கு அருளிய
பாதைகண்டு ரசபான போதையு முண்டேன். (17)

ஆரு மறிய வொண்ணாப் பூரணத்
தாச்சரியங் கண்டபின்பு பேச்சடங்கினேன்
சீருஞ் சிறப்பும் மிக்க மனோமணி
தேவியரு ளாலறிந்து மேவிக்கொண்டேன். (18)

காமியங் கடந்தவிடம் தினந்தினம்
கண்டறிந்து கொண்டேன்ரிஷி பண்டர்புகழும்
வாமியிவ னெனப்பேர் நன்றாக
வாங்கிக் கொண்டேன்பரத் தோங்கிக் கொண்டேன். (9)

நாதாந்த மோனமெனும் நிலைகண்டு
நானிருந்தே னுறக்கமுனு மற்றேன்
வேதாந்த வழியறிந்தேன் அஞ்ஞான
வீட்டைக் கடந்துமேலாம் வீட்டையுங்கண்டேன். (20)

சாத்திரம் பலபடித்தேன் பொல்லாச்
சண்டாளர் சாவகாசந் தன்னைமறந்தேன்
பாத்திர மறிந்து கொண்டேன் அவருடன்
பத்தியொடு சேர்க்கைசெய்து முத்தியைக்கண்டேன். (21)

உப்பிட்ட பாண்டமிது வந்தவழி
உண்மைதெரி யாதமாந்தர் நன்மையீதென்று
செப்புக் குயமானுர் ஆசைகொண்டு
தேசமதிலே யலைந்து பாசத்துழல்வார். (22)

நிலையிலாப் பொய்க்கூடு இத்தேகம்
நிச்சயம தற்றதென வச்சமதோடு
மலைகுகை தனிலேகி சிவஞான
மார்க்கந் தெரிந்ததி னேர்க்கையாகி. (23)

ஆங்காரமு மொழித்தேன் உண்மைநிலை
அறிந்திடும் நொண்டியெனச் சிறந்திழித்தேன்
பாங்காம் நிலைதெரிந்தேன் குருசொன்ன
பரப்பிர்ம சொரூபத்தின் தெளிவறிந்தேன். (24)

தன்னையுந் தானுணர்ந்தேன் எட்டுத்
தலங்களு மொன்பது வாசலுணர்ந்தேன்
பின்னுமக் கதவடைத்தேன் மேலாம்
பெருவழி யூடுசென்று திருவடைந்தேன். (25)

மாதா மனோன்மணியாள் பீடமதில்
மணிச்சத்தத் தொனியது கணகணென
நாதகி தங்கேட்டுச் சிவதிரு
நடனக்கண் காட்சியை வுடனேகண்டேன். (26)

மந்திரந் தனைத் தெரிந்தேன் ஓங்கார
வட்டமதைத் திட்டமதா யெட்டியறிந்தேன்
இந்திர பீடமுணர்ந்தேன் மோனநிலை
இன்னதென்று கண்டுமனம் நன்னயங்கொண்டேன். (27)

அழியாப் பொருளிதுதான் என்றுதொழு
தகமகிழ்ந்தேன் ஞானச் சுகமடைந்தேன்
வழியா யுணர்ந்தவர்க்கு மோட்சநிலை
வாய்க்குமென்று பேய்க்குணத்தைப்போக்கிப்புகழ்ந்தேன்.

வேத முடிவுணர்ந்தேன் எங்கும்
விளங்கும் பொருளைக்கண் டுளங்குளிர்ந்தேன்

நாதவொளியி லுற்றேன் இந்த
நானிலத்தோர் புகழவே ஞானிபேர் பெற்றேன். (29)

வெட்ட வெளிதானே யாமிது
வென்றறிந்துக் கொண்டவர்வே றென்றையுமுன்னார்
பட்டப் பகலதனே யிருளாகப்
பார்த்தவர்க்குக் காணஞான நேத்திரமுண்டோ. (30)

மூலமூ முதலு மொன்றே என்றுமுன்னாள்
மொழிந்தார் நமதுகுரு மூலான்றே
சாலவே மறைநான்கும் சொன்னதோர்
சங்கைதெளிந் தானந்தம் பொங்கித்ததும்ப. (31)

தான்நா னெனலற்று குருவருட்
டன்னைமற வாமலென்னை யென்னாலறிந்தேன்
ஊனுட லழியாமல் நிஷ்டைதனி
லுற்றவிழி துயிலாத பெற்றிவிருந்தேன். (32)

ஒருபொருள் விரிவாலே கண்டறிந்த
உற்பனமெல் லாம்விழலாங் கற்பனையென்றே
அறிவா லறிந்துகொண்டு சிதம்பரத்
தாடல்கண் டானந்தப் பாடல்விண்டேன். (33)

கோணங்கிச்சித்தர் பாடல் ௩௩.

முற்றிற்று.

ஸ்ரீவில்லிபுத்தூர் மகமதுசாயபு புரம் போஸ்மோஸ்டர், M. R. இராக்கப்பபிள்ளை யவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

பரமபதிதுணை.

142-வது

சுந்தரானந்தர் திருவாய்மலர்ந்தருளிய

வாத சூஸ்திரம் ௱.

காப்பு.

ஆதிசட்டை நாதர்பாதம் அன்புடன் துதித்துமே
நீதியாகும் வாதசாஸ்திரம் நீணிலத்தி லோதவே
சோதியான தாயருளாற் சூட்சாதிசூட் சங்களிவ்
வாதியானோ ருக்குமே வகாரத்தை யுரைக்கிறேன்.

ஆனந்தக்களிப்பு.

தானனே தானன தந்த—தந்தத்
தந்தன தானத் தனந்தனந் தான.

ஆதியாம் பூநீர் வழலை ஆதி
யந்தம தாம்வெடிக் கம்பியும் நேராய்
ஜோதி யழுந்த நறுக்கி அயச்
சுந்தரச் சட்டியிற் றீப்பட நாட்டி
பூதியாம் போகம் நினைக்க எந்தப்
பொக்கிஷ மும்வெட்டி எண்ணெய் கழற்ற
நீதியாய்ச் சொல்லுவேன் கேளாய் புத்தி
நினைவோ டிருப்பார்க்கு நிலைக்குமிச் சேதி. (1)

சேதியா மேரியில் நின்ற முத்துச்
சிப்பிகள் வாயைத் திறந்திடுங் காரம்
பூதிக் குகந்திடும் பூரம் நல்ல
பூவுடன் வீரமுஞ் சேர்த்தே யரைத்து
ஆதிக் கரைத்ததை நீராய் இது
அந்தரப் பிண்டக் கருவென்று சொல்வார்
ஓதி யுணர்ந்திடும் முத்தால் சிவ
யோகிக்கும் போகிக்கும் உண்மையி தாமே. (2)

உண்மையாம் நால்வகை நீரும்   சிப்பிக்
    கோர்வார்கள் திட்டமாய்ப் போட்டந்தநீரில்
தன்மையாம் புஷ்டிகளேத்தி   அந்தச்
    சணைத்தண்ணீ ரிரண்டுக்குஞ் சுருக்கிடச்சாமம்
வண்மையாங் கல்வத்தி லிட்டுப்   பின்னும்
    மாளவெலு மிச்சம் பழத்தண்ணீர் வார்த்துக்
கண்மையைப் போலு மரைத்து   நன்றாய்க்
    கலங்காமல் வில்லையை ரவியி லுலர்த்தி.   (3)

உணர்த்தின வில்லையை யெடுத்து   கல்
    லுணர்வான சுண்ணாம்புக் குள்ளே யழுத்தி
மணத்தை யுண்டாக்கவே சொல்வேன்   வன்னி
    மாட்டி யெரித்து மறுபடி யாட்டி
குணத்தை யறிந்திடப் பாரும்   மேலுங்
    குறையாமற் சாரணை நாலு திரத்தில்
பிணத்தையுந் தட்டி யெழுப்பும்   கெடி
    போன நீரது ஒருவருங் காணார்.   (4)

காணாக லிந்தச் செயநீர்க்   கருவைக்
    கண்காண யிச்சணங் கல்வத்திலிட்டு
நாணாமல் நாலுக்கோர் சாரம்   பின்னும்
    நாட்டிட வீரமும் பூரமுங்காரம்
மேணோர்கள் சூடன் புனுகு   விந்து
    மேதினிக் குருவண்டு கோரோ சனையும்
ஊணோர் களஞ்சி யரையாய்   எல்லாம்
    ஒருமிக்கச் சேர்த்துநீ கிளிபோலுங் கட்டே.   (5)

கட்டிக் குழியி லிரக்கி   பட்சம்
    கண்டிடும் பீங்கான் சிரட்டை யெடுத்து
புட்டியி லிட்டிடச் செயநீர்   நல்ல
    பூவைய ரெல்லோரும் பொங்கமாய்க் காண
அட்டியு மில்லாமல் கேளு   அருமை
    யானது சுன்னக்கல் லானசுண் ணாம்பால்
கெட்டியாய் வெட்டிடுந் தீட்சை   தன்னைக்
    கேளுமீ ரெட்டுப் புடத்தினிற் சுண்ணம்.   (6)

சுண்ணமும் ஓரிடை கூட்டி எந்தன்
துரையான பாரையின் உப்பொன்று கூட்டி
எண்ணமில் லாமலு மாட்டி பிதை
இரவியில் தாக்கி யுலர்ந்தபின் நன்றாய்க்
கண்ணவே சுண்ணத்துள் வைத்து அதைக்
கனமாகக் குக்குடப் புடந்தனிற் போடச்
சுண்ணமே உப்பது சுண்ணம் சிவ
சூட்சத்தைக் கண்டு சுருக்கமாய்ச் சொன்னேன். (7)

சொன்ன குருச்சுண்ண மொன்று நேராய்
சோதியைத் தந்திட நாகர சிதம்
என்னவென் றுலுமே வெட்டை யிதை
யிரண்டொரு நாளரை அண்டநீர் தன்னால்
நன்னய மாகஉ ரைத்தேன் விந்து
நாதன் திருவடி காணவும் ரவியில்
மன்னிய மாத்திரை செய்து வெயிலில்
மயங்க உணர்த்திப்பின் னெட்டுநாட் போடே. (8)

போட்டிடு மேலது வெள்ளி மேலும்
பேசிய செம்பது மூன்றிடை சேர்த்துக்
கூட்டியே மூசையி லிட்டால் வலிந்து
கூடும் பருவத்திற் குருவொன்று தாக்கி
தாட்டிக மாக வெடுக்க மீறும்
சந்தேக மில்லாத பொன்னிது பாரு
குட்டி யெடுத்துக்கொள் நீயே நான்
சொல்வது பொய்யல்ல செய்துநீ பாரே. (9)

பாருமே யினியொரு செய்தி முத்தி
பத்திடச் சதுர கிரிலிங்க ரருளால்
தீரும்நோய் காயமுஞ் சித்தி சித்தர்
செய்முறை யொன்றுண்டு சொல்கிறேன் கேளாய்
ஊரினில் கெவுரியு மொன்றே யுண்மை
உத்தமச் செயநீரும் ஒருதுளி விட்டுச்
சேருநீ வாய்நீரினாலே சித்தஞ்
சிதறாமல் ஒருசாமம் ஆட்டி யரைத்தே. (10)

அரைத்துப் பணம்போலும் ரவியில் வைத்து
அதுநல்லா யுணர்ந்தபின் னதைவகுப் பதுகேள்
உரைத்தேனான் துத்தநா கத்தைக் குகை
ஊலைசயிலிட்டு உருக்கு பலந்தான்
இரைத்தினி யீய்ந்திடுகி ராசம் வேறாய்
யீய்ந்திட யீய்ந்திட வாங்கிடும் பாரு
புரைக்கடங் காதிது வெட்டை. புகழ்
புகட்டுமே தங்கத்தை அதுயிடை கூட்டே. (11)

கூட்டிடு மூசையி லிட்டுக் குணமாய்க்
கூட்டிக் கலந்தபின் களங்கம் போல்நிற்கும்
மாட்டிடுங் கல்வத்தி லிட்டு மைபோல்
வாங்கி யரைத்திடு சூதமுஞ் சேர்த்துப்
பூட்டிய செயநீ ரிரண்டும் நன்றாய்ப்
புகட்டிடு யுணர்த்திடு யரைத்திடு கட்டும்
வாட்டிடு சுண்ணாம்புக் குள்ளே வைத்து
மாட்டி எரித்து மகிழ்ந்திடக் கேளாய். (12)

கேளா யதையெடுத் தேதான் நீயும்
கெடியாகக் கல்வத்திற் கெணிதமாய்த் தாக்கி
நாளான அண்டநீ ராலே நன்றாய்
நாட்டி யரைத்து மெழுகது போல
வாளான மாத்திரை செய்து பின்னந்த
மான்செம்பு வெள்ளியி லீய்ந்தா லப்போது
மாளாது வேதைபொய் யாது மகிமை
வாய்த்ததோர் பொன்னென்று மகத்துகள் சொல்வார். (13)

சொல்லுவார் காலனைச் செயித்து வேண
சுருதியாய் நீடூழி காலமும் வாழ்வார்
தொல்லுல கிற்செல்லுங் கற்பம் துறையாய்த்
தோன்றிடும மார்க்கம் துரிதமாயுண்பார்
அல்லும் பகலுமென் னாசை வைத்து
ஆங்குதா னேங்குவா ரரிகரியென்று
நல்லதொரு வேதையிது நீதான் செய்து
நாட்டமுடன் பேறோங்கச் செய்துநீ பாரே. (14)

தீரடா அட்டகெச மட்டமானுகங்
திறமான அட்டசத்தி அட்டபாலாள்
வாரடா அட்டதுற்கி கிரகராசி
வயனமாய் முப்பத்துமுக் கோடிதேவர்
ஊரடா நாற்பத்தெண் ணுபிரரிஷிதான்
உத்தமனே யுண்டவர்கள் பீஷம்போடு
பாரடா யிவர்களுட பீஷந்தன்னைப்
பண்பாக வுன்றனக்கு அறைகிறேனே. (27)

அறைகிறேன் சத்தசக் கரத்தின்மூலம்
அப்பனே சத்தியுட மூலத்தோடு
நிறைகிறேன் ரதமூவமூம மூலமூலம்
நேரான தேவதைகட் கெல்லாமாச்சு
பறைகிறே னுவல்லோ பிரிந்துதப்பா
பண்பாகத் தேவதைகள் வெவ்வேறென்று
நிறைகிறேன் மறைவாகச் சொன்னதென்று
நீதானுங் கிலேசிக்க வேண்டாங்கேளே. (28)

கேளடா நால்வாசல் மூரேகைக்குள்
செடியாக யிருவீதி தன்னிலேதான்
நாளடா நாதமுள்ள சங்குசூலம்
நலமான சக்கரமு மழுவுமாட
ஆளடா நாட்டிப்பின் மழுவின்சக்ரம்
அப்பனே சூலமொடு சங்காகத்தான்
தாளடா தலைமாறித் தலைமாறித்தான்
தயவாக யிருவீதி தன்னில்நாட்டே. (29)

நாட்டிடவே மூலத்தினட் சரத்தைக்கேளு
நன்றாகச் சத்தசாக ரத்தைக்கேளு
ஆட்டிடவே சாகரந்தான் தண்ணீராச்சு
அப்பனே தண்ணீர்தான் மாலின்மூலம்
நீட்டிடவே அவர்மூல மங்கென்றானு
நிசமாகச் சத்தியுட மூலங்கேளு
தீட்டிடவே உங்கென்று யிட்டுப்பின்னே
திடமான ரதமூலம் விபரங்கேளே. (30)

விபரமென்ற ரதமூலம் வகாரம்நாட்டு
விளங்கவே மும்மூலம் மூலங்கேளு
தபரமென்ற கணபதியின் சுழியைநாட்டித்
தயவாக முன்சொன்ன மூலமத்தி
நபரமென்ற யிருவீதி தலைமாறியிட்டு
நன்றாக வதினடுவே அட்சரத்தைநாட்டில்
எபரமென்ற முப்பத்துமுக் கோடிதேவ
ரெல்லோர்க்கு மிப்பீசம் நாலுந்தானே. (31)

தானென்ற எட்டுவகை யாட்டத்தைத்தான்
தயவாகத் திருமூலர் மூன்னூற்றுள்ளே
வேனென்று பாடிவைத்தார் மூலஞ்சொல்ல
வில்லையடா நான்சொன்னே னவர்நூலைத்தான்
ஆனென்று பார்த்தட்ட கர்மத்தைத்தான்
ஆடப்பா அவர்சொல்மந் திரப்படிக்குக்
கானென்ற அவர்நூலென் னாலுமொன்று
கருத்தியினி யறுசுவையுங் களறக்கேளே. (32)

கேளப்பா அறுசுவையுங் களற்றுமார்க்கங்
கெடியான வொருநூற்றுப் பத்துக்குள்ளே
நாளப்பா வரிசையுடன் பாடிவைத்தேன்
நன்றாக அப்படியே களத்திப்போட்டு
வாளப்பா கற்பங்கள் கொள்வதற்கு
வயனமா யென்தந்தை நூலைப்பாரு
சோளப்பா வாராது கற்பங்கொள்ளக்
கூறினார் நன்றாகக் கூர்ந்துபாரே. (33)

கூர்ந்துபா ரறுசுவையுங் களற்றுமுன்பே
கொள்ளுகிற கற்பத்தின் வரிசைகேளு
நேர்ந்துபார் பத்தியங்கள் வைக்கவேண்டாம்
நினைவாக ஐந்துமுதல் நூறுமட்டுங்
தீர்ந்துபார் மிளகதனைக் கொள்ளும்போது
சிறப்பான மூதண்டக் கிஷாயங்கொள்ளு
சேர்ந்துபார் நூறான தினங்கொண்டேபின்
செப்பினே னுடல்தனிலே நோய்நாடாதே. (34)

நாடாதே அமுரிதனைத் தினந்தானப்பா
நன்றாக முன்விட்டு நடுவிலேந்தி
வாடாதே ஆழாக்குக் கொண்டுவாநீ
வரிசையுடன் மிளகைவிட்டு யிதைக்கொள்ளாதே
தேடாதே மிளகுசதங் கொண்டதின்மேல்
தினந்தவிரா தேமிளகை யுண்டுகொண்டு
ஆடாதே அமுரிதனைப் பின்னேகொள்ளு
ஆச்சரியம் நோயணுகா துடலிற்றானே. (35)

தானென்ற மிளகமுரி கொள்ளும்போது
தயவான கடுகெண்ணெய் நந்திக்காயாம்
வேனென்ற செம்மரியும் வராகந்தானும்
விதமான வுளுந்தோடே கூட்டிக்கொண்டு
மானென்ற கற்பங்கள் கொண்டுவாநீ
வரிசையுடன் பத்தியத்தால் முறிவாய்வீங்கும்
நானன்றாய்த் திறந்துசொன்னேன் சித்தர்சொல்லார்
நன்றாக ஆதிகற்பம் பாடினேனே. (36)

பாடினே னறுசுவையுங் களத்திப்போட்டால்
பத்தியமங் குண்டப்பா முன்னேயில்லை
நாடினேன் பேதையுடன் கூடும்போது
நன்றாக ரண்டுகற்பம் போதும்போதும்
மூடினேன் மிளகமுரி கொள்ளும்போது
மூலமது சுத்திசெய்து வழலைவாங்கு
கூடினேன் பிராணாயம் பண்ணிவாநீ
கொள்ளேயடா யிந்தமுறை வுலகத்தோர்க்கே. (37)

கற்றோர்க ளிந்தமுறை கொண்டபின்பு
கனமாக விந்துகட்ட வேணுமென்றால்
முத்தான அறுசுவையுங் களத்திப்போட்டு
மூன்றுமண்ட லங்கடுக்கங்காய் கொண்டாற்கேளு
வித்தான விந்துவிது கட்டிப்போகும்
விள்ளாதே யிக்கருவைப் பெரியோர்சொல்லார்
வத்தென்ற விந்துகட்டிப் போனபின்பு
வல்லாரை கொண்டுவிடச் சாவுபோச்சே. (33)

போச்சப்பா பிருநூறு வருடத்துக்கு
பொறியாசை யுடன்போச்சு புனிதமாச்சு
ஆச்சப்பா யினிமேற்றான் கற்பங்கொள்ள
ஆச்சரியங் கொங்கணர்தன் னூலைப்பாரு
சாச்சப்பா கைமுறைகள் நன்றாய்ச்சொன்னார்
கலங்காமற் கொண்டுவிடக் காயசித்தி
வீச்சப்பா விதைவிட்டு யோகிக்கென்றால்
வெகுசுருக்காய்க் கற்பமது விள்ளுவேனே. (39)

விள்ளுகிறே னுதிகற்பம் ரண்டுங்கொண்டு
மேலான கடுக்காய்தான் கொண்டாயானால்
வள்ளுகிறேன் விந்துவது கட்டிப்போகும்
வரிசையுடன் பூசைவிதி முப்பத்தாறில்
கொள்ளுகிறேன் வாலைகற்பம் பாடினேன்யான்
கூர்ந்துநன்றாய்ப் பூசைசெய்து கற்பங்கொள்ள
மள்ளுகிறேன் மூன்றுகற்ப முன்னேகொண்டு
வரிசையுடன் வஸ்துவைத்தான் பின்னேகொள்ளே. (40)

கொள்ளப்பா அப்படியே முறித்துமுன்னே
கொண்டபின்பு தேன்கலந்து கொண்டுவாநீ
விள்ளப்பா மறுபடிதான் தனியேவாங்கி
விதமாகக் கொண்டுவிடச் சாவுபோச்சு
நள்ளப்பா தனியேதான் கொள்வதற்கு
ஞானமைம்பத் தொன்றதிலே நயந்துபாரு
வள்ளப்பா நாற்பத்து முக்கோணபூசை
வழியாகச் சொல்லிவிட்டேன் வரிசைதானே. (41)

தானென்ற பூசைசெய்து கற்பங்கொண்டால்
தவறாது யீராறு தலமுந்தோணும்
பானென்ற பானத்தின் லகிரியிலேநின்று
பாரப்பா புருவத்தில் மனதைவைத்து
வானென்ற சுழினையது துறந்துபோகும்
மாச்சலமெத்தத் திபவொளி கண்கொள்ளாது
கோனென்ற ரவிகோடி காந்திகாணும்
கூறொண்ணாக் காந்தியிலே மனங்கூசாதே. (12)

கூசாதே யென்றுசொல்லிக் கைலாசமூர்த்தி
கூறினா ரவரருளால் மூலங்கண்டேன்
ஏசாதே மேலஞ்சுங் கண்டேன்கண்டேன்
என்மக்காள் மேலாறு மேறிச்சென்றேன்
வாசாதே விட்டகுறை வந்ததானால்
மைந்தனே ஆதிகற்ப மூன்றுங்கொண்டு
பேசாதே முன்மவுனங் கொண்டாயானால்
பிலக்குமடா காயசித்தி பிலக்கும்பாரே. (43)

பாரப்பா மவுனமென்ற பக்குவந்தான்
பண்பாகச் சிவப்பான மூலியிலேகேளு
நேரப்பா முதற்றாத்தில் வாங்கிக்கொண்டால்
நிமிஷத்தி லீராறு தலமுந்தோணும்
ஆரப்பா லகிரிகொள்ளு மென்றீரையா
ஆப்பிடுமோ லகுவிலே மவுனஞானங்
காரப்பா கிடையாட்டால் பூரணலேகியத்தைக்
கைமுறையாய்ச் செய்துகொண்டு உண்டுதேறே. (44)

தேறென்றேன் பூரணலே கியந்தானப்பா
செய்துகொண்டு நன்றாக வருட்டிவைத்து
வாரென்ற பிராணாயஞ் செய்யும்போது
மைந்தனே கொண்டுமனம் புருவமத்தி
ஏரென்று வைத்தாக்கா லங்கேநிற்கும்
என்மக்காள் யோகத்துக் கிதுதான்மூலம்
நீரென்ற பானமது வந்தபோது
நீகொள்ளும் லேகியத்தைத் தினந்தான்கொள்ளே. (45)

கொள்ளுதற்கு லேகியத்தைச் சொல்லக்கேளு
கூறான மிளகொடுகி ராம்புஏலம்
விள்ளுதற்குச் சாதிக்காய் பத்திரியுஞ்சீரம்
வெண்சாரப் பருப்புடனே அபினுங்கூட
மள்ளுதற்குக் கசகசாவொண் பதையுமக்காள்
மகத்தான அபின்நிற்க வருத்துமெட்டை
தள்ளுதற்குப் பொடியாக்கி வைத்துக்கொண்டு
தனதான பீங்கானிற் கடக்கவையே. (46)

வைத்துக்கோ ரக்கரிதன் மூலிதன்னை
வரிசையுடன் நவபுடமுந் தீர்ந்திடித்து
வைத்துவடி கட்டிமுன் றாளில்ரெட்டி
வாகாகக் கலந்தடுப்பில் மறுசட்டியேற்றி
வைத்தபின்பு வெல்லமதிற் போட்டுருக்கி
மைந்தனே சர்க்கரையுங் கூடப்போட்டு
வைத்தஅபின் போட்டுபொடி யெடுத்துக்கொட்டு
வரிசையுடன் கிண்டிநெய்யுந் தேனும்வாரே. (47)

வார்த்திரக்கு சிவப்பான மூசைதன்னில்
வஸ்துவைநீ யதில்வாங்கி விட்டுக்கிண்டிச்
சேர்த்துநன்றாய் குளப்பியதை வைத்துக்கொண்டு
சிவகாமி தன்னுடைய பூசைசெய்து
காத்துநன்று யோகமது செய்யும்போது
கனிவாகக் கொண்டுவிடக் காயசித்தி
பார்த்துடனே லேகியத்தை விட்டாயானாற்
பலநினைவு வந்துவிடும் பாருபாரே. (48)

பாரப்பா ஒருநூற்றுப் பத்திலேதான்
பாடினேன் வாதவித்தை யுலகத்தோர்க்கு
நேரப்பா யேழுபத் தஞ்சுதன்னில்
நேராக வைப்புமுறை நீட்டிச்சொன்னேன்
ஏரப்பா யைந்துபத்தா மொன்றுதன்னில்
இயம்பினேன் ஞானமினி உண்டோயேது
ஊரப்பா பூசைவிதி முப்பத்தாறில்
உரைத்தேனுன் கைமுறைக ளெண்ணிப்பாரே. (49)

பாரப்பா யோகமது செய்தானானால்
பரிவான வாதமது பலிக்குஞ்சித்தி
நேரப்பா செய்யாட்டால் வாதமில்லை
நினைவாலே சுட்டழிந்தால் பலியாதொன்றுஞ்
சாரப்பா யோகத்தால் குளிகைசித்தி
தப்பாது சாரணையைத் தீர்ந்துகொண்டு
ஆரப்பா பொதிகையிலே யேறிச்சென்று
அகஸ்தியரைத் தெண்டனிட்டு மேரிற்செல்லே. (50)

செல்லப்பா கைலாச மூர்த்தியங்கே
    சிறந்திருந்தார் தெண்டமிட்டு மயேந்திரத்தில்
நல்லப்பா ஆயிரத்தெண் சித்தரோடே
    நானிருப்பேன் வந்துதெண்டம் பணிந்தாயானல்
கல்லப்பா காயசித்திக் கேற்றகற்பம்
    கனக்கவுண்டு தருவேனுன் சித்தனுவாய்
அல்லப்பா யெனையாண்ட கைலாசமூர்த்தி
    அருளாலே சொல்லிவந்தேன் தீட்சைமுற்றே. (51)

சுந்தராணந்தர்தீட்சாவிதி ருய,

முற்றிற்று.

மதுரை வடக்குவாசல் யானைக்கல்தெரு வித்வான் மு. குழந்தை வேலுப்பிள்ளை அவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவே துணை.

164-வது:

சுந்தரானந்தர் திருவாய்மலர்ந்தருளிய

மெய்ஞ்ஞானச் சுருக்கம்.

பூரணத்தா லுற்பவித்த சுந்தரன்றான்
புகட்டுகிறேன் சிவஞான போதந்தன்னைப்
பூரணமே பொருளென்ற பெரியோரெல்லாம்
புக்கினார் சிலம்பொலியிற் போதத்தாயைப்
பூரணமே பொருளென்றே நிலைத்தாய்நீயே
புரிசடையோ னருள்பெறவாய் போதமீறும்
பூரணத்தி லடைவதற்கு வகையுஞ்சொல்வோம்
புகட்டுவோம் சிவனருளைப் போதந்தானே. (1)

தானென்ற நிலைமறந்து குருவாய்நின்ற
தற்பரத்தி லாறுவரை தாண்டியேறித்
தேனென்ற மதுவிருக்கும் மனையிற்சென்று
தேவியிரு தாள்பணிந்து தேகந்தன்னைக்
கோனென்ற குருவடிவா யெடுத்துக்கொண்டாற்
கோடிரவி போற்காந்தி கூசுங்கண்கள்
பானென்ற குருவைவைத்துத் தாயைப்பூசிப்
பதினாறு மீய்ந்திடுவாள் பாருபாரே. (2)

பாரென்றே யிந்தமுறை யார்க்குச்சொல்வோம்
பரிவான சிவயோகி பரமஞ்ஞானி
ஊரென்றே அறிந்திருக்கும் பெரியோரான
உத்தமர்க்கு முனக்குமல்லோ உரைத்தேன்யானும்
காரென்றே னுன்னுள்ளே நம்மைவைத்துக்
கருணையுள்ள திருவடிவாற் கண்டுதேறு
நேரென்றேன் ரவிமதியு மொன்றாய்நின்ற
நிலையில்நின்றேன் நீகலந்த நினைவுநன்றே. (3)

சமனுகச் சேர்த்தரை சாமம் இதில்
தாஷ்டகம் பார்க்கவும் என்னுலு மாகா
அமனுக வில்லைசெய் நன்ருய்ப் பின்னும்
அருணனுஞ் சுடர்பட அனலில்வைத் தெடுத்துப்
புமனுருஞ் சுன்னத்துள் வைத்துத் துதி
புகழ்ந்து புடத்தினிற் போட்டிடு நீறும்
விமனுகு மிதையெடுத் தேதான் இது
விளக்கிடும் சுன்னநீர் விபரமீ தாமே. (47)

நீறுமே யுப்பது சுன்னம் நிலையாய்
நீடூழி வாழ்ந்திட ரசிதம்ரெட் டிக்க
வீறுமே யுருகின நீரால் விதமாய்
வேண்டியே யொருநாளில் மேவி யரைத்துத்
தேறுமே யண்டத் தெளிவைச் செப்பார்
சேர்த்தொரு நாளரை சிர்குறை யாமல்
ஆறுமே யீராறு பேரும் சுந்த
ரானந்த ராகிய அதிசெய வுப்பே. (48)

உப்பினம் பிறந்தது ஆணி அந்த
ஊரலை வென்றது சுன்னங்க ளாலும்
தப்பில்லை ரசிதத்தில் வர்ணம் லகுவாய்ச்
சாந்தமாய் ரேகிக்கும் முரிக்கின நீரும்
ஒப்பாகக் கற்பிக்கும் அண்டம் அந்த
உறுதியாந் தெளிவிலே கண்டது சோதி
செப்பார்கள் நாதாக்க ளுப்லை யிந்தச்
செகத்திலும் சடத்திலும் உண்டென்றுஞ்சோதி. (49)

சோதியைச் சொன்னேன்பா ரின்னம் நான்
சொன்னது பொய்யல்ல கைமுறை காணுர்
ஆதியாம் வெள்ளீயஞ் செம்பு அழுத்தி
அமர உருக்கிமுன் குருவொன்று தாக்கு
வாதியாம் பேருமுண் டாகும் எவரும்
வணங்கிட முத்தியும் பத்தியுண் டாகும்
நீதிகின் றிலகுமிக் காயம் நினைவாய்
நீடூழி வர்த்திக்கும் தேகமுஞ் சித்தி. (50)

சித்திக்கும் வெகுசுழு வாகும் — சோய்ச்
　　சிதராமற் பதராம லறிவாகப்பாரு
பத்தியுடன் மானிடர் பிழைக்க — விதை
　　பண்புடன் கண்டால் தரித்திரம் நீங்கும்
வெத்தியா மென்னூல்பொய் யல்ல — மூன்பு
　　வேண்டிய தொழிலெல்லாம்வெளியாய்ச்சொன்னேன்காண்
நித்திய மனுசரி வாசி — நிலைமை
　　நெறியாகப் பூசிக்கக் குளிகைசித் திக்கும். (51)

பூசிக்க வொருவழி சொல்வேன் — மனப்
　　புத்தியைக் கட்டினூற் புகழ்விக்குங் காணும்
ஆசிக்கச் செம்புப் பொடியை — நன்றாய்
　　அரபொடி பலமொன்று சூதமு மொன்று
நேசிக்கக் கல்வத்தி லிட்டு — அதில்
　　நிலையாய்க்கம் மாருவெற் றிலைச்சாறு பிழிந்து
மாசிக்கு மூன்றுசா மத்தில் — விதமாய்
　　மாட்டி யரைத்து மணியது வாக்கி. (52)

மணிக்குக் கலசங் கொடுத்து — அதில்
　　மத்தங்காய் விரைதள்ளி யரைத்துநீ பூசி
திணிக்கும் விளாங்காய்போல் திட்டம் — கட்டிச்
　　சிலைமண் ணிட்டதன் மேலுமே சுத்தி
அணிக்குமே ஒண்ணரை யெருவிற் — புடம்
　　ஆரின பின்னெடு மூன்று புடத்தில்
கணிக்கும் பருத்திக்காய் மூன்று — காணுங்
　　கற்றூனைச் சோற்றினில் மூன்று புடமே. (53)

புடமிட்டுக் கடுக்காயின் பூவில் — மேலோர்
　　புகல்வது மூன்று புடத்தினிற் கட்டும்
விடவிடத் தாரியில் மூன்று — கம்மாறு
　　வெற்றிலைச் சாற்றிற் புடந்திரு மூன்று
கடத்திற் சவுக்காரம் மூன்று — கண்டேன்
　　கனவெட்டை மணியதை யிடித்திடு தூளாய்
திடமான சூதத்தைப் பின்னும் — வெகு
　　திறமாக வொருபலஞ் சேர்த்து அரைத்தே. (54)

அரைத்ததை முன்போலக் கவசம் அதை
யாட்டி யமைத்திடு சோடசத் திட்டம்
மரைத்திடும் அந்த மணியைச் சொல்ல
மதிப்பாரு முண்டோவென் மணியைநீ காண
உரைத்தேனே கல்வத்தி லிட்டுப் பொடிசெய்
துறவாக வெற்றிலைச் சாறுவிட் டாட்டி
விரைத்தினி மாத்திரை செய்து செப்பு
வெள்ளிதனி லீய்ந்தாலீ ரஞ்சுதப் பாது. (55)

தப்பாது தனரேக்கு வெள்ளி யிரண்டும்
சரியிடை பலமொன்று வகையாக வாங்கி
அப்போது கல்வத்தி லிட்டு நீயும்
அதுக்கான சூதம் பலமொன்று தாக்கி
இப்போது ஆட்டிடு மூன்று சாமம்
இனிவாகக் கம்மாரு வெற்றிலைச்சாற்றால்
எப்போதுங் கைப்பத மாகக் கவசம்
மிட்டுமுன் கட்டின திட்டம தாக. (56)

திட்டமாய்க் கட்டின மணியைப் பின்னும்
சேர்த்திடு சூதத்தை யதனிலே பாய்ச்சு
எட்டிடு முன்போலப் புடங்கள் எங்கு
மேங்காமல் மாத்திரை செய்திட வேதை
அட்டியில் லாமலுங் கண்டேன் குளிகையோ
டழகான கம்மாரு வெற்றிலைச் சாற்றை
விட்டுடன் செம்பையும் சேர்த்து அதில்
வெள்ளியு முருக்கிட வீரஞ்சுமாற்றும். (57)

சாபங்கள் பூட்டினார் சித்தர் என்றாற்குச்
சாபங்க ளிலேசட்டை நாரதரு ளாலே
பாபங்க ளும்விலகிப் போகும் யோகப்
பத்தியுடன் சித்தமாய் சித்தியம் நினைத்தால்
தாபங்க ளகன்றிடும் மேலும் சிவ
சச்சிதா னந்த நவமுனிவ ராலே
கோபங்கள் வாராமற் பார்த்து யிந்தக்
குளிகையை யறிந்தேயெடுத்திடு சொன்னேன். (58)

சொன்னசொல் தங்கமிப் படியே சுருதி
    சூட்டவும் வெங்கலம் பித்தளை செம்பு
அன்னமாம் வெள்ளியம் நாகம் அதி
    லானது வெள்வங்கம் அயப்பொடி கூட்டிக்
கன்னமாந் தினுசுக ளொன்றாய்க் கண்டு
    காத்தெடு பலமொன்று சரிசமதாக
வன்னமா மானதுபொன் போல இரண்டாய்
    வாழ்த்தி யெடுத்துமுன் சொன்னசொற் படியே. (59)

படியான சூதங்கா ணொன்று பத்திப்
    பார்த்திடும் அயப்பொடி பலமுமொன் றாகத்
திடியாக விரண்டுமே ஆண்பெண் சொன்ன
    சூதை யறிந்திடு மென்னைப்போற் சொல்லார்
நொடியாக மூன்றுசா மத்திற் கல்வில்
    நுணிக்கி யரைத்திடு மணியாகக் கட்டி
அடியாருக் கடியாராய்ப் பின்பு அந்த
    ஆனந்தக் கவசத்தை அழகாகப் பூட்டி. (60)

பூட்டிடு மிரண்டே யெருவிற் புடம்
    போட்டபின் சோடசத் திட்டப்படியே
காட்டிடுங் கல்வத்திலிட்டுக் கண்ட
    கம்மாரு வெற்றிலைச் சாறுவிட் டாட்டி
ஊட்டிடும் வெள்ளித்தாம்பூ ரத்தில் நன்று
    யுகந்திடும் பத்துக்கு ஒன்றாகத்தாக்கு
நாட்டிடும் தங்கமி ரக்கும் இந்த
    நாதாந்த மகத்துக்கள் வேதையைப்பாரு. (61)

மகத்துக்கள் சொல்மொழி பொய்யா யிந்த
    மானில மாந்தர்கள் மருமங்கள் மெத்த
ஜகத்துச்சந் தேகந்தீர்ந் திடுங்காண் சற்றுஞ்
    சாடைகள் கண்டிடுஞ் சூதர்கள் தானும்
வகத்தவந் தனஞ்செய்து பணிவார் சிஷர்
    மாண்டிடப் போறார்கள் தர்க்கஞ்செய்திடுவார்
அகத்தீச ரடிபணிந்து வாசி கண்டு
    ஆண்டவனைத் துதித்துப்பின் சூத்தானைப்பூசி. (62)

பூசைசெய் திடுநாதன் பாதம் புகழப்
போற்றிடு கைமுறை சித்திச்குந் தானாய்
ஆசைவைத் திடுகெற்பங் கொள்ளு அமுரி
ஐயம்வைத் திடுகாம லமுதம்போ லெண்ணி
ஓசையாய் நின்றநீ வாங்கும் பின்பு
ஒருபடி சலத்துக்குக் காற்படி சுன்னம்
காசை யறியும் படியாய் அதைக்
காய்ச்சிடு மூன்றுநாட் போனபின் வாங்கி. (63)

வாங்கிடும் பாஷாணஞ் சொல்லுவேன் வலுவாய்
வாங்கி யொருபலஞ் சிரட்டையிலிட்டு
ஆங்கடுப் பதனிலே யேற்றி யெரித்து
அழகான அமுரியைச் சுருக்கிடு கட்டும்
ஓங்கி யொருபடி தாக்கு உற்று
உறவான பாஷாணந் தன்னை யெடுத்துத்
தாங்கிடுஞ் சுண்ணாம்புக் கல்லில் சதுராய்த்
தாக்கிடு நடுவினில் வைத்து யெரிக்க. (61)

எரித்திடு நனவுநீ காட்டி யிதமா
யிரண்டுசா மத்தினிற் கட்டிடும் வெள்ளை
அரித்திடுஞ் சாரணை யிரண்டில் அழகா
யாகுமே சுண்ணம்போல் அறுபத்தி நாலு
உரிக்கிடுஞ் சரக்கெல்லாம் உப்பு லவண்
உத்தமச் சுண்ணாம்பில் வைத்து எரிப்பார்
சிறியோரும் பெரியோரும் மகிழ ஞான
சித்தியுட னறுபதும் வேதையுண் டாச்சே. (65)

உண்டாச்சு கட்டுக் கமுரி யுறமா
யுப்புடன் காரம் புளிப்பும் சரியாய்
விண்டேனே சரக்கெல்லா மாளும் விபாம்
விள்ளாதே யொருவர்க்கும் நீருகள் சொல்வேன்
அண்டர் பிரானுக்கும் ஒப்பாம் இது
யானை அமுரி குதிரை யமுரி
தொண்டர்தம் வெள்ளைக் கழுதை ஒட்டகை
சுத்தயமுரியும் ஒப்பாகுங் கண்டாய். (66)

கண்டது மாட்டின அமுரி கருதும்
காத்திடும் எருமையி னமுரியு மாகும்
கொண்டது பசுவின் அமுரி வகைக்
கொருபடி யெடுத்துநீ சுற்சுண்ணத் திற்கு
கண்டமுரி நாலு படிக்குச் சுண்ணத்தைக்
கனமாக ஒருபடி போட்டிடு தெளியும்
தண்டுமுண் டாகச்செய் யாதே சித்தஞ்
சலியாமல் யோசனை மூன்றுநாட் பாரு. (67)

பாருமே கட்டுக்குத் திட்டம் பருவம்
பார்த்துமே சாதிக்குச் சாதியி னமுரி
போருமே யொன்றாகச் சேரும் புத்தி
பூவுதன் னுப்புகள் கட்டுமே கட்டும்
சீருடன் சொன்னேன்யான் கண்டு வெகு
திரமதாய்ச் சோதித்துப் பார்த்திடும் வேதை
தீருமே எங்கெந்தச் சரக்கும் சுகமாய்த்
திரண்டு சுருக்காய் உருண்டிடும் கண்டாய். (68)

சுருக்காகும் வெள்ளைப்பூண் டென்பார் யிந்தத்
தொல்லுல கினிலிதன் சூட்சத்தைக் காணார்
தருக்காகும் அத்தயிலம் வாங்கி உனது
தரித்திரம் நீங்கிடு மதைச்சுருக் கிடவும்
பொருக்காகச் சரக்கெல்லாங் கட்டும் புகை
போகாது சுண்ணும்புக் குள்வைத் தெரிக்க
திருக்கில்லா சாரமி தாகும் சீராய்ச்
சிதறாமற் பதறாமல் அரைப்படி தாக்கே. (69)

தாக்கவுஞ் சுருக்கேறிக் கட்டும் இந்தத்
தாரணியி லுண்டோவெள் ளுள்ளியின் போக்கு
ஏற்கொண்ணுச் சாரமுங் கட்டும் இதை
எளிதென்று நீதா னிகழ்ச்சிசொல் லாதே
பாக்கிய வானுக்குக் கிட்டும் பரிவாய்ப்
பார்த்திடும் பரிட்சையாய்ப் பாகங்கண்டிடுவோர்
வாக்கினுற் சொன்னாலும் பாரார் தன்
மதியறி யாமலே கட்டுவர்மெய் காணார். (70)

மெய்யான கற்பத்தைச் சொல்வேன் இந்த
மேதினிக் கள்ளிவேர்ப் பட்டையை வாங்கி
பொய்யில்லா உப்பை யெடுத்து இரண்டும்
புகட்டி யரைத்திடு சாம மிரண்டு
வையா புரிவாலே ரவியில் வில்லை
வைத்திடு உலர்த்திடு பிடித்தெடு பதமாய்
ஐயமில் லாப்புடம் போடு அது
அடங்கி யொடிங்கிடு மரிதான உப்பு. (71)

உப்பல்லோ கட்டினமாச்சு இந்த
உலகத்திற் கண்டது முண்டோ யிக்கட்டு
தப்புமோ வெள்ளையுப் பல்லால் கற்பம்
தரித்திடும் போதினிற் காயம்பி லக்க
ஒப்பாகுங் கரிவகைக ளெல்லாம் இந்த
உப்பன்றி வேறுண்டோ உறுதிநீ பாரு
செப்பாதே உப்புச்செந் தூரம் சேரய்ச்
செய்திடுங் கரிகளை அமைத்திடும் நன்றே. (72)

நன்றான உப்பையுங் கட்டும் எவர்க்கும்
நலமான மூலிகை யான்சொல்லக் கேளாய்
தன்மய மாகிடுங் கையான் ரெண்டு
தரணியி லுண்டென்பார் அதனிலே போடு
சின்மய மறிந்திடு மேனி யுடன்
செருப்படை பொடுதலை யெருக்கலை கூடக்
கன்மயக் கள்ளிக்கொ முந்து பிரண்டை
காரிளை கண்டு முரிந்திடும் உப்பே. (73

உப்பெல்லா மிப்படிக் கட்டும் உறுதி
யொளிவெள்ள தவளமாம் செந்தூரஞ்செய்து
எப்போது மிடுகறியிற் போடு நாளும்
இதமான எலுமிச்சம் பழமே புளிப்பு
தப்பாதே புளியந் துளிரும் இதைச்
சார்ந்துகொள் மத்தொன்று மாகாது பின்பு
அப்போது காயமே சித்தி அதீதம்
அரிதான கற்பத்தை யினிமேலுஞ் சொல்வேன். (74)

சொல்லுமுன் னோர்கள் விளங்க நான்
சொன்னது கண்டு பிடித்திட்டு உண்டு
வெல்லுமோ அயக்காந்தம் வங்கம் விதமாய்
விளங்கினேம் மூன்றாறிற் செந்தூரப் போக்கு
கல்லினை விட்டாலும் சாவு வருமோ
காரணம் வருவதும் தோணுமோ தோணு
அல்லும் பகலு மிரண்டும் அமுரி
ஆண்டொன்று சாதனை தேகம்பொன் னாகும். (75)

தேகசித்தி யாகுந் திரமாய் நாளும்
சிறப்பான மூலிகை கற்பம்நீ கொள்வாய்
ஆகம வேதத்தின் கற்பம் அதை
யழகாக வேதின்று நீடூழி வாழ்வாய்
பாகமாய்ச் சொன்னது திட்டம் பரிந்து
பார்த்திடு யேத்திடு ஓராண்டு சித்தி
தாகமுந் தீர்ந்திடச் சொன்னேன் எந்தன்
தாயான வாலையின் பாதம்பணிவாய். (76)

வா ல வயதொளி வாகும் வந்தால்
வாய்க்குமே குருவொன்று வரிசையாய்ச் சொல்வேன்
சாலவுஞ் சூதத்தைத் தீயில் நன்றாய்த்
தாக்கிடு வோட்டினிற் பின்புநீ கேளு
நாலுக் குகந்தது வங்கம் அதை
நன்மையாய்க் கிண்ணிசெய் ததன்மேற் கவிழ்த்து
இலான கள்ளிற்பாற் கறந்து அந்தக்

கிண்ணி முழுகக் கிருபையாய்வாரு. (77)
வாரு மெரித்திடு முழுதும் வெந்து
வத்தி வலிந்து யிருக்கும் பருவம்
சேருநீ கட்டிய உப்பு அதிற்
சீராய்க் கலந்திடு ஒருபலந் தன்னை
ஆரு மறியா துளாவு அதி
லாகிடும் நீருப் பொடியாய்க் கலக்கும்
தீரும் பிரண்டையின் தண்ணீர் அதைச்
சிதறுமல் விட்டாட்டி அனலிலேபோடு. (78)

போடு பொலிந்துநீ ருரும் புத்தி
புகழப் புனிதமா பூகையாய்த் துளாவு
நாடும் ரவிமதி சேர்த்து நலமாய்
நாட்டிடு குருவொன்று தாக்கி யெடுக்க
ஆடுமே யெட்டரை பொய்யா அந்த
அழகான பொன்னென்று எவரும் மதிப்பார்
தேடும் பொருளிதிற் சித்தி திரமாய்ச்
செய்துபார் வாழலாம் ரகசிய மாக. (79)

வாழலாம் சோதியைப் போலும் வரிசை
வயனமாய் நாகமும் திண்ணியாய்ச் செய்து
சூழவும் பலமது திட்டம் சுருதி
சூதமு மொருபலம் முன்போலுந் தாக்கி
தாழடிாட் டாதுபா விட்டு மேலுந்
தாக்கிடு அணலிலே பின்பு துளாவு
கிழதென் றெண்ணாதே முன்போற் நம்
கிருபைகுரு வாச்சுது பத்தரை கண்டேன். (80)

கண்டது யினியொரு சேதி எவருங்
காத்துத் துதித்தாலுங் காணாத சோதி
தொண்டர்கள் யாவரு மிந்தச் சுன்னத்
துறையான நீறதைப் பழக்கமாய் விளங்கும்
அண்டர்கோன் அஞ்சுகண் ணும்பிற் பின்னும்
அழகான சுன்னங்க ளனேகம்நான் சொல்வேன்
துண்டாய் வகைக்கொன் றெடுத்துப் பின்பு
சூட்டிடு பலமொன்று திட்டமதாக. (81)

தாகந்தீர்த் திடுஞ்சுண்ண மெல்லாம் சரியாய்ச்
சாற்றிட வகையொன்று பலமுமொன் றாக
ஆகம வேதங்கள் சொன்ன சூட்சம்
அழகான பூநீரு கம்பியுப் புந்தான்
சோகங்க ளனைத்தையும் நீக்கிச் சுருதி
சொன்ன திரண்டையும் இடைசரி யாகப்
பாகமாய்க் கூட்டி யடுப்பிற் பருதி
பட்டது போலவும் அனலிலே வெதுப்ப. (82)

வெதுப்பிட வெதுப்பிடக் கட்டும் விதமாய்
வெந்து உருகிடும் பாறைபோற் கண்டேன்
அதுவிதம் புடம்நாலிற் சுன்னம் செய
அழகான பழச்சாற்றி லரைத்து வழித்துத்
துதித்திடும் ரவிகண்ட பின்பு சொல்லும்
சுண்ணுப்புக் குள்ளே ஒருபுடந் தீரு
பதித்திடும் பசந்தமண் தண்ணீர் பற்றிப்
பார்த்தவர்க ளெவருக்கும் பாக்கிய முண்டாம். (83)

உண்டேதா னிந்த யிடைக்கு யுறதி
யுள்ளது முன்சொன்ன சுன்னங்க ளொன்று
இரண்டுமொன் றாக அரைத்து யிதமா
யெடுத்திடு சுன்னத்துள் புடமெனுஞ் சிரு
கண்டேநீ கனபுடம் தீர்ந்தால் முத்தி
காட்டிடு சுன்னமாய் மூவருஞ் சேர்ந்தால்
தொண்டர்தம் உப்புக ளெல்லாம் சுருதி
சொன்னது ஓட்டுப்பு அட்டுப்பு என்றே. (84)

என்றது யில்லுப்பு வீட்டி லிதமா
யிருக்குஞ் சுறியுப்பு அமுரியினுப்பு
நன்றான மலப்புளி யுப்பு பின்னும்
நலமான யிந்துப்பு பாறையி னுப்பு
அன்றுதான் காசுப்புக் கருவாய் சொல்லும்
அடவுடன் கோவணத் துப்புமொன் றாக
மன்றுமே கடல்நுரை யுப்பும் சேர்க்க
மகிமையாம் வாலையி னுப்பென்றுஞ் சொல்வார். (85)

சொல்லுமிப் படியென்பா ருப்பு அதைச்
சூட்டவுஞ் சரிசம ஞகவுஞ் சேர்த்து
வெல்லவும் முன்சொன்ன உப்பு விதமாய்
மீருமற் சமஞ்சேரு அரைத்திடு சாமம்
நல்லவர்க் குண்டுசெயவில்லை நலமாய்
நாட்டிடு காய்ந்தபின் சுன்னத்தில் வைப்பாய்
தொல்லுல காண்டது உப்புச் சுன்னம்
சுருக்காக யிருக்குமே புடத்திலேபாரு. (86)

பாருமே யெடுக்கக்கண் கூசும் உப்பு
பதமாய்ச்சுண் ணாம்பாய்ப் பரிசுத்தங் காணும்
ஆருமே யறியாத சேதி அது
ஆனந்த சத்தியின் சாரமதாகும்
தீருமே வச்சாரம் சத்தி திரமாய்த்
திருத்த உவர்ச்சாரம் தெளியவுஞ் சொன்னேன்
நேருமே நமச்சாரங் காணும் நிசமாய்
நிலைத்திடும் நாலுமே ஓரிடைபோடு. (87)

போடுவாய் பழச்சுண்ணாம் பிற்றான் புகழ்ந்து
போட்டிடு சரிசமன் சரியாகக் கூட்டித்
தேடுவாய் நீறுகுஞ் செய்தி சித்தர்
செய்முறைக் கருவெல்லா மிதனிலே விண்டேன்
நாடுவாய் வீரமும் பூரம் நன்றாய்
நாட்டிடுங் காரமுஞ் சூடமுஞ் சேர்த்துக்
கூடுவாய் புனுகிடு வீராய் வனத்திற்
குருவுண்டு குரோசனைக் கருவதுவு மெட்டே. (88)

எட்டுமே யிடைகண்டு போடு எல்லாம்
ஏகமாய் மைப்போலுங் கிளிக்கட்டித் திரு
மட்டியாய் நில்லாதே குழியில் மாட்டி
மகிமையாய்ச் செயநீரைக் கடுகவே வாங்கி
வெட்டிடும் நீராலே சொன்னேன் வேறே
விளம்பின தல்லால் துறைக்கெல்லாம் பாரு
கட்டிக் கொடுத்தாலு மீயார் யிந்தக்
கருவை யறிந்தவர் குருவென்றும் விள்ளார். (89)

விள்ளாத கருநீரைச் சொன்னேன் அதை
விரித்துப்பார்த் தவர்க்கெல்லாம் விளங்குமே சொன்னேன்
கள்ளமா யிந்நீரை விட்டுக் களங்கு
காரிய மானாலுஞ் சுன்னமா னாலும்
உள்ளது செந்தூர வேலை வெரு
உபாயமா யுறுதியா யொன்பது லோகம்
வளமாக விட்டு அரைத்து வகைகள்
வட்டுக ளாய்நாலு மிந்நீரே குருவாம். (90)

குருவான நீராலே சொன்னேன் கோடி
கோடியாய்க் கோடிதன முண்டாகும் பாரு
திருவாகுஞ் செம்பினில் வெட்டை யோடு
தில்லைபித் தளைவெட்டை வெங்கல வெட்டை
உருவான அயமதும் வெட்டை நல்ல
உற்றாசி தமும்வெட்டை பரியதும் வெட்டை
அருவான நாகமும் வெட்டை உடன்
யருளதிதம் வெள்வங்கம் கருவங்கம் வெட்டை. (91)

வெட்டைக ளிடைக்கிடை சூதம் விட்டு
மேதினி நீராலே மாட்டியரைத்து
சுட்டு விடும்ரவிக் காச்சல் வைத்துச்
சூதஞ்சேர்த் திடுசுன்ன மட்டையைப் போலாம்
அட்டியில் லாமலடுப் பேற்றி அதை
அனலிலே வெதுப்பிடக் குருவாச்சு பாரு
கஷ்டமுந் திருபெய் யாகும் நித்தியங்
கண்காட்சி யுண்டென்று சொன்னார்கள் முன்னோர்: (92)

முன்னோர் குருவாகும் பாரு நான்
முன்காட்டுஞ் சவுக்காரம் நீராச்சே பார்த்தால்
தன்னுடலிற் பார்த்தோருக் குண்டு சித்தம்
சளையாமற் செய்தவர் கருவாளி யென்பார்
அன்னையும் மெச்சுவாள் பார்த்து நன்றாய்
அடிமையுங் கொள்ளுவாள் அஷ்டாங்க மீவாள்
சொன்னசொல் லெல்லாம் பலிக்கும் சுகமாய்த்
தூக்குவள் காயத்தை உபாயத்தாற் காப்பாள். (93)

காப்பதென் றேசொன்ன தல்லால் இன்னங்
கருதிய நாகமுஞ் சூதமு மிணைத்து
ஏற்பதாங் கள்ளிக் கொழுந்து அதை
யிடித்துப் பிழிந்து சுருக்கிடு சொல்வேன்
நாற்பணத் துக்கெதிர் மூன்று அந்த
நலமான நாளதிற் சுருக்கிட்டா யானால
நாற்போதும் கட்டிடும் அதையே நீயும்
நன்றாய்ப் பொடித்துப்பின் சிமிழியி லடைப்பாய். (94)

அடக்கமாய் ரசிதம்செம் பிரண்டில் அதை
ஆய்ந்திட் டுருக்கிடு பத்துக்கு ஒன்று
கொடுப்பாய் குருவொன்று தாக்கு அதைக்
குற்றமிலாப் பொன்னென்று குறிப்பாரு முண்டு
எடுப்பாரு முண்டானுற் காணும் எந்த
ஏமமும் கண்டவர் பூமியிலுண்டு
தொடுப்பார்கள் வங்க ரசமும் அதைத்
தொந்தமா யுருக்கிட விசுவனிடத்தில், (95)

இடந்தனி லிலகுமிவ் வுப்பு அதை
பேழைகள் கண்டுகொண் டிருந்திட்டாரானால
கிடைத்தவர்க் குண்டான சேதி பேலோர்
கிருபை வகையினைக் கருத்தாய் வினவே
முடைத்திடு முப்பூவு மொன்று மூந்தி
முடிந்திடுங் கருவங்கம் சூதமிரண்டும்
நடத்திடக் கல்வத்தி லிட்டு அதை
நன்றாக வோர்சாம மாட்டியே கேளு. (96)

கேளு மிரசி மதியில் வைத்துக்
கெடியாகப் பத்துக்கு ஒன்றியுங் குருவில்
ஆளுநீ பொன்னை யெடுத்தே பாரந்த
அழகான பொன்னிலே யூரல்கள் கண்டால்
வாளுஞ்சுண் ணும்பிலு மூசை வரிசை
வகையதாய்க் கனலினில் லறவூதிப்போடு
தாளுக் கிசைந்தசெங் கல்லில் சலமாய்
சாத்திடு புடமொன்று ஒப்புட மாக. (97)

புடந்தீர வூரலும் போகும் உன்
புந்திமகி ழாக்களிம்ப கன்றுபொன்னாகும்
திடமேனும் புத்தியை யுருத்து யிந்தச்
சீரான சேதியை உரையாதெவர்க்கும்
படமது காட்டானுற் போலும் மிகப்
பாக்கிய முண்டாகும் தேகவச்ர மாகும்
சடமதுக் குதவியே உப்பு முப்பு
தாக்கினுற் குணமுண்டு ஒருவருங் காணுர். (98)

காணார்கள் கள்ளிப்பா லூட்டு அதைக்
கருதியே யூட்டிட வெட்டுகாள் மட்டும்
பூணார்கள் ரவியிலே போடப் புதுமை
பூணுமே வெந்திடும் ரவியிலுங் கண்டேன்
ஊணார்கள் புலிமார்ந்தர் உத்துக் கேட்க
உறுதியாய்ச் சொன்னது கண்டிடுங் காணும்
தோணாத பேச்சுமே தோணும் எந்தன்
துரைச்சாமி பூசையைச் செய்வதற் கொக்கும். (99)

ஒக்குமே யான்சொல்ர சகியம் இந்த
உறவான கைமுறை யொக்குமே பாரு
திக்கிலுங் கண்ணிலே தோன்றும் இதைத்
தெரிந்திட யானுமே விண்டேனே பாரு
சிக்கவே குருவையுங் காத்து மேலாம்
சிவசத்தி யெனுந்தீட்சை திரமாக விண்டேன்
பக்குவ மாகவென் னூணும் கருவைப்
பாரினிற் சொல்லாதே புனக்காய்நான் சொன்னேன். 100

சுந்தரானந்தர் வாத சூஸ்திரம்-ஙா.

முற்றிற்று.

மதுரை வடக்குவாசல் யானைக்கல் தெரு மு. குழந்தைவேலுப் பிள்ளை அவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

பரமபதிதுணை.

143-வது

திருமூலர் திருவாய்மலர்ந்தருளிய

பூஜாவிதி சக.

வாலை புவனை வடிவுள்ள நாயகி
ஆலை திரிபுரை யமைந்திடுஞ் சாமளை
கோலைய மான கோமளை யாமளை
மேலயப் பஞ்ச தியாச்சரி பூசையே. (1)

பூசையுந் தீட்சையும் புகட்டுவார் சித்தர்கள்
ஓசையுல கத்தோ ருறுபூசை பஞ்சமம்
ஆசையாய் வாலையை யடுக்குஞ் சமுசாரி
காசை புவனை கடுமந்திரந் தாக்கே. (2)

கடுமந் திரம்விடு கண்ட திரிபுரை
கடுமந்திர யோகம் கண்டுசெபஞ் செய்வார்
நடுமந்திர ஞானி நாடுவான் மூன்றும்
ஓடுமந்தி ரத்தில் ஒடுங்கிய வாலையே. (3)

வாலை தியானம் வடிவுபஞ் சாக்கரம்
வாலை தியானம் வடிவுள்ள மூலம்
வாலை தியானம் மகாசித்து மாடிடும்
வாலை தியானம் வந்த எழுத்தே. (4)

எழுத்துடன் சக்கரம் இயம்பவே கேட்டிடு
அழுத்திய விந்து அதன்மேற் றிரிகோணம்
அழுத்தி யதன்மேல் வளமா யறுகோணம்
அழுத்திய வட்டம் அதிலெட் டிதழிடே. (5)

இட்டிடு மூன்று வரையும்பின் வாசலும்
ஒட்டிடு சக்கரம் உறவுமுறை கேளு
வெட்டிடும் யேமப் பலகைபி லேயரை
ஒட்டு முறையீது உறவின்னங் கேட்டிடே. (6)

கேட்டிடு தாம்பூரங் கெடியதக டாகும்
வாட்டிய பஸ்பம் வரையவே சக்கரம்
நீட்டிய விந்துவில் நிலையாயா பூஜமும்
ஒட்டிடு அங்கங்கே உறவாய் வரைந்திடே. (7)

வரைந்திடு மந்திரம் வகையரி வாரிலை
உரைந்திடு அய்யுங் கிலிசவ்வென் றோதிடும்
பரைந்திடு காமியம் பாளிப்பாள் மாயியும்
கரந்திட்ட மேனி கடுவாலை சித்தியே. (8)

சித்திக்கு முன்னம் சேர்ந்த குணங்களு
அத்திக்கு அஆ பதினொ றெழுத்துடன்
ஒத்திக்கக் கூட்டி யுருமந் திரத்துடன்
சித்திக் கிதைவிட்டால் தேசம்பொய் யாகுமே. (9)

பொய்யாகு மந்திரம் புகழ்சித்தி காரணம்
மெய்யாம் உடலும் உயிரெழுத்துஞ் சேரும்
கையாரக் கண்டது காரண மெத்துண்டு
ஐயாகேள் மூலம் அறியா துலகமே. (10)

அறியா நியாசம் ஆறுண்டு சொல்லக்கேள்
குறியாஞ் சடங்க நியாசமதொன் றுண்டு
மறியாச் செகம்புகழ் மாதுரு கரநியாசம்
வெறியாமல் குச்சுடர் வேத முரைத்ததே. (11)

உரைத்திடுங் காமகளை நியாசமுன் னிட்டு
வரைத்திடுங் குங்கும நியாசமதினுள்ளே
கரைத்திடும் ரோகணி நியாசமதின் பின்னே
உரைத்திடு மந்திர நியாச மறிந்திடே. (12)

அறிந்திடு மூலம் அங் அங் அங் கென்று
பிறிந்திடு மந்திரம் பேசா தெழுத்துடன்
அறிந்திடு நூத்தெட்டு வைத்தே செபித்திடு
உறிந்திடு சடங்க நியாச முடியவே. (13)

முடியவே ரேசக பூரகமுன் னிட்டு
அடியவே கும்பகம் அப்பா யெழுத்துடன்

அடிமுடி வைத்து அமைக்கவல் லார்க்குப்
படிய மதுவே பரலோக சித்தரே. (14)

சித்திக்கு யின்னங்கேள் சேர்ந்தமா துருநியாசம்
ஓத்திசுவா திஷ்டானம் ஓங்கிய மந்திரம்
பத்தியாய் நங்கங்கங் பரவிச் செபஞ்செய
முத்திக்கு வித்து முன்னின்று பேசுமே. (15)

பேசு மெழுத்துடன் பேசா தெழுத்தும்
ஆசை யெழுத்துடன் அந்தத் தெழுத்தும்
காசு மெழுத்துடன் கண்டது கும்பகம்
நேசித் திருக்க நினைத்தது சித்தியே. (16)

நினைக்கவே யின்னம் லகுகூடா நியாசங்கேள்
முனைக்கவே மந்திரம் முனைமங்மங் மங்கென்று
நினைக்கவே அந்தம் நேராய் வெளிப்படும்
கனைக்கவே காமியங் கைகண்ட முத்தியே. (17)

முத்திக்கு மங்கே மூர்க்கமாம் நியாசத்தை
பத்திக்குங் காமகளை பலநியாச மந்திரம்
ஒத்திக்குஞ் சிங்கென்று உள்ளே உருவேறில்
பத்திக்கு நாற்றெட்டு பஞ்சிப மோதிடே. (18)

ஓதிடச் சித்தி ஒருகோடி வேதையாம்
மாதிட ஞானம் வழியேறி மீண்டிடும்
காதிடச் சித்தியாம் கழன்றோடுங் கன்மமும்
மாதிட்ட மாக வளர்ந்தது யோகமே. (19)

யோகமாங் காங்கு மந்திரநியா சத்தை
பாகமாய்க் கேளுங்கோ பதையாதே மாந்தரே
வாகமாய் வங்கென்று வைத்துச் செபஞ்செய்ய
ஏகமாய்த் தானே யெங்கும்பிர காசமே. (20)

பிரகாச மொன்றல்ல பேசு மெழுத்தது
மறவாமல் வங்கென்று வாசியிற் கூட்டிடு
இறவா யொருநாளும் யேகாந்த யோகமாம்
திறமாய் செபஞ்செய்ய சேர்மூன்றுஞ் சித்தியே. (21)

சித்திக் கிதைவிட்டாற் சேரவுங் கிட்டாது
பத்திக் கிதைவிட்டாற் பராபரை முன்னிற்காள்
வெத்திக் கிதைவிட்டால் வேதாந்தங் கெட்டுது
ஒத்திக் கிதைவிட்டால் ஒன்றுக்கு மெட்டாதே. (22)

எட்டாத ரோகணி யோசமா மந்திரம்
முட்டாதே யங்கென்று முனைமூக்கைப் பார்த்திடு
அஷ்டமா சித்தி யடங்கலு மீவாள்
ஒட்டாத யோகம் ஒருநாழி கைக்குமே. (23)

கைக்குமே நாதங் கலந்தோடி உன்னுளே
தைக்குமே மேலே சமத்தற்கு மேலேறும்
மொய்க்குமே சித்தி முன்னேயா ரென்றிடும்
அய்க்குமே யாசா னருளை யறிந்திடே. (24)

அறிந்திடு வஸ்துக்கு அப்பா நியாசங்கேள்
பிறிந்திடு ஓங்காரம் பேரான மூலத்தில்
செறிந்திட அகார உகார மகாரமும்
பிரிந்திட மண்டலம் பாங்குசொல் வோமே. (25)

சொல்வது அக்கினி மண்டலமுன் னிட்டு
வெல்வது சுக்கிர சாப நமாவென்று
கல்வது கிலியும் கருமொசி அவ்வது
வெல்வது உம்படு சிவாவென்று ஓதே. (26)

சுவாகா வெனவே தொழுதிடு வஸ்துவை
அவாகா மாயி அறைந்திடு மந்திரம்
நிவாகா காவென்று நினைத்திடு பாத்திரம்
உவாகா காவென்று ஓங்கிரீ செய்திடே. (27)

செய்திடு பாத்திரம் சேர்ந்திடு மந்திரம்
கைதிடச் சொல்லக்கேள் கசிந்தஞ்சு பாத்திரம்
அய்திடத் தானே அச்சதை மேற்போட்டு
கொய்திட மந்திரங் கொமட்டிநீ பார்த்திடே. (28)

பார்த்திடு மன்னம் பக்ஷம்பல காரம்
கோர்த்திடு அண்டம் குக்குட மேசமும்

சாத்திடு புஷ்பம் சந்தனங் குங்குமம்
வைத்திடு தீபம் யேகச் சிறப்பே. (29)

சிறப்பான சத்திக்குச் சீரா பரணமும்
மறப்பான புஷ்பமும் வரிசையுஞ் சந்தனம்
நிறம்பாகக் குங்குமம் நேரான தாபமும்
உறப்பாய்ச் சூடமுங் கொடுத்திடு பூசையே. (30)

பூசை கடந்து புகட்டிடு பாத்திரம்
ஆசையுடனே ஐயுங்கிலிவா வென்று
ஓசை யுடனே உறவுகிலி யென்று
பாசிய சவ்வும் பரிச்சென்று யீய்ந்திடே. (31)

ஈய்ந்திடு பானம் உருஞ்சச் சடாதாரம்
வாய்ந்திடப் பூரிக்கில் மனோமணிக் கேயென்றும்
சாய்ந்திடப் புத்தியும் தவறாமல் மேனோக்கும்
ஆய்ந்திட்ட மந்திரம் அப்பா செபஞ்செய்யே; (32)

செபிக்கிலோர் மந்திரம் சிவவசி வாவென்று
அபிக்கிலோர் மந்திரம் அன்னஞ் செரிப்பிக்க
கபிக்கிலோர் கையால் கண்டநவ முத்திரை
நபிக்கிலோர் வயிரவன் நற்றாளைப் பூசிடே. (33)

பூசிநீ யீசானம் புகன்ற வயிரவன்
நேசிநீ அஷ்ட நிறைந்திடு பாலகர்
காசினி பஞ்ச கர்த்தர் வழியோடே
வாசிநீ வைத்து மரவாமற் பூசியே. (34)

பூசிக்க யின்னம் புகன்ற முறைகேள்
வாசிக்க வாவென்று மைந்தனே மூலத்தில்
நாசிக்கு நேரே கண்ட தலமது
ஆசைக்குள் வைத்து அருள்மூலம் பார்த்திடே. (35)

பார்த்திட முத்திரை பஞ்சவழி கேளு
கோத்திடு அண்டங் குளர்விய முத்திரை
ஏத்திடு திரிகோண மெழுந்திடும் விந்துவால்
மாத்திடறு கோண வகையோனி முத்திரை; (36)

முத்திரை தன்னால் முடிந்த பிறகுகேள்
உத்திய தீபம் உசர அடக்கிடு
பத்தில் நடனம் பதஞ்சலி பாதத்தில்
சித்தியே யாடுஞ் சிதம்பரங் கண்டிடே. (37)

கண்டு சிதம்பரங் காணுச் சிதம்பரம்
கொண்டு சிதம்பரங் கொள்ளாச் சிதம்பரம்
ஒண்டுஞ் சிதம்பரம் யோக சிதம்பரம்
அண்டஞ் சிதம்பரம் ஆனந்த மானதே: (38)

ஆனந்தி யாயி அருளாயி யம்பரை
ஆனந்த மாயி சரணஞ் சரணம்
ஆனந்த மாயி உடலாயென் ஞயி
ஆனந்த மான பரமேட்டி மாயியே. (39)

மாயி பிறந்த வகையறி வாரிலை
மாயி பிறந்த மார்க்க மறிகிலார்
மாயி நடந்த வழிதனைக் கண்டிலார்
மாயி யிருந்த வகைபார்த்தால் முத்தியே. (40)

முத்தி பிறந்தது முப்பாழ் வெளியிலே
சத்தி பிறந்தது சற்குரு பாதத்தில்
பத்தி பிறந்தது பராபர மானதில்
சித்தி பிறந்தது சிவவாலை முத்தியே. (41)

திருமூலர் பூஜாவிதி சக.

முற்றிற்று.

மதுரை வடக்குவாசல் யானைக்கல் தெரு வித்வான் மு. குழந்தைவேலுப்பிள்ளை அவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

கடவுள் துணை.

144-வது

திருமூலர் திருவாய் மலர்ந்தருளிய

வியாதிக்கூறு.

உன்னிய கெற்பக் குழியாம் வெளியிலே
பன்னிய நாதம் பகர்ந்த பிருதிவி
வன்னியும் வாயுவு மாயுறுஞ் சுக்கிலம்
மன்னிச் சமனும் வளரு முதகமே. (1)

உதக மூத்திரம் உருங்கனல் வாயுவால்
சிதருற வங்கங்கள் செய்து முடிந்திடும்
பதகுரு ரோமம் பருந்தசை அஸ்தி
நிதகுரு வொன்பது வாசலும் நீங்குமே. (2)

நீங்கிட நீங்கிட நிமிர்ந்து வளர்ந்தோங்கும்
ஓங்கிட வோங்கிட வுறுதியாம் வாயுவும்
வாங்கிட வாங்கிட வன்னி நிலைபடும்
பாங்கிடப் பாங்கிடப் பத்தாகுந் திங்களே. (3)

திங்களும் பத்தானல் தேய்வுடன் வாயுவும்
அங்கிலே மலர்ந்ததி யமனியாய்க் கீழ்நோக்கிப்
பொங்கிப் பிறந்தநாள் புகல்வார் வெருவினர்
தங்கிச் செனிக்கையில் தானேயு முற்றதே. (4)

உற்ற விபா மூறுதியா யெண்ணக்கி
பற்றிய மூலம் பகுந்திடு நாடிதான்
நிற்றி யிதுவன்றி யெழுபத்தி ராயிரம்
மற்றதிற் பத்து வளமான நாடியே. (5)

வளமான பத்தாய் வளங்குதச வாய்வும்
வளமான யிடைபின் சுழியுமூன் றுண்டு

களமான சக்கரங் காட்டிய தாருண்டு
தளமான மண்டலந் தான்மூன்று பாருமே. (6)

பாரு மிடையிங் கலைரெண்டு மாறியே
தாரும் பெருவிரற் காலொடுதா னேறிக்
காருங் களத்திற் கபாலவரை நின்று
வாரு மிடமாம் வளக்கரஞ் சாருமே. (7)

வலக்கரந் தன்னிமேல வளமான பிங்கலை
கிலக்க விடக்கரம் நின்றதிடை யாகும்
துலக்க நடுமையஞ் சுழிமுனை யோடிடும்
பிலக்க மிதுமூன்றாற் பிறந்தது தாதுவே. (8)

தாது முறையே தனித்த விடைவாதம்
போதரு பிங்கலை புகன்றது பித்தமாம்
மாது சுழிமுனை வணங்குநல் லய்யமாம்
ஓது முறைபார்த் துணர்ந்தவர் சித்தரே. (9)

உணர்ந்த வபான னுறுமந்த வாதத்தில்
புணர்ந்த பிராணன் புகுமந்தப் பித்தத்தில்
அணைந்து சமானன் அடங்குமய் யத்தொடு
பிணைந்த மிதுமூன்றுக் கெடுத்த குறியிதே. (10)

குறியாம் வலக்கரங் குவிந்த பெருவிரல்
மறியா ததன்கீழ் வைத்திடு மூவிரல்
பிறியாய்மே லேகிப் பிலத்தது வாதங்காண்
அறிவாய் நடுவிரல் அரைந்திடு பித்தமே, (11)

பித்தத்தின் கீழே பிரண்டது அய்யமாம்
உத்துத்துப் பார்க்க ஒருநரம்பே யோடும்
பத்தித்த மூவரும் பாயுமொரு வேகத்தால்
மத்தித்த காளம்போல் வளங்கு நரம்பிதே. (12)

வளங்கிய பித்தந்தான் மாத்திரையொன் றாகில்
தளங்கிய வாதங்கேள் தன்னிலரை வாசி
அளங்குங் கபர்தான் அடங்கியே காலோடி
பிளங்கிடுஞ் சிவன்தான் பின்னொன்று மில்லையே. (13)

இல்லையே வாதம் யெழில்கடை கோழியாம்
எல்லையே பித்த யெழும்புந் தவளைபோல்
ஒல்லையே ஐய முளன்றிடுஞ் சர்ப்பம்போல்
அல்லையே கண்டு அறிந்தவர் சித்தரே. (14)

அறிந்திடு வாத மடங்கு மலத்திலே
பிறிந்திடும் பித்தம் பேராஞ் சலத்திலே
மறிந்திடு மய்யம் வாசிக்கும் விந்துவில்
உறைந்திடு மூன்றுக் குறவாந் தலமிதே. (15)

உறவாங் கருப்பும் சிவப்புங்கல் வாதமாம்
குறவான பச்சை பசுமைகொடும் பித்தம்
நிறவான வெள்ளையாய் நின்றதுநல் லய்யம்
மறவான வன்னமு மாகுந் தலமிதே. (16)

தலங்காட்டி யிந்தச் சடமான வைம்பூதம்
குளங்காட்டி வானிற் குடியா யிருந்ததே
நிலங்காட்டி நீர்காட்டி நின்றிடுந் தீகாட்டி
வலங்காட்டிக் கால்வான் வளர்ந்தே யிருந்ததே. (17)

இருந்தவித மஞ்சா லெடுத்த சடமிது
பிரிந்திடு மாங்கிஷம் பிரிதிவி மயமாகும்
சொரிந்திடும் ரத்தநீர் சொற்குறி அப்புவாம்
வருந்திய வன்னி வளமாய் வெதுப்புமே. (18)

வெதுப்பத் துடனே விடுபட்டு நாசியில்
ஓதுப்புற்று நிற்கும் யிதுகாணும் வாயுவாம்
கதுப்புற்று யெல்லாங் கபனித் திடமிட்டு
மதுப்புற்று நிற்குமிவ் வானின் வளப்பமே. (19)

வளப்பங்கேள் பூமி வாசிக்கு நாசியில்
தளப்பமாய் வன்னி தாதுறுங் கண்ணிலே
அளப்பமாம் அப்பு அடங்கிடும் நாவிலே
பளப்பநல் வாய்வு பரிசிக்கு மேங்குமே. (20)

ஏங்கிய காதி லிருந்துறு மாகாசம்
பாங்கிய வன்னியால் பருந்தது பித்தம்

தேங்கிய கோளையாற் சிலேற்பனந் தொட்டு
வாங்கிய நீரும் வாதமும் பகுந்ததே. (21)

பகுந்த சலத்திற் பரிசிக்கு நல்லய்யம்
வகுந்த யிதுமூன்றால் வளர்ந்தது நோயெல்லாம்
அகந்தா னறிந்து அளவிட்ட யோகிக்கு
மகிழ்ந்தே யிதுநின்ற மயக்க மறிவானே. (22)

அறியவே நந்திமுன் றுண்மையைச் சொன்னார்
யெறியநல் வாதம் யேரிற் குணங்கேள்
குறியெனக் கைகால் குளைச்சு விலாச்சந்து
பறியென நொந்து பச்சைப்புண் ணாகுமே. (23)

புண்ணாய் வலிக்கும் பொருமிக் குடலோடி
தண்ணா மலத்தை தம்பிக்கும் போகாது
ஒண்ணான வாசன் முருகிச் சுருக்கிடும்
பண்ணார் குளிர்சிதம் பகர்ந்திடும் வாதமே. (24)

பகுந்ததில் பித்தம் பலபல சிந்தையாம்
வகுந்திடும் வாந்தி வானீர் மிகவோடும்
மகிழ்ந்திடு மேனியில் மாட்டி யெரிப்பெரும்
மிகுந்துதவ னிக்கும் மேநாவுங் கக்குமே. (25)

இடங்கிய அய்யர்கேள் மேலீணைப் பேரிடும்
தடங்கி யிருமிடும் தனிவிலா ரெண்டும்
அடங்கிச் சுரங்காணும் அளவற்ற கோளைநீர்
இடங்கி யுடல்வத்தும் இரத்தமுங் கக்குமே. (26)

கக்கிய மூவர்க்குங் கானீர் பிலங்கொளும்
ஒக்கிய வாயு வுடன்கூடி லேபிலன்
வக்கிய வாயு சகலத்துக் காதாரம்
சிக்கிய நோயை சிறக்க விளங்குமே. (27)

விளக்கிய வன்னியும் வாயுமேற் கொண்டால்
களக்கிய தோச சுரங்காணுந் தோசமாம்
அளக்கிய அப்புவும் வாயுவு மேற்கொண்டால்
இளக்கிய சீத சுரங்காணும் பாரே. (28)

பேரான தோசம் பிறக்கும் முறைகேள்
வாரான வாதமும் வன்னிக்குந் தோஷமாம்
தாரான பித்தமுந் தானேடில் வெண்மையாம்
சேரான அய்யத்தால் சிவபோதம் வாயுவே. (29)

வாயுவு மடங்கிடில் வளமான தோஷமாம்
வாயு வெழும்பினல் மண்ணுநீ ரொன்ருகும்
வாயுவு நீரானல் வளங்கிய வன்னிசாம்
வாயுவு மாகாச மண்டல வோசையே. (30)

ஓசையி லேழும் ஒளியினி லைந்தும்
நாசியில் மூன்றும் நாவினில் ரெண்டும்
தேசனுந் தேசியும் சேர்ந்து பிறந்திட
மாசறு சோதி வகுத்துரைத் தானே. (31)

உரைத்தது நாசி உறுதி யதுவேகேள்
விரைத்திடை பிங்கலை விடாதோடி மூன்றுநாள்
இரைத்திட்டம் ரெண்டிலே யெய்திடுமா காசம்
பரைத்திய ரெண்டுநாள் பாயிலீ ருண்டெனே. (32)

என்றி லொருனு ளியங்கிய பிங்கலை
தன்றிய மூவாண்டில் தப்பாது மரணமாம்
ஒன்றிய பத்தி லோடிடிற் பத்துநாள்
மன்றி மதியாறில் மரிப்பான் குறியிலே. (33)

குறிகேள் மூக்கன்றி குலவுவாய் வழியோடில்
மறிகேளு மூன்றுநாள் மரித்திடு வான்தப்பாது
தெரிகேள் மும்மலமும் திரண்டு குரைந்திடில்
பரிவாகும் பட்சத்தில் பாருயிர் தப்பாதே. (34)

தப்பாது வாயுநீர் தாக்கி ரவிமேலும்
ஒப்பாகத் தான்மறைந்தால் ஒழிந்திடுவான் மதியாறில்
செப்பாகத் தானிருக்கச் சேர்ந்தநிழ லைந்திடினும்
அப்பாகேள் சாயுமுட லறிந்துகற்பங் கொண்டிடே. (35)

கொண்டிடுந் தோசங் குறிசொன்னு ரென்னந்தி
தண்டு முதடுந் தனிப்பல்லு நாக்குண்டு

மண்டிடுந் தானும் வளமாய்க் கருப்பேரில்
ஒண்டிடு ஆறுநா ளுறுதியாய்ச் சாவானே. (36)

உறுதியாம் பித்தம் உடம்பு மிளைத்துப்போம்
பொறுதியாய்த் தாளித்தால் போவான் மதியொன்றில்
மறதியா மய்யம் மலத்திக்கொண் டுலத்தில்
உறுதியாம் அனுமதி ஒடுங்குஞ் சீவனே. (37)

சீவகலையால் செறிந்திடும் நாடிதான்
காவ கரம்பட முத்திடில் மேலேறும்
தாவொத்து மேலேகிற் சாகா ெளருநாளும்
பாவொத்துக் கீழ்நோக்கிற் பதையாமற் சாவனே. (38)

பதைக்கின்ற மூவரிற் பக்குவந் தப்பியே
நிதைக்கின்ற வாதம் பித்தமும் போய்விடிற்
சுதைகொண் டிருந்தாலும் தோற்றிலுயிர் போகும்
பிதைக்கொண்ட வாதம் பிலம்பாரு பித்தரே. (39)

பித்த மடங்கினூற் பேசாது போய்விடும்
மத்திய அய்ய மெழும்பிடுங் கிட்டாதே
பொத்திய வாத மெழும்பின் மருந்துசெய்
எத்திய மூன்றி னியல்பை யறிந்திடே. (40)

அரிந்து மூவ ரங்கியே மூட்டிடில்
எரிந்து வோடில் எய்யாது சாவுதான்
பரிந்து நவதாது பார்த்துக்கீழ் நோக்கிடில்
மரிந்தே உயிர்சென்று மாளிகை புக்குமே. (41)

புக்கிய புந்தியில் புகட்டு மொருவிரல்
எக்கிக் குதித்தா விதுமகா தோஷம்
அக்கிய உந்திகொள் ஆதாரம் வாயுவு
மக்குந் தலமெலாம் மகத்தான தாதுவே. (42)

தாது முறைகேட்கத் தனித்தருதி சந்து
ஓதுரு காமிய முந்தி நடுமார்பு
காது நெடுமூக்கு கண்டங்கால் ரெண்டும்
போதுரு மையம் புகல்பத்தும் பார்த்திடே. (43)

பார்க்கில் திசைநாடி பதைப்புண்டு நின்றிடில்
ஏக்கில் சிலநா ளிருப்பா னிறந்திடான்
கார்க்கிய காமியங் கழன்று சுரித்தோடில்
ஆர்க்கும் நமனூ ரடைவது உண்மையே. (44)

உண்மைகே ளின்னம் உமிந்திட நாவுளோர்
தன்மையாய்த் தூரம்போய்த் தாக்கிடிற் சாவிலை
கன்மையாய் வாய்வு கழன்றனல் கிட்டிடில்
வண்மையைப் பார்த்து வகுத்தனர் நந்தியே. (45)

வகுத்த முறைப்பாடு மந்தத்தால் வாயுவாம்
வகுத்தநல் வாயுவால் வளர்ந்திடும் நோயெலாம்
பகுத்தபித் ரெண்டால் பாராய் சுரமீறும்
முகந்தபித்து ரென்றால் முத்தோசங் காணுமே. (46)

காணுமே மந்தங் கபளிக்கு மன்னத்தால்
காணுமே மந்தங் கடுமாங் கிஷமுரில்
காணுமே மந்தங் கலந்தமாப் பண்டத்தால்
காணுமே மந்தங் கடுமேதைப் பாலுக்கே. (47)

மேவிய அன்னத்தால் விளங்கிய தச்சிடும்
பாவியற் கொன்றும் பளியுரு மன்னந்தான்
மாவில்மிதந் தப்பில் மையுற்று நோயாகும்
காவில்விதை யெல்லாங் கண்டுகொள் ளன்னமே. (48)

அன்னம் பிறந்தது அல்லாம் விதையிலே
மன்னய வெட்டை மகாசீதம் ரெண்டினுல்
பன்னி வருந்திதை பார்ப்பார் பெரியோர்கள்
கன்னி மயக்கத்தாற் கண்டிடு மேகமே. (49)

மேகம் பிறந்த விதஞ்சொன்னூர் நந்தி
மேகம் பிறந்தது பெண்ணுறு லப்பா
மேகம் பலபல மேகம் பிறந்தது
மேகம் சூட்டால் மெய்யு ளெழுந்ததே. (50)

உத்த சுரத்துக் குதவியாம் வாய்வு
மத்தவர் மேகம் பிறந்த துரைத்திலர்

நத்திக் குழந்தைப் பருவத்தின் போகத்தால்
வத்திப் பசியில் வழங்குஞ்சை யோகமே. (51)

சையோகஞ் செய்யில் தனித்த சுழியோடும்
அய்யா அமுத மடக்கக் கனலேறும்
மெய்யது வத்தி விலாவிற்புண் ணாகும்
மையான மேகம் வளருங் கிரந்தியே. (52)

கிரந்தி விரகங் கேள்கிச் சியமேகம்
உரந்தித ரண்டா லுறவாய்வு சூலையாம்
பரந்தது மூன்றால் பவமே கங்களை
துரந்திதைத் தொட்டு சூழ்கோ யெழுந்ததே. (53)

அஞ்சி யுலர்த்தி ஏழியாமற் காயந்தான்
மிஞ்சிய கற்பம் விளம்பினேம் நூற்றொன்று
தஞ்ச முறவே தான்தின்ன வல்லோர்க்கு
பஞ்சு நரையும்போய் பதின்கோடி வாழ்வரே. (54)

வளமான பித்தத்தில் மருவிக் கபங்கூடில்
தளவான வாயுவாற் றானே வெதுப்பேறி
களமான கன்னத்திற் கட்டிய மூலமாம்
உளயாஞ் சுரத்தி லுருகின்ற வாயுவே. (55)

வாயுவி னாலே மலசலங் கட்டிடும்
வாயுவி னாலே வாங்குமேல் மூச்சு
வாயுவி னாலே மலரும் ரணங்கள்
வாயுவி னாலே வருருத்திர ரோகமே. (56)

ரோகங் கயத்தி நளிந்தேரி வாயுதான்
வாகுத்த நெஞ்சில் வலித்தே மயக்கிடும்
போகுத்த பித்தத்தைப் போகாமற் றம்பித்து
பாகொத்துப் பேசையிற் பதையாமற் சாவனே. (57)

பதமாஞ் சுகசன்னி பாயும் விதங்கேள்
நிதமாய் முழுகி நிறைபலவே உண்டிடில்
குதமாக மந்தத்தில் கூடிடும் வாயுதான்
நிதமா யனுபோகஞ் செய்ததாற் சன்னியே. (58)

சன்னி சுகத்தினுற் ருனும் வேருவை
கன்னி சுசத்தினுற் கண்கள் சிவப்புறும்
வன்னி சுகத்தில் வளங்குமா தோஷம்
அன்னி சுசத்தினு லழிந்திடுங் காயமே. (59)

காயத்தில் மூலங் கண்ட விதங்கேள்
பாகொத்த சிவன் பரிந்து அடங்கிடில்
மாயத்தை மயக்கி மலத்தை அடக்கிடில்
ஓய்வத்த குண்டலிக் குட்புகும் வாயுவே. (60)

வாயு புகுந்து மலத்தோ டபானத்தைத்
தேயுவைக் கூட்டித் திரட்டிக் கருக்கிடும்
தோயு மவரில் சுருக்குமுன் னின்று
ஆயு முனைபோ லபான மிருக்குமே. (61)

இருக்குஞ் சிலமூல மெழு மண்டம் போல
மருக்க விரணங் கொடுவருஞ் சிலமூலம்
உருக்கிய வாயுவால் உகிர்தினங் கூட்டி
தருக்கி விழுத்தாட்டுந் தான்ரத்த மூலமே. (62)

மூல மெழுந்திடில் முன்னே பசிபோம்
மூல மெழுந்திடில் முளை விந்து நாசமாம்
மூல மெழுந்திடில் முளங்கு மிரச்சல்தான்
மூல மெழுந்திடில் முடியாக் களிச்சலே. (63)

களிச்சற் கிராணி ஆறு வீதங்கேள்
அளிச்சிய பித்த மனவாத மய்யம்
தெளிச்சிய வாய்வு சேர்ந்தது மூன்றில்
பளிச்செனப் பேதியாம் பார்பிலம்போமே. (64)

பிலமாக மேகத்தில் பிறந்த தொருபேதி
சலமான வாயுவால் சங்கில் ஒருபேதி
குலமான முலத்திற் கொடிய தொருபேதி
வலமான ஆறும் வாய்த்த முறைபாடே. (65)

முறையான மேகம் முழங்கு மிருபது
துறையான தெல்லாஞ் சொன்னுரென் னந்தி

கறையாகுஞ் சிலையிற் காண்மஞ்சள் போலானால்
பறையான பித்தத்திற் படுகின்ற மேகமே. (66)

படுகின்ற சீலைதான் பாங்காய் வெளுப்பாகில்
அடுகின்ற வாதத்தா லாங்கா னிதுமேகம்
மடுகுங் கவியின் மயிலை நிறம்பட்டால்
விடுகின்ற சேத்துமத் தால்வரு மேகமே. (67)

மேக மிதுமூன்றில் வெவ்வேறு குணங்கேள்
பாகிய பித்தமும் வாதமுஞ் சேர்ந்திடில்
தாகிய ஞானத் தமிரி லெரித்தேரும்
போகிய நீர்க்கட்டு பொசிந்து விழுகுமே. (68)

விழுகுஞ் சிலநேரம் விடுபட்டு நீரோடும்
ஒழுகிய வாயு ஓதுங்கினல் நோவாது
வழுகிய மந்தத்தால் வாயுவந் தேவூதும்
கழுகி முகிந்திடுங் கால்வெடிப் பாகுமே. (69)

ஆகிய வாதமும் வாயுவுங் கூடினல்
தாகிய வெள்ளை தடையது மெத்தவாம்
போகிய மேனி பொருமிக் கருப்பேரும்
வாகிய தாது வழங்காது நட்டமே. (70)

வளங்கிய அய்யமும் வாயுவுங் கூடினல்
பிளங்கிப் பொசியாது பிரவெள்ளை காணுது
தளங்கி யிளைத்து தானத்தி போல்வால்
இளங்கிப் பொசித்தோடி யிருமிடு மேகமே. (71)

இருமிய பித்தமும் வாதமுமா மேகம்
வருவச்சல் மேகம் வாருவதி போலாம்
ஒருவத்தா கிக்தும் உடைடேல் காந்திடும்
உருவது கூடிடும் உரிஞ்சு யினிக்குமே. (72)

இனிக்கின்ற வாதத்தி லிடைசேரில் நல்மய்யம்
பனிக்கின்ற கள்ளு பதினிபோல் நீரோடும்
கனிக்கின்ற மேனி காய்ந்து வெளுப்பேரும்
தனிக்குமே மேகம் தப்பாது அய்யமே. (73)

அய்யமும் பித்தமும் அணைந்திடுங் காலத்தில்
கொய்ய வாதங் கொப்புளில் தண்டில்
மய்யுரு கண்ணூர்க்கும் மகத்தாம் பெரும்பாடு
வய்யுரு மேகம் வரிசை முறைகேளே. (74)

முறைகேட்கி லொன்பது முயர்ச்சியால் வந்தது
துரைகேட்கில் கெற்பது துலங்கிய மேகங்கள்
நரைபூத்த கொங்கையார் நாயகன் மோகத்தால்
மரைபோற்றுங் கெற்பத்தில் வளர்ந்திடு மேகமே. (75)

வளர்ந்தது கெற்பத்தில் வகுத்தமுறை அஞ்சு
உளர்ந்திய தந்தி யுள்ளபடி யால்மேகம்
அளைந்திப் படுவெள்ளை ஆகச் சுரமேகம்
தளர்ந்திய அத்தியில் தன்னெலும் புருக்கியே. (76)

தணல்காய மேகம் தண்ணீர் பகைமேகம்
உணக்கால் முழுக்கதா லூறுஞ் சிலமேகம்
பிணக்கால் பசிக்கட்டால் பெருகும் பெருமேகம்
வணக்காச்சை யோகத்தால் வரக்கடு மேகமே. (77)

கடுவந்து வுண்டில் காணுஞ் சிலமேகம்
மடுவுற்ற பாஷாணத் தாலாஞ் சிலமேகம்
மடுவுற் றிதுவேழும் மஞ்சுமுன் னொன்பதும்
மெடுவுத் திருபத் தோரென்ற மேகமே. (78)

மேகத்திற் குணமு மெழுந்த முறைகேள்
மோகித்த பித்தமும் வாயுவு மொன்றாகில்
வாகித்த வன்ன மாகில் வலியெறி
வாகீத்த நீர்நூரி வாந்தியாம் பாருமே. (79)

பாருமே வாயுவும் வாதமும் பாணிக்கில்
கூருமே கும்பியி லுருண்டு மிகநோகும்
கோருமே குத்தும் குடலை முருக்கிடும்
வாருமே வாதத்தில் வழங்கிய குணமே. (80)

வழங்கிய அய்யமும் வாதமு மொன்றானல்
தழங்கிய அன்னத்தைச் சந்திக்க வொட்டாது

பிழங்கிய அன்னம் பிடிப்பிக்கில் குத்தேரி
முழங்கி முருக்கு முயிரை வலிக்குமே. (81)

வலிக்கிய மேகமும் வாயுவு மொன்றானால்
பலுக்கும் வலஞ்சலம் பதையாம லாட்டிடும்
இலுக்கு மிடப்புரம் இயல்பாம் வடப்புரம்
மலுக்கு முருக்கும் வருஞ்சூலை குன்மமே. (82)

குன்மமிது நாலிற் கூறினு ரெவ்விதம்
வன்மையாய் நோக்கும் மகாநோய்பொல் லாதது
கன்மமாஞ் செய்த சடத்துக் கிதுவரும்
நன்மையாந் தன்மம் நாட்டோர்க்கு வாராதே. (83)

நாட்டிய பித்தமாஞ் சூலை முறைகேள்
ஓட்டிய ருசிகெட்டு ஓங்காரி வாந்தியாம்
ஆட்டிய நாக்கா லதின்சந்து பின்தண்டு
நீட்டி வலித்து நிலமா யெரியுமே. (84)

நிலமான வாதத்தில் நின்றிடுஞ் சூலைதான்
குலமான கைகால் குழச்செல்லாம் புண்போலே
கலமாய் வலித்து கனக்குங்கீழ் வயிற்றில்
தலமான மேனி தானுமிளை யாதே. (85)

இளைத்திடு மேனி யிருமி வாடிடும்
குளைத்திடுங் கைகால் குத்திமிக நோகும்
தளைத்திடும் மார்பிற் சளிவந்து தாக்கும்
அளைத்திடும் ஐயத்தால் ஆகாத சூலையே. (86)

ஆகாத வாதமும் பித்தமுஞ் சூலையாய்
வாகான கைகால் வளமாய்க் கழன்றிடும்
தாகான மேனி தனிவெடி புண்ணாகும்
போகாமல் நின்று புணர்ச்சியாய்க் கொல்லுமே. (87)

கொல்லிய அய்யமும் பித்தமுங் கூடினால்
மல்லி யெலும்பில் வளமாய்த் துளைத்து
மல்லிச்சுங் காயம் மதத்ததனு வெருத்து
எல்லி யிருமு மிதுகாணுஞ் சூலையே. (88)

காணுமே அய்பத்தில் கனவந்த சூலேகேள்
பூணுங் கபாலம் புடைத்து வெடித்திடும்
ஆணி விளையாய் அடங்காக் குளிர்சுரம்
பேணி யெலும்பெல்லாம் பெலங்கெட்டு நோகுமே. (89)

ஆறு வகைச்சூலே யதுமூன்று பேர்சொல்வார்
வேறு மிதையல்லால் வெவ்வேறு மொன்றில்லை
கூறு மிதுநாமங் கோடி குணஞ்சொல்வார்
பேறு மறுபேர் சொன்னூரென் நந்தியே. (90)

நந்தி யுரைத்தது நலமான கெற்பத்தில்
நந்தி யுரைத்தது நல்லாறு வகைகேள்
புந்தியில் வாழும் தேயுவும் பூந்திடில்
மந்திமல டாவாள் மரணவரைக் கென்னே. (91)

வரையாங் கெற்பத்தில் மலட்டுப் புழுபுக்கில்
விரையான சுக்கிலம் விரைந்ததை யுண்டிடும்
கரையா மலடாவாள் காணிது போக்கினுல்
திரையான பிள்ளை சுகமாய்ச் செனிக்குமே. (92)

செனிக்கின்ற பிள்ளை திரமாய்ப் பிறக்கையில்
சனிக்கின்ற சீயானீர் கலந்துள்ளே சிக்கிடில்
பணிக்கின்ற கைகால் பரவியே குத்திடும்
தனக்குப் பசிபோகுந் தன்வயிறு பாரிப்பே. (93)

பாரிய வாய்வு பரிந்து குளிபுக்கில்
தாரிக் கலந்து சதாநித்தங் கூப்பிடும்
வாரி யுடம்பெல்லாம் வலிக்கு மிடைநோகும்
ஆரியன் சொன்னு னறிந்துபார் சித்தரே. (94)

சித்தான கெற்பத்தில் சேர்ந்திடும் ரத்தத்தால்
மத்தா யுருண்டு வாயுவா லோடிடும்
ஒத்தே பசிபோகும் உமன்று யிரைந்திடும்
வத்தாக் களிச்சலாம் வன்சூத வாயுவே. (95)

சூதான மாசில் சுழித்திடில் கெற்பத்தில்
வாதான மேகத்தால் வணங்கிக் கெளிப்பிக்கும்

போதா முடம்பெல்லாம் புண்போல் மிகநோகும்
நீத மயக்கமாம் நிற்சீவ னாவளே. (96)

ஆகின்ற ஆறு விதநோய்காண் கெற்பத்தில்
பாகொன்று நின்றால் பலியாது கெற்பந்தான்
வாகொன்று போக்கினால் மலடி பெரும்பிள்ளை
ஆகொண்ட நோய்க்கெல்லா மறைந்த முறைபாரே. (97)

அறைந்திட்ட சன்னி ஆகாது கெற்பத்தில்
உறைத்திடுஞ் சீய்தா னுட்புக்கில் வாயுவும்
வெறிந்து மிகப்போக்கில் மெய்யும் மயக்கமாம்
துறைந்திடும் மல்கிட்டிச் சோபிக்கும் பாருமே. (98)

போகந் தனிக்காடி யுண்ணுத லாருமே
மாகமே மாப்பண்ட மாகாத மாங்கனி
தேகத்தின் கூறு தெரியா தருந்திடில்
கோகுமே யுடலிற் கூடிடுஞ் சன்னியே. (99)

மூவகை நாடி முற்று மறிந்து
மூவகை நாடியின் சேர்க்கை யொடுகுணம்
மூவர் நடப்பை முன்நந்தி யோதினார்
தேவரு மறியச் செப்பிய நூலிதே. (100)

திருமூலர் வியாதிக்கூறு ௱.

முற்றிற்று.

ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த மகம்மதுசாயபு புரம் அருளானந்தப்பிடகர் அவர்கள குமாரர் சங்கரலிங்க பண்டிதர் அவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவே துணை.

145-வது:

கொங்கணர் திருவாய் மலர்ந்தருளிய

கற்ப சூஸ்திரம் ௱.

முத்திகொண்ட வேதாந்த நந்தியாசான்
    மூலாதா ரத்திருந்த கணேசன்பாதம்
பத்திகொண்ட சித்தாந்த நாதாந்தத்துள்
    பரவியே விந்துவுறும் போகநாதர்
சத்திகொண்ட தத்துவங்க ளெல்லாம்பாழாய்ச்
    சச்சிதா னந்தவெளி யொளிமேலான
சித்திகொண்ட காயசித்தி கற்பசூஸ்திரம்
    செப்புகிறேன் வெளியாகச் செப்புவேனே. (1)

செப்புகிறேன் சட்டைமுனி ஐயர்பாதம்
    தெண்டனிட்டுக் கயிலாசஞ் சேரக்கேட்டு
செப்புகிறேன் வாசியொடு மவுனமூலம்
    சிவயோக மாதியதாம் ஆதிகற்பம்
செப்புகிறேன் குளிகையொடு வாலைபூசை
    திறமாகச் சிதம்பரமா முள்வட்டத்துள்
செப்புகிறேன் நாற்பத்து முக்கோணத்துள்
    தெளிவாகச் சடுவர்க்க வர்ணங்காணே. (2)

காணப்பா ஆதார மாறுவர்ணங்
    கறுப்பிலே மவுனமதா மெழுத்தைக்கேளு
பூணப்பா உகாரமிட்டு அகாரமாக்கிப்
    பூட்டிஓங் காரகம்பம் புரியைச்சுற்றி
நாணப்பா கடைசுற்றிச் சுழித்துள்ளேற்றி
    நன்றாக வரைந்திடவே மவுனதீட்சை
ஊணப்பா கும்பகத்திற் சமாதிகேளு
    உகாரமிட்டுக் கீழெழுத்தோங் காரஞ்சுற்றே. (3)

சுற்றியந்த யிடைதனிலே சுழித்துள்ளேற்றிச்
 சுகமாக வரைந்திடவே சமாதிதீட்சை
சித்தித்த வெண்மையெல்லாஞ் சிவத்தின்தீட்சை
 செப்புகிறேன் யெட்டுரெண்டுந் தலைகால்மாறி
ஒத்தித்த ஓங்கார அகாரமுடிதொட்டு
 உத்தமனே கடைச்சுற்றிச் சுழித்துள்ளேத்தி
மற்றித்த சிவதீட்சை வரைந்துபோடு
 யகத்தான நீலத்தில் வரையைக்கேளே. (4)

கேளப்பா யெழுசபையிற் றீட்சைதன்னைக்
 கிருபைபெறச் சொல்லுகிறேன் அறைநாவிட்டு
வாளப்பா சிழிப்பைச் சுழித்துள்ளேற்றி
 வரைந்திடுவா யெழுசபையின் தீட்சைமார்க்கம்
ஆளப்பா பச்சையெல்லாம் விந்துபோட்டு
 அதுக்குள்ளே ஓங்கார மதுக்குள்கேளு
நாளப்பா நங்கென்று வரைந்துபோடு
 நலமாகச் செகப்பெல்லாஞ் சத்திதானே (5)

தானென்ற சத்தியுட தீட்சைகேளு
 தருவான புருவமையத் தாயார்வீடு
வானென்ற லலாடமடா ஆத்தாள்பாதம்
 மகாரமடா சுழினையிலே மவுனம்போலே
கோனென்ற குறிகேளு யாருஞ்சொல்லார்
 கூறக்கே ளகாரமுத விருபத்தஞ்சில்
வேனென்ற கிரந்தத்தி லறிந்துபோடு
 வேதாந்தத் தாய்தீட்சை விளம்பினேனே. (6)

விளம்பினேன் சூட்சாதி சூட்சமூலம்
 வேறொன்று மரமொன்று காய்தானொன்று
விளம்பினேன் முப்பத்தி ரெண்டுதீட்சை
 மேலாய்நீ தோத்திரிக்க மந்திரந்தான்
விளம்பினேன் சோடசமாய்ச் சூட்சமூலம்
 வேதாந்த சற்குருவை யடுத்துக்கேளு
விளம்பினே னெந்தனுட நூலெல்லாம்பார்
 வெளியாகத் தோணுமடா பூசைதானே. (7)

பூசைவிதி நாற்பத்தி முக்கோணத்தைப்
பூட்டினே னிதன்மேலே சிதம்பரத்தை
நேசமுட னெழுவீதிக் குள்ளேதானே
நேமமாய் நூற்றிருபத் தஞ்சிதழுமிட்டு
வாசமாய்க் கும்பமுனி தீட்சைக்குள்ளே
மாட்டினு ரட்சரங்கள் வரைந்துபோடப்
பாசமா யறிந்தேநால் வாசலிட்டுப்
பண்பாகச் சக்கரத்தைப் பூசைசெய்யே. (8)

செய்கையிலே சித்தரெல்லா மிப்படியேசெய்வார்
சிறப்பாக யெந்தனுட பிள்ளைசெய்வார்
மெய்யெனவே யிவளாலே சிவயோகத்தை
மேவுவார் பூரகமாய் ரேசித்தேதான்
சையோக மிதுவாச்சுக் கும்பித்தோங்கித்
தம்பனமாங் குளிகைகொண்டு தாயைப்போற்றிப்
பொய்யெனவே போகாமற் சோடசமாய்த்தீர்ந்து
பூட்டுவார் மாத்திரைதா னேழாய்த்தானே. (9)

தானான மாத்திரைதான் பவுரணையைத்தொட்டுச்
சம்புவுண்டே விடுமார்க்க மமாவாஸைமட்டும்
வேனான மதிதேய்ந்தாற் போலேயுந்தன்
மெய்யுதித்த புரியட்டத் திடகலேயும்போச்சுத்
தேனான மனமொருமை யானதாலே
தேவியங்கே சுழினையிலே ஒளிபோல்நின்றாள்
மானான பெண்மயக்க மாண்டுதானாள்
வாச்சுதடா கற்பத்தின் வரிசைகேளே. (10)

வரிசையாய்ச் சொல்லுகிறே னுதிதொட்டு
மகத்தான கற்பங்கள் கொள்ளவேண்டி
பிரிசமாய் வாதபித்தஞ் சிலேற்பனமூன்றும்
பேய்க்கூத்தாய்ப் பண்ணுமற் கூடேறாமல்
பரிசரனே உஷ்ணங்கள் பாய்ந்தேறாமல்
பண்பான லேகியமொன்று சொல்கிறேன்கேள்
உரிசைபெறச் செவ்விளநீர் படிதானெட்டு
உத்தமனே கத்தாளஞ் சோறுதானே. (11)

தானந்த சத்தாளஞ் சோறுநாழி
　　தாளேவிழு துச்சாறு படிதானென்று
வேனந்தத் திதினுள்ளே கற்பங்கேளு
　　வேர்ப்பூலா வேர்பட்டை ஆவரைபஞ்சாங்கம்
தேனென்ற யித்தியொடு அத்திப்பட்டை
　　தேற்றவிதை சூரிவிரை நிலத்தாலங்கிழங்கு
கோனந்தக் குருவிஞ்சி குருந்தொட்டிமூலங்
　　குளிமீட்டா னிலந்தைவேர் வில்வவேரே. (12)

வில்லையிலே பழத்தோடு விளாம்பழத்தின்தோடு
　　மீருமல் வகையொன்று பலங்கால்வீதம்
எல்லையிலே யிதுவெல்லா மிடித்துப்போட்டு
　　எட்டிலொன்றாய்க் காய்ந்தபின்பு ஆவின்பால்நாழி
தொல்லையிலாத் துளசிச்சாற் படிதானென்று
　　தூயகத லிப்பழச்சாற் படிதானென்று
வல்லாரை புளியாரை இஞ்சிச்சாறு
　　வகையொன்று படியொன்று மாட்டுவாயே. (13)

மாட்டுவாய் துவாதசந்தான் லேகியஞ்சொல்வேன்
　　மக்களே சீனிபல மூன்றுபத்துத்
திட்டுவாய்ப் பனைவெல்லம் பலந்தான்பத்துச்
　　செங்கரும்பு வெல்லமது பலந்தான்பத்து
மூட்டுவாய்க் கரைத்தேதான் தாளிக்குள்ளே
　　மோகமாய் வடிகட்டி மூட்டுதீயை
நாட்டுவாய்க் குளம்பான பாகுசேரில்
　　நலமான அமுதசஞ் சீவிதானே. (14)

சஞ்சீவி பலம்பத்து அசுவமூலம்
　　தான்தூளாம் பலமொன்று நிலப்பனையின்கிழங்கு
மிஞ்சாதே சூரணந்தான் பலந்தானென்று
　　வெண்கெருட பச்சைத்தூட் பலந்தானென்று
அஞ்சாதே திரிகடுகு ஓமங்கல்நார்
　　அரைப்பலந்தான் வகைவீதஞ் சீரகந்தான்
துஞ்சாதே வாலுளுவை கோட்டங்காரஞ்
　　சுகபேதி திரிபலையும் வசம்புகூட்டே. (15)

கூட்டுவா யிலவங்க மேலங்காயம்
குக்கில்தா ளிசபத்திரி பரங்கிப்பட்டை
நாட்டுதேசா வரம்விளங்சஞ் சிறுநாகப்பூ
நாகபற்பம் லோகபற்பங் காந்தபற்பம்
மூட்டுவாய்ச் சுண்ணும்பி னுப்புப்பற்பம்
மூலைப்பாலிற் காய்ச்சியெடு உவர்ப்பூபற்பம்
ஆட்டுவாய் அமரிஉப்பு சாதிக்காயும்
அப்பனே சாதிபத்திரி கிராம்புதானே. (16)

தானுமதி மதுரம்வெள் ளரியின்வித்து
தருகோரோ சனையிதினோ டெல்லாங்கேளு
மானேகேள் வகையொன்று கழஞ்சுமொன்று
மருட்கிழங்கு ப்லமுமொன் றாகச்சேர்த்து
ஆனெய்யிற் படியொன்று கூடவிட்டு
அப்பனே தேனதிலே படியொன்றிட்டு
ஊனுறவே லேகியந்தான் பதத்தில்வாங்கி
உத்தமனே பீங்கானில் வழித்துவையே. (17)

வையப்பா லேகியத்தைக் கன்னிமாதம்
மகத்தான தசமிதுலா லக்கினத்தில்
தையப்பா நிர்த்தமிட்ட சிவனைநோக்கிச்
சற்குருவின் பதம்போற்றி லேகியத்தை
மெய்யப்பா விசுவாச மாகவெண்ணி
விளங்கவே கழஞ்சுரெண்டு ரெண்டுநேரம்
உய்யப்பா தினங்கொள்வாய் மண்டலந்தான்
உத்தமனே மூன்றுவகை நோயும்போச்சே. (18)

போச்சப்பா துவாதசமாம் லேகியந்தான்
பூட்டியே தின்னுமற் கெட்டோர்கோடி
ஆச்சப்பா அவமிறுத்துத் தட்டவேதான்
அயக்காந்தச் சத்துச்செந் தூரந்தன்னை
வாச்சப்பா தின்னுமற் கெட்டோர்கோடி
வாருகப் பின்புஅறு சுவையைத்தள்ளி
நீச்சப்பா கடினமென்று கெட்டோர்கோடி
நிலைதப்பி முன்பின்னாய் நின்றோர்தானே: (19)

நின்றோர்கள் கைகூப்பி யிறந்தோர்கோடி
நிலைகொடுக்குங் குருவினிடம் வாயாவண்ணம்
நன்றான சற்குருவைக் காத்தானாகில்
நரசென்ம மல்லவடா ஞானிசித்தன்
ஒன்றான மனந்தானே யொருமையாகி
யுள்ளபடி யிருக்குமென்றே சித்தந்தானே
சென்றாடும் புத்தியிலை யானதாலே
சிவயோக முரண்டுவந்து தெளியொட்டாதே: (20)

ஒட்டாத மனக்குரங்கை சுழினைக்குள்ளே
உற்றுப்பா ராதவண்ண மூதிப்பார்ப்பார்
கட்டாத வாசியிலே குளிகைபோட்டுக்
கனலெழும்பாத் தோசமிது தடிபோற்புத்தி
நெட்டையிலே லகிரிகொள்ள அபின்கஞ்சாவை
நோராக வியர்வைசா ராயந்தன்னைக்
கட்டாகக் கட்குடித்து மூச்சுப்பாஞ்சு
கருவான மனத்தறிவைக் காணுவாரே. (21)

காணுமற் றிகையாம லாசான்றானே
காரணமாங் குருவானாற் கண்டுதேறு
வீணாகிப் போகாதே காயசித்தி
விரும்பவே மனமுறத்தாற் கற்பங்கொள்ளத்
தோணார்கள் முதற்கற்பம் லேகியந்தான்
சொல்லாமல் மறைத்துவைத்தாற் சித்தரெல்லாம்
வாணாலே கொடுபோகா வண்ணஞ்சொன்னேன்
மதிகெட்ட மாணக்காள் சொல்லக்கேளே. (22)

சொல்லக்கே ளென்மகனே காயசித்தி
சுகமாகப் பேணுதற்குப் புத்திகேளு
அல்லக்கேள் துவாதசமாம் லேகியமொன்று
அதற்குப்பே ரிட்டதென்ன வென்றாற்கேளு
வெல்லக்கேள் புரியட்டஞ் சொன்னபடிகேட்கும்
மீறுகின்ற மாத்திரையிற் கடிகையேறுஞ்
செல்லவே தசவாய்வு மாங்காரம்போஞ்
சித்தாந்தக் கிரியையெல்லாஞ் சேரப்போமே. (23)

போமடா தசவாய்வு அஸ்திவாய்வு
புகழான சலமிருந்த நாடிவாய்வு
சோமடா சலதோஷங் கபாலவெட்டை
துயரமிட்ட மேகவெட்டை சலக்கழிச்சல்
ஓமடா சயரோகங் கண்ணிற்சூடு
உஷ்டிணமேல் நீர்கறுகல் சூலையெல்லாம்
ஆமடா சுரதோஷ மூலரோகம்
அப்பனே தூக்கங்க ளணுகிடாதே. (24)

அணுகொட்டா தனுபோகப் பசாசுதன்னை
அப்பனே மனமெங்கும் பாயமாட்டா
தணுகொட்டா தென்சொல்வேன் நாலாசைக்குள்
ஆச்சரியம் லேகியத்தி னருமைமெத்த
வணுகொட்டா தெமனனை வெட்டிச்சாடும்
அயக்காந்த செந்தூர லேகியங்கொள்ள
வணுகொட்டா தொன்றையுந்தான் மனமொன்றாகும்
அப்பனே அயக்காந்தஞ் சொல்லக்கேளே. (25)

கேளடா காந்தமது பலந்தானஞ்சு
கெடியாக வாங்கிவந்து சொல்லக்கேளு
நாளடா வெள்ளாட்டுத் தோற்பைக்குள்
நலமாக வெள்ளாட்டு ரத்தமிட்டு
வேளடா பன்றிரத்தங் கூடவிட்டு
விளங்கவே கோழிரத்தங் கூடவிட்டுத்
தாளடா வெள்ளாட்டு ரத்தத்துக்குள்
தாக்குமத்த ரெத்தமெல்லா மெட்டுக்கொன்றே. (26)

ஒன்றாய்ச்சே கரித்துச்செம் முலைப்பால்வாரு
உத்தமனே யெட்டிலொன்றாய் மேனிச்சாற்வார்
நன்றாகப் படிவீதஞ் சேர்த்துக்கொண்டு
நலமாகக் காந்தத்தை யுள்ளேபோட்டுச்
சென்றாட நெற்குளிக்குள் நடுவேவைத்துச்
சிறப்பாக வெட்டாநா ளெடுத்துக்கொண்டு
மன்றாடு மழுரியினாற் கழுவிப்போட்டு
வாகாகக் காந்தத்தைக் கிளியாய்க்கட்டே: (27)

கட்டியபின் சொல்வேன்கேள் குன்றிச்சாறு
கன்னியுட வமுரியினு லிடித்துவாங்கி
நெட்டியபின் படிரெண்டு அளந்துகொண்டு
நேராகச் சொல்லுகிறே னின்னங்கேளு
ஒட்டியதோர் கொள்ளங்கே படிதானென்று
உதகமொரு படியெட்டொன் ருகக்காய்ச்சி
விட்டுவிடு சாறுடனே சேர்தாளிக்குள்
விளங்கவே காந்தத்தைத் தொளாந்தரந்தூக்கே. (28)

தூக்கியே வத்தநன்று யெரித்துவாங்கிச்
சுகமாக வுவருப்பைப் பலமொன்றிட்டுத்
தாக்கியே சலமிட்டுக் கழுவிப்போட்டுத்
தான்பார்க்கக் காந்தமது மகத்தாஞ்சுத்தி
ஆக்கியதோர் காந்தமது கழஞ்சுபத்து
அப்பனே பாசாணங் கெவுரிரூதம்
தேக்கியே தாளகமுங் காரசாரஞ்
சிறப்பாகப் பூநீருங் கழஞ்சுரெண்டே. (29)

ரெண்டாகும் வகைவீதம் நிறுத்துப்போட்டு
நேராய்வெண் கருவாக் கம்பால்நீரால்
ஒண்டவே தானரைத்து ரெண்டுசாமம்
உத்தமனே காயவைத்துக் குகையிற்செம்மி
மண்டலவே ஓடுகொண்டு குகைவாய்மூடி
மண்சீலை செய்துநன்று யுலரவைத்துக்
கண்டிதமாய்த் துருத்திரெண்டு போட்டேயூது
காந்தமது வெங்கலம்போற் சத்தாங்காணே. (30)

காணப்பா காந்தசத்துச் சூட்சமாகக்
கருவோடே சொல்லிவிட்டே ஞருஞ்சொல்லார்
பூணப்பா காந்தசத்து உறுதிமெத்தப்
புகழான சுத்தியென்று லுறுதிமெத்த
வீணப்பா அவரவரே சுத்திசொன்ஞர்
வெகுசுருக்கு யிதைப்போலே சொல்லவில்லை
பேணப்பா காந்தசத்துச் சோதித்தேற
பிலமான பூநீரு சாரங்கூட்டே. (31)

கூட்டடா காரமொடு பிணங்கன்சீனம்
கூரப்பா கல்லுப்பு அமரியுப்பு
நீட்டடா துருசியொடு ரெங்குசூடன்
நிறையான விந்துப்பு அன்னபேதி
மூட்டடா சவ்வீரம் வகையொன்றுக்கு
முழங்கவே சமனாக முலைப்பாலாட்டி
நாட்டடா பழச்சாறு புரசம்பூவிட்டு
நன்றாக அரைத்திடுவாய் சாமமொன்றே. (32)

ஒன்றாக மருந்தெல்லா மரைத்தபின்பு
உத்தமனே காந்தசத் துருகும்போது
சென்றாடச் சமனாக மருந்தைத்தாக்கிச்
செகமெல்லா மெய்த்தசோ தனைதானாச்சு
நன்றாக யிப்படியே மூன்றுதரஞ் செய்தால்
நலமாகுங் காந்தசத்து சூதத்தைக்கொல்லும்
என்றேநா னுங்களுக்காய்ச் சொன்னேன்மக்காள்
இத்தைப்போற் காந்தசத் தியம்பிலாரே. (33)

இயம்பாதே போனதவு மெத்தநன்று
ஏனென்றால் தேசமெல்லாஞ் சித்தாய்ப்போகும்
மயம்பெறவே காந்தசத்தைப் பதனஞ்செய்வாய்
வாசமா யயத்தினுட ஈயங்கேளு
தயங்காதே அயப்பொடிதான் கழஞ்சுபத்து
சம்பழச்சாறு புரசன்பூ விட்டுச்சாற்றில்
மூயங்காதே நாலாநாள் கழுவிவாங்கி
முன்போலே யுருக்கியெடு யீயமாமே. (34)

ஆமப்பா அயக்காந்தம் வெவ்வேறீயம்
அப்பனே வகையொன்று பலமுங்கால்தான்
ஏமப்பா ரெண்டுமொன்றா யுருகும்போது
விளங்கவே தங்கமரைப் பலந்தான்கூட்டு
தாமப்பா நாகமது கழஞ்சுமூணு
தன்னோடே சூதமது கழஞ்சுமூணு
ஓமப்பா சவ்வீரஞ் சூதத்துக்கு
ஒன்னரைப்பங் கிட்டேநீ பூணியாட்டே. (35)

ஆட்டையிலே அட்டைபோல் வாலையாகும்
அப்பனே பூநீறு கழஞ்சுபோடு
மூட்டையிலே முலைப்பாலா லரைத்துப்போடு
மூன்றுநா ளிராப்பனியில் மூழப்போடு
சாட்டையிலே தினமொன்று சாமமொன்று
சாதியுள்ள செம்முலைப்பால் தன்னாலாட்டி
நீட்டையிலே வாலைரச மாகுமாகும்
நேராக உருக்கிமணி தொந்திப்பாயே. (36)

தொந்தித்துப் பின்பதிலே மாவாய்த்தூளாஞ்
சுகமாகப் பொற்றலையின் சாற்றாலாட்டி
கெந்தியிடு மூன்றுபலந் தாரங்கேளு
கெடியாக நாலரைதான் கழஞ்சுகூட்டி
செந்தூர மாகசிலை சுழஞ்சுகூட்டிச்
சிறப்பாக மூன்றுநா ளரைத்துக்கூட்டி
நந்திகுரு பூநீரு கழஞ்சுகட்டி
நாலாநரள் வில்லைசெய்து காயப்போடே. (37)

போடப்பா காய்ந்தபின்பு சுட்டசெங்கல்
போட்டதிலே தாய்மூடிக் குள்ளாய்வைத்துச்
சூடப்பா சேலையது யேழுஞ்செய்து
சுகமாக மணவறையிற் புடத்தைப்போடு
ஆடப்பா யெடுத்துப்பொற் றலையின்சாற்றால்
ஆட்டியே முன்போலே புடத்தைப்போடு
தேடப்பா யிப்படியே புடம்பத்தானால்
சிறப்பாகப் பிறகுவெளிப் புடத்திற்போடே. (38)

புடம்போட்டு முருக்கம்பூ வர்ணமானால்
பிலத்துதடா தேகமது சித்தியாகுந்
திடம்பெறவே புடந்தோறும் பொற்றலைச்சாற்
செலுத்தியரை யிருசாமஞ் செல்லுமட்டும்
உடம்பழியாச் செந்தூர மென்னசொல்வேன்
உத்தமனே ரசவாலை யூட்டினேனான்
இடம்பெறவே யிக்கருவை மறைத்துச்சொன்னார்
யென்னுசான் சட்டைமுனி யியம்பினாரே. (39)

இயம்பினு ரெந்தனுட சேய்பிழைக்க
வென்றுநான் தெண்டனிட்டே னருளிச்செய்தார்
மயங்காதே யென்றுசொல்லி கயிலாசத்தில்
வாழ்ந்துகுடி யிருப்பதற்கு மவுனஞ்சொன்னுர்;
தயங்காம லென்பிள்ளை கட்குச்சொன்னேன்
சாதித்துக் கற்பமுண்டார் தவருவண்ணம்
செயம்பெறவே அவமிருத் துச்செந்தூரந்
தின்றுதெளி யிரண்டாங்கற் பத்தினுலே. (40)

நாலான பூரணத்தை யுள்ளேவாங்கு
நலமில்லாப் புரியட்டம் வெளிகொள்ளாது
மேலான வாசலிலே ஊதயேறும்
விளங்கியதோர் கண்டத்தி லகித்துலூது
பாலாகும் வருசமொன்றில் வாசியோகம்
பார்த்துநீ பூரித்துக் கும்பிரேசி
சேலாகுந் தசநாடி சுத்தியாகுந்
தேவியுட கால்பிடித்த பலன்றுன்காணே. (41)

பலனுன அயக்காந்த ரசசெந்தூரம்
பணவிடைதான் நாளொன்றுக் கிருநேரந்தான்
புலனுன லேகியத்தை வைத்துக்கொள்வாய்
போக்கோடே ரெண்டுபத்து வயதிற்கொண்டால்
பிலனுன மண்டலந்தான் கொண்டுதேறு
பிராயந்தான் முப்பதிலே ரெண்டுமாதம்
நலமான நாற்பதிரு மண்டலந்தான்
நாடுதற்கு ஐம்பதிலே மருந்துணுதே. (42)

மருந்துணுஞ் சற்குருவை யடுத்துக்காத்தால்
மனங்கொண்டு போராடி வலுமைசெய்வார்
திருந்தவே யிப்படியே ரெண்டாங்கற்பந்
தின்றுக்கா லெமதூத ரணுகமாட்டார்
அருந்தவே தசநாடி சுத்தியாகும்
ஆதாரஞ் சுத்தியதாந் தத்துவங்கள்
பொருந்தவே சித்தியதாம் நோவொன் றில்லைப்
புகழான வாசியினுல் யோகம்பாரே. (43)

பாரப்பா கடுக்காயும் நெல்லிக்காயும்
பாங்கான வேப்பரிசி மிளகுமஞ்சள்
நேரப்பா சீரகமு மதுரங்கோட்டம்
நெறியான வேர்கொம்பு மருந்தோடெல்லாஞ்
சேரப்பா சமபாக மமுரிவிட்டுச்
சேர்த்தரைப்பாய் தேற்றிலே முறித்துக்கொண்டு
வாரப்பா குழம்பாகக் கரைத்துக்கொண்டு
மைந்தனே கொதிக்கவைத்து முழுகுவாயே. (44)

முழுகுவாய் மாதமொன்று முழுக்கதொன்று
வேறுமொரு செய்திசொல்வேன் கேளுகேளு
நழுகாதே நறுநெய்படி ரெண்டுக்குள்ளே
நாட்டிடா தேற்றும்விதை கழஞ்சுரெண்டு
வழுகாதே செங்குயப்பால் படிகால்விட்டு
மாட்டியரைத் தேபோடு குழம்புபோலே
அழுகாதே ரோமமெல்லாம் நரைக்குதென்று
அப்பனே கையாஞ்சாற் படிதான்ரெண்டே. (45)

ரெண்டுபடி நெய்யாக வத்தக்காய்ந்தால்
நேரான படிகலசந் தன்னிற்கேளு
உண்டுகொள்ளுங் குங்குமப்பூ கழஞ்சுஒன்று
ஓகோகோ கோரோசனை கழஞ்சுஒன்று
மண்டுகின்ற கற்பூரங் கழஞ்சுஒன்று
வாகான பூநீரு கழஞ்சுபோடு
கொண்டுநீ பொடித்துள்ளாய் வடிக்கும்போது
குருவுக்கும் பூசைசெய்து வடித்துக்கொள்ளே. (46)

வடித்திட்ட நெய்தானே வாரந்தோறும்
வளமாக முழுகிவர வாலைப்பெண்தாய்
படித்திட்ட சாஸ்வதியும் நிர்த்தஞ்செய்வாள்
பண்பான முகவசிய மென்னசொல்வேன்
பிடித்தபிடி யொன்றுயோர் பிடியாய்நில்லு
பிதற்றுதே மனந்தன்னைப் பேணியேற்று
கெடித்திட்டே னின்னமொன்று சொல்லக்கேளு
கேசரத்தின் ரோமமெல்லா மிரக்கிப்போடே. (47)

போடப்பா காயசித்தி செய்வோர்க்கப்பா
புனலேறும் சர்மமுதல் ரோமமாகா
வீடப்பா பிலத்தபின்பு முழுக்குமற்றால்
வேண்டியதோர் கற்பமெல்லாங் கொண்டபின்பு
நாடப்பா ரோமம்நெற் கிடையாய்நிற்கும்
நரைபோகுந் திரைபோகும் நறுகெய்வாடை
சூடப்பா கபாலரோ யொளிந்துபோகுந்
தோலிலுற்ற சலதோஷந் துயரம்போமே. (48)

துயரம்போ மூன்றான கற்பமப்பா
சுகமாக அறுசுவையுந் தள்ளிப்போடு
துயரம்போம் வெகுசுருக்காம் வழலைவாங்கச்
சுந்தரா னந்தருட சூஸ்திரம்பாரு
துயரம்போம் வல்லாரை சூரணித்துத்
துடியாக அறுமாதங் கொண்டுதேறு
துயரம்போம் நாலான கற்பங்கொண்டால்
சொல்லுகிறேன் பத்தியந்தான் சொல்லக்கேளே. (49)

கேளப்பா சிறுகீரை பொன்னாங்காணி
கெடியான புளியாரை மிளகுசீனி
வாளப்பா பசும்பயறு கட்டுமுப்பு
வாற்குருவைச் சாதமடா பாலுமாகும்
கோளப்பா! மற்றதொன்றுங் கொள்ளவேண்டாம்
குடிலமாய்த் தேகத்தைக் கெடுத்துப்போடும்
வேளப்பா யிதுவரைகை ! முறைதானாரும்
விள்ளார்கள் சட்டைமுனி விளம்பினாரே. (50)

விளம்பியதோர் சட்டைமுனி ஐயர்தாமும்
வேதாந்தம் நேரவே விரும்பிச்சொன்னார்
தளம்பியதோர் சேஷ்டகுரு வெனக்குமைந்தா
தப்பாமல் தம்பனமாங் குளிகைசொன்னார்
உளங்குளிரச் சிவயோகந் தம்பனமேசெய்
யுறுதியாய்க் குளிகைகட்டி யூணவேண்டி
வளம்பெறவே யெந்தவித மானாலுந்தான்
வயனமாய் ரசங்கட்டை யுருக்குவாயே. (51)

உருக்கியதோர் மணியதனை யுடைத்துவாங்கி
உறுதார ரெங்குரெண்டு கழஞ்சுவாங்கிப்
பொருக்கியதோர் சூதத்தைப் பத்துக்கொன்று
பிதற்றுமல் கூட்டியே உருக்கிக்கொண்டு
பருக்கியதோர் மணியெடுத்துச் சொல்லக்கேளு
பத்தியுவ ருப்பமுரி படியிரண்டில்
வெருக்கிடவே யரைப்படிதான் கரைத்துவைத்து
வேடுகட்டி மூன்றுநாள் தெளிவைவாங்கே. (52)

வாங்கியதோர் தெளிவுள்ளே கல்லுச்சுண்ணம்
மாட்டுவா யரைப்படிதான் போட்டுக்கிண்டித்
தாங்கியதோர் தோளையா யெரிப்பாய்வத்தத்
தாரரசக் குளிகைதம் பனமாமப்பா
பாங்குடனே தம்பனத்தி லெட்டுமாடும்
பாரடா சட்டைமுனி ஐயாசாஸ்திரம்
காங்கிசையாய்க் குளிகைக்கு லகிரியேற்றக்
கைமுறையாய்ப் பாடினூர் கலந்துபாரே. (53)

கலந்துபார் சட்டைமுனி யெனதுநாலுங்
கைமுறைதப் பாக்குளிகை லகிரிதானும்
பலம்பெறவே சிவயோகக் குளிகைபோட்டுப்
பண்பாகச் சுழினையிலே பற்றியேறு
மலங்காதே வெவ்வேறே குளிகையுண்டு
மாச்சல்மெத்த நீதனித்துச் செய்யமாட்டாய்
விலங்காதே குளிகைவிட்டு யோகம்பார்த்தால்
விழலாகுங் கற்பமொடு யோகந்தானே. (54)

தானென்ற சிவயோகஞ் செய்யவேணும்
தாரரசத் தம்பனமாங் குளிகைவேணும்
மானென்ற தேவியுட பூசைவேணும்
வளமாய்நாற் பத்துமுக் கோணம்வேணும்
கோனென்ற குருநிலையைப் பற்றவேணும்
குறியான சுழினையிலே நிலைக்கவேணும்
தேனென்ற கண்டத்தி லூதவேணும்
தெளிவாக அட்டகர்மஞ் சித்திபாரே. (55)

பாரப்பா வுபதேசக் குருவேவேணும்
பாழான மனந்தன்னை யுரைக்கவேணும்
நேரப்பா பெண்ணாசை யொளிக்கவேணும்
நிலையான பரந்தன்னில் நிலைக்கவேணும்
ஆரப்பா ஆதிதொட்டுக் கற்பமுண்டு
அண்டமென்ற கற்பவரை சிக்கவேணும்
சேரப்பா மேற்கற்பங் கொள்ளும்போதில்
தீட்சையினாற் சிவபோகந் தன்னைப்பூணே. (56)

பூணப்பா சமாதிக்குள் ளிருக்கவேணும்
புத்திகெட்ட மானுக்காள் புகலக்கேளு
தோணப்பா அஞ்சான கற்பஞ்சொல்வேன்
சுகமாகக் காயத்தில் வழலைவாங்கப்
பேணப்பா ஆவின்நெய் படிகாலுக்குள்
பேரான கைபான்சா றரைப்படிதானப்பா
நாணப்பா மெழுகுபதந் தன்னிலேதான்
நறுநெய்வடி கலசத்துட் சொல்லக்கேளே. (57)

சொல்லுகிறேன் சொல்லாத கருவையெல்லாஞ்
சொல்லார்க ளொருகோடி தனமீய்ந்தாலும்
மல்லுகிறே னென்னுடைய நூலேசொல்லு
மதினாலே யென்னூலை யொளித்தார்சித்தர்
வெல்லுகிறே னென்றுவெல்லு மிளகுதானே
மீறும லரைக்கழஞ்சு பொடித்துக்கொண்டு
செல்லும்பூ வழலைபண விடையுங்கூட்டிச்
சிறப்பாக வடிகலசந் தன்னிற்போடே. (58)

போட்டபின்பு பதத்தோடே வடிநெய்தன்னைப்
புகழாகக் கணேசனுக்குப் பூசைசெய்வாய்
நாட்டமுடன் சுழினையிலே மனந்தானொட்டி
நலமாக மேல்வாசற் கண்டத்தூதி
மாட்டடா பெருவிரலை நெய்யிற்றோய்த்து
வலஞ்சுத்தி உள்ளேற்று வாசிலூதிக்
காட்டடா கறுவழலை வழலைவாங்கும்
கைகழுவி நாலுதரம் வாங்குவாங்கே. (59)

வாங்கியபின் மேல்வாசல் திறக்கும்நன்றாய்
வாசியுறுஞ் சிவயோக மமுதுநன்றாய்த்
தாங்கியபின் னிளவெந்நீர் விட்டுவிட்டுச்
சலக்கட்டை யுறுஞ்சிக்கொப் பளிப்பாயப்பா
பாங்குடனே மண்டலந்தான் செய்யும்போது
படுபாவி கண்டநஞ்சு கொல்லப்பார்க்கும்
ஓங்கியே கத்தாளஞ் சோறுதனை
ஓகோகோ கருவிட்டுச் சொல்லக்கேளே. (60)

கேளப்பா தர்ச்சனைமத் திமையுங்கூட்டிக்
கெடியான தத்துவங்கள் தளரப்போட்டு
வாளப்பா பாவைபோ லிருந்துகொண்டு
வாகாகக் கண்டத்தை யசைத்துவாட்டு
நாளப்பா தினந்தோறு மிதுபோல்செய்து
நலமாகப் பின்னங்கே வழலைவாங்குங்
கோளப்பா நஞ்செல்லாங் கைக்கீழ்வீழுங்
கூறுகெட்ட சித்தர்பித்த மென்பார்காணே. (61)

காணுநீ பேய்த்தேற்றில் மரவைசெய்து
கட்டாக அமுரிவிட்டுத் தலைநாள்தானே
பூணுநீ தேற்றுவிதை யரைத்துப்போட்டுப்
பொலிவான தோஷமெல்லாம் முறிந்துநீரும்
பேணுநீ யிந்நீரிற் கடுக்காய்மையை
பிதற்றுமற் கரைத்துடனே யுள்ளேகொள்ளு
வேணிநீ கொண்டபின்பு பற்பமெல்லாம்
விரோசிக்க லட்சியத்தில் மேவியூதே. (62)

ஊதப்பா தூர்மலங்கள் கழன்றுபோகு
முறையாது கண்டநஞ்சு உடற்கொள்ளாது
போதப்பா மூலத்தி லெரிவுதோன்றும்
புகழான கற்றாளஞ் சாறுவாங்கி
ஏதப்பா யேரண்டத் தெண்ணெய்கூட்டி
இதமாகத் தர்ச்சனையிற் றேய்த்துக்கொண்டு
வாதப்பா பாவைபோ லிருந்துகொண்டு
வாகாக வபானத்திற் சுத்திபாட்டே. (63)

ஆட்டையிலே கண்டநஞ்சு கூமுட்டைபோல்
        அப்பனே யகன்றுமா ரோக்யமாகும்
மூட்டையிலே லெட்சையற்றே பற்றிமூட்டு
        மூர்ச்சித்தால் பாற்கஞ்சி வைத்துக்கொள்ளும்
நாட்டையிலே தாகம்வந்தால் வெந்நீர்பால்கொள்
        நலமாக யிப்படியே மாதம்ரெண்டு
கேட்டையிலே முன்போலே யமூரிக்குள்ளே
        கெடிமிளகு அவ்வஞ்சாய்ப் பொடித்துவுண்ணே. (64)

உண்ணவே நீர்தான்சங் கிலிபோல்வீழும்
        உத்தமனே வெட்டைகண்டாற் சொல்லக்கேளு
எண்ணமுட னறுகம்வேர் பலந்தானொன்று
        ரெட்சிக்கு மிளகுதா னிருபத்தஞ்சு
உண்ணவே சலமதுதா னொருபடிக்குள்
        உத்தமனே யெட்டிலொன்றாய்க் காய்ந்தபோது
அண்ணலே கழஞ்சுவெண்ணெய் யதிலேபோட்டு
        அந்திநே ரந்தனிலே கொண்டுவாவே. (65)

கொண்டுவா மண்டலந்தான் ஒன்றரைக்குங்
        கூறுவே னாறுமட்டாய் மூன்றுவிசையப்பா
கண்டுபார் சட்டைமுனி ஐயாசொன்ன
        கற்பசூஸ் திரம்நூறுங் கருதிப்பாரு
பண்டுடனே கடுக்காய்க்கு மாதந்தோறும்
        பலவிதமா யனுப்பானம் பகருவார்பார்
தொண்டன்நீ யாவாய்பின் னெதிராரில்லை
        சுகமாகக் கடுக்காய்தொட் டேறுமேலே. (66)

மேலான அண்டகற்ப மட்டுங்கொள்வாய்
        விளங்கியபின் னயக்காந்த செந்தூரந்தான்
பாலான மதியமுத மூந்திப்பாயும்
        பாயுமகா சிவபீடங் காயமாகும்
சேலாகு மதுகடந்தாற் சொல்லக்கேளு
        செப்பானஞ் சித்தரென்று லப்பாசொல்வேன்
மாலான பூமியுட னாதமைந்தா
        வளர்பொன்னி னய்புரகச் சத்துக்கேளே. (67)

சத்தென்ற வப்புரகச் சத்தைக்கண்டால்
தறுகியதோர் கற்பமெல்லாம் நன்றாய்த்தேறும்
பத்தியென்ற காயசித்தி முத்தியாகும்
பரமோச்ச முண்டாகுஞ் சுழினையுள்ளே
சித்தென்ற சித்தெல்லாஞ் சணத்திற்காட்டும்
செயரசமாங் குளிகைசெய்யும் வாசனைக்குச்சித்தி
கொத்தென்ற சரக்கெல்லா மிறந்துபோகும்
கொல்லாமற் கொல்லுமடா மனத்தைக்காணே. (68)

காணப்பா காந்தசத்தாற் சூதங்கட்டிக்
கடியதொரு புரியட்டக் குளிகைசெய்தால்
வீணப்பா போகாது வெகுசுருக்கு
மேலான வப்புரகச் சத்தினாலே
பூணப்பா யினிமைகட்டித் தாரஞ்சேர்த்துப்
புரியட்டக் குளிகைசெய்தால் மகத்தாஞ்சித்தி
பேணப்பா யிதன்றிமூ லிகையினாலே
பெலமாக ரசங்கட்டிக் குளிகைசெய்யே. (69)

செய்யப்பா மூலியினாற் குளிகையானாற்
தேர்ந்துபார் தொளையிலே யெரித்துக்கொண்டு
வையப்பா லகிரிதனை யுண்ணச்செய்து
மாட்டுவாய் புரியட்ட மாளும்பாரு
மெய்யப்பா வாசியினால் யோகமத்தி
வீணர்தான் சாராயந் தன்னைக்கொண்டு
நெய்யப்பா சுத்தியென்று கொள்வான்மட்டை
நேராது மேல்வாசல் ஏறுதென்னே. (70)

ஏறுதே புரியட்டஞ் சொல்லக்கேளு
இதமாக வூதையிலே சுழினைபாய்ந்து
மாறாமல் ஆதியினால் அண்டத்தூடே
மார்க்கமா யோடிவிடும் புரியட்டந்தான்
தேருமற் பூரணத்தை யழித்துப்போடுஞ்
சிவயோகி நானென்று பேர்கொள்வார்கள்
கூறுக யிருத்திமே லூறினாலுங்
கூரில்லை யாறேறு மாறுபோமே. (71)

போமப்பா சமயத்து ளாகிநிற்கும்
புறச்சமய முட்சமய மென்றுபேராய்ப்
போமப்பா ஆறும்போய் நாலுமீனும்
போக்கறியார் பூரணத்தி லிரண்டும்பாழாய்ப்
போமப்பா புரியட்டக் குளிகைபோட்டால்
பூரணந்தான் நாலும்போய் மீளுமெட்டும்
போமப்பா கண்டத்தே யூதும்போதிற்
புகுமப்பா தமர்வாசல் புக்குந்தானே. (72)

தானான புரியட்ட குளிகையாலே
சாதகமாய்ப் பூரித்துக் கும்பிரேசி
ஏனனல் மாத்திரைகள் தீரவேணும்
இடகலையி லிருத்தியே யூதுவூது
கானான குளிகைதன்னை மறைத்தார்சித்தர்
கடினமாய்ச் சொரூபத்தின் குளிகைசொன்னார்
தேனான சொரூபமணி யார்க்குவாய்க்குந்
திடமுண்டோ செய்வதற்குக் காலம்போமே. (73)

காலம்போம் பூரணமுங் கழிந்துபோகுங்
கரைகாண மாட்டார்கள் வாசியோகம்
காலம்போய் மாள்வதல்லாற் கதையொன்றில்லைக்
காரணமாய் நந்திபிர காசங்கண்டாற்
காலம்போய் யாகுமடா காலனுவான்
காதலிக்கும் பிள்ளையென்று கருவாய்நிற்பான்
காலம்போ மென்றுசொல்லிக் குழந்தைகட்குங்
கலக்தேற நந்தியொடு மணிசொன்னேனே. (74)

மணியிலே குளிகையொன்று சூட்சமொன்று
வாகான கமலினியாங் குளிகையொன்று
மணியிலே சொரூபமென்ற குளிகையொன்று
மாட்டுதற்கு அஷ்டாங்க குளிகையொன்று
மணியிலே யிந்தவகைக் குளிகையெல்லாம்
மகத்தான சித்தர்செய்வார் யோகிசெய்வார்
மணியிலே யிதுவேணு மென்றுயெண்ணி
மாண்டபேர் கணக்கில்லை வாழ்ந்தவாறே. (75)

வாழ்ந்திடவே வாசியிலே சிவயோகந்தான்
மணியென்றால் தாரசக் குளிகைமைந்தா
ஆழ்ந்திடவே வெகுவுமெத்தக் குளிகைசெய்து
ஆடினபின் கற்பமெல்லா முறைத்தபின்பு
சூழ்ந்திடவே அட்டகர்மக் குளிகைசெய்வாய்
தோற்றாது வெகுவுமெத்தத் தோணும்பாரு
வீழ்ந்திடவே சாத்திரங்கள் வகைசொல்லாது
மெய்யான தென்னூல்தா னேறமேலே. (76)

ஏறவே அப்புரசச் சத்தைச்சொல்வேன்
இதமாகத் தாளகத்தின் சுண்ணமொன்று
கூறவே வீரமொன்று காரமொன்று
குறிப்பான சவாதுதேன் சூயப்பால்வெண்ணெய்
தேறவே சர்க்கரையும் பழமுங்கூட்டிச்
சேரடா நவநீதம் பலமொன்றேதான்
வீரடா வில்லைசெய்து உலர்ந்தபின்பு
மேலான மூசையிலே பொதிந்தூதே. (77)

ஊதடா மணிமணியா யிறக்குஞ்சத்து
உத்தமனே சோதித்தால் சரிகைவெள்ளி
வாதடா வைத்தேதான் சரக்கைக்கொல்லும்
மணியென்றால் ரசகுளிகை கோடிகட்டும்
ஏதடா பூமியுட நாதச்சத்து
இதைவிட்டால் குளிகைக்கு யிளப்பமெத்தச்
சூதடா சத்தங்கே பலந்தானென்று
துடியான தங்கமது பலந்தானென்றே. (78)

ஒன்றாகச் சேர்த்துருக்கிக் கிண்ணம்வார்த்து
உத்தமனே அடித்தூரில் சீலைசெய்து
நன்றாக வேண்டியதோர் சூதம்விட்டு
நாட்டடா வாலுகையி லெரிக்கும்போது
குன்றாக எள்ளெண்ணெய் சுருக்குப்போட்டுக்
குலையானைக் கிண்ணியிலே மாண்டுபோச்சு
வென்றேநா னுங்களுக்காய்ச் சொன்னேன்மக்காள்
வெகுசுருக்காங் குளிகைஅட்ட கர்மத்துக்கே. (79)

கர்மமெட்டு மாடமடா குளிகைதங்கம்
காரீயங் கழஞ்சுரெண்டு மணிதானென்று
நிர்மயமாந் தம்பனத்துக் காகுமாகும்
நிசமாயா கிருசணந்தான் துத்தநாகம்
தர்மமென்ற வசியமடா தங்கஞ்சேரில்
சாற்றுகிறேன் பேதனத்தில் வெள்ளீயந்தான்
வர்மமென்ற மாரணமாம் காந்தமீயம்
வளமான மோகனத்தி விரும்புதானே. (80)

இரும்பியஞ் சேர்மணிமோ கனத்திற்காகும்
என்னசொல்வேன் தாம்பிரத்தி லுச்சாடிக்கும்
விரும்பாத வித்துவே சனத்துக்கென்றால்
மேலான அப்பிரகச் சத்துச்செம்பே
பெரும்பாதை மணியிதடா கர்மமெட்டும்
பேசியதோர் வார்த்தையெல்லாங் காமசித்தி
தரும்பாரு புரியட்டக் குளிகைபோலச்
சுத்திமலத் துளையில்நீ ரேத்திவாங்கே. (81)

வாங்கியதோர் மணிகளெல்லாம் லகிரியேத்தி
வாகாகச் சோடசத்தின் மணிகள்தோறும்
தாங்கியதோர் முகமணியாய்ச் சலமேசெய்யில்
சத்தியெட்டும் பாலரெட்டும் நாகமெட்டும்
ஓங்கியதோர் கிரீகளெட்டுங் கசங்களெட்டும்
உத்தமனே யேவல்செய்யுங் குருவேயென்னும்
பாங்கிதனை யொளித்தல்லோ மூலமுதலாறும்
பாசாங்கா யொளித்தார்கள் வெளிவிட்டேனே. (82)

வெளியாக அப்பிரகச் சத்தைச்சொன்னேன்
மேலேநீ பிழைப்பதற்கு வழியுஞ்சொன்னேன்
பழியான லகிரியெல்லாந் தள்ளச்சொன்னேன்
பாழாகிப் போகாமற் குளிகைசொன்னேன்
களியான சத்தியென்ற வாலைவ.மி
கண்டத்தி லொளிபெறசாத் திரமைந்நூற்றில்
தெளிவாக அங்கமெல்லாஞ் சேரச்சொன்னேன்
தீனிவிட்டுச் சாராயந் தேறுதென்னே. (83)

தேரூது சாராய மயக்கமப்பா
சிறுபெண்கள் மேலாசை யிதுக்கொப்பல்லால்
மாரூது குருவினுப தேசமில்லா
மாயமடா திரோதாயி வல்லையைநீக்கிப்
பேருன வப்பிரகச் செந்தூரந்தான்
பிலக்கவே அயச்காந்தச் செந்தூரம்போல்
கூறுகச் செந்தூர மானபின்பு
கொள்ளப்பா மண்டலந்தான் குன்றிதானே. (84)

குன்றியிடை அப்பிரகச் செந்தூரத்தைக்
கொண்டுவா பசுவின்பால் காற்படிக்குள்
நன்றிபெறத் தேகமெல்லா மொளியாய்வீசும்
நலம்பெறவே பூரணத்தில் மூன்றுள்ளாகும்
ஒன்றுமாத் திரஞ்சுழினை தன்னிலோடும்
உத்தமனே பலன்கேட்பா யுகமூன்றுனல்
சென்றிடுங்காண் கடிகையொன்று ஐயாபாரு
தேகாந்தக் கிரியைவிட்டுத் தேறுவாயே. (85)

தேறுடைய மரவைநூ றுண்டின்வேம்பு
செய்திடுவாய் மரவையொன்று கற்பங்கொள்ள
வீறுடைய காந்தத்தின் கிண்ணமொன்று
விளங்கியதோர் செந்தூரம் பால்களுண்ணக்
கூறுடனே அன்னமுண்ணப் பீங்கான்நன்று
கொடுஞ்சுருக்காங் காந்தத்தின் கிண்ணிதன்னல்
பேறுமிக வருவிக்குஞ் சித்தரெல்லாம்
பிள்ளையென்று வந்துன்னைக் காப்பார்காணே. (86)

காணப்பா பிறகுசிவ மூலியோடு
கைமுறையாய்ச் சத்தியுட மூலிகொள்ளு
பேணப்பா யிம்மூலி முப்பான்ரண்டும்
பிலமாகக் கொண்டிடவே பெருத்தசித்தம்
ஆணப்பா பின்புகரு மூலியுண்ணு
அப்பனே உவரசங்கள் செந்தூரத்தின்
பூணவெளி யாம்பிடித்த யிடம்பொய்யாகும்
பொற்சடையோன் கோலமெல்லாம் பூணலாமே. (87)

ஆமப்பா வாலைமுதற் றீட்சைதசமோதி
ஆண்டவனே குருநாதன் தேகந்தன்னை
தாமப்பா தியானித்துப் புருவமையங்
தாக்கிப்பார் குருமோட்சந் தானேயிவார்
ஏமப்பா தன்னைப்போற் குருவையெண்ணி
லெட்சியத்திற் சார்ந்திருந்த சீசன்றானும்
சாமப்பா கருவியெல்லாந் தானேசித்தி
சாத்தியதோர் சற்குருவைத் தியானஞ்செய்யே. (88)

தியானஞ்செய் யென்றீசர்சற் குருவேஐயர்
தேறும லலையுதையா மயக்கமாகித்
தியானந்தா னேதேதோ வென்றுயெண்ணித்
திடங்கொண்டு நிற்குதில்லைப் பறியாவண்ணம்
தியானந்தான் சொல்லக்கேள் மாணாக்காளே
செவியிலுப தேசம்வைத்தக் குருவையுன்னித்
தியானந்தான் சுழினையிலே முட்டிப்பாரு
சித்திக்கு முபதேசப் பத்திதானே. (89)

பத்தமுடன் போகரைநான் தெண்டனிட்டுப்
பணிந்திருந்தேன் சிலகால மானபின்பு
சித்தமுற வேயிரங்கி வாலைதீட்சை
செப்பினா ருபதேச மேதென்றாக்கால்
சத்திமவு னச்சுழினை லெட்சியத்துள்
தவறாம லென்னையே தியானஞ்செய்வாய்
முத்தியா மென்றுரைத்தார்.மூலர்சூட்சம்
மூட்டினார் காலாங்கி மூர்க்கந்தானே. (90)

மூர்க்கமாய்க் காலாங்கிசூட்சந்தன்னை
மோகித்தா ரென்தந்தை போகநாதர்
தீர்க்கமினி யென்னசொல்வேன் வாலைதீட்சை
செப்பினார் மூலகுரு தெளிந்துகாணும்
மார்க்கமாய் மறுபுத்தி யெண்ணாதேகேள்
மானதமே லகிரியடா மாணாக்காளே
ஏர்க்கவே யமுதந்தான் லகிரிமூடும்
இத்தைவிட்டால் மித்தெல்லா மிழுக்குந்தானே. (91)

இழுக்கொன்று சொன்னீர்கொங் கணரேஐயா
யெடுத்தாப்போல் மதியமுத மிரக்கமுண்டோ
பழுக்கென்ற சுழினையிலே நாட்டமூணிப்
பற்றயிலே நாக்குநுனி மேலேநோக்கி
வழுக்கின்ற வரையிலடா சீனிபோட்டு
மாட்டியே யூதிடுவாய் லகிரியுண்டாம்
அழுக்கென்ற சாராயங் கள்ளுகொண்டால்
ஆசைகொண்ட வாருச்சு அறிவில்லோரே. (92)

அறிவிலே யேறுமென்று முன்னேசொன்னீர்
ஐயரே மூதண்ட லேகியத்தை
வெறியான மாணுக்காள் சொல்லக்கேளு
விளங்கியதோர் பரிபாசை மெத்தவுண்டு
குறிகெட்டுப் போவதற்குச் சொன்னதல்லால்
குறியறிந்து யேறுதற்குச் சொல்லவில்லை
உறுதிமனங் கண்டபின்பு வுண்மைசொன்னோம்
உளருதே வாசிதனை யூதியேறே. (93

ஏறயிலே யுபாசங்கள் செந்தூரித்து
இதமாக வுண்கையிலும் பாஷாணங்கள்
தேறயிலே யுண்கையிலுஞ் சூதபற்பங்
திங்கையிலும் நிசமொன்று செய்யக்கேளு
கூறயிலே மூதண்டக் கிசாயந்தன்னைக்
கொண்டுவா மாலையிலே தினந்தானப்பா
மீறயிலே பாசாண வீருமாறும்
மேலான சற்பங்கள் தோசம்போமே. (94)

போமப்பா தசையினுற்ற தோசமெல்லாம்
புடைசூலை கபாலமொடு மேகவெட்டை
போமப்பா வத்திசுரம் வாச்சயங்கள்
புகழான வாதத்தா லெடுத்தநோய்கள்
போமப்பா பித்ததா லெடுத்தவாய்வு
புண்ணீர்கள் சலதோஷ மருந்தீடெல்லாம்
போமப்பா யுபரசச்செந் தூரமட்டும்
பூட்டினு லாரோக்கியம் பூணுவாயே. (95)

பூணுவாய் செய்தியொன்று சொல்லக்கேளு
புகழான மாத்திரைக்கோ லொட்டியானங்
காணுவா யிடதுகமுக் கூடேநாட்டிக்
கடிசாய சித்தியடா கண்தூங்காதே
பேணுவாய் வாமமே பிரதானங்கேள்
பெரியோர்கள் சொல்லார்க ளர்த்தங்கேட்கில்
ஊணுமோ யென்னென்று சொல்லப்போறேன்
உரைக்கரிது வாமத்தை யூதிக்காணே. (96)

ஊதிட்டோர் வாசியடா தமரிற்புக்கும்
உத்தமனே மவுனத்தில் மனக்கண்நாட்டி
நீதியதாம் பிரணவத்திற் காமம்வாமம்
நிலைகெட்ட மாணுக்கா கண்டுதேறு
பேதியதா முன்தேக முத்தைவாங்கிப்
புரட்டலாம் நவலோகம் பாசாணத்தில்
ஆதியதா மந்தமதா மாண்பெண்ணுக்கும்
அறியார்க்கு மூன்றும்விட்டப் பொருளிதாமே. (97)

பொருளான சிவமென்ற நந்திபீடம்
பூட்டினால் வாமியடா பொருளைச்சொல்வான்
அருளான அருள்வந்து வுன்னைத்தூக்கும்
அடிமுடியும் நடுவணையு மார்தான்சொல்வார்
வெருளாதே முத்திடமுஞ் சொல்வோனுசான்
மேதினியிற் சித்தாந்தி விள்ளார்காணுன்
மருளாதே காரணமாங் குருவைக்காரு
வருமதுபன் னிரண்டாலே வாலைசொல்லே. (98)

வாலையுட மூன்றெழுத்தை உபதேசித்தால்
மவுனமென்ற கண்டத்தில் மருவியூது
வாலையிலே அஷ்டாங்க வாலையுண்டு
மச்சமுனி தீட்சையிலே வளமாய்ச்சொன்னார்
வாலையெட்டு முபதேசம் பெற்றாயானால்
மகத்தான சித்தியெல்லாம் வாய்க்கும்பாரு
வாலையிலே அவரவரே ஏதோசொல்வார்
வாய்ப்பேச்சாந் திருடர்தனை வணங்கிடாதே. (99)

வணங்குதற்கு தசதீட்சை பெற்றோர்பாதம்
வாசமாய்த் தொண்டுசெய்து வணக்கமாய்ச்செல்
பிணங்குதலை கால்மாடாய்க் கற்பசூஸ்திரம்
பேசுவா ரென்னூற்கூச சரியொவ்வாது
குணங்காம லாதிகொட்டு முறையாய்ச்சொன்னேன்
கொண்டேறச் சட்டைமுனி கற்பம்பாரு
மணம்பெறவே கற்பமெல்லாம் வகையாய்த்தோணும்
மகத்தான திருமூலர் ஞானம்பாரே. (100)

பாரப்பா கும்பமுனி ஞானந்தீட்சை
பண்பான பூரணசூத் திரத்தையன்பாய்
பாரப்பா ரோமரிஷி ஞானசொச்சம்
பாருநீ சடாதார மாறுந்தோணும்
பாரப்பா நான்சொன்னேன் கற்பம்நூறும்
பகர்ந்திட்டேன் கடைக்காண்ட மஞ்ஞூறுந்தான்
பாரப்பா வெட்டவெளி யாகச்சொன்னேன்
பரமோட்சு கெதியுண்டாம் நூறுமுற்றே. (101)

கோங்கணர் கற்பசூஸ்திரம் ௱.

முற்றிற்று.

திருச்சிறாப்பள்ளியைச் சேர்ந்த மேட்டுச்சிந்தாமணியிலிருக்கும் வைத்தியம் கோவிந்தசாமி நாயுடு அவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்தசாஸ்திரம் அச்சிடலானது.

உ

பரமபதி துணை.

NEW CATALOGUE OF BOOKS.

புதிய புத்தக கேட்லாக்.

இ. ராம. குருசாமிக்கோனார் ஸன்

புத்தகஷாப் புதுமண்டபம், மதுரை.

பச்சிலை மூலிகைகளின் தமிழ்ச்

சித்தவைத்திய அகராதி.

(இது ஓர்பெரிய வைத்திய அகராதி.)

இதில் பச்சிலை, கடைச் சரக்கு, பஞ்சபூதச் சரக்கு, உபரசச் சரக்கு, 120 பரிபாஷைப் பெயர்கள், 5 உப்புவகை இனங்களையும், உப்பாகுஞ் சரக்குகளின் விபரத்தையும், வகாரம், செந்தூரம், செய்ய சரக்குகளின் உருக்கின சத்துரு மித்துருவையும், புளியாகுஞ் சரக்குகளின் விபரத்தையும், 64 பாஷாணங்களின் பெயர்களையும், அவைகளின் சத்துரு மித்துருவையும், நிகண்டுகளின் பரிபாஷைப் பெயர்களையும் விபரமாய்க் கூறியுள்ளது. சித்தர் நூல்கள் ஆராய்ச்சி செய்வோர்களும், வைத்தியஞ் செய்ய ஆரம்பஞ் செய்வோர்களும் இப்புத்தகத்தை வாங்கிப் பார்க்க வேண்டியது அவசியமாகையால் ஒவ்வொருவரும் வாங்கிப் படித்துப் பார்த்து இதினுண்மையை அறிந்து மருந்துகள் செய்து பயனடையக் கோறுகிறேன் 280 பக்கங்கள் கொண்டது.

புத்தகம் 1-க்கு விலை ரூ. 2—0—0

அகத்தியர் பரிபாஷை 300.

ஓலை யேட்டுச் சுவடியிலிருந்து இப்பொழுது புதிதாய் வெளிவந்தது (அகஸ்தியர் பரிபாஷைத் திரட்டு 500) என்று ஒரு நூல் இருந்து வருகிறது இது புதிதாக இப்பொழுது அச்சிட்டது.

புத்தகம் 1-க்கு விலை அணா 0—8—0

திருவள்ளுவர் கற்பம் 300

இதில் நாதாந்த சாரம் 100, கற்பக் குருநூல் 50, முப்பூ சூஸ்திரம் 30, வாத சூஸ்திரம் 16, முப்புக்குரு 11, வைத்தியசூஸ்திரம் 100, ஆக 7 சாஸ்திரங்கள் அடங்கியது திருவள்ளுவர் பாடிய ஞான வெட்டி 1500, க்கு சூஸ்திரமாகப் பாடியுள்ள சாஸ்திரம் இதுவேயாகும் இதில் குருமுடிக்கும் பாகங்களும், செயநீர் முடிக்கும் பாகங்களும் பூநீர் விபரங்களும், அமுர்த தாரணையின் நுட்பமும் முப்பூ விபரமும், வழலை மார்க்கமும் தெளிவாகக் கூறியுள்ளது.

புத்தகம் 1-க்கு விலை ரூ. 0—14—0

யூகிமுனிவர் 1200

கும்மி 1000, பரிபூரணம் 200 இரண்டும் சேர்ந்தது.

இம்முனிவரால் பாடியுள்ள சாஸ்திரங்கள் அநேகமாயிருப்பினும் ஒவ்வொரு நூல்களும் ஒவ்வொருவர் கைவசமாய் வெளிவராமல் இருந்ததில் இந்த சாஸ்திரங்கள்மட்டும் என்னிடம் கிடைக்கப்பெற்று உலக நன்மையைக் கருதி அச்சிட்டு வெளியாக்கியுள்ளேன். இதில் வாதம், வைத்தியம். ஞானம், முப்பூ விபரங்கள் கூறியிருக்கின்றன. கலிக்கோ பயிண்டு புஸ்தகம் 1-க்கு விலை ரூ 2—0—0

அகத்தியர் கௌமதி நூல்

இந்த சாஸ்திரம் இதுவரை வெளி வராமல் ஏட்டுப் பிரதியாக ஒரு சுவாமியாரிடமிருந்தது அவர் இதை தன்னனுபவத்தில் வைத்துக் கையாண்டு வந்ததை வாங்கி அதைப் பிரதி பண்ணி யாவரும் பார்த்துப் பயனடையுமாறு அச்சிட்டு வெளியிடப்பட்டது. இதில் வைத்தியம், வாதம் மாந்திரீகம் முதலான பாகங்கள் சுருக்க முறைகளாகத் தெளிவாகச் சொல்லியுள்ள அருமையான சாஸ்திரம்.

புத்தகம் 1க்கு விலை அணா 0—12—0

இதுவரை ஏட்டுப்பிரதியாயிருந்து புதிதாக அச்சிட்ட

அகத்தியர்பரிபூரணம் 1200

இந்நூல் ஞானம்,யோகம், இன்னதென்று அவரவர்களே எளிதாகத் தெரிந்துகொள்வதோடு தன்னைத்தானறிந்து ஞான யோக சாதனையடையும் மார்க்கமும், கற்பதேகி யாகவும், அநேக வைத்தியம், வாதம், சத்துரு மித்துரு விபரங்களும் சொல்லியுள்ளது.

கலிக்கோ பயிண்டு விலை ரூ 2—0—0

அகத்தியர் பன்னீராயிரத்துக்குச் சூஸ்திரமான

பன்னிருகாண்டம் 200.

இது அகத்தியர் பன்னீராயிரத்துக்குச் சூஸ்திரமாகப் பன்னிரு காண்டங்களாகப் பாடியுள்ள சாஸ்திரம் 1-வது வைத்திய காண்டம், 2-வது வாத காண்டம், 3-வது சுண்ணக்காண்டம், 4-வது செந்தூரக் காண்டம், 5-வது பற்பகாண்டம், 6-வது தைலக்காண்டம், 7-வது கற்ப காண்டம், 8-வது யோக ஞான காண்டம், 9-வது தீட்சாவிதி காண்டம், 10-வது சாபநிவர்த்தி காண்டம், 11-வது ஜாலகாண்டம், 12-வது மந்திர காண்டம், ஆக பன்னிருகாண்டமா யுள்ளது.

புஸ்தகம் 1-க்கு விலை ரூ 0—8—0

கொங்கணர் நடுக்காண்டம் 500

கொங்கணர் பாடியுள்ள முக்காண்டம் 1500ரில் கடைக்காண்டம் 500 கிடைத்ததை மாத்திரம் வெகுநாளாக அச்சிட்டு விற்பனையாகி வருவது யாவருக்குந் தெரிந்தவிஷயம். பாக்கியுள்ள முதல்காண்டம் 500ம், நடுக்காண்டம் 500ம் வெகுகாலமாகக் கிடைக்காமலிருந்து இப்பொழுது ஒரு ஏட்டுப்பிரதி நடுக்காண்டம் 500 மாத்திரம் கிடைத்தது. அதை அச்சிட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கிறது. அநேக கனவான்கள் பார்க்கவேணுமென்று எதிர்பார்த்திருந்த அரிய சாஸ்திரங்களில் இதுவும் ஒன்றேயாகும். புத்தகம் 1-க்கு விலைஅணா 0—10—0

அகத்தியர் கற்ப முப்புக் குருநூல்

இதில் கற்ப விதிகளும், முப்பூ முடிக்கும் விபரமும், பற்பம் செந்தூர கைபாகஞ் செய்பாக முறைகளும், சுண்ணம் மெழுகு தைலம் வாலை பூசை நாற்பத்தி முக்கோணச் சக்கரத்தின் பூஜா விதிகளும், கற்ப தீட்சை முறைகளும், தெளிவாகச் சொல்லியுள்ள சாஸ்திரம்.

புஸ்தகம் 1-க்கு விலை ரூ 0—8—0

இராமதேவர் வைத்திய காவியம் 1000.

இதில் கற்பமுறைகளும், சத்துரு மித்துருச் சரக்குகளும், தைல முறைகளும், வைத்திய முறைகளும், அஷ்டகர்ம விபரங்களும், கருமான விபரங்களும், பஞ்ச பூதங்களின் விபரமும், பற்பம் செந்தூரம், சுண்ணம் செய்முறை பாகங்களும், அஷ்டாங்க யோக முறைகளும், முறையோடு விபரமாய்க் கூறியிருக்கிறது.

புஸ்தகம் 1க்கு விலை 1—0—0

ஷை யார் சிவயோகம் 200 புத்தகம் 1-க்கு அணா 0 6 0

விஷவைத்தியமென்னும்

"ஒன்பதுவிஷ ஆரூடம்"

இதில் ஒன்பதுவிஷ ஆரூடசாஸ்திரங்களைச் சேர்த்து ஒரே புத்தகமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. பாம்பு. தேள், கட்டுவக்காலி, பூரான், செய்யான், வண்டு, அரணை, எலி, நாய், குரங்கு, பூனை, முதலானவைகள் கடித்து விஷமேற்பட்டால் பச்சிலை மூலிகைகளினாலும், கடைச்சரக்குகளாலும், விஷத்தை நீக்குவதற்குஇலகுவான முறைகளாய்ச் சமயோசிதம்போல் செய்வதற்கான விதமாய்க் கூறியிருப்பதோடு மந்திர யந்திர பூஜாவிதிகளும், விபரமாய்ச் சொல்லியிருக்கிறது எமது மூதாதைகள் கையாண்டு அநுபவித்துவந்த உண்மையான சாஸ்திரம். சுத்தப்பதிப்பு 392-பக்கங்கள் கொண்ட கலிக்கோ பயிண்டு.

பெரிய புஸ்தகம் 1-க்கு விலை ரூபாய் 2...0...0

புலஸ்தியர் கற்பம் 300.

இதில் கற்பசாதனைகளின் விபரங்களையும், போகஞான மார்க்கத்தையும், அகார உகார விபரங்களையும், வாசி யோகஞ் செய்யும் முறைகளையும், உள்ளங்கை நெல்லிக்கனிபோல், தெளிவாகக் கூறியுள்ளது ஓலை யேட்டுப் பிரிதியிலிருந்து புதிதாய் அச்சிட்டது.

புத்தகம் 1 க்கு விலை அணா 0—8—0

புலஸ்தியர் வாத சூஸ்திரம் 300.

இந்தச் சாஸ்திரத்தில் ரசவாதத்துக்குறிய செம்பு மேவதை, செம்புச் செந்தூரவேதை, துருசுச்செம்பு எடுக்கும் விதம், கெந்தக தைலம் நாகரச கெந்தி தைலத்தின் பெருமையும் அதினால் மாற்று உயரும் முறையும் தங்க உரம், வெள்ளி உரம் செய்யும் முறைகளும் சரக்கு கட்டுவகைகளும், செந்தூரப், பஸ்பம், சுண்ணம், இவைகளை அநுபோக முறைகளாய்ச் செய்து கொடுத்து குணமாகும் வியாதிகளை ரெம்பவும் தெளிவாகச் சொல்லியிருக்கிறது.

புத்தகம் 1-க்கு விலை ரூ 0—8—0

தன்வந்திரி வைத்தியக் குருநூல் 200.

இதில் தன்வந்திரி பகவான் பாடிய சாஸ்திரத்திற்கெல்லாம் திறவுகோல் போல் ஷையாரால் சொல்லிய சாஸ்திரத்தில் பற்பம் செந்தூரம், மாத்திரை, தைலம், சூரணம், சரக்குக்கட்டு வகைகளை எளிதாகச் செய்து கொள்ளக்கூடிய முறைகளாகத் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது. புஸ்தகம் 1-க்கு விலை அணா 0—8—0

கருவூரார் வாதகாவியம் தொண்டி 700.

இதில் கற்பம், வயித்தியம், வாதம், ஞானம், யோகமுதலிய பாகங்களை தொண்டிச் சிந்தரகவும், ஆனந்தக் களிப்பாகவும், அம்மானைப் பாவாகவும், சிந்தாகவும் பலமாதிரி சந்தங்களாய் விநோதமாகச் சூட்சமாய்ச் சொல்லிய சாஸ்திரம்.

புஸ்தகம் 1 க்கு விலை ரூபாய் 0—14—0

போகர் கற்பம் 300.

இதில் அமுரி கற்பம் சாப்பிடும் விதமும், அதை எந்தவிதத்தில் முரித்துச் சாப்பிடுகிறது என்பதும், அதை எப்படி உபயோகிப்ப தென்பதும் கற்பம் சாப்பிடுங் காலத்தில் ஏற்படக்கூடிய சூடு சோப தாபங்களுக்கு வேண்டிய கிஷாயங்களும் அதுசமயம் ஸ்நானம் செய் யும் முறையும், கற்பம் சாப்பிடும் போது புளி உப்பு பெண்போகம் கூடாதென்பதின் காரணமும், அக்குற்றங்க ளேற்பட்டால் அதற்கான சிகிச்சை செய்துகொள்ள வேண்டிய வகையும், கற்ப மூலிகை விபரங் களும், கருந்துளசி கருநெல்லி கருநொச்சி இவைகளை நாமே பயிர் பண்ணிக் கொள்ளவேண்டிய முறையும், வாத முறைகளுக்குத் தைல வகைகளும், சுத்தி முறைகளும், சிதம்பரத்தில் தங்க விக்கிரகம் செய்த விபரமும், சொல்லியுள்ள புதிய சாஸ்திரம்.

புத்தகம் 1 க்கு விலை அணா 0—10—0

அகத்தியர் ஐந்து சாஸ்திரங்கள்.

மணக்கோலம் 200, கணக மணி 100, வைத்தியக் கோவை 125, வைத்தியத் திரட்டு 81, கிருக்கு நூல் என்னும் கிரிகை 18 க்கும், குணமும்' நிவர்த்தி செய்யும் மருந்து பாகங்களும், அடங்கியது. ஆ 5 சாஸ்திரங்கள்.)

இதில் வயித்திய பாகங்கள் பாஷாணங்களில்லாது கடைச் சரக்கு களைக்கொண்டு எளிய முறையாகச் செய்து கொடுத்து சகல நோய்க ளையும், தீர்க்கு வண்ணம், கைபாகஞ் செய்பாகம், முறையோடு சொல்லியிருப்பதோடு, மானிடர்க்கு, வாத பித்த சிலேற்பனத்தால் ஏற்படும், 18 விதமான கிறுக்குகளின் குணமும், அதை நிவர்த்திக்க மூலிகை களினால் மருந்தும், கலிக்க வகைகளும், நசிய வகை களும், துவாலை வகைகளும், தெளிவாய்க் கூறியுள்ள அரிய பெரிய சாஸ்திரம் இப்புத்தகம் ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டிய தவசியம் அவரவர்களே மருந்துகள் செய்து கொடுத்து வியாதியை குணப்படுத்திக் கொள்ளும் முறைகளாய் அடக்கியுள்ள சாஸ்திரம்.

புத்தகம் 1-க்கு விலை அணா 0--12—0

காகபுசுண்டர் 1000.

சித்தர்களில் ஒருவராகிய புசுண்ட மகாரிஷி என்பவர் பிரளய காலத்தில் கல்லாலின்மேல் இருந்து ஒவ்வொரு பிரளய காலமும் பார்த்துவந்தவர். இவர் அநேகசாஸ்திரம் பாடியிருக்கிறார். ஆனால் இது வரை சில சாஸ்திரங்கள் மட்டும் அச்சுக்கு வந்திருக்கிறது. ஷை யாரால் பாடியதில் முக்கியமான இப்புசுண்டர் பெருநூல் காவியம் 1000. இது வரை ஏட்டுப்பிரதியாயிருந்து இப்பொழுது புதிதாக அச்சிட்டிருக் கிறது. இதில் யோகம். ஞானம் அமுததாரணை வாசி விபரமும் கற்பம் என்பது தன்னுள்ளே முடிந்திருக்கிறது என்ற விபரம் முதலிய இன்னும் அநேக மர்மங்களும் அடங்கியுள்ள சாஸ்திரம். 250-பக்கங் கொண்ட கலிக்கோ பயிண்டு. புஸ்தகம் விலை ரூ 2—0—0

அகத்தியர் தற்க சாஸ்திரம்.

இது அகத்திய முனிவரால் புலத்தியருக்கு உபதேசஞ் செய்தது. இதில் பதினெண் சித்தர்களாலும் பாடிய வைத்திய வாத யோகஞான நூல்களின் பரிபாஷைப் பெயர்களையும், அநேக மர்மமான பதங்க ளுக்குத் தாத்பரியங்களையும் விபரமாகக் கூறியிருக்கிறது.

புத்தகம் 1-க்கு விலை அணு 0—10—0

17-சாஸ்திரம் அடங்கிய இராமதேவரென்ற

யாகோபு வைத்திய கோர்வை

இராமதேவ ரிஷியாக இருந்துபின்பு மக்காவுக்கு சென்றுநபிமார் களுடன் பேசி அவர்கள் இவர் திறமையையும் சாஸ்திர ஆராய்ச்சியும் தெரிந்து யாகோபு என்று பெயர்கொடுத்தார்கள் பின்பு யூனானிமுறை களையும், தமிழ் முறைகளையும் கவனித்து அநேக வைத்தியங்களும், வாதம், யோகமுறைகளும், ஞானமும், நாடி விபரமும், சரக்குச்சுத்தி களையும், 17-சாஸ்திரங்களாகப் பாடியிருக்கிறார். இந்த சாஸ்திரத்தை அநேகர் வாங்கி ரொம்ப அனுபவ முறையாகக் கையாண்டு வருகிறார்கள் 17-சாஸ்திரமும் சேர்ந்த கலிக்கோபயிண்டு விலை ரூ 9—0—0

இந்தப் 17 சாஸ்திரங்களையும் 12 புஸ்தகங்களாகப் பயிண்டு செய் திருப்பதால் தனித்தனியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

நந்தீஸ்வரர் நிகண்டு 300.

இதில் உப்பு இன்னதென்றம், வீரம், பூரம், வெள்ளைப் பாஷாணம் என்று சொன்ன சரக்குகளின்னதென்றும் அதினால் வசாரம் முடியுமென்றும், மூலிகை யென்ற சரக்குகளின் விபரமும், ஓம் என்றதின் பொருள் இன்னதென்றும் இன்னும் அநேக பரிபாஷைகளெல்லாம் விபரமாகச் சொல்லி யிருக்கிறது.

புத்தகம் 1 க்கு விலை அணா 0—8—0

உரோமரிஷி பரிபாஷை 300.

இதில் பரிபாஷைப் பெயர்களை விளக்கிக் கூறியிருக்கிறது, இவர் பாடிய நூல்கள் அனேக மிருப்பினும், வைத்தியம் 500 என்றநூல் மட்டுந்தான் அச்சிட்டு வெளிவந்திருக்கிறது இன்னும், கூடியசீக்கிரத்தில், இவரால் பாடிய சாஸ்திரங்கள் அச்சிட்டு வெளிவரும், இப்பொழுது இந்த பரிபாஷை 300 அச்சிட்டு தயாரிலிருக்கிறது.

புத்தகம் 1 க்கு விலை அணா 0—8—0

கோடாங்கி மாலை. 1-2 பாகங்கள்

இது கோடாங்கி அடிப்பவர்களுக்கும், சுவாமி அருள் பொங்கிக் குறிசொல்பவர்களுக்கும் சுவாமி ஆடிகளுக்கும், ஆரூடம் சொல்பவர்களுக்கும், பேயோட்டுபவர்களுக்கும், முத்துக்குறி சோதிடம் பார்ப்பவர்களுக்கும் முக்கியமானது. பலதேவதைகளின் பெயர்களும் கிராமங்களின் பெயர்களும் குறிசொல்லுகிற விபரங்களும் ஆங்காங்கு தெளிவாக யாவரும் அறியும் வண்ணம் கூறியிருக்கிறது.

பாகம் 1-க்கு விலை அணா 0—3—0

அருணகிரிநாத சுவாமிகளால் இயற்றிய

பெரிய கந்தரனுபூதி

யந்திர மந்திர சக்கர பூஜாவிதிகளுடன் கூடியது.

புஸ்தகம் 1-க்கு விலை அணா 0—3—0